# இராமலிங்க அடிகள்



டாக்டர். ந. சுப்பு ரெட்டியார்

## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# இராமலிங்க அடிகள்

'தமிழ் வாகைச்செம்மல்' 'கலைமாமணி'
'ஆய்வுத் தமிழரசு', 'தமிழ்மறைச் செம்மல்'
பேராசிரியர்
டாக்டர் **ந. சுப்புரெட்டியார்**
M.A., B.Sc., L.T., Vidwan., Ph.D., D.Lit.,
(1) வாழ்நாள் மதிப்பியல் பேராசிரியர்,
தமிழ் இலக்கியத் துறை, செ.ப.க.
(2) மதிப்பியல் இயக்குநர், தெற்கு தென்கிழக்கு ஆசிய
நாடுகளின் மரபுவழிப் பண்பாட்டு நிறுவனம்
மணிப்பொறிக் கட்டடம், சேப்பாக்கம்,
சென்னைப் பல்கலைக் கழகம்

கலைஞன் பதிப்பகம்
19 கண்ணதாசன் சாலை,
தியாகராய நகர் சென்னை - 600 017.

Rs. 120 - 00

RAMALINGA ADIGAL

© Dr. N. SUBBU REDDIAR

Pages: xvi + 350 = 366

First Edition : 2003

Published by

KALAIGNAAN PATHIPAGAM

19 Kannadhasan Salai

T.Nagar, Chennai - 600 017.

Typeset at

Oviyam , Chennai- 600 020.

Printed at

S.K.V. Offset, Chennai - 600 014.



திருவருட்பிரகாச வள்ளலார்

தோற்றம் : 5-10-1823 சித்தி 30-1-1874

வள்ளல் பெருமான்
கொள்கைகளைக் கடைப்பிடித்து
அவர்தம் இணையடிகளைப் போற்றி
வாழ்ந்த வாழும்
நேற்றைய இன்றைய நாளைய
அடியார் பெருமக்கள் அனைவருக்கும்

## அன்புப் படையல்

வெள்ளநீர் சூழ்ந்த வித்தக உலகில்
மெய்ப்பொருள் ஈதெனத் துணிந்து
தள்ளரும் அகத்துப் பகையினைப் புறத்தில்
சார்தரும் பகையினை வென்று
விள்ளரும் புகழ்கொள் திருவருட் பாவில்
விளக்கம்கொள் நல்வட லூரில்
வள்ளலார் தொண்டர் அனைவருக் கிந்த
மாண்புறு நூலுரித் தாமால்.

ARUT PERUN JOTHI,
ARUT PERUN JOTHI
THANIP PERUN KARUNAI,
ARUT PERUN JOTHI

அருட்பெருஞ்சோதி,
அருட்பெருஞ் ஜோதி
தனிப்பெருங்கருணை,
அருட்பெருஞ் ஜோதி

**Er.C.S. KUPPURAJ,** B.E.
CHARTERED CIVIL ENGINEER &
CONSULTANT
FORMER CHIEF ENGINEER,
P.W.D.,

"ARUT PERUNJOTHI"
15, (OLD NO. 8), THIRD MAIN
ROAD,
RAJA ANNAMALAIPURAM,
CHENNAI - 600 028.
☎ : 2493 6557 / 2495 0707

# அணிந்துரை

திருவருட் பிரகாச வள்ளலார் இராமலிங்க அடிகள் (1823 - 1874) பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த மாபெரும் அருளாளர். இறைவனால் இவ்வுலகுக்கு அனுப்பப்பட்டவர். ஒரு குறிப்பிட்ட பணியினை செய்து முடித்துவிட்டு வரவேண்டும் என்று இறைவனால் கட்டளை இடப்பட்டு வந்தவர். நாமெல்லாம் நமது வினையினைத் தீர்ப்பதற்காக இவ்வுலகில் பிறக்கிறோம். அவர் அப்படிப் பிறந்தவர் அல்லர் என்பதனை அவரே கூறுகிறார்.

*"அகத்தே கறுத்துப் புறத்து வெளுத்திருந்த*
*உலகர் அனைவரையும்*
*சகத்தே திருத்திச் சன்மார்க்க சங்கத்*
*தடைவித்திட அவரும்*
*இகத்தே பரத்தைப் பெற்று மகிழ்ந்திடுதற்*
*கென்றே எனைஇந்த*
*உகத்தே இறைவன் வருவிக்க உற்றேன்*
*அருளைப் பெற்றேனே (5485)*

— *ஆறாம் திருமுறை, உற்றதுரைத்தல் (9)*

இறைவனால் அனுப்பப்பட்டு அவதரித்தவர் என்ற காரணத்தி னால் தான், யாரிடமும் கல்வி கற்காமல், பள்ளிக்குச் செல்லாமல், ஒன்பது வயதுச் சிறுவனாக இருந்தபோதே புராணப் பிரசங்கம்

செய்யத் தொடங்கினார். சென்னை முத்தியாலுபேட்டை, லிங்கிச் செட்டித் தெருவில் அமைந்திருந்த சோமு செட்டியார் வீட்டிற்கு, தனது தமையனாருக்குப் பதிலாகச் சென்று, பெரிய புராணத்தில் பாயிரம் கடவுள் வாழ்த்துப் பாடலாகிய ''உலகெலாம்'' என்று தொடங்கும் முதற் பாடலைப் பாடி, ''உலகெலாம்'' என்ற முதல் சொற்றொடருக்கு மட்டும், பல மணி நேரம் விளக்கம் அளித்தார் என்று அவரது வரலாறு கூறுகிறது. இந்த விளக்கத்தினை ''திரு அருட்பா - உரை நடைப்பகுதி'' என்னும் நூலிலே ''உலகெலாம்'' என்னும் மெய்ம்மொழிப் பொருள் விளக்கம் என்னும் தலைப்புடன் 85 பக்கங்களில் அச்சிடப்பட்டுள்ளது. (இரண்டாம் பதிப்பு 1981 - இராமலிங்க பணி மன்றம்)

அதனை இன்றைக்குப் படித்தாலும் நமக்குப் பூரணமாகப் புரியவில்லை. 1832 ஆண்டு சோமு செட்டியார் வீட்டில் அமர்ந்து இருந்த மக்களுக்கு இது எந்த அளவுக்குப் புரிந்திருக்கும் என்பது தெரியாது. இருந்தாலும் இச்சொற்பொழிவு ஒரு அருளியல் உல கின் அற்புதம் என்பதைப் பற்றி ஐயமில்லை.

இதற்கு அடுத்தபடியாக, சிதம்பரம் இராமலிங்கப் பிள்ளை என்ற பன்னிரண்டு வயது சிறுவன் சென்னை கந்தகோட்டம் என்னும் கோவிலில் நின்று கொண்டு இனிய எளிய தமிழில் முப்பத்தோரு கருத்துச் செறிவுமிக்கப் பாடல்களைப் பாடினான். இப்பாடல்களே இன்றைக்கு *தெய்வமணி மாலை* என்ற பெயரில் விளங்கி வருகின்றன. இப்பாடல்கள் ஒவ்வொன்றின் இறுதியி லும், மகுடமாக ''தருமமிகு சென்னையில் கந்தகோட்டத்துள் வளர், தலமோங்கு கந்தவேளே, தண்முகத் துய்யமணி உண்முகச் சைவ மணி சண்முகத் தெய்வ மணியே'' என்பது அமைந்திருக்கும். (தருமமிகு என்பதற்குப் பதில் பல்வேறு அடை மொழியும் இருக்கும்) இவ்வாறு மகுடம் அமைத்துப் பாடும் திறமை பன்னி ரண்டு வயது சிறுவனுக்கு எப்படி வந்தது? தெய்வ அருளே என்று கூறுவதைத் தவிர வேறென்ன சொல்ல முடியும்?

இந்தத் தெய்வப் பிறவி வளர்ந்து ஐம்பது ஆண்டுகாலம் வாழ்ந்து, பல அற்புதங்களை எல்லாம் நிகழ்த்தி, ஆறாயிரம்

தெய்வீகப் பாடல்களை இயற்றி, பல புதிய தத்துவங்களை இவ்வுலகுக்கு அறிவுறுத்தி, இறுதியாக வடலூரை அடுத்த மேட்டுக் குப்பம் என்னுமிடத்தில் அருட்பெருஞ் ஜோதி இறைவனுடன் கலந்தது. உடல் மண்ணுக்கோ, நெருப்புக்கோ தரப்படவில்லை. இதுவும் ஒரு மாபெரும் அற்புதமே.

துரதிர்ஷ்டவசமாக, வள்ளற்பெருமானது மிக உயர்ந்த கருத்துகளை, இன்றைக்கும் மிகமிக தேவைப்படும் கருத்துகளை, அவர் வாழ்ந்த காலத்தில் புரிந்து கொண்டவர்கள் மிகச் சிலரே. இன்றைக்கும் அதே நிலைதான். அவரை இன்றைக்கு சரிவரப் புரிந்து கொண்ட வெகு சிலரில், பேராசிரியர் டாக்டர் ந.சுப்புரெட்டியார் ஒருவர். இல்லாவிட்டால் தனது 88வது வயதில், 350 பக்கங்கள் கொண்ட ஒரு நூலினை, *''இராமலிங்க அடிகள்''* என்ற தலைப்புடன் எழுதி வெளியிட முன் வருவாரா? அவருக்குச் சைவ உலகமும் சன்மார்க்க உலகமும் பெரிதும் கடப்பாடு உடையன ஆகும்.

சைவ சித்தாந்திகள் என்று தங்களைக் கூறிக் கொள்ளும் சிலர், வள்ளற் பெருமானை சரிவர புரிந்து கொள்ளாமல் அல்லல்படுகின்றனர். அவரைப் போன்ற சிறந்த சைவ அருளாளர் வேறு யாரும் இல்லை என்றும் கூடக் கூறலாம். சமயகுரவர் நால்வரைப் பற்றிய அருண்மாலையை ஊன்றிப் படித்தால், அவர் எவ்வளவு தூரம் நால்வரை அனுபவித்திருக்கிறார் என்பது புரியும். தேவாரப் பாடல் பெற்றத் தலங்கள் 274. இந்த 274 தலங்களின் சிறப்பினையும், ஒரே பாடலில் அமைத்து ***''விண்ணப்பக் கலிவெண்பா''*** பாடியதைப் போல வேறு அருளாளர்கள் யாராவது பாடியுள்ளனரா? அவரது இறுதிக்காலம் வரை சிவசிவ நடராஜா என்றுதான் பாடியிருக்கிறார். இதனை எல்லாம் சிந்தியாமல் வள்ளலாரைப் புறக்கணிப்பது சைவ உலகத்திற்கு நல்லதல்ல.

வள்ளற்பெருமானது சமய சமரசக் கொள்கையும் ஒளிவழிபாடும், சாதி சமய சழக்கினை விடவேண்டும் என்ற கருத்தும் இன்றைய சமூகத்திற்கு மிகவும் அவசியமானவை ஆகும். தமிழராகிய நாம் வள்ளற் பெருமானது சமரசத்தையும், சீவகாருண்யத்தையும் நாடெங்கும் பரப்பத் தவறியதால்தான், நாட்டில்

இத்தனைக் கொலைகளும், ஏனைய கொடுமைகளும் நாடோறும் நிகழ்கின்றன. வள்ளற் பெருமானின் பெருமைகளையும் அவரது கொள்கைகள் பற்றிய அவசரமும் அவசியமும் நாடெங்கும் பரப் பப்படுதல் வேண்டும். இதற்கு இந்நூல் பெரிதும் பயன்படும் என்று நம்புகிறேன்.

வள்ளற்பெருமான் சென்னையில் ஏழுகிணறு பகுதியில் உள்ள வீராசாமிப் பிள்ளைத் தெருவில் 33 ஆண்டுகள் வாழ்ந்தார். அப்போது அதே தெருவில் வாழ்ந்த திருமழிசை முத்துச்சாமி முதலியார் என்பவர் அவருக்கு நண்பனாகவும் சீடனாகவும் பழகி வந்தார். அப்போது இவர் பாடிய சில தோத்திரப் பாடல்களை வள்ளற்பெருமானிடம் காட்டி, சாற்றுக்கவி பெற்றுள்ளார். அந்த சாற்றுக்கவியில் வள்ளலார் இவரை "முத்துச்சாமிக் கவிக்குரிசில்" என்று குறிப்பிடுகிறார்.

சிலகாலம் கழித்து வள்ளலார் வடலூருக்குச் சென்ற பிறகு முத்துசாமிக்கு திருமணம் நிச்சயமாகிறது. அதற்கு வள்ளலார் வரவேண்டும் என்று பெரிதும் விழைகிறார். ஆனால், வள்ளலாரோ திருமணம் முதலிய விழாக்களில் கலந்துகொள்ளும் நிலையில் அப்போது இல்லை. தன்னால் வர இயலவில்லை என்ற செய்தி யினை, 412 அடிகள் கொண்ட நிலைமண்டில ஆசிரியப்பாவாக எழுதி, தனது நண்பர் கொந்தமூர் சீனிவாச வரதாச்சாரியார் மூலமாக, நேரில் கொடுக்குமாறு அனுப்புகிறார். இதில் முத்துசா மியை "மூதறிவாளன் முத்துசாமி" என்று குறிப்பிட்டு, இதனை "இராமலிங்கம் எழுதி விடுத்த மயலுரு சோபான வாசகம்" என்று கூறுகிறார். இப்பாடல் திருஅருட்பா - ஆறாம் திருமுறை - ஊரன் அடிகள் பதிப்பில் (பக்.1099 - 1010) காணப்படுகிறது. 'குடும்ப கோரம்' என்ற தலைப்பு யார் கொடுத்தது என்பது தெரியவில்லை.

'குடும்ப கோரம்' என்ற பாடல், சைவ சித்தாந்தக் கருத்துகள் நிரம்பிய உருவகக் கதையாக உள்ளது. அதன் சுருக்கம்:-

என் பெயர் 'ஏழை'. எனது முதல் மனைவி 'ஆணவம்'. அவளது மகன் 'அஞ்ஞானமை'. இரண்டாவது மனைவி 'மாயை'. இவள் பெற்ற பிள்ளைகள் நால்வர். மனம், புத்தி, சித்தம்,

அகங்காரம் என்பது அவர்கள் பெயர். மூன்றாவது மனைவி 'காமியம்'. அவளுக்கு மூன்று பிள்ளைகள். அவர்கள் பெயர் சத்துவம், இராசசம், தாமசம் என்பது. இந்த மூன்று மனைவிகளோடும், எட்டுப் பிள்ளைகளோடும் ஏழையாகிய நான், ஒன்பது ஓட்டைகள் உள்ள ஒரு வாடகை வீட்டில் வாழ்கிறேன். இந்த வீட்டின் உரிமையாளர்கள் மூவர். வாதம், பித்தம், கபம் என்ற பெயர் கொண்ட அவர்களுக்கு நான் தினந்தோறும் மூன்றுமுறை வாடகை கொடுக்க வேண்டும். சற்றே தவறினால் அவர்கள் துன்புறுத்துவர். எனவே, என்னால் திருமணத்திற்கு வர இயலவில்லை.

உருவகக் கதை (Allegory) எழுதுவதிலும் வள்ளலார் வல்லவராகக் காணப்படுகிறார்.

இந்த முத்துசாமி முதலியார் திருஅருட்பா அச்சில் வருவதற்கும் காரணமாக இருந்திருக்கிறார். தொழுவூர் வேலாயுத முதலியார் எழுதிய, ''திருஅருட்பா வரலாறு'' என்னும் நூலில் 45வது பாடலில், ''ஓங்கருளான் முத்துசாமிப் பெயரின் ஓர் உரவன்'' திருவொற்றியூர் சன்னிதி முன்னர் அருட்பாக்களை ஓதி 'பக்தி வித்தினன்' என்று கூறுகிறார்.

இப்படிப் பலவகையிலும் வள்ளலாருடனும், திருஅருட்பாவுடனும் தொடர்பு கொண்டிருந்த, திருமழிசை முத்துசாமி முதலியார் தாம் என்னுடைய தாய்வழி முப்பாட்டனார். அவரைப்பற்றியும், அவர் வீட்டிற்கு அருகில் வாழ்ந்த 'இராமலிங்கப் பரதேசி' பற்றியும் எனது தாயார் கூறக் கேட்டிருக்கிறேன் (பரதேசி என்பது அந்தக் காலத்தில் மிக உயர்ந்த சொல்லாகக் கருதப்பட்டது). எனது தாயார் தேவாரம், திருவாசகம், திருஅருட்பா பாடல்களை இனிமையாக இசையுடன் பாடக்கூடியவர். எனது இளம் பிராயத்தில் எனக்கும் கற்பிக்க முயன்றார். எனது தவக்குறையினால் அந்தத் திறமை எனக்குக் கிடைக்கவில்லை. ஆனால், சைவத்திலும், சன்மார்க்கத்திலும் ஆழ்ந்த பக்தி, உள்ளத்தில் ஆழமாகப் பதிந்தது.

எனவேதான், எனது எண்பதாவது வயதிலும், சைவத்திற்கும் சன்மார்க்கத்திற்கும் என்னாலான பணிகளைச் செய்து வருகிறேன்.

திருமூலரும், மாணிக்க வாசகரும் கூறிய சன்மார்க்கம் (சைவம் கூறும் நான்கு மார்க்கங்களில் நான்காவதாகியது சன் மார்க்கம்) தான் பரிணாம வளர்ச்சியினால் வள்ளலாரின் சமரச சுத்த சன்மார்க்கமாக விளக்கம் பெற்றது என்பதனை சைவ உலகமும் சன்மார்க்க உலகமும் உணரும் காலம் அண்மையில் தான் இருக்கிறது என்று நம்புகிறேன்.

*"அருட்பெருஞ் ஜோதி, அருட்பெருஞ் ஜோதி*
*தனிப்பெருங்கருணை, அருட்பெருஞ் ஜோதி"*

எனனும் மகாமந்திரம் வள்ளற் பெருமானால் திருவாசகத்தில் இருந்துதான் எடுக்கப் பெற்றது என்பதும், அவர் திருமந்திரத் தினை தாம் போற்றும் சாத்திர நூலாகவும், திருவாசகத்தினை தோத்திர நூலாகவும் கொண்டு வழிபட்டார் என்பதும் யாவரும் அறிய வேண்டிய உண்மையாகும்.

இதற்கும் பேராசிரியர் டாக்டர் ந.சுப்புரெட்டியார் இயற்றி யுள்ள இந்நூல் பெரிதும் துணைபுரியும். இதனைப் பொறுமையு டன் படித்தால் வள்ளற் பெருமானின் திருவுள்ளம் தெளிவாக விளங்கும்.

சென்னை
25.8.2003

சி.எஸ்.குப்புராஜ்

# நூல்முகம்

*உள்ளமும் உயிரும் உணர்ச்சியும் உடம்பும்*
*உறுபொருள் யாவும்நின் தனக்கே*
*கள்ளமும் கரிசும் நினைந்திடா துதவிக்*
*கழல்இணை நினைந்துநின் கருணை*
*வெள்ளம்உண் டிரவு பகல்அறி யாத*
*வீட்டினில் இருந்துநின் னோடும்*
*வள்ளல்இல் லாமல் கலப்பனோ சித்தி*
*விநாயக விக்கினேச் சுரனே*[1]

*சங்கம் வளர்த் திடவளர்ந்த தமிழ்க்கொடியைச்*
*சரச்சுவதி தன்னை அன்பர்*
*துங்கமுறக் கலை பயிற்றி உணர்வளிக்கும்*
*கலைஞானத் தோகை தன்னைத்*
*திங்கள்நுதல் திருவைஅருட் குருவைமலர்*
*ஓங்கியபெண் தெய்வந் தன்னைத்*
*தங்கமலை முலையாளைக் கலையாளைத்*
*தொழுதுபுகழ் சாற்று கிற்பாம்.*[2]

'ஆற்று நீர்வழிப் படூஉம் புனைபோல முறைவழிப்படூஉம் ஆருயிர்' (புறம்-192) ஆதலால் என் வாழ்வின் நடுப்பகுதியில் சைவத் திருமுறைகள்பற்றியும் ஆழ்வார்களின் அருளிச் செயல்கள் பற்றியும் சில விளக்க நூல்கள் எழுதி வெளியிடும் பேறு பெற்றேன். என் வாழ்க்கையின் இறுதிப் பகுதியில் பிற்கால அருளாசிரியர்கள்பற்றி எழுதி வெளியிடும் பேறு இருந்தமையால் *தாயுமானவர்*பற்றி எழுதவும் அதனைக் கலைஞன் பதிப்பகம் மூலம் வெளியிடவும் திருவருள் கூட்டியது. இதனைத் தொடர்ந்து *'இராமலிங்க அடிகள்'* பற்றி எழுதவும் அதே பதிப்பகம் மூலம் வெளிவரவும் திருவருள் கூட்டுகிறது. தொடர்ந்து *பட்டினத்தடிகள்*, *இராமாநுசர்*, பிரதிவாதி பயங்கரம் *அண்ணங்கராசாரிய சுவாமிகள்*பற்றி எழுதவும் வெளியிடவும் திருவருள் கூட்டுவிக்கும் என்ற நம்பிக்கை உண்டு.

1. *திருவருட்பா - மூன்.திரு. சித்திவிநாயகர் பதிகம் - 4*
2. *மேலது - மேலது - கலைமகள் வாழ்த்து - 2*

நாயன்மார்களும் ஆழ்வார் பெருமக்களும் தலங்கள்தோறும் சென்று அங்கு கோயில் கொண்டிருக்கும் மூர்த்திகளை நேரில் தரிசித்து அவ்வப்போது எழும் உணர்வுகளுக்கேற்பப் பாடல்களை யும் பாசுரங்களையும் பாடி வழிபட்டு மகிழ்வர். ஆனால், நம் அடிகளும் அவ்வாறு சென்று மூர்த்திகளை தரிசித்தபோது, தரிசித் ததுடன் மன அமைதி பெறுவர். இருப்பிடம் திரும்பியவுடன் தியானத்தில் இறங்குவர். தியானம் முடிந்து விழிப்பு நிலையில் பாடத் தொடங்குவர். அப்பாடல்களில் இறைவன் தமக்குக் கனவு நிலையிலும் நனவு நிலையிலும் காட்சி தந்து அருளிய நிகழ்ச்சிக ளும் பயின்றுவரப் பெற்றிருப்பதைக் கண்டு மகிழலாம். பாடல்க ளும் நாயன்மார் ஆழ்வார் அருளிச் செயல்களில் பதிகங்களும் அவற்றில், 10, 11 பாடல்களின் தொகைகளும் மாறாமல் இருப்ப தைக் காணலாம். நம் வள்ளற் பெருமான் பதிகங்களில் எந்தவித வரையறைகளும் இல்லாமல் இருப்பதைச் சிறப்பாகக் காணலாம்.

நாயன்மார் ஆழ்வார் பாடல்கள், பாசுரங்களைப் பயிலும்போது அவர்கள் அநுபவித்த இறையநுபவம் மட்டிலுமே நம் மனத்தில் எழும். ஆனால் வள்ளற் பெருமான் பாடல்களில் ஈடபட்டுப் பாடி மகிழும்போது இறையநுபவத்துடன் பெருமானின் சொந்த அநுப வமும் *'கலந்து'* நம் மனத்தில் எழும். நம்மிடமும் வள்ளல் பெருமானாகவே மாறும் மனநிலையும் தோன்றத் தொடங்கும். மணிவாசகப் பெருமானின் *'திருவாசகத்தைத் தான் கலந்து பாடுங் கால்'* அவருக்கு ஏற்பட்ட 'நற்கருப்பஞ்சாற்றினிலே, தேன் கலந்து பால் செழுங்கனித் தீஞ்சுவை கலந்து என், ஊன் கலந்து உயிர் கலந்து, உவட்டாமல் இனிப்பதை' அடிகள் உணர்ந்ததைப்போல், நாம் வள்ளற் பெருமான் பாடல்களில் ஈடுபட்டு அநுபவிக்கும் போது அத்தகைய அநுபவத்தைப் பெற்றதை உணர்ந்ததுண்டு. இந்த அநுபவம் பாடல்களில் ஈடுபட்டுப் பயிலும்போது அனைவ ருக்கும் ஏற்படும் என்பது என் உறுதியான நம்பிக்கை.

இந்த நூல் நான் அடிகளாரின் பாடல்களில் அதிகமாக ஈடுபட்டுப் பாடி அநுபவித்த பாடல்களில் சிலவற்றைத் திருமு றைகள் தோறும் தேர்ந்தெடுத்த தொகுப்பும் பதிகந்தோறும் நான் எழுதிய குறிப்பும் கொண்டவை. முதல் கட்டுரை அடிகளாரின் வரலாறும், இறுதியாக நூலின் நிறைவுரையும் நூலில் சேர்ந்துள்

ளன. ஆறு திருமுறைகளையும் உரையிருப்பினும் அதனோடு சேர்த்து திரு முறைகள் முழுவதையும் அனைவரும் படித்தல் என்பது நடைமுறையில் இயலாததொன்று. ஆயினும் வள்ளல் பெருமானின் சில பாடல்களையாவது படித்து அநுபவித்து அவர் தம் கொள்கைகளைக் கடைப்பிடித்து அவற்றின்படி வாழ்வது சமூக நலத்திற்கு உகந்தது. சமயப் பிணக்கும் சாதி வேற்றுமையும் தலைதூக்கிக் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ள இக்காலத்திற்கு மிகவும் பொருந்தக் கூடிய ஒன்று. இந்த நோக்கத்துடன் இந்நூல் தொகுக்கப் பெற்று வெளிவருகின்றது.

நான் பெற்ற அநுபவத்தையே பொதுமக்களும் பெற்று அநுபவித்தால் சமயப் பிணக்கு ஒழிந்து சமரச நிலை ஏற்படும் என்பதும், அடிகளாரின் கொள்கைகளைக் கடைப்பிடித்து மனநிறைவுடனும் அமைதியுடனும் வாழ்ந்தால் நாமும் அடிகளாரைப் போல் அருட் பெருஞ்சோதியில் கலக்கவும் வழி அமையும் என்பதும் என் எதிர்பார்ப்புகள். அப்படி நேர்ந்தால் புதியதொரு சமூகமும் உருவாக வழி ஏற்படும் என்பதும் என் நம்பிக்கை.

தரமான நூல்களை வெளியிட்டுப் புகழ்பெற்று வரும் கலைஞன் பதிப்பகம். *கவிமணியின் தமிழ்ப்பணி - ஒரு மதிப்பீடு* என்ற நூலை வெளியிட்ட நிலையில் இந்நூலையும் ஏற்று வெளியிட இசைவு தெரிவித்த பதிப்பகத்தாருக்கும் புருஷகாரம் செய்வித்த திரு.ப.முத்துக்குமார சுவாமிக்கும் என் இதயங்கலந்த நன்றி என்றும் உரியது.

இந்நூல் அச்சாகுங்கால் மூலப்படியுடன் பார்வைப் படிவங்களை ஒப்பிட்டுச் சரிபார்த்து, அச்சிட உதவிய என் அபிமான புத்திரி டாக்டர் மு.ப.சியாமளாவுக்கு என் அன்பு கலந்த ஆசியுடன் கூடிய நன்றி என்றும் உரியது.

இந்நூலுக்கு *அணிந்துரை* வழங்கியவர் சில ஆண்டுகளாக நெருங்கிப் பழகி என் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட அருமை நண்பர் பொறிஞர் *சி.எஸ். குப்புராஜ்* (முன்னாள் தலைமைப் பொறியாளர், பொதுப்பணித் துறை) ஆவர். பொதுப் பணி பொறியியல் துறையில் பணியாற்றி வந்த காலத்திலேயே பொதுமக்கள்

சேவையில் ஆர்வங் கொண்டு பணியாற்றியவர். அருட்பிரகாச வள்ளற் பெருமான்பாலும் அவர்தம் அருளிச் செயல்பாலும் ஆராக் காதல் கொண்டவர். அவர்தம் கொள்கைகளைக் கடைப்பிடித்தும் மக்களிடையே பரப்பியும் வருபவர். பல்லாண்டுகளாக சைவ சித்தாந்தப் பெருமன்றத் துணைத் தலைவராகப் பணியாற்றிய காலத்தில் சைவசித்தாந்தக் கருத்துகளில் அதிக ஈடுபாடு கொண் டிருந்த இப்பெருமகனாரிடம் வள்ளற் பெருமானின் கொள்கைக ளும் தலைதூக்கி நின்றன. கூட்டங்களில் 'தென்னாடுடைய சிவனே போற்றி... எந்நாட்டவருக்கும் இறைவா போற்றி' என்று சொல்வதற்குப் பதிலாக சில சைவச் சான்றோர்களின் வெறுப்பை யும் பொருட்படுத்தாது 'அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி, தனிப் பெருங்கருணை அருட்பெருஞ்சோதி' என்று சொல்லுவார். இவர்தம் மூதாதையர் ஒருவர் வள்ளற் பெருமானின் நேரடிச் சீடர். *'குடும்ப கோரம்'* என்ற வள்ளல் பெருமானின் அருளிச் செயல் இவர்தம் குடும்ப வரலாறு கொண்டது. இத்தகைய பெருமகனாரி டம் சிறுவயது முதற்கொண்டே வள்ளல் பெருமானின் அருளிச் செயல்களில் ஈடுபாடு கொண்ட அடியேன் அவர்தம் கொள்கை யின் உந்தலால் தூண்டப் பெற்று எழுதிய இத்தொகுப்பு நூலுக்கு *அணிந்துரை* பெற்றது இந்நூலின் பேறு; என் பேறும் கூடத்தான். என்பால் உழுவலன்பு கொண்டு அணிந்துரை வழங்கிய இப்பெரு மகனாருக்கு என் இதயங்கனிந்த நன்றி என்றும் உரியது.

இந்த நூலை வள்ளல் பெருமான் பாடல்களில் ஈடுபட்டுப் படித்தும் அவர்தம் கொள்கைகளைக் கடைப்பிடித்தும் வாழ்ந்தும் வாழும் வள்ளல் பெருமானின் முன்னைய, இன்றைய, எதிர்வரும் காலத்து அடியார்கள் அனைவருக்கும் அன்புப் படையலாக்கிப் பெருமிதம் கொள்ளுகின்றேன்.

1941 - 1950இல் துறையூரில் உயர்நிலைப் பள்ளித் தலை மையாசிரியனாகப் பணியாற்றிய காலத்தில் திருச்சி மாவட்டம் பெரம்பலூர் வட்டத்தில் சில ஊர்களில் ரெட்டி குலப் பெருமக்க ளால் தவறாமல் ஆண்டுதோறும் இலவச உணவு அளித்து நடைபெறும் வள்ளல் பெருமான் பிறந்த நாள் விழாவில் பலமுறை பங்கு கொண்டு பேசியதுண்டு. திருவருட்பாவில் ஈடுபாடு கொண்டு முறையாகப் படிக்காவிட்டாலும் அவ்வப்போது சில

பாடல்களைப் படிப்பதுண்டு. 1960 முதல் நாளிது வரை திருவருட்பாவிலும் அவர் கொள்கைகளிலும் என் ஈடுபாடு அதிகரித்துக் கொண்டே வருகின்றது.[3] சில ஆண்டுகட்குமுன் சென்னைப் பல்கலைக் கழகத்தில் வள்ளலார் அருளிச் செயல்களில் ஒரு கருத்தரங்கு நடத்தி மகிழ்ந்ததுண்டு. கடந்த ஓராண்டுக் காலமாக திருவருட்பாவில் அதிக ஈடுபாடு கொண்டு ஆழங்கால் பட்டதன் விளைவாக இந்த நூலும் உருவாயிற்று. வாழ்க்கையின் இறுதிக் காலத்தில் வள்ளல் பெருமானின் கொள்கையைக் கடைப்பிடிக்கும் ஊழும் இருந்தது அப்பெருமான் ஆசி எனக் கருதுகின்றேன்.

என் வாழ்நாளின் இறுதிக் காலப் பகுதியில் (அகவை 88) இந்த நூல் எழுதுவதற்குரிய சிந்தனையும், எழுதுங்கால் நல்ல உடல்நிலையையும் கண்ணொளியையும் நல்கிவரும் என்னுளே நிலையாக எழுந்தருளியிருக்கும் பரம்பொருளை வாழ்த்தி வணங்கி அமைகின்றேன்.

*புரிசைவான் உலகில் பூவுல கெல்லாம்*
*புண்ணிய உலகமாய்ப் பொலிந்தே*
*கரிசெலாம் தவிர்த்து களிப்பெலாம் அடைந்து*
*கருத்தொடு வாழவும் கருத்தில்*
*துரிசெலாம் தவிர்க்கும் சுத்தசன் மார்ககம*
*துலங்கவும் திருவருட் சோதிப்*
*பரிசெலாம் பெற்றேன் எனக்கிது போதும்*
*பண்ணிய தவம்பலித் ததுவே!*[4]

— வள்ளல் பெருமான்

'வேங்கடம்'
AD-13, அண்ணாநகர்
சென்னை - 600 040.
தொலைபேசி: 26211583

**ந.சுப்புரெட்டியார்**

3. *கடந்த பத்தாண்டுகளாக உதவும் கரங்கள் நிறுவனத்தின் ஆதரவில் உள்ள 100 அனாதைப் பிள்ளைகளுக்கு என் பிறந்த நாள் நினைவாக (ஆகஸ்டு 27) ஆயிரம் ரூபாய் அளித்து அன்றைய காலை உணவில் செலவிடுமாறு ஏற்பாடு செய்து வருகின்றேன். (சீவகாருண்ய கொள்கை கடைப்பிடிப்பு)*

4. *திருவருட்பா - 6-ஆம் திருமுறை - சிவ புண்ணியப் பேறு - 8*

# உள்ளுறை

| | | பக்கம் |
|---|---|---|
| | அன்புப்படையல் | iii |
| | அணிந்துரை | v |
| | நூல்முகம் | xi |
| 1. | இராமலிங்க அடிகள் | 1 |
| 2. | அருளிச் செயல்கள் | 46 |
| 3. | முதல் திருமுறையின் பாடல்கள் | 50 |
| 4. | இரண்டாம் திருமுறையின் பாடல்கள் | 72 |
| 5. | மூன்றாம் திருமுறையின் பாடல்கள் | 119 |
| 6. | நான்காம் திருமுறையின் பாடல்கள் | 174 |
| 7. | ஐந்தாம் திருமுறையின் பாடல்கள் | 204 |
| 8. | ஆறாம் திருமுறையின் பாடல்கள் | 232 |
| 9. | நிறைவுரை | 341 |
| | பின்னிணைப்பு | |
| | பயன்பட்ட நூல்கள் | 343 |
| | பேராசிரியர் டாக்டர் ந.சுப்புரெட்டியார் நூல்கள் | 344 |

# இராமலிங்க அடிகள்

**ச**மயத் துறையில் ஒளிவிளக்காகத் திகழ்ந்தவர் இந்த ஞானச் செல்வர். இறுதிக் காலத்தில் வடலூரில் சோதியிற் கலந்தவர். சாதி வேறுபாடு முதலிய எல்லா வேறுபாட்டையும் கடந்து நின்ற வள்ளல். இவர்தம் சமரச சன்மார்க்க நெறி வைணவர்களின் திருமால் நெறியையும் சைவர்களின் சித்தாந்த நெறியினையும் இணைக்கும் பாலமாக அமைந்துள்ளது.

## 1. வள்ளலின் வாழ்க்கை வரலாறு

இப்பெருமான் சோழவள நாட்டில் தென் ஆர்க்காடு மாவட்டம் சிதம்பரம் வட்டத்தில் சிதம்பரத்திற்கு வட மேற்குத் திசையில் பத்துக்கல் தொலைவில் உள்ள **மருதூர்** என்ற சிற்றூரில் பிறந்தார். இவர்தம் பெற்றோர் கள் **இராமய்யப் பிள்ளை, சின்னம்மாள்** என்போர். இவர் கள் சமயம் சைவம். குலம் வேளாண்குலம். மரபு கருணீகர் மரபு. தந்தையார் கிராமத்துக் கணக்கப் பிள்ளை; பாடம் போதிக்கும் கணக்காயராகவும் திகழ்ந் தார். தாயார் செங்கற்பட்டு மாவட்டத்தில் பொன்னேரிக் கருகிலுள்ள **சின்னக்காவணம்** என்ற சிற்றூரில் பிறந்த வர். இராமய்யப் பிள்ளையின் ஐந்து துணைவியரும் ஒருவர் பின் ஒருவராக மரிக்கவே இப்பெருமாட்டியை ஆறாவது துணைவியாக ஏற்றவர். இவர்கட்கு ஏற்பட்ட மக்கட் செல்வங்களில் சபாபதி, பரசுராமன் என்ற இரண்டு ஆண் மக்கள்; உண்ணாமுலை, சுந்தரம் என்ற இரண்டு பெண்மக்கள். சிவனடியார்போல் வந்த இறை

வனருளால் 5.10.1823இல் ஐந்தாவது மகனாக ஒரு குழந்தை பிறந்தது; அதற்குப் பெற்றோர் 'இராமலிங்கம்' எனப் பிள்ளைத் திருநாமம் சாற்றினர்.

ஐந்து திங்கள் குழவியுடன் பெற்றோர் ஆடலரசன் வழிபாட்டிற்குச் சிதம்பரம் சென்றனர். அப்போது அடிகட்கு 'சிதம்பர ரகசியம்' தரிசனமாயிற்று.

*தாய்முதலோ ரொடுசிறிய பருவமதில் தில்லைத்*
*தலத்திடையே திரைதூக்கத் தரிசித்த போது*
*வேய்வகைமேல் காட்டாத என்றனக்கே எல்லாம்*
*வெளியாகக் காட்டியஎன் மெய்உறவாம் பொருளே*
— அருள்விளக்க மாலை - 44

என்ற பாடற்பகுதி அகச்சான்றாக அமைகின்றது. இன்னும் பல அகச்சான்றுகளும் உள்ளன. விட்ட குறை தொட்ட குறையை நிறைவேற்றற்கென்றே பிறந்தவர் என்பதை 'கட்டவிழ்த்த கமலம் என' (சிவதரிசனம் - 9) என்ற பாடலாலும் அறியலாம்.

இந்நிலையில் இராமலிங்கத்தின் எட்டாந் திங்களில் இராமைய பிள்ளை காலமாகவே குடும்பம் பொன்னேரிக்குச் சென்றது. ஓரிரு ஆண்டுகளில் அங்கு வசித்து சின்னம்மையார் சென்னைக்குக் குடியேறினார். இதிலிருந்து சென்னை வாழ்க்கை தொடங்குகிறது. இதனைச் சில பகுதிகளாகப் பிரித்து நோக்கலாம்.

1. கந்தகோட்ட பகுதி (1823-1835): அடிகளாளரின் அகவைக் காலத்தில் (1-12) நடைபெற்ற நிகழ்ச்சிகள்.

(1) அடிகளாரின் அகவை மூன்று அல்லது நான்கில் திண்ணையில் உறங்கிக் கொண்டிருந்தபொழுது திண்ணையிலிருந்து நழுவி விழுந்த பொழுது, கீழே விழாமல் ஒருவரால் காக்கப் பெற்றார்.

*ஓங்கியஓர் துணையின்றிப் பாதிஇர வதிலே*
*உயர்ந்தஒட்டுத் திண்ணையிலே படுத்தகடைச் சிறியேன்*

*தூங்கிமிகப் புரண்டுவிழத் தரையில்விழா தெனையே*
*தூக்கிஎடுத் தணைத்துக்கீழ்க் கிடத்தியமெய்த் துணையே*
— அருள்விளக்கமாலை - 45

என்பதால் அறியலாம். அந்த ஒருவர்தான் நடராசப் பெருமான்.

(2) பிள்ளைப் பெருமானுக்குப் பள்ளிக்குச் செல்ல விருப்பமில்லை. தமையனார் சபாபதிப் பிள்ளையே கல்வி புகட்டினார். சபாபதிப் பிள்ளையின் சொற்பொழிவுகளால் பெற்ற சிறிய வருவாயைக் கொண்டு குடும்பம் நடைபெற்றது. ஒருநாள் சொற்பொழிவில் ஏடு வாசிக்கும் பெண்மணி நோயுற்றதால் அந்தப் பணியை அண்ணியார் வேண்டுகோட்கிணங்க இராமலிங்கம் அதனை அற்புதமாக நிறைவேற்றிக் கேட்டோரையெல்லாம் மகிழ்வித்தார்.

(3) பிறிதொரு சமயம் சபாபதிப் பிள்ளை நோயுற்றிருந்தபொழுது அவருக்குப் பதிலாக சொற்பொழிவை நிகழ்த்தி அவையை மகிழ்வித்தார். அன்று முதல் மக்கள் இராமலிங்கம் பொழிவைக் கேட்க விரும்பினர்.

(4) மற்றொரு சமயம் தம்பியின் பொழிவை மறைந்திருந்து செவிமடுத்தார். அன்று ஏடு படிக்கும் துணையின்றி பொழிவை நிகழ்த்தினார். கேட்ட சபாபதி பீதியடைந்து தம்பியைத் தெய்வமாகவே கருதி வரலாயினர்.

(5) கந்தக் கோட்டம் பழமையான கோயிலன்று. வேளூர் மாரி செட்டியாரும் கந்தப்ப ஆசாரியாரும் திருப்போரூர் சென்று வழிப்பட்டு வந்த பொழுது வழியில் புற்றொன்றில் கண்ட முருகனது திருவுருவத்தை எடுத்து வந்து தாபித்த சிறு கோயிலே கந்தகோட்டம்! (சாலிவாகனசகம் 1595 - பிரமாதி ஆண்டு) பள்ளி செல்லாதும் வீட்டில் தங்காதும் திரிந்த பிள்ளைப் பெருமான் கந்தகோட்டத்திற்குச் சென்று முருகனை வழிபட

லாயினர். இப்போதுதான் 'தெய்வமணி மாலை'யும், 'கந்தர் சரணப்பத்தும்' அடிகளால் பாடப்பெற்றன. 'திருவருட்பாவில்' முதன் முதலாகப் பாடப் பெற்றவை இவையேயாகும். 'ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற' (தெய்.மாலை-8) என்ற பாடல் பிள்ளைப் பெருமான் எவ்வெவற்றை முருகனிடம் வேண்டினார் என்பதைக் காட்டும். அடிகளால் பாடப் பெற்ற முருகன் சந்நிதியும் விரைவாக வளர்ந்து இன்றைய நிலை எய்திற்று என்பது ஓர் உண்மை.

(6) மேன்மாடியில் நிலைக் கண்ணாடி இருந்த அறையை மூடிக் கொண்டு முருக உபாசனை செய்து வந்தார். அண்ணனுக்கும் அண்ணியாருக்கும் பிள்ளைப் பெருமான் என்ன செய்கின்றான் என்பதை அறியக் கூடவில்லை. ஒருநாள் முருகப் பெருமான் கண்ணாடியில் காட்சி நல்கினான். கண்டறியாதன கண்டார் அடிகள்.

*சீர்கொண்ட தெய்வ வதனங்கள்*
*ஆறும் திகழ்கடப்பம்*
*தார்கொண்ட பன்னிரு தோள்களும்*
*தாமரைத் தாள்களும்ஓர்*
*கூர்கொண்ட வேலும் மயிலும்நற்*
*கோழிக் கொடியும்அருட்*
*கார்கொண்ட வண்மைத் தணிகா*
*சலமும்என் கண்ணுற்றதே.*

— 3. பிரார்த்தனை மாலை - 1

என்ற பாடலில் திருத்தணிகைப் பெருமான் நம் பிள்ளைப் பெருமானுக்குக் காட்சித் தந்தது அகச்சான்றாக அமைகின்றது.

(7) ஓதாதுணர்ந்தவர்கள் சிலர். இவர்தம் ஆசிரியர் காஞ்சி சபாபதி முதலியார். இவரது அறிவுத் தரத்தையும்

கந்தகோட்டத்துப் பெருமானைக் கவிபாடி வழிபடுதலையும் கண்ட முதலியார் அவர்கள் அடிகளாருக்குக் கற்பிப்பதைக் கைவிட்டார். அடிகளார் ஓதாது உணர்ந்தமைக்கு அகச்சான்று நிறைய உள்ளன. ஒன்றிரண்டு காட்டுவோம். 'கற்றது மற்றவ்வழி' (4. அன்புமாலை - 14) என்ற பாடலில்,

*எற்றதும்பு மணிமன்றில் இன்பம்நடம் புரியும்*
*என்னுடைய துரையேநான் நின்னுடைய அருளால்*
***கற்றதுநின் னிடத்தேபின் கேட்டதுநின் னிடத்தே***

என்ற அடிகளால் அறியலாம். மேலும் "ஏதும் அறியாதிருளில்" (மேலது-25) என்ற பாடலில்,

***ஓதுமறை முதற்கலைகள் ஓதாமல் உணர***
***உணர்விலிருந் துணர்த்தி** அருள் உண்மைநிலை காட்டி*

என்ற அடியாலும் இஃது உணரப் பெறும். விரிவஞ்சி அவை காட்டப் பெறவில்லை.

(8) ஒன்பதாம் அகவையில் இறைவனால் ஆட்கொள்ளப் பெற்ற செய்தியை "வேண்டாமை வேண்டுகின்றார்" (2. அடிமைப் பதிகம்-3) என்ற பாடலின்

***ஆண்டாறு மூன்றாண்டில் ஆண்டு கொண்ட***
***அருட்கடலே** என்உள்ளத் தமர்ந்த தேவே*

என்ற அடியாலும், "வேண்டார் உளரோ" (6. வாதனைக் கழிவு -7) என்ற பாடலின்,

*தூண்டா விளக்கே திருப்பொதுவிற்*
*சோதி மணியே **ஆறொடுமூன்***
***றாண்டா வதிலே முன்னென்னை***
***யாண்டாய்** கருணை யளித்தருளே*

என்ற அடியாலும் அறியலாம்.

(9) ஆடும் பருவத்தே பாடத் தொடங்குதலை பல பாடல்களின் அகச் சான்றுகளால் திருயலாம். 'உருவத்தி லே' (1 திருவருண்முறையீடு - 48) என்ற முதற் குறிப்புடைய பாடலின்,

*உருவத்தி லேசிறி யேனாகி*
*யூகத்தி லொன்றுமின்றித்*
*தெருவத்தி லேசிறு கால்வீசி*
*யாடிடச் சென்றஅந்தப்*
*பருவத்தி லேநல் அறிவளித் தேஉனைப்*
*பாடச் செய்தாய்*

என்ற முதல் மூன்று அடிகளால் அறியலாம். அடுத்து,

*பாடும்வகை அணுத்துணையும் பரிந்தறியாச் சிறிய*
*பருவத்தே அணிந்தணிந்து பாடும்வகை புரிந்து*
— (4. அன்புமாலை - 14)

என்ற அடியாலும் தெளியலாம். மேலும்,

*வெம்மாலைச் சிறுவரொடும் விளையாடித் திரியும்*
*மிகச்சிறிய பருவத்தே வியந்து நினைந்து*
*பெம்மான்என் றடிகுறித்துப் பாடும்வகை புரிந்த*
*பெருமானே நான்செய்த பெருந்தவமெய்ப் பயனே.*
— அருள்விளக்க மாலை - 78

என்ற பாடற் பகுதியில தெரியலாம்.

(10) துறந்து மீண்டது. ஒருசமயம் இவரும் ஒத்த சிறுவனாகிய நண்பன் ஒருவனும் மழித்தும் உருத்தி ராக்க மாலையணிந்தும் கல்லாடை புனைந்தும் சென் னையை விட்டகன்றதாக ஒரு குறிப்பும் உள்ளது.

*ஐயநான் ஆடும் பருவத்தில் தானே*
*அடுத்தநன் னேயனோ 'டப்பா*

*பொய்யுலக ஆசை எனக்கில்லை உனக்கென*
*புகல்'என அவனும்அங் கிசைந்தே*
*மெய்யுறத் துறப்போம் என்றுபோய் நினது*
*மெய்யருள் மீட்டிட மீண்டேம்*
*துய்யநின் உள்ளம் அறிந்ததே எந்தாய்*
*இன்றுநான் சொல்லுவ தென்னே*

— 6. பிள்ளைப் பெருவிண் - 76

என்ற பாடலில் இதனைக் காணலாம்.

இவையனைத்தும் *9-12* ஆண்டுகளில் நடைபெற்றவை.

2. ஒற்றியூர்ப் பகுதி (1835 - 1858): அடிகளாரின் அகவை (*12-35*) காலத்தில் நிகழ்ந்தவை. *12*ஆம் அகவையில் முறையான ஞானவாழ்க்கை தொடங்குகின்றது; ஒற்றியூர் வழிபாட்டில் இது தொடக்கம். சிலவற்றை ஈண்டுக் காண்டோம்.

குடும்ப கோஷம் குருதரிசனப் படலத்திலும், பிற ஒற்றியூர்ப் பதிகங்களிலும் அடிகள் ஒற்றியூர் அழகை வருணிப்பதைக் காணலாம். பிள்ளைப் பருவத்திற்குரிய சேட்டைகள் இல்லாமையும் அப்பருவத்தில் அமைதற்கரிய பண்புகள் 'பிள்ளைச் சிறு விண்ணப்பம்', 'பிள்ளைப் பெரு விண்ணப்பம்' ஆகியவற்றில் காணலாம்.

(1) உணவில் வெறுப்பு: உணவு விஷயத்தில் நாவடக்கம் இவரிடம் காணப் பெற்றது.

*அறிவிலாச் சிறிய பருவத்தில் தானே*
*அருந்தலில் எனக்குள வெறுப்பைப்*
*பிறிவிலாது என்னுள் கலந்தநீ அரிதி*

— பிள்ளைச் சிறு - 8

என்றும்,

*பெற்றதாய் வாட்டம் பார்ப்பதற் கஞ்சிப்*
*பேருண வுண்டனன் சிலநாள்*

— பிள்ளைப் பெரு-31

என்றும் கூறியிருத்தலால் இதனைக் காணலாம்.

(2) நாடோறும் திருவொற்றியூர் சென்று தியாகப் பெருமானையும் வடிவுடை அம்மனையும் முருகனை யும் வழிபாடு செய்து வந்தவர். இரண்டாம் திருமுறை ஒற்றியூர்ப் பதிகங்கள் முதலியவற்றில் இதனைக் காண லாம். திருவொற்றியூர் நந்தி வழிபட்டதலமாதலால், அங்குத் தனிக் கோயிலில் எழுந்தருளியிருக்கும் நந்தி கேசுவரரையும் வழிபடத் தவறியதில்லை.

(3) திருவொற்றியூர்க் கடற்கரையிலுள்ள பட்டினத் தார் திருக்கோயிலுக்கும் சென்று வருவதில் தவறிய தில்லை. இங்கு அடிகள் மணலெல்லாம் சிவலிங்கமாகக் காண்கின்றார்.

ஒற்றியூரில் வடிவுடை அம்மன் அண்ணியார் வடி வில் உணவளித்ததும் ஒற்றியூர் அண்ணல் பூசாரி வடி வில் உணவளித்ததும் சிறப்பான நிகழ்ச்சிகளாகும்.

(4) ஒற்றியூர் வாழ்க்கையின் போதுதான் தொழு வூர் வேலாயுத முதலியார் அடிகளின் மாணாக்கரானார் (1849); இக்காலத்தில்தான் அடிகளின் திருமணமும் (1850) நடைபெற்றது. இல்லற வாழ்க்கையில் ஈடுபட வில்லை.

*முனித்தவெவ் வினையோ நின்னருட் செயலோ*
*தெரிந்திலேன் மோகமே லின்றித்*
*தனித்தனி ஒருசார் மடந்தையர்த் தமக்குள*
*ஒருத்தியைக் கைதொடச் சார்ந்தேன்*
*குனித்தமற் றவரைத் தொட்டனன் அன்றிக்*
*கலப்பிலேன் மற்றிது குறித்தே*

*பனித்தனன் நினைத்த தோறும்உள் உடைந்தேன்*
*பகர்வதென் எந்தைநீ அறிவாய்.*

— பிள்ளைப் பெரு - 43

என்பது இதற்கு அகச்சான்றாக அமைகின்றது.

(5) பலருக்குப் பாடஞ் சொன்னதும், சிறுவர்க்குக் கல்வி பயிற்றியதும் இந்த வாழ்க்கையின்போதுதான்.

(6) இந்தக் காலத்தில்தான் **ஒழிவிலொடுக்கம், தொண்டை மண்டல சதகம், சின்மய தீபிகை** என்ற மூன்று நூல்களையும் பதிப்பித்த செயல்கள் நடைபெற்றன.

(7) 'நிட்டாநுபூதி' உரைக்குச் சாற்றுகவி அருளியதும் (1851) சிதம்பர புராணப் பதிப்புக்குச் சாற்றுகவி அளித்தும் (1855) வேதநாயகம் பிள்ளை நீதிநூலுக்குச் சாற்றுகவி அளித்து (1859) 'மனுமுறை வாசகம்' என்ற நூலை இயற்றியதும் (1854) ஒற்றியூர் வாழ்க்கையின் போதுதான்.

(8) **சென்னையில் சில அற்புத நிகழ்ச்சிகள்:**

(i) ஒருநாள் அடிகள் வியாசர்பாடிக்குச் சென்று திரும்பியபோது அரவு ஒன்று குறுக்கிட்டது. உடனிருந்த அனைவரும் அஞ்சியோட, அடிகள் அசையாது நிற்க, அரவு அவரது காலைச் சுற்றிக் கொண்டது. அடிகள் அதனை ஏகும்படி ஏவ, அது ஊறு செய்யாது அகன்றது. அனைவருக்கும் ஒரே வியப்பு.

(ii) பலவாண்டுகளாக வாதநோயால் வருந்திய ஒருவர், அடிகளிடம் தம் துன்பத்தை விண்ணப்பித்துக் கொள்ள, அடிகள் திருநீறு அளிக்க, அதன் மகிமையால் நோய் குணமாயிற்று.

(iii) கந்தசாமி முதலியார் என்பார் தமது வறிய நிலையை அடிகளாரிடம் கூறி தாம் செல்வரை அணுகிப் பொருளுதவி பெறுவதற்கு ஏதுவாக அறிமுகச் சீட்டுத் தந்தருளுமாறு வேண்ட, அடிகள் நகைத்து,

*ஏட்டாலும் கேளயல் என்பாரை*
*நான்சிரித் தென்னைவெட்டிப்*
*போட்டாலும் வேறிடம் கேளேன்என்*
*நாணைப் புறம்விடுத்துக்*
*கேட்டாலும் என்னை உடையான்*
*இடஞ்சென்று கேட்பன்என்றே*
*நீட்டாலும் வாயுரைப் பாட்டாலும்*
*சொல்லி நிறுத்துவனே.*

— மூன்.திருமுறை. திருவடுண் முறையீடு - 31

என்று பாடி அவருக்கு அருட் செல்வத்தைப் போதித்து அனுப்பினார்.

(iv) சங்கராசாரிய சுவாமிகளுடன் அடிகள் அளவளாவ நேரிட்டபோது சுவாமிகள் வடமொழியே எல்லா மொழிக்கும் தாய் என்று கூற, அடிகளார் அஃதுண்மை அன்றென மறுத்து, வடமொழி அனைத்து மொழிக்கு அன்னையாயின், அருந்தமிழ் அனைத்திற்கும் அப்பனாகும் எனக் கூறித் தமிழின் சிறப்பை விரிவாக விளக்கினாராம்.

(9) அடிகளாரின் திருத்தணிகை வழிபாடு அவர்தம் கந்தகோட்டம் திருவொற்றியூர்ப் பகுதிகளோடும் இணைந் துள்ளது. தணிகை முருகன் ஒருமுகமாக எழுந்தருளியிருப்பினும் அடிகளாருக்கு ஆறுமுகங்களோடும் காட்சியருளினார்.

உருவ வழிபாட்டிலிருந்து அருவ வழிபாட்டிற்குச் செல்வது படிமுறை. முதலில் அடிகள் முருக உபாசகராக இருந்தார். பின்னர் சிவபக்தரானார். பின்னர் அருட்பெருஞ்சோதி ஆண்டவரின் அடியரானார். கந்தகோட்ட முருகன், ஒற்றியூர் சிவபிரான் தில்லை ஆடலரசன், வடலூர்ப் பேரொளி என்பது அடிகள் சென்ற வழி.

அடிகளாரின் அருள் வாழ்வில் கந்தகோட்டம் சரியை; ஒற்றியூர் - கிரியை; தில்லை - யோகம்; வடலூர் - ஞானம். இதவும் ஒருவகையான படிமுறையே. அடிகளார் தம்மைச் சிறுகாலை ஆட்கொண்ட பெருமானை,

*ஆறுமுகப் பெருங்கருணைக் கடலே தெய்வ*
*யானைமகிழ் மகிழ்குன்றே அரசே முக்கட்*
*பேறுமுகப் பெருஞ்சுடர்க்குட் சுடரே செவ்வேல்*
*பிடித்தருளும் பெருந்தகையே பிரம ஞானம்*
*வீறுமுகப் பெருங்குணத்தோர் இதயத் தோங்கும்*
*விளக்கமே ஆனந்த வெள்ள மேமுன்*
*தேறுமுகப் பெரியஅருட் குருவாய் என்னைச்*
*சிறுகாலை ஆட்கொண்ட தேவ தேவே*

— முதல் திருவருள் திருவிலாசப் பத்து - 1

என்று சிறப்பிப்பர். இதன் 4ஆம் பாடலும் இம்முறையிலேயே நடைபெறுகின்றது.

(10) **கனவில் காட்டுதல்:** மணிவாசகப் பெருமானுக்காகக் கொண்ட குதிரைச் சேவகர் கோலத்தைத் தன் கனவிலேனும் காட்டுமாறு வேண்டுவர்.

*திருவாத வூருரம் பெருமான்*
*பொருட்டன்று தென்னன்முன்னே*
*வெருவாத வைதிகப் பாய்பரி*
*மேற்கொண்டு மேவிநின்ற*
*ஒருவாத கோலத் தொருவாஅக்*
*கோலத்தை உள்குளிர்ந்தே*
*கருவாத நீங்கிடக் காட்டுகண்*
*டாய்என் கனவிலே*

— 3 திருவருண் முறையீடு - 134

இங்ஙனம் அடிகளின் வேண்டுகோட்கிணங்க இறைவன் பல காட்சிகளை கனவிலும் அருளினான்; நனவிலும் அருளினான்.

*(11)* **பல தலங்களின் வழிபாடு:** அடிகள் சென்னையில் வாழ்ந்த காலத்தில் பல தலங்களை வழிபட்டனர்.

(அ) **திருவலிதாயம்:** செங்கல்பட்டு மாவட்டத்தில், சைதாப்பேட்டை வட்டத்தில் உள்ள தலம். இறைவன் - வலிதாய நாதர்; இறைவி தாயம்மை. இறைவன்மீது கந்தைத் துணி சுற்றியிருந்ததைக் கண்டு அடிகள் நெஞ்சம் உருகுகின்றார். பாடல்தோறும் இந்த உருக்கத்தைக் காணலாம். ஒருபாடல் தருவோம்.

*சிந்தை நின்றசி வாநந்தச் செல்வமே*
*எந்தை யேஎமை ஆட்கொண்ட தெய்வமே*
*தந்தை யேவலி தாயத்த லைவநீ*
*கந்தை சுற்றும்க ணக்கது என்கொலோ*

— இரண்.திரு.காட்சிப் பெருமிதம் - 2

கந்தைச் சுற்றிய இரக்கக் காட்சியை நுவலும் இப்பதிகம் 'காட்சிப் பெருமிதம்' எனத் திருநாமம் பெற்றுள்ளது.

(ஆ) **திருமுல்லைவாயில்**[1]**:** இது தொண்டை நாட்டில் செங்கற்பட்டு மாவட்டத்தில் சைதை வட்டத்தில் உள்ளது. இது வட முல்லைவாயில். இறைவன் - மாசிலாமணி; இறைவி கொடியிடை நாயகி. மாசிலாமணியின் மீது இரண்டு பதிகங்கள் அருளியுள்ளனர் அடிகள் (2-9,10 பதிகங்கள்)

(இ) **திருஎவ்வுள்:** மயர்வற மதிநலம் அருளப் பெற்ற ஆழ்வார் பெருமக்களாலே மங்களாசாசனம் செய்யப் பெற்ற *108* திவ்விய தேசங்களுள் ஒன்று;

1. இப்பெயரில் இரண்டு தலங்கள். ஒன்று சோழ நாட்டில் தஞ்சை மாவட்டத்தில் உள்ளது. இது தென் முல்லைவாயில். மற்றொன்று இது.

தொண்டை நாட்டுத் திருப்பதிகள் 22இல் ஒன்று. சாலி கோத்திர முனிவர் 'சயனிப்பதற்கு எவ்வுள்' என் வினவி யதால் இத்திருத்திருத்தலம் 'திருஎவ்வுள்'[2] எனத் திரு நாமம் பெற்றது. திருஎவ்வுளூர் எனவும் வழங்கப் பெறும். இன்று இது 'திருவள்ளூர்' என வழங்குகிறது. சென்னையிலிருந்து அரக்கோணம் செல்லும் இருப் பூர்தி வழியில் இஃது ஒரு நிலையம். நிலையத்திலிருந்து சுமார் 3 கி.மீ. தொலைவிலுள்ளது இத்திருத்தலம். பெருமாள் - வீரராகவர்; தாயார் - கனகவல்லி. திரு மங்கை மன்னனும் திருமழிசை பிரானும் மங்களசாசனம் செய்துள்ளனர். பெருமானைப் போற்றி ஐந்து பாடல் களை அருளியுள்ளனர் அடிகள். இரண்டாம் திரு முறை யில் 'வீரராகவர் போற்றிப் பஞ்சகம்' (102) என்ற தலைப்பில் இடம் பெற்றுள்ளன இப்பாடல்கள்.

*பாண்டவர் தூத னாகப்*
*பலித்தருள் பரனே போற்றி*
*நீண்டவன் என்ன வேதம்*
*நிகழ்த்துமா நிதியே போற்றி*
*தூண்டலில் லாமல் ஓங்கும்*
*சோதிநல் விளக்கே போற்றி*
*வேண்டவர் எவ்வு ளூர்வாழ்*
*வீரரா கவனே போற்றி (2)*

என்பது இதன் இரண்டாம் பாடல். அடிகள் வழிப்பட்ட திருத்தலங்களுள் இரண்டு திருமால் திவ்விய தேசங்க ளாம். அவை (i) திருஎவ்வுள்; (ii) திருக்கண்ணமங்கை. அடிகள் திருமால் பரமாக அருளிச் செய்தவை 'வீரராக வர் போற்றித் திருப்பஞ்சகம்', 'இராமநாமப் பதிகம்', 'இராமநாம சங்கீர்த்தனம்' ஒன்று, 'திருக்கண்ண மங் கைத் துதி' ஒன்று ஆகப் பதினேழு பாசுரங்களாகும்.

2. இந்த ஆசிரியர் எழுதியுள்ள தொண்ட நாட்டுத் திருப்பதிகள் காண்க. (கழகத்தில் கிடைக்கும்)

(ஈ) புள்ளிருக்கு வேளூர்[3]: இப்போது வழங்கி வரும் பெயர் வைத்தீசுவரன் கோயில் என்பது. இது தஞ்சை மாவட்டத்தில் சீகாழி வட்டத்தில் உள்ளது. புள்ளிருக்கு வேளூர்ப் பிரானை அடிகள் இரண்டு பதிகங்களாலும் ஒரு மாலையாலும் ஒரு கீர்த்தனையாலும் போற்றியுள்ளார்கள். அவை *'சிகாமணிமாலை'*, *'பிரசாதப் பதிகம்'*, 'வைத்தியநாதர் பதிகம்' முதலியன. *சிகாமணி* மாலையும், *பிரசாதப்* பதிகமும் இரண்டாம் திருமுறையிலும், வைத்தியநாதர் பதிகம் ஆறாம் திருமுறைத் தனிப் பாடல்களுடனும் இடம் பெற்றுள்ளன. இரு வெண்பாக்கள் ஐந்தாம் திருமுறையில் உள்ளன.

(உ) திருவாரூர்: இது பாடல் பெற்ற சிவத்தலங்கள் 275இல் ஒன்று. மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றாலும் சிறந்தது. இறைவன் - வன்மீக நாதர் (புற்றிடம் கொண்ட பெருமான்); இறைவி - அல்லியங் கோதை. காஞ்சியும் திருவாரூரும் ஐம்பூதத்தலங்களுள் (பிருதிவி) தலம். ஆறாதாரத் தலங்களுள் இது மூலாதாரத் தலம். இத்திருத்தலப் பெருமானை அடிகள் 'விண்ணப்பப் பதிகம்' ஒன்றால் வழிபட்டுள்ளார்கள். இது மூன்றாம் திருமுறையில் 'திருவாரூர்ப் பதிகம்' என்ற பெயருடன் திகழ்கின்றது. இதில் ஒரு பாடல்:

*எந்தாய் ஒருநாள் அருள்வடிவின்*
*எளியேன் கண்டு களிப்படைய*
*வந்தாய் அந்தோ கடைநாயேன்*
*மறந்து விடுத்தேன் மதிகெட்டேன்*

3. புள் (சடாயு, சம்பாதி), இருக்கு (வேதம்), வேள் (முருகன்), ஊர் (சூரியன்) ஆகிய நான்கும் வழிபட்டமையால் புள்ளிருக்கு வேளூர் எனப் பெயர் பெற்றது. இறைவன் - வைத்தியநாதன்; இறைவி - தையல் நாயகி; முருகப் பெருமான் - முத்துக்குமாரன்; அடியார்களின் உடற் பிணியையும் உள்ளப் பிணியையும் தீர்ப்பதனால் இறைவன் வைத்தியநாதன் எனப்பட்டான்.

செந்தா மரைத்தாள் இணைஅன்றே
சிக்கென் றிருகப் பிடித்தேனேல்
இந்தார் சடையாய் திருஆரூர்
இறைவா துயரற் றிருப்பேனே.

— 3. திருவாரூர்ப் பதிகம் - 9

என்பது. இப்பாடலுள் 'எந்தாய் ஒருநாள் அருள் வடிவின் எளியேன் கண்டு களிப்படைய வந்தாய்' என்பது அடிகளாரின் அநுபவமாகும்.

**(ஊ) திருக்கண்ணமங்கை:** இஃது ஒரு வைணவ திவ்விய தேசம். திருவாரூருக்கு அருகிலுள்ளது. இங்கு எழுந்தருளியுள்ள அபிடேக வல்லித் துதியாக அடிகள் அருளிய ஒரே ஒரு பாடல் உள்ளது. அடிகள் திருவாரூரை வழிபட்ட காலத்தில் இத்திருத்தலத்தையும் சேவித்திருத்தல் கூடும்.

**சென்னை வாழ்வை நீத்தது:** சென்னை வாழ்வு தமது ஞான வாழ்வுக்கு உகந்ததன்று என்பதை உணர்ந்த அடிகள் குடும்பத்தினரையும் நகரத்தையும் விட்டு நீங்கித் தொலைவிற் சென்று வதியக் கருதினர்.

*தேட்டிலே மிகுந்த சென்னையில் இருந்தால்*
*சிறுகுறும் என்றுளம் பயந்தே*
*நாட்டிலே சிறிய ஊர்ப்புறங் களிலே*
*நண்ணினேன் ஊர்ப்புறம் அடுத்த*
*காட்டிலே பருக்கைக் கல்லிலே புன்செய்க்*
*களத்திலே திரிந்துற்ற இளைப்பை*
*ஏட்டிலே எழுத முடியுமோ இவைகள்*
*எந்தைநீ அறிந்தது தானே.*

— 6. பிள்ளை. பெரு.விண். 58

என்ற பாடல் அகச்சான்றாக அமைகின்றது. சென்னை

வாழ்வை நீத்த காரணத்தை நுவல்கிறது இப்பாடல்.[4] பல தலங்களை வழிப்பட்டுக் கொண்டு சிதம்பரத்தை வந்தடைகின்றார்.

3. பூர்வஞான சிதம்பரப் பகுதி (1858 - 1869) இப்போது அடிகளின் அகவை (35-44). இப்பகுதி பெரும்பாலும் வடலூர் வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்குமுன் நடைபெற்ற வாழ்க்கையைக் குறிப்ப தாகும்.

**கருங்குழியில்:** சென்னையைவிட்டு வெளியேறிய தும் பல தலங்களை வழிபட்டுக் கொண்டு சிதம்பரம் வருங்கால், கருங்குழி மணியக்காரர் வேங்கட ரெட்டியா ரைக் காண நேரிடுகின்றது. அவர் வேண்டுகோட் கிணங்க அடிகள் கருங்குழி சென்று ரெட்டியார் இல்லத் தில் தங்குகின்றார்கள். அடிகளாருக்குத் தனி அறை ஒதுக்கப் பெறுகின்றது. அடிகளாருக்கு உண்டியும் ரெட்டியார் இல்லத்திலேயே. கண்ணன் விதுரன் வீட் டிற்கு எழுந்தருளியபோது, "என்ன மாதவம் செய் ததோ இச்சிறுகுடில்?" என்று சொன்னதாகப் பாரதக் குறிப்பு. அங்ஙனமே அடிகள் ரெட்டியார் இல்லத்தில் தங்குவதற்கு அவர் இல்லம் என்ன மாதவம் செய்ததோ என்று நினைக்கத் தோன்றுகிறது.

(1) **கருங்குழி விநாயகர்:** கருங்குழியில் அடிகள் தங்கியிருந்த அகத்திற்கு அருகில் உள்ள ஆனைமுக னைப் பாடியுள்ளார். மூன்றாம் திருமுறையில் இறுதி பகுதியில் மூத்த பிள்ளையார் திருப்பதிகங்கள் நான்கில் மூன்றாவதாகிய கணேசத் திருவருள் மாலையில் இறு திப் பாடலில் இப்பிள்ளையாரைப் பற்றிக் குறிப்பு உள்ளது.

4. இப்பாடல் பின்னாளில் அடிகள் வடலூரில் எழுந்தருளியிருந்த காலத்தில் பாடியதாகும்.

*நாவி னாலுனை நாள்தொறும் பாடுவார்*
*நாடு வார்தமை நண்ணிப் புகழவும்*
*ஒவி லாதுனைப் பாடவும் துன்பெலாம்*
*ஓடவும் மகிழ் ஓங்கவும் செய்குவாய்*
*காவி நேர்களத் தான்மகிழ் ஐங்கரக்*
*கடவு ளேநற்க ருங்குழி என்னும்ஊர்*
*மேவி அன்பர்க்க ருள்கண நாதனே*
*விளங்கும் சித்தி விநாயக வள்ளலே.*

— 3. கணேசத் திருஅருள் மாலை - 10

என்ற பாடலில் இதனைக் காணலாம். இந்த நான்கு விநாயகர் பதிகங்களுமே கருங்குழி விநாயகரைப் பற்றிப் பாடப் பெற்றனவாகலாம் என்ற கருத்தும் உண்டு.

(2) **திருமுதுகுன்றம்:** நடுநாட்டுத் தலம் 22இல் ஒன்று இது. தற்சமயம் விருத்தாசலம்[5] என்ற பெயரில் வழங்கி வருகிறது. சில அடிகளே உயரமுள்ள ஒரு கற்பாறையின் மேல் கோயில் அமைந்துள்ள இறைவன் - பழ மலைநாதர்; இறைவி: பெரிய நாயகி. இத்தலத்தின் மீது பழமலையார் திருப்பதிகம் ஒன்றும் சில தனிப் பாடல்களும் அடிகள் அருளியவை. இவை மூன்றாம் திருமுறையில் அடக்கம்.

(3) திருவண்ணாமலை: இதுவும் நடுநாட்டுத் தலங்களுள் ஒன்றாகும். இறைவன் - அண்ணாமலையார்; இறைவி - உண்ணாமுலை அம்மை. அண்ணாமலை ஐம்பூதத் தலங்களுள் தேயு(தீ)த் தலம். நான்முகன், மால் காணாப் பெரியோனாக - திருக்கொழுந்தாக -

5. தேவார முதலிகள் மூவரும் இதனைப் பாடியுள்ளனர். சம்பந்தர் பதிகம் ஏழும், அப்பர் பதிகம் ஒன்றும், சுந்தரர் பதிகம் மூன்றும் இத்தலத்திற்கு உள்ளன. சுந்தரர் பதிகம் பாடி பழமலையாரிடம் 12,000 (பன்னீராயிரம்) பொன் பெற்று இங்கு மணிமுத்தாற்றில் இட்டு திருவாரூரில் குளத்தில் எடுத்தார். (ஆறும் குளமும் வங்கிகள்போல் செயற்பட்டது அற்புதம்). இத்தலம் காசியிலும் வீசம் பெரியது என்பர். ஆதலின் 'விருத்தகாசி' எனவும் வழங்கப்படும்.

இறைவன் நின்றருளிய தலம் இதுவேயாகும். இத் தலம்பற்றிய பதிகம் ஒன்று மூன்றாம் திருமுறையில் உள்ளது (*16*). அடுத்து வரும் **'திருவிளங்க'** என்ற குறிப்புடைய பாடல் அடிகள் அருணகிரியில் வளர்ந்த சிவக்கொழுந்தாகிய அண்ணாமலையாரைப் போற்றிய தாகும். அருணகிரியில் தீக்கொழுந்தாக வளர்ந்த இறை வனை, 'அருணகிரி விளங்க வளர்ந்த சிவக்கொழுந்தே' எனப் போற்றுவது மிகப் பொருத்தமாகும். (பாடலை *மூன்றாம் திருமுறையில் காண்க).*

(4) **திருவதிகை:** இதுவும் நடுநாட்டுத் தலமே. அட்டவீரட்டத்தலங்களுள் ஒன்று. 'அதிகை வீரட்டா னம்' என்ற திருநாமத்தாலும் வழங்கும். திரிபுரத்தை எரித்த வீரட்டேசுவரர் எழுந்தருளியுள்ள தலம். அப்ப ரும் அவர் தமக்கையார் திலகவதியாரும் சரியைத் தொண்டு செய்த தலம். அப்பரின் சூலை நோய் நீங்கிய தலமாகும்.

அடிகள் திருவதிகை சென்று வழிபட்டுப் பெரிய நாயகியைப் போற்றிய பாடல்கள் மூன்று கிடைத்துள் ளன. (மூன்றாம் திருமுறையில் *15*ஆம் தலைப்பில் - பெரியநாயகியார் தோத்திரம் காண்க). அவற்றுள் ஒன்று கலிவிருத்த யாப்பில் அமைந்தது. அது இது:

*உரிய நாயகி யோங்கதி கைப்பதித்*
*துரிய நாயகி தூயவீ ரட்டற்கே*
*பிரிய நாயகி பேரருள் நாயகி*
*பெரிய நாயகி பெற்றியைப் பேசுவாம் (1)*

ஏனைய இரண்டு பாடல்களும் பன்னிருசீர்க் கழிநெடி லடி ஆசிரிய விருத்த யாப்பில் அமைந்தவை.

1. **அடிகள் தனித்துறைதல்:** *1862*ஆம் ஆண்டில் அடிகள் சில காலம் நெல்லிக் குப்பத்திலும் தனித் துறைந்தார்கள். தலவழிபாடு தவிர பிற செயல்கட்காக

வும் அடிகள் தனித் திருப்பதற்காகவும் இவ்வாறு கருங் குழியை விட்டு அயலிடங்களில் அவ்வப்போது சில காலம் தங்குவதுண்டு.

2. **சிங்கபுரிக் கந்தரைப் பாடியது:** குறிஞ்சிப்பாடிக் கடுத்துள்ள சிங்கபுரிக் கந்தர்மீது ஒரு பதிகம் பாடியுள் ளார் (1864). நோயை நீக்க வேண்டுமென்று இப்பாடல் கள் வேண்டுகின்றன. தமையனார் வழிபாட்டிற்காக அடிகள் இப்பாடல்களை ஆக்கியிருக்கலாம். இப்பாடல் கள் மூன்றாம் திருமுறையில் 21வது தலைப்பில் அடக் கம்.

3. **கல்பட்டு சுவாமிகளை ஆட்கொள்ளல்:** தென்னார்க் காடு மாவட்டம் திருக்கோவலூர் வட்டத்தில் திருக்கோவ லூரிலிருந்து பன்னிரண்டு கல் தொலைவில் 'திருநறுங் குன்றம்' என்றோர் ஊரில் உள்ள சிறுகுன்று ஒன்றில் '**கல்பட்டு இராமலிங்க சுவாமிகள்**' என்று ஒருவர் இருந் தார். தம்மைக் குருநாதரே வலிய வந்து ஆட்கொள்ள வேண்டும் என்று காத்திருந்த இவரை அடிகள் அவர் இருப்பிடம் சென்று அவரை ஆட்கொண்டு தம்முடன் கருங்குழிக்கு அழைத்து வந்தார்கள் (1868க்கு முன் னர்). வடலூரில் சிறப்பான உபதேசங்களை சன்மார்க்க அன்பர்களுக்கு அருளிய காலத்தில் இவரையும் அழைப்பதாக வழக்கம் இருந்ததாகச் சொல்வர்.

6. **சிதம்பரம்**[6] **வழிபாடு:** இத்திருத்தலம் பழம் பெருமை வாய்ந்தது. 'கோயில்' என்றே சைவப் பெரு மக்களால் வழங்கப் பெறுவது.[7] பஞ்சபூதத் தலங்க ளுள் இஃது ஆகாயத் தலம். இருசமயக் கடவுள்

6. சித்+அம்பரம் = சிதம்பரம். சித் - அறிவு; அம்பரம் - ஆகாயம். சிதம்பரம் - ஞானாகாசம், சிதாகாசம்.
7. வைணவர்கள் திருவரங்கத்தைக் 'கோயில்' என வழங்குவர்.

(தில்லை கோவிந்தர், தில்லை நடராசர்) இருப்பது இத்த லச் சிறப்பு. சிதம்பர ரகசியம் அருள்வழிபாட்டிற்குரிய தாகலின் எச்சமயத்தார்க்கும் பொது என்பதில் ஐயம் இல்லை. 'எச்சமய முடிவுகளும் திருச்சிற்றம்பலத்தே இருந்த' என வள்ளல் பெருமானும் அருளுவர். இதனை இறைவனே தமக்கு அறிவித்தருளினான் என்பர்.

*இச்சைஒன்றும் இல்லாதே இருந்தஎனக் கிங்கே*
*இயலுறுசன் மார்க்கநிலைக் கிச்சையைஉண் டாக்கித்*
*தச்சுறவே பிறமுயற்ற செயுந்தோறும் அவற்றைத்*
*தடையாக்கி உலகறியத் தடைதீர்த்த குருவே*
*எச்சமய முடிவுகளும் திருச்சிற்றம் பலத்தே*
*இருந்தஎன எனக்கருளி இசைவித்த இறையே.*
*முச்சகமும் புகழமணி மன்றிடத்தே நடிக்கும்*
*முதல்அரசே என்னுடைய மொழியும்அணிந் தருளே.*

— 6. அருள்விளக்க மாலை - 53

என்ற பாடலைக் காண்க.

(அ) **எல்லாம் செயல் கூடும் என் ஆணை:** அம்ப லத்தே எல்லாம் வல்லான் தன்னை ஏத்தின் எல்லாம் செயல்கூடும் என்று தன்மேல் ஆணையிட்டு அருளியுள் ளார்.

*எல்லாம் செயல்கூடும் என்ஆணை அம்பலத்தே*
*எல்லாம்வல் லான்தனையே ஏத்து.*

என்று அடிகள் ஆணையிட்டுக் கூறிய இக்குறள் வெண்பா அடிகளது திருவாயிற் பிறந்தது முதல் இன்று வரை சன்மார்க்கிகளால் மந்திர மொழியாகப் பெரிதும் பயிலப் பெற்று வருவது.

*நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த*
*மறைமொழி தானே மந்திரம் என்ப.*[8]

என்பது தொல்காப்பியம். அடிகள் நிறைமொழி மாந்தர். அவர்களது ஆணையிற்கிளந்தது இம்மறைமொழி. ஆகவே, இது மந்திரம்.

இவ்வாறு ஆணையிட்டுக் கூறும் வழக்கம் அடிகளிடத்துப் பெருவழக்காகக் காணப் பெறுகின்றது. இது ஞானசம்பந்தப் பெருமானிடமிருந்து அடிகட்கு அமைந்திருத்தல் வேண்டும்.[9] இரண்டு எடுத்துக்காட்டுகள் தருவேன்.

(i) *ஆணைஉன்மேல் ஆணைஉன்மேல் ஆணைஉன்மேல் ஐயா*
*அரைக்கணமும் நினைப்பிரிந்தே இனித்தரிக்க மாட்டேன்*
*கோணைநிலத் தவர்பேசக் கேட்பதுபோல் இன்னும்*
*குறும்புமொழி செவிகள்உறக் கொண்டிடவும் மாட்டேன்*
*ஊணைஉறக் கத்தையும்நான் விடுகின்றேன் நீதான்*
*உவந்துவராய் எனில்என்றன் உயிரையும்விட் டிடுவேன்*
*மாணைமணிப் பொதுநடஞ்செய் வள்ளால்நீ எனது*
*மனம்அறிவாய் இனம்உனக்கு வகுத்துரைப்ப தென்னே.*
— 6. பிரியேன் என்றல் - 2

என்பது ஒன்று. இது அடிகள் இறைவன்மீது ஆணையிட்டு விண்ணப்பித்தது.

(ii) *ஆணை ஆணைநீ அஞ்சலை அஞ்சலை*
*அருள்ஒரு தருகின்றோம்*
*கோணை மாநிலத் தவரெலாம் நின்னையே*
*குறிக்கொள்வர் நினக்கேளம்*

8. தொல்.பொருள்.செய்யு - 176.

9. சம்பந்தர் நான்கு இடங்களில் 'ஆணைநமதே' என ஆணையிட்டுரைக்கின்றனர். 1.84:11; 1.85:11; 3.78:11; 3.118:11 என்பனவற்றில் பாடல்கள் இவ்வாறு இறுகின்றன.

*ஆணை அம்பலத் தாசையும் அளித்தனம்*
*வாழ்கநீ மகனேஎன்*
*றேனை பெற்றிட எனக்கருள் புரிந்தநின்*
*இணைமலர்ப் பதம்போற்றி*

— 6. தனித்திருமாலை - 26

என்பது இரண்டு. இஃது இறைவன் தன்மீது ஆணையிட்டு அடிகட்கு உறுதி உரைத்தது. பிறவற்றைத் திருவருட்பாவில் ஆங்காங்குக் கண்டு கொள்ளலாம்.

(அ) சிற்றம்பலப் புகழ்ப்பாக்கள்: பெரும்பாலும் இவற்றை 'அருள் விளக்க மாலை'யில் கண்டு களிக்கலாம்.

*''கோடையிலே இளைப்பாற்றிக்'' - 2*
*''தனித்தனிமுக்கனி பிழிந்து' - 17*
*'பார்த்தாலும் நினைத்தாலும்' - 26*
*''கலீலார்க்கும் கற்றவர்க்கும்'' - 39*
*''அருட்சோதித் தெய்வம்எனை'' - 1*
*''எல்லம்செய்வல்ல தெய்வம்'' - 2*

இறுதி இரண்டும் - 6 'பரசிவநிலை'யில் உள்ளவை.

(ஆ) சிவகாமி அம்மையைப் பாடியது - 2 அம்மைத் திருப்பதிகத்தில் (இரண்டாம் திருமுறை) காணலாம்.

5. சிதம்பர அநுபவங்கள்: இவற்றைப் பல பாடல்களில் கண்டு மகிழலாம்.

(1) 'அஞ்சாதே என்மகனே! உனக்கு அநுக்கிரகம் புரிந்தோம்! நீ ஆடுக! வேண்டியவாறு ஆடுக! தில்லை மன்றில் திருநடனம் கண்டு நெடுங் காலம் இன்ப வெள்ளத்துள் திளைத்து இனிது வாழ்க' எனல்

— 4. அன்புமாலை 19

(2) **இன்னும் ஒருகால் காண்பேனோ:** ஒருகால் அல்லது பலகால் திருநடனம் கண்ட பெருமான் 'இன்னும் ஒருகால் காண்பேனோ' என்று ஏக்கமுறுவாராய் (இரண்டாம் திருமுறை - 70 தரிசனப் பதிகம் பத்துப் பாடல்களிலும்) கூறுவர். பாடல்களை இத்திருமுறையில் காண்க.

(3) **சிறிது அறிந்தேன், முழுதும் அறிவேனோ:** 'சிதம்பரத்தில் ஆனந்தர் சித்தர் திருநடத்தைச் சிறிது அறிந்தேன்; இன்னும் முழுதும் அறிவேனோ' என்று ஏக்கமுறுவதைக் காணலாம். (-6 அத்துவித ஆனந்த அநுபவ இடையீடு - 10 பாடல்கள்) பாடல்களை இத்திருமுறையில் காண்க.

(4) **அம்பலவாயிலில் அழுது நின்றது:** ஒரு நாள் அடிகள் அம்பல வாயிலில் ஒரு புறத்தே நின்று திருவருளை நினைந்து அயர்ந்து அழுதார். அடிகளது அவல நிலையைப் பொறுக்கலாற்றாத அம்பலவாணன் அடிகள் முன் தோன்றி முகமலர்ந்து அருள்மொழி கூறித் தேற்றிய நிகழ்ச்சியை ஒரு பாடலில் (- 6 இறை எளிமையை வியத்தல் - 10) பதிவு செய்கின்றார்.

(5) **அம்பலத் திருக்காட்சி:** அம்பலத்தில் ஒருநாள் ஆதித்தர் பன்னிருவர் ஒளியிலும். பேரொளியான இறைவனை அடிகள் காண்கின்றார்கள். தம் கண்கள் செய்த பெருந்தவத்தைப் பாராட்டி மகிழ்கின்றார்கள். (- 4 தனித் திருவிருத்தம் 42,43)

(6) **அம்பலவாணரிடம் பரிச வாசக தீட்சைகள் பெற்றமை:** ஒரு சமயம் அருள் ஒழுகும் அம்பலவாணன் அடிகளாருக்கு இவ்விரு தீட்சைகளையும் செய்தருளல் (மேலது 44)

(7) சிலம்பொலி கேட்டல்: சிலம்பொலி கேட்டல் ஞானயோக அநுபவங்களுள் ஒன்று. சேரமான் பெருமாள் நாயனார் இறைவனின் சிலம்பொலி கேட்டதைப் போலவும் (திருத்தில்லை) மணிவாசகப் பெருமான் சிலம்பொலி கேட்டதைப் போலவும் (வாதவூர்) அடிகளும் சிலம்பொலி கேட்கின்றார். (-6 பிள்ளைப் பெரு விண்ணப்பம் - 12)

(8) நால்வர் பெருமக்கள் மீதும் அருள் மாலைகள் பாடியநுபவித்தவர் (ஐந்தாம் திருமுறை)

(9) அடிகள் நால்வர் பெருமக்களையடுத்து திருஐந் தெழுத்தில் பற்று மிக்கவர் என்பது தெளிவு.

*பெற்ற தாய்தனை மகமறந் தாலும்*
*பிள்ளை யைப்பெறுந் தாய்மறந் தாலும்*
*உற்ற தேகத்தை உயிர்மறந் தாலும்*
*உயிரை மேவிய உடல்மறந் தாலும்*
*கற்ற நெஞ்சகம் கலைமறந் தாலும்*
*கண்கள் நன்றிமைப் பதுமறந் தாலும்*
*நற்ற வத்தவர் உள்ளிருந் தோங்கும்*
*நமச்சி வாயத்தை நான்மற வேனே.*

— 2 நமச்சிவாய சங்கீர்த்தன லகிரி - 7

*நான்செய்த புண்ணியம் யாதோ*
*சிவாய நமவெனவே*
*ஊன்செய்த நாவைக்கொண் டோதப்பெற்*
*றேன்எனை ஒப்பவரார்.*

— 1. திருவருள் முறையீடு - 90

என்பவை இதற்குச் சான்றுகளாக அமைகின்றன.

(10) திருமுறைகளால் அருள்பெற்றது:

(i) **திருக்கடைக்காப்பால் இறைவன் திரு வுளங் காட்டியருளியது**[10]

ஒருநாள் திருக்கடைக்காப்பாகிய சம்பந்தர் தேவ ராத்தால் இறைவன் அடிகட்குத் தன் திருவுளத்தைக் காட்டியருளினான். காட்டிய நாளில் அடிகள் அதனை அறிந்திலர். பின்னொரு நாள் அடிகளின் உளத்திலி ருந்தே இறைவன் பெருநெறியைக் காட்டியருளினான். அங்ஙனம் காட்டிய நாளில் முன்பு திருக்கடைக் காப் பால் காட்டியருளிய தன் பொருளை அடிகள் உணர்ந்த னர். திருக்கடைக்காப்பால் திருவுளங் காட்டியதை **'திரு நெறி மெய்த்திருமறையாம்'** (*2 திருஅருள் விலாசம் - 2*) என்ற பாடலில் குறிப்பிடுகின்றார் அடிகள்.

(ii) **திருமந்திருத் திருமுறையால் உணர்த்தியருளியது:** இதனை அடிகள் **'திருவளர் திருஅம்'** (*6 பிள்ளைப் பெருவிண்ணப்பம் - 118*) என்ற பாடலால் குறிக்கின் றார்.

6. **சமரச சுத்தசன்மார்க்க சங்கம்** நிறுவியது *1865*இல். முதலில் **'சமரச வேத சன்மார்க்க சங்கம்'** என்ற பெயரில் நிறுவப் பெற்றது. பின்னர் மேற்காட்டிய பெயரால் மாற்றப் பெற்றது.

**கொள்கைகள்:** கடவுள் ஒருவரே. அவரை உண்மை அன்பால் ஒளி (சோதி) வடிவில் வழிபட வேண்டும். சிறு தெய்வ வழிபாடு கூடாது. அத்தெய்வங்களின் பெயரால் உயிர்ப்பலி கூடாது. புலால் உண்ணக் கூடாது. சாதி சமய முதலிய எவ்வகை வேறுபாடுகளும் கூடாது. எவ்வுயிரையும் தம் உயிர்போல் எண்ணும்

10. சம்பந்தர் தேவாரத்தைத் **'திருக்கடைக் காப்பு'** என்பதும், திருநாவுக்கரசர் தேவாரத்தைத் **'தேவாரம்'** என்றே வழங்குவதும், சுந்தரர் தேவாரத்தைத் **'திருப்பாட்டு'** என்பதும் ஒருவகை வழக்கு.

ஆன்ம நேய ஒருமைப்பாட்டுரிமையைக் கைக்கொள்ள வேண்டும். ஏழைகளின் பசி தீர்த்தலாகிய சீவகாருண் யமே பேரின்ப வீட்டின் திறவுகோல். புராணங்களும் சாத்திரங்களும் முடிவான உண்மைகளைத் தெரிவிக்க மாட்டா. இறந்தவரைப் புதைக்க வேண்டும்; எரிக்கக் கூடாது. கருமாதி, திதி முதலிய சடங்குகள் செய்ய வேண்டா - இவை கொள்கைகள்.

7. **கூடலூர் (கடலூர்) தனித்துறைதல்:** இக்காலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் பல. அவற்றை ஈண்டுக் குறிப் போம்.

(1) சித்தர் ஒருவர் அடிகளைக் கண்டு இலட்டு ஒன்று தந்து மறைந்தார். அந்த இலட்டை அனைவர்க் கும் விநியோகித்து ‘சித்தர் ஒருவர் வந்து போனார். இந்நேரம் அவர் காசியிலிருப்பார். அவர் கொடுத்த இலட்டுதான் இது’ என்றார் அடிகள்.

(2) அப்பாசாமி செட்டியார் வாழைத் தோட்டத்தில் வாழை இலையிலிருந்த பாம்பு தீண்டியது. தீண்டிய இடத்தில் குருதி கசிந்தது. அவ்விடத்தில் திருநீற்றைப் பூசினார் அடிகள். தீண்டிய பாம்பு மரித்தது. அமுதுண் டும் சாவர் தேவர்கள். நஞ்சுண்டும் சாகார் ஞானிகள். அடிகள் சாதாரண மனிதர் அல்லர்.

இன்னும் பல உள; விரிவஞ்சி அவை காட்டப் பெறவில்லை.

8. **கருங்குழியில் நிகழ்ந்த அற்புதங்கள்** சில காட்டு வேன்.

(1) **நீரால் விளக்கெரித்தது:** இரவில் விளக்கில்லாத இடத்தில் இருக்கக் கூடாது என்பது அடிகள் கொள்கை.

11. இராமலிங்க அடிகள் திருவரலாறு (ஊரன் அடிகள் எழுதியது காண்க.)

ஆதலின் அடிகளது அறையில் விளக்கு எரிந்து கொண்டே இருக்கும். அடிகள் இரவில் ஒரு மணி நேரமே உறங்குவார். தியானம் செய்வதிலும் அருட் பாக்களைப் பாடுவதிலும் எழுதுவதிலுமே மற்றைப் பொழுதைக் கழிப்பர். ஒருநாள் ரெட்டியார் வீட்டுத் தலைவி அயலூர் சென்றிருந்தபொழுது விளக்கருகே எண்ணெய்க் கலம் ஒன்றும், புதிய மண்கலத்தைப் பழக்குவதற்குத் தண்ணீர் நிரப்பிய கலம் ஒன்றும் வைத் துச் சென்றிருந்தனர். அடிகள் தண்ணீர்க் கலத்தை எண்ணெய்க் கலம் என்று கருதி தண்ணீரையே விளக் கில் ஊற்றிக் கொண்டே இருந்தார். விளக்கும் எறிந்து கொண்டேயிருந்தது. மறுநாள் அம்மையார் திரும்பிய தும் உண்மை தெரியலாயிற்று. அடிகளோ 'என்னால் என்ன இருக்கிறது? இறைவன் சந்நிதியில் தண்ணீர் விளக்கும் எரிந்தது!' என்று கூறி அமைந்தனர். இச் செய்தி பலர் எழுதிய பாடல்களில் தெரிவிக்கப்படுகின் றன.

(2) இறைவன் இரவில் ஒன்றுக் கொடுத்தது: ஒருநாள் நள்ளிரவில் இறைவன் மானிடத் திருமேனி தாங்கி நள்ளிரவில் கதவைத் தட்ட, அடிகள் திறந்தார். வந்தவர் தன் திருவடிகளில் ஒன்றை வாயிற்படியின் அகத்தும் மற்றொன்றைப் புறத்தும் வைத்தவாறு நின்று 'இது தேவர்க்கும் அரிது; நற்றவர்க்கும் அரிது. உனக்கிது நாம் நல்கினம்' என்று உணர்த்திச் சென்றார். இதனை 4 அருட்பிரகாச மாலை (ஐந்தாம் திருமுறை) பாடல்கள் *1,4, 6,7, 17,23*ஆல் அறியலாம்.

(3) திருநீறு கேட்க சுடர்ப்பூ அளிக்கப் பெற்றது: மற்றொரு நாள் அடிகள் அன்பர்கள் புடைசூழ இருந்த போது இறைவன் எழுந்தருளி மற்றவர்க்கெல்லாம் திரு நீறு அளித்து அடிகளை நோக்கிப் புன்னகை புரிந்து திருநீற்றுப் பையிலிருந்து 'செஞ்சுடர்ப்பூ' ஒன்றை

அளித்தருளினார். இது 'பிரசாத மாலை' (நான்காம் திருமுறை)யில் பாடல்தோறும் பத்துப் பாடல்களிலும் குறித்துள்ளார்.

9. உருவ வழிபாட்டைப் பற்றி: இதுபற்றி பிரம்ம சமாஜத்தாருடன் வாதம் 16.1.1867இல் நடைபெற்றது. அடிகளும் அதில் கலந்து கொண்டார். உருவ வழிபாடு அறவே கூடாதென்பார் பிரமசமாஜத்தார் (இராஜாராம் மோகன்ராய்). அந்த வழிபாடு வேண்டியதே என்பர் வள்ளற் பெருமான்.

உருவ வழிபாடும் அருவ வழிபாடும் அவ்வப் பக்குவர்க்கு உரியவை; உருவ வழிபாடு முதற்படி; அருவ வழிபாடு முடிவான படி. அருவ வழிபாடு எல்லாராலும் செய்ய இயலாது; அதற்குப் பெரும் பக்குவம் வேண்டும். உருவ வழிபாடு எல்லாராலும் செய்ய இயலும். உருவ வழிபாட்டிலிருந்தே அருவ வழிபாட்டுக்குரிய பக்குவத்தைப் பெறுதல் சாமானி யர்க்குரிய சாதன முறை. ஆதலால் உருவ வழிபாடு இகழ்ச்சிக்குரியதன்று என்பது அடிகளாரின் கொள்கை. சாதாரண தரத்தவர்கள் செய்ய வேண்டிய தியானத் தைப்பற்றி உபதேசிக்கும்போது, "தியானம் செய்ய வேண்டுமானால் ஏதாவது ஓர் உருவத்தைத் தியானிக்க வேண்டும். நிஷ்களமாக இருக்கப்படாது; உருவமாக இருக்க வேண்டும். அருவமாகத் தியானிக்கப்படாது. பின் உருவம் கரைந்து அருவமாகும்" என அடிகள் உபதேசிக்கின்றனர்.

10. திருவருட்பா முதற் பதிப்பு வெளியீடு (பிப்பிரவரி - 1867): முதல் நான்கு திருமுறைகளே அடங்கியவை இப்பதிப்பில். பெயரை 'இராமலிங்க சுவாமிகள்' என்று வழங்கக் கூடாது என்று அடிகள் தடுத்துவிட்டனராத

லின் 'திருவருட் பிரகாச வள்ளலார் என்னும் சிதம்பரம் இராமலிங்க பிள்ளையவர்கள்' என்று குறிப்பிடப் பெற்றது. நூல் வெளிவந்த பின்னர்[12] இதனைக் கண்ணுற்ற அடிகள் வருந்தினார். பின்னர் ஒருவாறு சமாதானப்பட்டுத் 'திருவருட் பிரகாச வள்ளல் ஆர் என்று கேட்கிற இராமலிங்கம்' என்று வைத்துக் கொள்ள வேண்டுமோ? என்று அருளினாராம்.

## 4. உத்தர ஞானசிதம்பரப் பகுதி (1867 1870).[13] அடிகளாரின் அகவை (44-47)

அடிகளாரின் கொள்கைகளுள் தலையாயது சீவ காருண்யம். இதனை அடிகள் இருவகையாக வற்புறுத்துவர். (1) ஒன்று புலால் மறுத்தல், (2) அற்றார் அழி பசி தீர்த்தல். பின்னதை ஈண்டும் முன்னதைப் பிறிதோரிடத்தும் காட்டுவோம்.

பசிக் கொடுமை: பசி எல்லா உயிர்கட்கும் பொதுவானது. அன்னை கருவறையிலிருந்து வெளிவந்த நாள் முதல் காலன் கொண்டு போகும் வரையில் நிலைத்திருப்பது. கொடியவற்றுள் எல்லாம் கொடியது. எல்லா வகைத் துன்பங்களுக்கும் மூலகாரணம் இதுவே.

சீவர்கட்கும் பசி வந்த காலத்தில் சீவ அறிவு விளக்கமடையாமல் மயங்குகிறது. அது மயங்கவே அறிவுக்கறிவாகிய ஆண்டவன் விளக்கம் மறைபடுகின்றது. பல்வேறு அவத்தைகள் நேரிடுகின்றன. உணவு கிடைத்தபோது உண்டு பசி நீங்க அனைத்து அவத்தைகளும் நீங்குகின்றன.

12. நூலுக்கு 'திருவருட்பா' எனப் பெயரிட்டவரும் அவற்றை ஆறு திருமுறைகளாக வகுத்தவரும் தொழுவூர் வேலாயுத முதலியார்.

13. பூர்வஞான சிதம்பரப் பகுதி என்பது தில்லையும் அதன் சுற்றுப்புறமுள்ள பகுதிகளுமாகும்.

அடிகள் சீவகாருண்யத்தின் திருவுருவம். பசியால் துன்பமுறுவர்களைக் கண்டபோதும் அவர்களைப் பற்றிக் கேட்டபோதும் அடிகளாரின் உள்ளம் நடுங்கும்.

*வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம்*
*வாடினேன் பசியினால் இளைத்தே*
*வீடுதோறு இரந்தும் பசியறாது அய்ந்த*
*வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்*
*நீடிய பிணியால் வருந்துகின் றோர்என*
*நேர்உறக் கண்டுளத் துடித்தேன்*
*ஈடின்மா னிகளாய் ஏழைக ளாய்நெஞ்*
*சிளைத்தவர் தமைக்கண்டே இளைத்தேன். (52)*

இது கண்டபோது வருந்தியதற்கு.

*எட்டரும் பொருளே திருச்சிற்றம் பலத்தே*
*இலகிய இறைவனே உலகில்*
*பட்டினி உற்றோர் பசித்தினி களையால்*
*பரதவிக் கின்றனர் என்றே*
*ஒட்டிய பிறரால் கேட்டபோ தெல்லாம்*
*உளம்பகீர் எனநடுக் குற்றேன்*
*இட்டஇவ் வுலகில் பசிகளில் எந்தாய*
*என்னுளம் நடுங்குவ தியில்பே. (22)*

— 6. பிள்ளைப் பெருவிண்ணப்பம்

இது கேட்டபோது வருந்தியதற்கு.

பசிக் கொடுமையை வள்ளல் பெருமான் உரைப்பது போலவும், பசி தவிர்த்தலின் சிறப்பை அவர் உணர்த்துவது போலவும் எவராலும் எப்பொழுதும் இயம்ப முடியாது. ஆற்றா மாக்களின் அரும்பசிகளையும் பேரறமாகிய சீவகாருண்ய ஒழுக்கமில்லாதாரை "பட்டினி கிடப்பாரைப் பார்க்கவும் நேரீர், பழங்கஞ்சியாயினும் வழங்கவும் நினையீர்" (-6 உலகர்க்கு உய்

வகை கூறல் - 6) என்று பகர்வர். தாம் கூறியதைச் செயலில் நடத்திக் காட்ட அமைக்கப் பெற்றதே **சத்திய தரும சாலை.**

**இடம் தேர்தல்:** கருங்குழியை உறைவிடமாகக் கொண்டிருநதாலும், அடிகள் வடலூர்க்கு அடுத்தாற் போல் அதன் வடபுறமுள்ள பெருவெளியே தரும சாலையை அமைக்கத்தக்க இடம் எனத் தேர்ந்தெடுத்து எண்பது காணி நிலம் பலர் ஒத்துழைப்பால் வாங்கப் பெற்றது (2.2.1867). தொடக்க விழாவும் 25.3.1867இல் நடைபெற்றது.

**தருமசாலையின் தொண்டு:** ஆற்றாமாக்களின் அரும் பசி களையும் பேரறம் தரும சாலையில் நாள்தோறும் நடந்து வந்தது. இன்றும் குன்றாது நடைபெற்று வரு கின்றது. சாதி சமய முதலிய வேறுபாடுகட்கு அங்கே சிறிதும் இடம் இல்லை.

**புலாலுண்போர்;** இவர்கள் சன்மார்க்கச் சங்கத்திற்கு அருகராகார். புலாலுண்பவரை அடிகள் சங்கத்தில் சேர்த்துக் கொள்வதில்லை. எனினும் அவர்கள் 'பசி' என்று தரும சாலைக்கு வந்துவிட்டால் அப்புறவினத் தார்க்கும் உணவளிக்கத் திட்டம் இருந்தது. (6 அருள் விளக்கமாலை 71,72,73 பாடல்கள் காண்க)

**கிளைச் சாலைகள்:** தருமசாலையைச் சார்ந்து வைத்தி யசாலை, சாத்திர சாலை, உபகார சாலை, விருத்தி சாலை, உபாசனா சாலை, யோக சாலை, விவகார சாலை ஆகிய சாலைகளை அதன் கிளைகளாக நிறுவ அடிகள் திட்டமிட்டிருந்தார்கள். இவை நிறுவப் பெற்றனவாகத் தெரியவில்லை.

1. '**சீவகாருண்ய ஒழுக்கம்**' என்ற நூல் வெளியிடப் பெற்றது. இந்த நூலின் முதற் பதிப்பு அடிகள் சித்தி

பெற்ற ஐந்தாண்டுகட்குப் பிறகு 1879-இல் புதுச்சேரியில் பு.பெ.கிருஷ்ணசாமி நாயக்கரால் அச்சிடப் பெற்றது.

2. **'சன்மார்க்க போதினி' பாடசாலை** (*1867*). தருமசாலை நிறுவிய அதே ஆண்டிலேயே (*1867*) அடிகள் 'சன்மார்க்க போதினி' என்ற பாடசாலை ஒன்றினையும் நிறுவினார்கள். இப்பாடசாலை சிறுவர் முதல் முதியோர் வரை அனைவர்க்கும் கல்வி கற்பிப்பது, தமிழ், வடமொழி, ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளையும் கற்பிக்கும் மும்மொழிப் பாடசாலை. தொழுவூர் வேலாயுத முதலியார் இப்பாடசாலைக்கு ஆசிரியராக நியமிக்கப் பெற்றார்.

3. **சன்மார்க்க விவேக விருத்தி:** இப்பெயரில் ஒரு பத்திரிகை தொடங்கப் பெற்றது. சன்மார்க்கக் கொள்கைகளைப் பரப்புவதே இதன் நோக்கம். அடிகள் இதனை நடத்தி வந்ததாகத் தெரியவில்லை. *1969* முதல் (*1.2.1969*) தொடங்கி நடைபெற்று வருகிறது.

4. **தருமசாலையில் உறைதல்:** சாலை நிறுவப் பெற்ற பின்னர் அதுவே அடிகளின் உறைவிடமாயிற்று. அதன் பின்னர் அடிகள் கருங்குழியில் தங்கவில்லை. வெளியூர்கட்குச் சென்று தங்கிய சிற்சில காலந்தவிர மற்றைய காலங்களில் சாலையிலே (*1867* முதல் *1870* வரை) உறைந்தனர்.

சன்மார்க்க சங்கத்தின் இறை வழிபாட்டிற்கும் பிற பணிகட்கும் சாலையே இடமாயிற்று; அதுவே சங்கத்தின் அலுவலகமாகவும் அமைந்தது. அப்பாசாமி செட்டியார் சாலையை நடத்தி வந்தார். இருபதின்மருக்கு மேல் உதவியாக இருந்து வந்தனர். அவர்கள் உதவும் பொருள்களால் சாலை நடைபெற்று வந்தது.

அடிகளைப் பொறுத்தவரையில் தரும சாலை தவச் சாலையாகவும் திகழ்ந்தது. அடிகளின் முகத்தில் எப் போதும் துயரக் குறி இருந்து கொண்டே இருந்தது. இதற்குக் காரணங்கள் இரண்டு. (1) இறைவன் தனக்கு இன்றும் முற்றிலும் அருள் செய்யவில்லையே என்ற கவலை. (2) எவ்வளவோ சொல்லியும் தம் உபதேசங் களை மக்கள் செவிமடுத்துக் கடைப்பிடிக்கவில்லையே என்ற வருத்தம். இந்தக் கவலையோடும் வருத்தத்தோ டும் அடிகள் சாலையில் அருந்தவம் ஆற்றினார்.

5. **சாலையில் நிகழ்ந்த அற்புதங்கள்** சிலவற்றை ஈண்டுக் காண்போம்.

(1) ஒரு நாள் அடிகள் உச்சிப் போதில் கடும் வெயி லில் வெளிச் சென்றார். அடிகள் திரும்ப வராதது கண்டு சண்முகம் பிள்ளை என்பார் வெளியே வந்து பார்க்க, அடிகளின் அங்கங்கள் வெவ்வேறாய்க் கிடப்பதைக் கண்டு நெருங்கி பதறி மயங்கி வீழ்ந்தார். உடனே அடிகள் அங்கங்களெலாம் ஒன்றாக்கிப் பிள்ளையவர் களின்முன் தோன்றி 'இனி இப்படி வாராதீர்' என்று அன்புக் கட்டளையிட்டு அவருடன் இருப்பிடத்திற்குத் திரும்பினர்.

(2) ஒருநாள் அடிகள் உடுத்த ஆடையை அவிழ்த்துத் தரையில் விரித்துப் படுத்தயர்ந்தபோது இறைவன் அடி கள் முன் தோன்றி அவரைத் தம் திருக்கரங்களால் தூக்கியணைத்து ஆறுதல் மொழி அருளி மறைந்தருளி னார். (6 திருக்கடைப் புகழ்ச்சி - 6; நடராச மாலை 24,25); திருஅருட் பேறு - 2,3,6)

(3) ஒரே சமயத்தில் அடிகள் பல இடங்களில் திகழ்தல் சிலவற்றைக் காட்டுவோம்.

(i) கடலூரில் நோயுற்ற ஐயாசாமிப் பிள்ளைக்குத் திருநீறிட்டு இருந்த அடிகள் அதே சமயம் வடலூரில் சாலையில் உரையாற்றிக் கொண்டிருந்தார்.

(ii) ஒருமுறை அடிகள் திருவதிகைக்கு வழிபடச் சென்றபோது கூட்டம் அதிகமாகி நெருக்கடி நேர்ந்தது. அப்போது அடிகள் பல இடங்களிலும் தோன்றிக் காட்சியளித்தார்.

(iii) ஒருநாள் அடிகள் உலாவப் போந்தபோது பலர் உடன் சென்றனர். அவர்களை 'இருங்கள்' என்று கூறி நடந்தனர். அதன் பின்னரும் அவர்கள் திடீரென்று பின் தொடரவே அடிகள் தொலைவில் காணப்பட்டார். தொடர்ந்தவர்கள் ஓடி நெருங்க மேலும் தொலைவில் அவர்கள் பெருமானைக் காணலாயினர். கருங்குழியி லும் இத்தகைய நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

(iv) மரம் வாங்குவதற்காக ஆறுமுக முதலியார் என்ற ஓர் அன்பர் சென்னை சென்றபோதும் அடிகள வடலூரில் இருந்தவாறே சென்னையிலும் அவருக்கு உதவினர்.

(4) அடிகளின் திருக்கரம் அமுதசுரபி ஆதல்: தரும சாலையில் ஒரு நாள் இரவு நேரத்தில் பலர் வந்துவிட்ட னர். அடிகள் தம் கையால் உணவு பரிமாறினர். அனை வர் உண்ட பின்னும் உணவு எஞ்சி இருந்தது.

(5) தருமசாலையில் ஒரு சமயம் அரிசி தட்டுப்பாடு நேர்ந்ததை அன்பர்கள் அடிகளிடம் விண்ணப்பித்தனர். அடிகள் சிறிது நேரம் தியானம் செய்து 'நாளைக்கு அரிசி வரும்' என்றனர். அவ்வாறே மறுநாள் திருத்துறையூரி லிருந்து மூன்று வண்டி அரிசியும் பிற உணவுப் பொருள்களும் வந்து சேர்ந்தன. வந்த அன்பர் முதல் நாள் இரவில் கனவில் உத்தரவானதாகக் கூறிச் சென்றார்.

(6) **திரைமறைவில் தில்லை தரிசனம்:** ஆண்டு தோறும் ஆனித் திருமஞ்சனத்திற்கும் திருவாதிரைத் திருவிழாவிற்கும் வெளியூர் அன்பர்கள் வடலூர் வந்து அடிகளை இட்டுக் கொண்டு சிதம்பரம் செல்வது வழக்கம். ஓராண்டு அவ்வாறு செல்லஇயலவில்லை. அடியார்களின் வருத்தத்தை உணர்ந்த அடிகள் தருமசாலையின் ஒரு பகுதியில் திரையிடச் செய்து அத்திரைக்குள் சென்று பார்க்கக் கூறினர். திரைக்குள் சென்றவர்கள் தில்லைத் தரிசனத்தைக் கண்டு களித்தனர். வள்ளல் பெருமான் வடலூரை உத்தர ஞான சிதம்பரமாக்கியவரன்றோ.

(7) **மழை பொழிய அருளுதல்:** கோடைக் காலத்தில் தருமசாலைக்கு வந்தவர்கள் வெப்பம் தாங்க முடியாமல் வருந்தியதைக் கண்ட அடிகள் ஒரு செம்பு நீரைத் தம் காலில் ஊற்றும்படி செய்தனர். அவ்வாறு செய்ததும் சிறிது நேரத்தில் மேகங்கள் திரண்டு மழை பொழிந்தது.

(8) **தீ அணையச் செய்தது:** ஓர் இல்லத்தில் தீப்பற்றி எரிந்தபோது அடிகள் இருந்த இடத்திலிருந்தே தமது மேலாடையை வீச தீ அணைந்தது.

(9) **புன்செய் நன்செய் ஆதல்:** அடிகளாருக்கு ஆட்பட்டவர்களுள் வட்டாட்சியாளர் ஒருவர். அவரது மாமனார் மணலூரில் உள்ளவர். தமது புன்செய் நிலங்களை நன்செய் நிலங்களாக்க அதிகாரிகட்குப் பலமுறை விண்ணப்பித்தும் பயன் இல்லை. அதே அன்பர் வள்ளல் பெருமானிடம் வந்து திருநீறு பெற்றுச் சென்ற பின்னர் புன்செய்கள் நன்செய்களாயின.

(10) **ஒருவரது அகந்தையை அடக்கியது:** ஆணவ மலம் மனிதனிடம் அகந்தையாக வெளிப்படும். புதுச்சேரி தந்தி நிலைய மேலாளர் பல மொழிகளில் பயிற்சியுள்ளவர். ஒருசமயம் அவர் அடிகளைக் காண வடலூர்

போந்தார். அவர் வருமுன்னரே அடிகள் 'ஒருவர் புத்தி சொல்ல வருகிறார்' என்றார். வந்தவருக்கு ஐந்தாறு மொழிகள் தெரியும். அப்போது அங்கே தெருவில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவன் ஒருவனை அழைத்து, அவர் முன் நிறுத்தி 'எந்த மொழியில் எப் பொருளை வேண்டுமானாலும் இப்பிள்ளையைக் கேளுங்கள்' என்று அடிகள் கூற அவர் பேச நாவெழாது அரை மணி நேரம் தவித்தார். செருக்கு அடங்கி மன்னிப்பு கோரி மனத்துள் துதிக்க பேச்சுவரப் பெற்றார். பின்னர் மன்னிப்புக் கேட்டுத் திரும்பினார்.

(11) **கள்வர்க்கும் கருணை பாலித்தல்:** மூன்று நிகழ்ச்சிகள் இதுபற்றியவை.

(i) ஒருசமயம் மஞ்சகுப்பம் நீதிமன்ற அலுவலர் ஒருவரும் வள்ளல் பெருமானும் வண்டியில் மஞ்சகுப்பம் நோக்கி வந்து கொண்டிருந்தபொழுது வழியில் கள்வர் இருவர் வண்டியை மறித்து நிறுத்தினர். முதலில் இறங்கிய அலுவலரைக் கையிலிருந்த வைர மோதிரத்தைக் கழற்றும்படிக் கள்வர்கள் அதட்ட வள்ளல் பெருமான் 'அவசரமோ' என்றனர். கள்வர்கள் அடிப்பதற்காகத் தடியை உயர்த்தினார்கள். உயர்த்திய கைகள் நின்றன; கண் பார்வையும் அற்றது. கள்வர்கள் இருவரும் தம் செயலுக்கு வருந்த, அடிகள் அருளால் கைகளும் கண்களும் செயற்பட்டன. கள்வர்கள் இருவரும் வண்டியைச் சுற்றி வணங்கி, இனி இத்தொழிலை விட்டு உழைத்து உண்பதாக உறுதி கூறிச் சென்றனர்.

(ii) மற்றொரு முறை கடலூரிலிருந்து திரும்பும் போது குள்ளஞ்சாவடியில் தங்கினார். உடன் வந்த காவலர் துறையில் பணியாற்றும் இஸ்லாம் நண்பர் ஒருவர் வள்ளற் பெருமானுக்கு ஆடை ஒன்றினை அளிக்க அதனை அவர் உடுத்திக் கொண்டு குள்ளஞ்சாவடி சத்திரம் ஒன்றின் திண்ணையில் துயிலும்போது

கள்ளன் ஒருவன் அவ்வாடையை உருவ முயன்றான். காவல் அன்பர் திருடனை அதட்டிப் பார்த்தார். அடிகள் அவரைச் சமாதானப்படுத்தி ஆடையை அக்கள்வனுக்கு அளித்து களவுத் தொழிலை விட்டு விடுமாறு அறிவுரை கூறி அனுப்பினார்.

(iii) வள்ளற் பெருமான் சென்னையில் உறைந்த காலத்தில் ஒற்றியூரில் ஒரு சத்திரத்தில் உறங்கிய பொழுது கள்வன் ஒருவன் அவர் அணிந்திருந்த கடுக்கண்களைக் கழற்றினான். கற்றுவதை உணர்ந்தும் உறங்குவது போலிருந்துவிட்டு கழற்றுவதற்கு இடம் கொடுத்தார். அதன் பிறகு கடுக்கண்கள் அணிவதை விட்டுவிட்டார்.

(12) புறவினத்தாரை அகவினத்தாராக மாற்றுதல்:

(i) வடலூர் பறைச்சேரியில் சேரியின் தலைவனான அமாவாசை என்பானை அழைத்து இறந்த மாடுகளைத் தின்னாமல் புதைக்கும்படி அறுவுறுத்த அவனும் அதைக் கடைப்பிடித்தான். மீண்டும் அவனை அழைத்து எவ்வித புலாலையும் உண்ண வேண்டா எனக் கட்டளையிட்டார். சேரியில் தன் பங்கிற்கு வரும் மாமிசத்தையும் விட்டுவிட்டால் என்ன செய்வது, நாள்தோறும் செலவுக்கு அரை ரூபாய் வேண்டுமே என்று மயங்க, பெருமான் மஞ்சள் துணியில் அரை ரூபாய் நாணயத்தை முடித்துக் கொடுத்து, 'இதனைப் பெட்டியில் வைத்துக் கொள். நாள்தோறும் எட்டணா வருமானம் கிடைக்கும்' என்று அருளினார். அங்ஙனமே கிடைக்கவே அவனும் புலாலை முற்றிலும் நீக்கி அகவினம் சார்ந்தான்.

(ii) வடலூரில் இரண்டு படையாச்சி அன்பர்கள்; பெரிய குடும்பிகள். அவர்களை அழைத்து 'இன்று முதல் புலால் உண்ணாதீர்கள்; உங்கள் நிலத்தில் நெல்லும் அவுரியும் ஒன்றுக்கு ஐந்தாக விளையும்' என்றனர். அவர்களும் அதனை ஒப்புக் கொண்டு அறிவுரை

யைக் கடைப்பிடிக்க அவர்கள் முன்னையிலும் செல்வச் செழிப்பில் செழித்து விளங்கினர்.

(iii) **பொன் விளைவு**: பொன் செயல்வகை (Alchemy) யைத் தனக்கு இறைவன் உணர்த்தியதாக ஒரு பாடலில் குறிப் பிடுவர். (6 இறை திருக்காட்சி - 9)

(14) அடிகட்கு ஆட்பட்ட வேட்டவலம் பெருநி லக்கிழார் ஒருவர் தமது நிர்வாகத்தின்கீழ் உள்ள கோயி லில் உயிர்பலி இடுவதை நிறுத்தி பொங்கல் செய்து படைக்கும் வழக்கத்தை நடைபெறச் செய்தார்.

(15) **ஆறுமுக நாவலர் வழக்கு**: யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர்க்கும் வள்ளல் பெருமானுக்கும் 'அ ருட்பா - மருட்பா' வாதம் நடைபெற்றது. அருட்பா தொகுதிக்கு 'இராமலிங்கம் பிள்ளை பாடல் திரட்டு' என்று வழங்க வேண்டுமேயன்றி 'திருவருட்பா' என்று வழங்கக் கூடாது என்பது அவருடைய வாதம். பழுத்த சைவராகிய ஆறுமுக நாவலருக்கு வள்ளற் பெருமா னின் சமரச சன்மார்க்கக் கொள்கைகள் உடன்பா டில்லை. புறச் சமயத்தார்க்கு (முக்கியமாகக்) கிறித்தவர் கட்கு இடம் கொடுப்பதாக உள்ளன என்று கருதினார். பொய் வழக்கு போட்டுத் தோற்றார். இது மிகவும் வருந்தத்தக்க செயல்.

(15) பசிப் பிணி மருத்துவராகத் திகழ்ந்த அடிகள் உடற்பிணி மருத்துவராகவும் திகழ்ந்தார். வள்ளல் பெரு மான் வைத்தியம், வாதம், யோகம் ஆகிய மூன்றிலும் வல்லவர். கருங்குழியில் உறைந்த காலத்திலும் வடலூ ரில் வாழ்ந்த காலத்திலும் பலருக்கு மருந்தளித்து (சித்த மருத்துவமுறையில்) நோய் தீர்த்தனர்.

(16) **திருக்குறள் வகுப்பு நடைபெறச் செய்தல்**: வட லூரில் தொழுவூர் வேலாயுத முதலியாரைக் கொண்டு

திருக்குறள் வகுப்பு நடைபெறச் செய்தார். பொது மக்களுக்காக முதன் முதல் திருக்குறள் வகுப்பு நடத்தத் தொடங்கியவர் வள்ளல் பெருமானேயாவர். தமது பாடல்களில் குறட்பாக்கள், சொற்றொடர்கள், குறட் கருத்துகள் ஆகியவற்றை ஆண்டுள்ளார்.

5. **சித்தி வளாகப் பகுதி (1870 - 1874):** அடிகளா ரின் அகவை *(47-51)*: மேட்டுக்குப்பத்தில் அடிகள் உறைந்த இடம் சித்தி வளாகம். '**சித்தி வளாகம்**' என்பது அடிகள் இட்ட பெயர். இப்பெயர் அருமையும் ஆழ்ந்த பொருளும் உடையது. சித்தி - வீடு பேறு; வளாகம் - இடம். சித்தி வளாகம் - சித்தியை நல்கும் இடம், வீடு பேற்றை அளிக்கும் இடம்.

(1) **முத்தியும் சித்தியும்:** சமயவாதிகள் முத்தியே முடிவான பேறு என்பர். முத்தி என்பது அடைய வேண்டிய நிலைக்கு முன் உறும் சாதனம் என்றும், சித்தி என்பது அந்நிலையைச் சேர்ந்து அநுபவிக்கும் அநுபவம் என்றும் கூறுவர்.

*முத்திஎன் பதுநிலை முன்னுறு சாதனம்*
*அத்தக வென்றஎன் அருட்பெருஞ் சோதி*
*சித்திஎன் பதுநிலை சேர்ந்த அநுபவம்*
*அத்திறம் என்ற அருட்பெருஞ் சோதி.*

— அருட்பெருஞ்சோதி அகவல் 249-252

என்று கூறியிருப்பது ஈண்டு அறியப்படும். முத்தி - பாசவீடு, பாச நீக்கம் ஆகிய நிலை முன்உறுசாதனம்; சித்தி - சிவப்பேறு, வீடு பேறு ஆகிய நிலை சேர்ந்த அநுபவம். சிவப்பேறாகிய சித்தியைப் பெறும் இடமே **சித்தி வளாகம்.**

(2) **பிரம்ம தண்டி யோகம்:** சித்தி வளாகத்தில் அடி கள் தமது திருவறையில் தீச்சட்டிகளுக்கு முன் அமர்ந்து

யோகஞ் செய்வர். இருபக்கத்திலும் இருப்புச் சட்டியில் சீமைக் கரி எரிந்து கொண்டிருப்பது வழக்கம். உலோகத் துண்டு ஒன்றையோ வெள்ளி நாணயம் ஒன்றையோ உள்ளங்கையில் வைத்து மூடித் திறந்தால் அவை உருகி ஓடும் அளவுக்கு அகச் சூடு உடையவர் அடிகள். தீச்சட்டியினின்றும் நெருப்புத் துண்டுகள் சிதறி அடிகளின் மீது விழுந்தபோதும் அடிகளின் திருமேனிக்கு ஊறு நேரிடுவதில்லை. ஞானக் கனல் நிறைந்த அத்திரு மேனியை ஐம்பூதங்களில் ஒன்றாகிய தீக்கனல் ஒன்றும் செய்ய முடியவில்லை. அப்பர் பெருமானை நீற்றறை ஒன்றும் செய்யாதிருத்தலுக்கு இதுவே காரணம்.

(3) **பிறர் கண்ணுக்குத் தோன்றாது உறைதல்:** மேட்டுக்குப்பத்தை உறைவிடமாகக் கெண்டபின் அடிகள் அவ்வப்போது உடலைப் பிறர்க்குத் தோன்றா வண்ணம் மறைத்துக் கொண்டு அருவநிலையில் இருப்பதுண்டு. இத்தகைய சாதனைகளைத் தனித்திருந்து மேற்கொள்ளுவதற்காகவே அடிகள் வடலூரை விட்டு மேட்டுக் குப்பத்தை உறைவிடமாகக் கொண்டார்கள்.

(4) சத்தியஞான சபை அமைக்கப் பெற்ற வடலூர்க்கு அடிகள் '**உத்தரஞான சிதம்பரம்**' எனத் திருநாமம் இட்டனர். தில்லையை அடிகள் 'பூர்வஞான சிதம்பரம்' என்பர். இரண்டும் ஞான சிதம்பரமே. முன்னைச் சிதம்பரம் தில்லை; பின்னைச் சிதம்பரம் வடலூர். 'உத்தர ஞான சிதம்பரம்' என்னும் பெயர் திருவருளால் ஆக்கப் பெற்ற சிறப்புப் பெயர் என அடிகள் கூறுவர்.

(5) **சத்திய ஞான சபை:** உத்தரஞான சிதம்பரத்தில் அமைந்த சங்கம் சார் திருக்கோயிலுக்கு சத்திய ஞான சபை எனப் பெயரிட்டனர். அடிகள் தாம் நிறுவிய நிலையங்களுக்கு திருநாம் இடுவதே ஒரு தனிச் சிறப்பு. 'மடம்' என்னாது 'சங்கம்' என்றதும், 'கோயில்' என்

னாது 'சபை' என்றதும் தனிச்சிறப்பு. சபையின் முழுப் பெயர் 'சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞான சபை' என்பது. இறைவனது திருக்குறிப்பின்படியே சத்திய ஞான சபையை அடிகள் அமைத்தனர்.

(6) சபை வழிபாட்டு முறை: இம்முறை முற்றிலும் புதுமையானது. கோயில் வழிபாட்டு முறைகளின் பேறானது வழிபாட்டுக்குக் கூடுவோர் அனைவரும் சபைக்குப் புறத்தே வாயிலருகில் நின்று மெல்லெனத் துதிடத்தல் வேண்டும். புலாலுண் போராகிய புறவினத்தார் சபைக்குப் புறத்தே நின்று வழிபட வேண்டும். சிற்சபை பொற்சபையுள்ள முன்மண்டபத்தில் அவர்கள் புகலாகாது. இதுவே சபைக்குரிய வழிபாடு. இது தவிர வேறு எதுவும் கூடாது. சபையினுள் யாரும் புகலாகாது. சபையினுள் உள்ள அகண்டத்திற்குத் திரி முதலியன இடுதற்காகவும், சபையின் உட்புறத்தைத் தூய்மைப்படுத்துவதற்கும் மூவாசைகளில் பற்றில்லாதவராயும் உள்ள ஒருவர் வேண்டும்போது சபையினுள் புகலாம். அங்ஙனம் உட்புகுதற்கும் புறத்தே இருந்து வழிபடுதற்கும் சாதி முதலிய வேறுபாடு இல்லை. இசைக் கருவிகள், பிரசாத வகைகள், தீப தூப ஆராதனைகள் திருநீறு முதலிய பிரசாதங்கள் இவ்வாறு சமயக் கோயில்களில் அனுட்டிக்கப் பெறுபவை யாவும் ஞானசபை வழிபாட்டிற்குப் புறம்பானவை.

(7) சன்மார்க்க விண்ணப்பங்கள்: அடிகள் அருட்பெருஞ்சோதி ஆண்டவரிடத்துச் செய்து கொண்ட உரைநடை விண்ணப்பங்கள் நான்கு. அவை:

(i) சுத்த சன்மார்க்க சத்தியச் சிறு விண்ணப்பம்.

(ii) சமரச சுத்த சன்மார்க்க சத்தியப் பெருவிண்ணப்பம்.

(iii) சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞான விண்ணப்பம்.

(iv) சமரச சுத்த சன்மார்க்க சங்க சத்திய விண்ணப்பம்.

இவை நான்கும் சிறு விண்ணப்பம், பெரு விண்ணப்பம், ஞான விண்ணப்பம், சங்க விண்ணப்பம் என்று இவற்றின் பெயர்கள் சுருக்கமாக வழங்கப் பெறுகின்றன.[14]

(8) **சன்மார்க்கக் கொடி:** கொடி உண்மை: நமது நாபி முதல் புருவ மத்தி ஈறாக ஒரு நாடி உள்ளது; அந்த நாடியின் நுனியில் புருவ மத்தியில் ஒரு சவ்வு தொங்குகிறது; அதன் அடிப்புறம் வெள்ளை நிறம்; மேற்புறம் மஞ்சள் நிறம். அச்சவ்வின்கீழ் ஒரு நரம்பு ஏறவும் இறங்கவும் உள்ளது; இக்கொடி நம் அநுபவத்தின் கண் விளங்கும். இவ்வடையாளக் குறிப்பதாகவே இன்றைய தினம் அடையாள நிறமான கொடி கட்டியது.

விளக்கம்: நம் உடலினுள் நாபி (கொப்பூள்)யிலிருந்து புருவ மத்தி வரை ஒரு நாடி உள்ளது. இந்த நாடியே கொடி மரம். இந்த நாடியின் நுனியில் புருவமத்தியில் ஒரு சவ்வு தொங்குகிறது. இந்தச் சவ்வே கொடி. அதன் அடிப்புறம் வெள்ளை, மேற்புறம் மஞ்சள் என்று அடிகள் கூறியுள்ளனர். அளவு கூறவில்லை. கொடியின் அகலத்தில் மூன்றில் ஒரு பங்கு வெள்ளை என்றும் சன்மார்க்கிகள் இப்போது வழங்கி வருகின்றனர். இதற்கு ஆதாரம் அடிகளின் உபதேசக் குறிப்பில் இல்லை.

(9) **சித்தி வளாகத்தில் நடைபெற்ற சில நிகழ்ச்சிகள்:**

(i) ஒரு நாள் இறைவன் அம்மையோடும் இரட்டைக்

14. இவற்றின் விவரங்கட்கு ஊரன் அடிகள் வரைந்த 'இராமலிங்க அடிகள் திருவரலாறு' பக்.461-478 காண்க.

குதிரை வண்டியில் அடிகள் இருக்கும் இடம் வந்தான். அப்போது அடிகள் அறையில் இருந்தனர். வெளியே யாரோ வருவதைக் கண்டதும் யாரோ எவரோ என்னும் அச்சுறுத்தலோடு உள்வாயில் தாழ்க்கோலைப் பற்றிய ராய் அறைக்குள் நின்றிருந்த அடிகளை 'வா' என்று கையை அசைத்து இறைவன் அருள் செய்தான். இந்நி கழ்ச்சியை (-6. திருநடப்பு நிகழ்ச்சி - 4) என்ற பாடல் அகச்சான்றாகக் குறிப்பிடும்.

(ii) மேட்டுக் குப்பத்தில் அடிகள் உபதேசம் செய் யும் காலங்களில் முட ஆட்டுக் குட்டி ஒன்று அன்பர்க ளது கூட்டத்தில் தொலைவில் நின்று கண் இசையாது காதைச் சாய்த்துக் கொண்டு உபதேசங்களைக் கேட்டுக் கொண்டிருக்கும். கூட்டம் முடிந்து அன்பர்கள் சித்தி வளாகத்தை வலம் வருங்கால் ஆட்டுக் குட்டியும் முடக் காலோடு வலம் வரும். தமக்காக வரும் உணவை அடிகள் நொண்டி ஆட்டுக் குட்டிக்கும் முடவராகிய ஆசிரியர்க்கும் அளிப்பது வழக்கம். அடிகளது திருவுரு வப் படத்தில் பின்னணியாக அமைந்திருக்கும் சாலை, சபை, சித்தி வளாகம் ஆகியவற்றுடன் ஆட்டுக் குட்டி யையும் காணலாம்.

சித்தி வளாகத்தில் நடைபெற்ற பல நிகழ்ச்சிகள் அடிகளின் பாடல்களில் அகச்சான்றுகளாக அமைந்துள் ளன. விரிவஞ்சி அவை காட்டப் பெறவில்லை.[15] அடிகள் சித்தி பெற்றது (இறைவனோடு இரண்டறக் கலந்தது 30.1.1874)

(6) அடிகளைப் பற்றிய குறிப்புகள்: இவை அடிக ளின் அருட்பாவில் ஈடுபட்டு உள்ளத்தைப் பறிகொடுக் கும் அன்பர்கட்குப் பயன்படும். அடிகள் அவர்தம் உள்ளத்தில் காட்சி அளிப்பார்கள்.

15. ஊரன் அடிகள் எழுதிய - 'இராமலிங்க அடிகள் திருவரலாறு' பக்.504-548 காண்க.

(1) திருவுருவம்: மெலிந்த செந்நிற உடல், நடுத்தர உயரம், நிமிர்ந்த தோற்றம், அழகிய திருமுகம், நீண்ட, மெல்லிய கூரிய அழகிய மூக்கு, ஒளிவீசும் பரந்த கண்கள், கருணை ததும்பும் பார்வை - இவையே அடிகளின் திருவுருவம்.

(2) உடை: வெள்ளாடைத் துறவி. கல்லாடை உடுத்தில்லை 'மெய்யுறக்காட்ட வெருவி வெண்துசி லால் மெய் எலாம் ஐயகோ மறைத்தேன்' (பிள்ளைப் பெருவிண்ணப்பம் - 52) என்பது அகச்சான்று.

(3) உணவு: இளமை முதல் அடிகள் உணவில் வெறுப்புடையவர். சிலகாலம் நாளும் ஒரு வேளையே உண்டனர்; சில காலம் இருவேளை உண்டனர். (4 புறமொழிக் கிரங்கல் - 2; 6 அநுபவமாலை - 6,30 என்பவை அகச்சான்றுகள்). சோற்றிலே ஒருவனுக்கு விருப்பம் உண்டானால் அவனுடைய தவம் ஆற்றிலே கரைத்த புளிபோலாகும் (6 அவா அறுத்தல் - 2) காண்க.

(4) உறக்கம்: இரவு 15 நாளிகை முதல் 22 1/2 நாழிகை வரை (3 மணி நேரம்) சித்தி வளாகத்தில் செய்த உபதேசத்தில் 'தூக்கத்தை ஒழித்தால் ஆயுள் நீடிக்கும். ஒருவன் ஒரு நாளைக்கு இரண்டரை நாழிகை (ஒரு மணி நேரம்) உறங்கப் பழகுவானானால் அவன் ஆயிரம் ஆண்டு வாழ்வான்' என அருளியுள்ளார்கள்.

(5) பழக்க வழக்கங்கள்: சிலவற்றைக் காண்போம்.

(i) முக்காடு: இடையில் உடுத்தும் ஆடையை முழங் கால் மறையும் அளவிற்கே உடுத்துவார். மேலா டையை உடல் முழுதும் போர்த்தியிருப்பர். தலையைச் சுற்றி முக்காடாக அணிந்திருப்பர் (6 - பிள்ளைப் பெருவிண்ணப்பம் - 52)

(ii) **திருவடி நிலைகள்:** காலுக்குச் செருப்பு (மிதியடி) அணியும் பழக்கமுடையவர்.

(iii) **அடக்கம்:** மிக்க அடக்கம் உடையவர். திருவுருவப் படமே இதனைக் காட்டும். உயர்ந்த இருக்கையில் அமர்வதற்கு அஞ்சுவர்.

(iv) **சீவகாருண்ய உள்ளம்:** சீவகாருண்யத்தின் திருவுருவம். சீவகாருண்யமே அடிகளின் உயிர். எப்பொழுதும் எண்ணத்தில் வாழ்வது இப்பண்பு; செயலிலும் காட்டுவது (பல பாடல்கள் - சான்றுகள்)

(v) **கடவுள்:** ஒருவரே. ‘உருவராகியும் அருவினராகியும் உருஅருவராயும், ஒருவரே உளார் கடவுள்’ (தனித் திரு அலங்கல் - 45). அருட்பெருஞ்சோதியே கடவுள்.

(vi) சிறு தெய்வ வழிபாடு கூடாது (6 அருள் விளக்க மாலை - 89).

(vii) உயிர்ப்பலி கூடாது (6 பிள்ளைப் பெருவிண்ணப்பம் - 63).

(viii) சாதி சமய வேறுபாடுகள் கூடா (பல பாடல்கள்).

(ix) எவ்வுயிரையும் தம் உயிர்போல எண்ணுதல் (பல பாடல்கள்).

(x) வேத, ஆகம, சாத்திர, புராண இதிகாசங்கள் முடிவான உண்மையைத் தெளிவாக்க மாட்டா (பல பாடல்கள்).

# 2. அருளிச் செயல்கள்

திருஅருட்பாவில் 'திருமுறை' என்பது அதன் பகுதியின் பெயராக அமைக்கப் பெற்றுள்ளது. திருமுறைகளும் அவற்றின் பகுதி களும் அவை பாடப் பெற்ற வரிசையில் - வரலாற்று முறையில் - வகுக்கப் பெற்று அடைவுபடுத்தப் பெறவில்லை. பொருளமைதி கருதியும் வகுக்கப் பெற்றிருப்பதற்காகச் சொல்வதற்கில்லை. திருமுறைகளின் தொகை ஆறு என உள்ளத்தில் அமைத்துக் கொண்டு திருமுறைகள் வகுக்கப் பெற்றதாக அறியக் கிடக்கின்றது.[1]

இன்று பெரு வழக்காகக் கிடைக்கும் திருஅருட்பா (சமரச சன்மார்க்க ஆராய்ச்சி நிலையம், வடலூர் - 607 203)வில உள்ளபடி அமைப்பு வருமாறு:

| திருமுறை | பதிகம் | பாடல் |
|---|---|---|
| முதல் | 52 | 570 |
| இரண்டாம் | 103 | 1388 |
| மூன்றாம் | 27 | 612 |
| நான்காம் | 41 | 458 |
| ஐந்தாம் | 12 | 238 |
| ஆறாம் | 144 | 2552 |

1. திரு ஐந்தெழுத்தோடு ஓங்காரத்தைச் சேர்க்க 'ஓம் சிவாய நம' என ஓங்காரப் பஞ்சாக்கரத்தின் எழுத்து ஆறாகும். சமயங்கள் ஆறு. அத்துவா ஆறு. இவற்றை உட்கொண்டு திருமுறைகள் ஆறு என வகுத்தார் வேலாயுதனார் (அடிகளின் மாணாக்கர்)

இறைவன் திருவருளையே பற்றுக்கோடாகக் கொண்டு ஒழுகும் பெரியோரது வாழ்க்கை முறை மன நிறைவினைத் தரும் சிறப்புடையது. ஆகவே, அதனைத் திருநெறி என வழங்குவர் ஆன்றோர். இத்தகைய திருநெறியினை வகுத்தருளிய சான்றோர் திருமூலர், காரைக்கால் அம்மையார், சமகுரவர் நால்வர் முதலியோர். இவர்களைத் தவிர பிற்காலத்து **தாயுமான அடிகள், இராமலிங்க அடிகள்** முதலியோர். இவர்கள் திருவாய் மலர்ந்தருளிய தெய்வத் தமிழ்ப் பாசுரங்கள் '**திருநெறி யத் தமிழ்**' '**திருமுறை**' எனவும் வழங்கப்பெறும். சைவத் திருமுறை பன்னிரண்டு என்பதை நாம் அறிவோம்.

இந்த மரபினையொட்டியே அடிகளார் பாடல்கள் **திருஅருட்பா** என வழங்கப்பெற்றது. திரு - தெய்வத் தன்மையுடைய, அருள் - அருளால் பாடப் பெற்ற, பா - பாக்கள் எனப் பொருள்படும்.

திரு என்பது அழகு, செல்வம், திருமகள், மேன்மை, சிறப்பு, நல்வினை, தெய்வத் தன்மை எனப் பொருள்தரும் பல பொருள்களையுடையது. ஈண்டு தெய்வத்தன்மை என்பதே பொருந்துவதாகின்றது. அருள் நூல்களைத் 'திரு' என்னும் அடைமொழியைச் சார்த்தி வழங்குதல் தமிழ் மரபு. திருக்குறள், திருமந்திரம், திருவாசகம், திருக்கோவையார், திருவாய் மொழி என்று வருவது காணத்தகும்.

"திருவென்பது, பொருளுடைமையும் பொருள் கொணர்ந்து துய்த்தலுமின்றி எஞ்ஞான்றும் திருத்தவிற்றாயதோர் உள்ள நிகழ்ச்சி" என்பர் பேராசிரியர்.[2] எனவே, இன்பம் வரினும் துன்பம் வரினும் இரண்டையும் ஒப்பக் கருதும் மனச் செம்மையே '**திரு**' என்னும்

2. தொல்.பொருள்.மெய்ப். 'பிறப்பே குடிமை' என்ற நூற்பா உரை

சொல்லுக்குரிய பொருள் என்பது பேராசிரியர் கருத்தாதல் தெளியப்பெறும். செல்வக் களிப்பால் மையலுறாமலும் வறுமைத் துன்ப மிகுதியால் சோர்வுறாமலும், இன்ப - துன்பம் இரண்டையும் ஒப்பக் கருதுவோராய் திருத்தகவிற்றாய் உள்ள திருவுள்ளம் கொண்டவர்களே சான்றோர்கள். 'கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்', 'திருநின்ற செம்மையே செம்மையாகக் கொண்டார்' எனப் போற்றப் பெறுபவர்கள். திருத்தகவிற்றாய உள்ளத்தையும் திருநின்ற செம்மையையும் தந்து சென்றடையாத திருவுடையானாகிய இறைவனது திருவருள் இன்பத்தைக் கொடுக்கும் நூல்களே திருவுடைய நூல்கள். இத்தகைய நூல்களில் திருவருட்பா ஒன்று; ஒப்புயர்வற்றதுமாகும்.

அடிகளின் அருளிச் செயல்கட்குத் 'திருவருட்பா' என்று திருநாமம் இட்டவர் அடிகளின் மாணாக்கரும், திருவருட்பாவைத் திருமுறைகளாக வகுத்தவரும் ஆகிய உபயகலாநிதிப் பெரும்புலவர் தொழுவூர் வேலாயுத முதலியார். அடிகளாரது அருட்பாடல்கள் 'திருவருட்பா' எனப் பெயர் பெற்றமையை வேலாயுதனார் தாம் பாடிய 'திருவருட்பா வரலாறு' என்பதிலுள்ள,

*ஆயஅருள் இறைஎங்கள்*
*அருட்பிரகா சப்பெருமான்*
*தூயஅரு ளால்பொழிந்த*
*சொல்அமிழ்தாம் சொற்பெருக்கு*
*நேயஅருட் பற்றாகி*
*நிறைமனத்துப் பெரியர்களும்*
*மாயமயக் குழல்என்போல்*
*மறவர்க்கும் உள்ளுருக்கி, (34)*

*அளவாத பேரன்பு*
*சொரிந்தருளை விளைவித்து,*
*தளவாரும் நகையற்கண்*
*தையல்இடங் கொண்டபிரான்*
*வளமாரும் கழல்மலரோ*
*டிரண்டறுத்து வாழ்விக்கும்*
*உளவாலே **அருட்பா**என்று*
*ஒருநாமம் பூண்டதுவே (35)*

என்ற இரு பாடல்களில் அழகாகக் கூறி மகிழ்வர்.

மூவர் முதலிகளின் அருளிச் செயல்கள் **தேவாரம்** எனப் பெயர் பெற்றன. மணிவாசகப் பெருமானின் அருளிச் செயல்கள் **திருவாசகம்** எனத் திருநாமம் பெற்றன. அருணகிரியாரின் அருட்பாடல்கள் **திருப்புகழ்** என்ற திருப்பெயர் பெற்றன. பட்டினத்தார், தாயுமானார் அருளிய திருப்பாடல்கள் இவ்வாறு தனியாகச் சிறப்புப் பெயர் பெறாமல் அவற்றை அருளிய ஆசிரியர்களின் பெயராலேயே 'பட்டினத்தார் பாடல் திரட்டு', 'தாயுமானவர் பாடல் திரட்டு' எனத் திருப்பெயர் பெற்றன. பிற்காலத்தில் குமரகுருபரர், சிவப்பிரகாசர் முதலியோர் பாடல்களும் அவர்கள் பெயராலேயே 'குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத் திரட்டு' 'சிவப்பிரகாச அடிகள் பிரபந்தத் திரட்டு' என வழங்கலாயின. ஆனால், நம் பெருமானாகிய அடிகள் திருவாய் மலர்ந்தருளிய திருப்பாடல்களின் தொகுப்போ **'திருவருட்பா'** என்னும் ஒரு தனிச் சிறப்புப் பெயரைப் பெற்றது. இஃது அடிகளாரின் பெருமைக்கு ஒரு பெரிய சான்றாக அமைகின்றது. இனி, திருமுறைகளின் திருப்பாடல்களின் நயத்தை ஒவ்வொன்றாகக் காண்போம்.

# 3. முதல் திருமுறையின் பாடல்கள்

இதில் 52 பதிகங்கள் உள்ளன. அவற்றுள் அடங்கிய பாடல்கள் 570. இவற்றுள் அடங்கிய அகத் துறைப் பதிகங்கள் நான்கு. இவற்றுள் அடங்கிய பாடல் கள் 42. இத்திருமுறையில் சில பதிகங்களையும் அவற் றுள் சில பாடல்களையும் காண்போம்.

இனி சில பதிகங்களில் சில நயமான பாடல்களைக் காண்போம். எல்லாம் நயமானவைதாம். சோறு சுவை யாக இருக்கின்றதென்றால் பானை சோறு முழுவதை யும் உண்ணுதல் சாத்தியமா?

1. **தெய்வமணிமாலை:** அடிகளால் முதன் முதலில் சென்னை கந்தகோட்டத்தில் பாடப் பெற்றது இதுவே. 31 பாடல்களைக் கொண்டது இப்பதிகம். பன்னிரு சீர்க்கழிநெடிலடி விருத்தத்தால் அமைந்தவை. இதன் முதற் பாடல்:

*திருவோங்கு புண்ணியச் செயல்ஓங்கி அன்பருள்*
*திறலோங்கு செல்வம் ஓங்கச்*
*செறிவோங்க அறிவோங்கி நிறைவான இன்பம்*
*திகழ்ந்தோங்க அருள்கொடுத்து*
*மருவோங்கு செங்கமல மலர்ஓங்கு வணம்ஓங்க*
*வளர்கருணை மயம்ஓங்கிஓர்*
*வரம்ஓங்கு தென்அமுத மயம்ஓங்கி ஆனந்த*
*வடிவாகி ஓங்கிஞான*
*உருவோங்கும் உணர்வின்நிறை ஒளிஓங்கி ஓங்கும்மயில்*
*ஊர்ந்தோங்கி எவ்வுயிர்க்கும்*

உறவோங்கும் நின்பதம்என் உளம்ஓங்கி வளம்ஓங்க
உய்கின்ற நான்எந்தநாள்
தருஓங்கு சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தன்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே (1)

என்பது முதல் பாடல். இந்தப் பாடலில் அடிகளார் திருவாக்கில் முதன் முதலில் பிறந்த தொடர் 'திருஓங்கு' என்பதே. அடிகளால் 'திருஓங்கு' என்று தொடங்கி பாடப்பட்ட பின்னரே கந்தகோட்டம் விளக்கம் பெற்றது. கந்தகோட்டத்துக்கு இன்றுள்ள பேரும் புகழும் பொருளும் அன்றில்லை. அடிகளால் பாடப்பெற்ற பின்னரே 'அது பொன்னும் மணியும் நவமணியும் கொழிக்கும் செல்வத்திருக்கோட்டமாகத் திகழ்கின்றது என்பர்' என மணி. திருநாவுக்கரசு முதலியார் எழுதுவர். 'கந்தசாமி கோயில்' என்று வழங்கப்பெற்ற அதனைக் 'கந்தகோட்டம்'[1] என வழங்கத் தொடங்கியவர் அடிகளே.

இந்தப் பதிகத்தில் மக்கள் வாயில் அதிகமாகத் தாண்டவமாகி மிகு புகழ் பெற்ற பாடல் இப்பதிகத்தின் எட்டாவது பாடலாகும். அது இது:

*ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற*
*உத்தமர்தம் உறவுவேண்டும்*
*உள்ஒன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்*
*உறவுகல வாமைவேண்டும்*
*பெருமைபெறு நினதுபுகழ் பேசவேண் டும்பொய்மை*
*பேசா திருக்கவேண்டும்*
*பெருநெறி பிடித்தொழுக வேண்டும்மத மானபேய்*
*பிடியா திருக்கவேண்டும்*

1. காஞ்சியில் 'குமரகோட்டம்' இதனையொட்டியே அவ்வாறு வழங்கப்பெற்ற தாகக் கருதலாம்.

*மருவுபெண் ஆசையை மறக்கவே வேண்டும்உனை*
*மறவா திருக்கவேண்டும்*
*மதிவேண்டும் நின்கருணை நிதிவேண்டும் நோயற்ற*
*வாழ்வில்நான் வாழவேண்டும்*

*தருமமிகு சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்*
*தலம்ஓங்கு கந்தவேளே*
*தன்முகத் துய்யமணி உன்முகச் சைவமணி*
*சண்முகத் தெய்வமணியே (8)*

இஃது இப்பதிகத்தின் எட்டாம் பாடல். வைணவ மந்திரத்தில் எட்டெழுத்து மந்திரம்போல் எட்டாவதாக அமைந்திருப்பதாகக் கருதலாம். இதில் பொதிந்துள்ள கருத்துகள் பொதுவானவை; எல்லா சமயத்தினரும் ஏற்றுக் கொள்ளக் கூடியவை. மதத்தைப் 'பேய்' என்கின்றார் அடிகள். தந்தை பெரியார் அவர்களும் இதனையே பிறிதொரு கோணத்தில் சொல்லி வந்தார்கள். இளைஞர் உலகம் இவற்றைக் கருத்தில் கொண்டால் வருங்கால உலகம் சீர்பட்டு சிறப்புற்று உய்ய வழி உண்டு.[2]

இப்பதிகத்தில் பாடல்க்ள் யாவும்

*....சென்னையில் கந்தகோட் டத்துள் வளர்*
*தலம்ஓங்கு கந்தவேளே*
*தன்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி*
*சண்முகத் தெய்வமணியே*

என்ற அடிகளால் இறுகின்றன. அஃதாவது 31 முறை இறைவனை விளித்து வேண்டுகின்றார். நாமும் இவ்வாறே வேண்டி உய்வோம்.

2. **கந்தர் சரணப் பத்து:** இப்பதிகம் பத்துப் பாடல்களைக் கொண்டது. பாடல்கள் யாவும் எண்சீர்க் கழிநெடி

2. இந்தப் பாடல் என் இளமை காலத்தே என் உள்ளத்தைக் கவர்ந்தது. இதன்படி ஒழுகி வருகிறேன். என்னுடைய 81ஆம் பிறந்த நாளை இவன் சந்நிதியிலேயே நண்பர்கள் சூழக் கொண்டாடினேன். (நாள்: ஆகஸ்டு 18, 1996)

லடி ஆசிரிய விருத்தத்தில் ஆனவை. தெய்வமணி மாலையைப் போல் இதுவும் முதன் முதலாகக் கந்த கோட்டத்தில் பாடப் பெற்றதாகும்.

*அருளார் அமுதே சரணம் சரணம்*
*அழகா அமலா சரணம் சரணம்*
*பொருளா எனைஆள் புனிதா சரணம்*
*பொன்னே மணியே சரணம் சரணம்*
*மருள்வார்க் கரியாய் சரணம் சரணம்*
*மயில்வா கனனே சரணம் சரணம்*
*கருணா லயனே சரணம் சரணம்*
*கந்தா சரணம் சரணம் சரணம்*

என்பது முதற் பாடல்.

*வேதப் பொருளே சரணம் சரணம்*
*விண்ணோர் பெருமான் சரணம் சரணம்*
*போதத் திறனே சரணம் சரணம்*
*புனைமா மயிலோய் சரணம் சரணம்*
*நாதத் தொலியே சரணம் சரணம்*
*நவைஇல் லவனே சரணம் சரணம்*
*காதுக் கினிதாம் புகழோய் சரணம்*
*கந்தா சரணம் சரணம் சரணம் (10)*

என்பது பத்தாம் பாடல்.

எல்லாப் பாடல்களும் இறைவன் திருவடியையே சரணம் என்கின்றன. அஃதாவது அடைக்கலம் புகுவதாகப் பேசுகின்றன. வைணவம் இதனைப் 'பிரபத்தி நெறி' (நம்மாழ்வார் கண்டது) என்கின்றது. திருவாசகத்தில் 'அடைக்கலப் பத்து' என்பதில் மணிவாசகப் பெருமான் இதனையே பேசுகின்றார். கிறித்தவ சமயமும் இதனையே பறை சாற்றுகின்றது. அண்மைக் காலத்தில்

ஐயப்பனைச் 'சாமியே சரணம் ஐயப்பா!' என்று ஐயப் பன் அடியார் சரணம் புகுகின்றனர்.[3]

3. பிரார்த்தனை மாலை. இதில் அடங்கிய பாடல்கள் 30; கட்டளைக் கலித்துறையாப்பில் அமைந்தவை. இவை திருத்தணிகை முருகப் பெருமான்மீது அமைந் துள்ளமையால் 'திருத்தணிகைப் பதிகங்கள்' என்ற தலைப்பின்கீழ்த் தரப்பெற்றுள்ளன.[4] இவற்றில் சில பாடல் கள்:

சீர்கொண்ட தெய்வ வதனங்கள்
ஆறும் திகழ்கடப்பந்
தார்கொண்ட பன்னிரு தோள்களும்
தாமரைத் தாள்களும்ஓர்
கூர்கொண்ட வேலும் மயிலும்நற்
கோழிக் கொடியும்அருட்
கார்கொண்ட வண்மைத் தணிகா
சலமும்என் கண்ணுறவே (1)

அன்னே எனைத்தந்த அப்பாஎன்
றேங்கி அலறுகின்றேன்
என்னேஇவ் ஏழைக்கு இரங்காது
நீட்டித்து இருத்தல்எந்தாய்
பொன்னே கருணைப் பொருப்பே
தணிகைப் பொருப்பமர்த்த

3. உலக வாழ்க்கையில் 'காக்கைப் பிடித்தல்' (கால் + கை + பிடித்தல்) இத்தத்துவத்தையே மக்கள் கடைப்பிடிக்கின்றனர். இதில் வெற்றி கண்ட பின்னர்தான் மக்கள் 'மனிதன் காலைப் பிடிப்பதைவிட இறைவன் காலைப் பிடிப்பது மேல்' என்ற கொள்கையை வகுத்ததாகக் கருதலாம். இதுவே எல்லாச் சமயத்தினரும் தத்துவமாக வளர்த்துக் கொண்டனர் என்று கருதுவதிலும் தவறில்லை. இஃதோர் அநுபவ வளர்ச்சி; அநுபவ முதிர்ச்சி.

4. இனி அடுத்துவரும் பதிகங்கள் யாவும் தணிகைப் பெருமான்மீது அமைந்த வையே என்பதைப் பாடல்களே அடையாளம் காட்டும்.

*மன்னே கலப மயில்மேல்*
*அழகிய மாணிக்கமே. (4)*

*வேல்கொண்ட கையும் விறல்கொண்ட*
*தோளும் விளங்குமயில்*
*மேல்கொண்ட வீறும் மலர்முகம்*
*ஆறும் விரைக்கமலக்*
*கால்கொண்ட வீரக் கழலும்கண்*
*டால்அன்றிக் காமன்எய்யும்*
*கோல்கொண்ட வன்மை அறுமோ*
*தணிகைக் குருபரனே. (11)*

*உனக்கே விழைவுகொண்டு ஓலமிட்டு*
*ஓங்கி உலறுகின்றேன்*
*எனக்கே அருள்இத் தமியேன்*
*பிழைஉளத்து எண்ணியிடேல்*
*புனக்கேழ் மணிவல்லி யைப்புணர்ந்து*
*ஆண்டருள் புண்ணியனே*
*மனக்கேத மாற்றும் தணிகா*
*சலத்துஅமர் வானவனே. (13)*

*என்செய்கை என்செய்கை எந்தாய்நின்*
*பொன்னடிக் கேஅலங்கல்*
*வன்செய்கை நீங்க மகிழ்ந்துஅணி*
*யேன்துதி வாய்உரைக்க*
*மென்செய்கை கூப்ப விழிநீர்*
*துளித்திட மெய்சிலிர்க்கத்*
*தன்செய்கை என்பதற் றேதணி*
*காசலம் சார்ந்திலனே. (23)*

*தணியாத துன்பத் தடங்கடல்*
*நீங்கநின் தன்மலர்த்தாள்*
*பணியாத பாவிக்கு அருளும்உண்*
*டோபசு பாசம்அற்றோர்க்கு*

*அணியாக நின்ற அருட்செல்வ*
*மேதணி காசலனே*
*அணிஆ தவன்முத லாம்அட்ட*
*மூர்த்தம் அடைந்தவனே. (26)*

*அடையாத வஞ்சகர் பால்சென்று*
*இரந்திங்கு அலைந்தலைந்தே*
*கடையான நாய்க்குஉன் கருணைஉண்*
*டோதணி கைக்குள்நின்றே*
*உடையாத நல்நெஞ்சர்க்கு உண்மையைக்*
*காண்பிக்கும் உத்தமனே*
*படையாத தேவர் சிறைமீட்டு*
*அளித்தருள் பண்ணவனே. (27)*

*சொல்லார் மலர்புனை அன்பகத்*
*தோர்க்குஅருள் சொல்லும்எல்லாம்*
*வல்லாய்என்று ஏத்த அறிந்தேன்*
*இனிஎன்றன் வல்வினைகள்*
*எல்லாம் விடைகொண்டு இரியும்என்*
*மேல்இய மன்சினமும்*
*செல்லாது காண்ஐய னேதணி*
*காசலச் சீர்அரசே. (30)*

பாடல்கள் அனைத்தும் உள்ளத்தை உருக்குபவை. கந்தர் அலங்காரச் சாயல் படிந்தவைபோல் காணப் பெறுகின்றன. பாடிய வாய் தேனூறும் பான்மையுடையவை.

6. குறை இரந்த பத்து: இதில் பத்துப் பாடல்கள் அடக்கம். அனைத்தும் கல்நெஞ்சத்தையும் கரைத்து உருகச் செய்பவை. ஒன்றிரண்டு காட்டுவேன். அனைத்தும் எண்சீர்க் கழிநெடில் ஆசிரிய விருத்தயாப்பில் அமைந்தவை.

*தீராத துயர்க்கடலில் அழிந்து நாளும்*
*தியங்கிஅழு தேங்கும்இந்தச் சேய்க்கு நீகண்*
*பாராத செயல்என்னே எந்தாய் எந்தாய்*
*பாவிஎன விட்டனையோ பன்னனா லாக*
*ஏராய அருள்தருவாய் என்றே ஏமாந்து*
*இருந்தேனே என்செய்கேன் யாரும் இல்லேன்*
*சீராரும் தணிகைவரை அமுதே ஆதி*
*தெய்வமே நின்கருத்தைத் தெளிந்தி லேனே (2)*

*வாய்க்கும்உன தருள்என்றே அந்தோ நாளும்*
*வழிபார்த்திங் கிளைக்கின்றேன் வருத்தும் பொல்லா*
*நோய்க்கும்உறு துயர்க்கும்இலக் கானேன் மாழ்கி*
*நொந்தேன்நின் அருள்காணேன் நுவலும் பாசத்*
*தேய்க்கும்அவன் வரில்அவனுக் கியாது சொல்வேன்*
*என்செய்கேன் துணைஅறியா ஏழை யேனே*
*தூய்க்குமர குருவேதென் தணிகை மேவும்*
*சோதியே இரங்காயோ தொழும்பா ளர்க்கே (6)*

*அண்ணாவே நின்அடியை அன்றி வேறோர்*
*ஆதரவிங் கறியேன்நெஞ் சழிந்து துன்பால்*
*புண்ணாவேன் தன்னைஇன்னும் வஞ்சர் பாற்போய்ப்*
*புலந்துமுக வாட்டம்உடன் புலம்பி நிற்கப்*
*பண்ணாதே யாவன்இவன் பாவிக் குள்ளும்*
*படுபாவி என்றென்னைப் பரிந்து தள்ள*
*எண்ணாதே யான்மிகவும் ஏழை கண்டாய்*
*இசைக்கரிய தணிகையில்வீற் றிருக்கும் கோவே (9)*

பாடல்கள் யாவும் நெஞ்சை நெக்குருகச் செய்பவை. குறையொன்றுமில்லா தம்மைக் குறைகளின் களஞ்சிய மாகக் கூறிக் கொள்ளுவது 'கைச்சியாநுசந்தானம்'. நம் மாழ்வாரைப் போல் - மணிவாசகப் பெருமானைப் போல் - இப்பெருமானும் தம்மைத் தாழ்த்திப் பேசுகி றார். அப்படிப் பேசிக் குறையிரக்கின்றார்.

12. பொறுக்காப் பத்து: பத்துப் பாடல்களைக கொண்ட இப்பதிகம் எழுசீர்க் கழிநெடில் ஆசிரிய விருத்த யாப்பில் அமைந்தது. பல குறைகளையெல் லாம் சொல்லி இத்தகைய குறையுள்ளவர் கூட்டத்தில் தாம் கலந்து கொள்வது 'பொறுக்கிலன் பொறுக்கிலன்' என்று கூறித் தணிகைவாழ் சரவணபவனிடம் முறை யிட்டுத் தம்மை அவனுடைய தொண்டர்பால் சேர்த்தி டத் திருவருள் புரியுமாறு வேண்டுவது இப்பதிகம். இதில் இரண்டு பாடல்கள்:

*நிலைஅருள் நினது மலர்அடிக் கன்பு*
*நிகழ்ந்திட நாள்தொறும் நினையாப்*
*புலையர்தம் இடம்இப் புன்மையேன் புகுதல்*
*பொறுக்கிலன் பொறுக்கிலன் கண்டாய்*
*மலைஅர சளித்த மரகதக் கொம்பர்*
*வருந்திஈன் றெடுத்தமா மணியே*
*தலைஅர சளிக்க இந்திரன் புகழும்*
*தணிகைவாழ் சரவண பவனே. (4)*

*நீற்றணி விளங்கும் அவர்க்கருள் புரியும்*
*நின்அடிக் கமலங்கள் நினைந்தே*
*போற்றிடா தவர்பால் பொய்யனேன் புகுதல்*
*பொறுக்கிலன் பொறுக்கிலன் கண்டாய்*
*ஆற்றல்கொள் நின்பொன் அடியருக் கடியன்*
*ஆச்செயில் உய்குவன் அமுதே*
*சாற்றிடும் பெருமைக் களவிலா தோங்கும்*
*தணிகைவாழ் சரவண பவனே (8)*

இப்பதிகப் பாடல்களில் ஒவ்வொன்றின் இரண் டாம் அடியின் இறுதியில் 'பொறுக்கிலன் பொறுக்கி லன்' என்று கூறி வேண்டுவது நம் நெஞ்சை உருக்கு கின்றது. நம்மையும் அவ்வாறு அவனை வேண்டும் படித் தூண்டுகின்றது.

14. ஆறெழுத்துண்மை: ஆறெழுத்து என்பது ஆறு முகப் பெருமானைக் கூறும் மந்திரம். 'சரவணபவ' எனபது போன்றது. பத்துப் பாடல்களைக் கொண்ட இப்பதிகம் அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தயாப் பில் அமைந்தது. அனைத்துப் பாடல்களும் தணிகைக் குமரனை நோக்கி விளிப்பவை. இவற்றில் மூன்று பாடல் கள்:

*எய்தற் கரிய அருட்சுடரே*
*எல்லாம் வல்ல இறையோனே*
*செய்தற் கரிய வளத்தணிகைத்*
*தேவே உன்றன் ஆறெழுத்தை*
*உய்தற் பொருட்டிங் குச்சரித்தே*
*உயர்ந்த திருவெண் ணீறிட்டால்*
*வைதற் கில்லாப் புகழ்ச்சிவரும்*
*வன்கண் ஒன்றும் வாராதே. (2)*

*சார்ந்த அடியார்க் கருள்அளிக்கும்*
*தருமக் கடலே தற்பரமே*
*வார்ந்த பொழில்சூழ் திருத்தணிகை*
*மணியே உன்றன் ஆறெழுத்தை*
*ஓர்ந்து மனத்தின் உச்சரித்திங்*
*குயர்ந்த திருவெண் ணீறிட்டால்*
*ஆர்ந்த ஞானம் உறும்அழியா*
*அலக்கண் ஒன்றும் அழிந்திடுமே. (7)*

*பதியே எங்கும் நிறைந்தருளும்*
*பரம சுகமே பரஞ்சுடரே*
*கதியே அளிக்கும் தணிகைஅமர்*
*கடம்பா உன்றன் ஆறெழுத்தை*
*உதியோர் மனத்தின் உச்சரித்திங்*
*குயர்ந்த திருவெண் ணீறிட்டால்*
*துதிஞர் நினது பதந்தோன்றும்*
*துன்பம் ஒன்றும் தோன்றாதே. (9)*

அற்புதமான பாடல்கள். ஆறெழுத்து மந்திரத்தையும் வெண்ணீற்றின் பெருமையையும் வற்புறுத்திப் பேசுவன.

18. புன்மை நினைந்திரங்கல்: கட்டளைக் கலிப்பா யாப்பால் அமைந்த பத்துப் பாடல்களைக் கொண்டது இப்பதிகம். பெண்களை இழிவுபடுத்திப் பேசுவதாக அமைந்தது. இதில் நான்கு பாடல்கள்:

*மஞ்சட் பூச்சின் மினுக்கில்இ ளைஞர்கள்*
*மயங்க வேசெயும் வாள்விழி மாதர்பால்*
*கெஞ்சிக் கொஞ்சி நிறைஅழிந் துன்அருட்*
*கிச்சை நீத்துக் கிடந்தனன் ஆயினேன்*
*மஞ்சுற் றோங்கும் பொழில்தணி காசல*
*வள்ளல் என்வினை மாற்றுதல் நீதியே*
*தஞ்சத் தால்வந் தடைந்திடும் அன்பர்கள்*
*தம்மைக் காக்கும் தனிஅருட் குன்றமே (1)*

*முலையைக் காட்டி மயக்கிஎன் ஆருயிர்*
*முற்றிலும் வாங்குறும் முண்டைகள் நன்மதி*
*குலையக் காட்டும் கலவிக் கிசைந்துநின்*
*கோலங் காணக் குறிப்பிலன் ஆயினேன்*
*நிலையைக் காட்டும்நல் ஆனந்த வெள்ளமே*
*நேச நெஞ்சகம் நின்றொளிர் தீபமே*
*கலையைக் காட்டும் மதிதவழ் நற்றணி*
*காச லத்தமர்ந் தோங்கதி காரனே. (2)*

*பாவம் ஓர்உரு வாகிய பாவையர்*
*பன்னு கண்வலைப் பட்டும யங்கியே*
*கோவை வாய்இதழ்க் கிச்சைய தாகிநின்*
*குரைக ழற்கன்பு கொண்டிலன் ஆயினேன்*
*மேவு வார்வினை நீக்கிஅ ளித்திடும்*
*வேல னேதணி காசல மேலனே*
*தேவர் தேடரும் சீர்அருட் செல்வனே*
*தெய்வ யானை திருமண வானனே. (4)*

*கண்ணைக் காட்டி இருமுலை காட்டிமோ*
*கத்தைக் காட்டி அகந்தைக் கொண்டேஅழி*
*மண்ணைக் காட்டிடும் மாய வனிதைமார்*
*மாலைப் போக்கிநின் காலைப் பணிவனோ*
*பண்ணைக் காட்டி உருகும்அ டியர்தம்*
*பக்திக் காட்டிமுத் திப்பொருள் ஈதென*
*விண்ணைக் காட்டும் திருத்தணி காசல*
*வேல னேஉமை யாள்அருள் பாலனே. (8)*

அருமையான பாடல்களாயினும் பெண் சமூகத்தை இழிவுபடுத்திப் பேசும் பாங்கு நமக்கு மிக்க வருத்தத்தைத் தருகின்றது. அடிகளாரின் வாழ்க்கையில் எந்தப் பெண்ணும் அவரை மயக்கியதில்லை. அடிகளாரும் சிற்றின்பத்தை வெறுத்தொதுக்கியவர். பெண்களுக்கு அழகு இறைவனால் நல்கப்பட்டது. வமிசம் தழைப்பதற்காக ஆணைக் கவர்வதற்கு இந்த ஏற்பாடு. இதனை ஆழ்ந்து நோக்கினால் பெண்ணினத்தைக் குறைத்துப் பேசுவதற்கு வாய்ப்பு ஏற்படாது. பெரும்பாலான ஆண் புலவர்கள்தாம் இங்ஙனம் பாடுகின்றனர். பெண்பாற் புலவர்கள் ஆண்களின் அட்டூழியத்தைப் பாடத் தொடங்கிவிட்டார்களானால், ஆணுலகம் அதனைத் தாங்கிக் கொள்ள முடியாது. நாய், காளை, மனிதன் இவர்களைக் கவனித்தால் ஆண் வர்க்கமே பெண் இனத்தைத் துரத்துவதைக் காண முடிகின்றது. ஒரு பெண் நாய், ஒரு பசு, ஒரு பெண் ஆண் வர்க்கத்தைத் துரத்துவதைக் காண முடிவதில்லை. இறைவனது படைப்பிலேயே பெண்ணுக்கு ஆசை கட்டுப்பாட்டில் இருக்குமாறு அமைந்துள்ளது. மயங்கிச் செயலில் ஈடுபட்டால் விளைவு உடனே செயலைப் பறையறைவிக்கும். இதனால் இறைவனே இச்சையை அடக்கிச் செயற்படும் ஆற்றலைப் பெண்ணுக்கு நல்கியுள்ளான். பெண்ணினத்தை இழிவுபடுத்திப் பேசும் அடிகளாரின் போக்கு சிந்திக்கும் அறிஞர்கட்கு உகந்ததாக இல்லை என்பது மிகவும் வருந்தத்தக்க நிலையாகும்.

19. திருவடி சூடவிழைதல்: பத்துப் பாடல்களைக் கொண்டது. பாடல்கள் அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பினால் ஆனவை. அடியார்கட்கு ஆண்டவன் திருவடியே நிழலாகின்றது. இதனை வைணவ தத்துவம்,

> *''சேஷிபக்கல் சேஷபூதன் இழியுந் துறை ப்ரஜை முலையிலே வாய் வைக்குமாப் போலே'' (முமுட்சுப்படி 147)*

என்று பேசும். சேஷி - இறைவன்; சேஷபூதன் - ஆன்மா. ப்ரஜை - குழந்தை; பாலுண்ணும் பச்சைப் பசுங்குழவி தாயினுடைய மற்ற அவயவங்கள் யாவையும் விட்டுத் தான் உயிர் வாழ்வதற்கிடனாய் உள்ள அவளுடைய கொங்கையில் வாய் வைக்கின்றது. அது போலவே இறைவனைப் பற்றப் புகும் சேதநனும் எம் பெருமானுடைய பல உறுப்புகளையும் தவிர்த்துத் தான் உய்வதற்கு இடனாய் உள்ள அவன் திருவடிகளையே பற்றுகின்றான். முந்திய செயல் குழந்தைக்கு இயற்கை; பிந்திய செயல் சேதநனின் சொரூபத்திற்கு இயல்பாகின்றது. இதனால்தான் சம்சார வெப்பத்தால் தாக்குண்டு உழலும் சேதநனுக்கு இறைவனின் திருவடி நிழலாகின்றது.

இனி இப்பதிகத்தில் இரண்டு பாட்லகளைக் காட்டுவேன்.

*ஆறாத் துயரம் தரும்கொடியார்க*
*காளாய் உழன்றிங் கலையாதே*
*கூறாப் பெருமை நின்அடியார்*
*கூட்டத் துடன்போய்க் குலவும் வண்ணம்*
*தேறாப் பொருளாம் சிவத்தொழுகும்*
*தேனே தணிகைத் திருமலைவாழ்*
*மாறார் சுகமே நின்திருத்தாள்*
*அடியேன் முடிமேல் வைப்பாயே (4)*

*கல்லாக் கொடிய மடவார்தம்*
*காமக் குழிக்கண் வீழாமே*
*நல்லார்க் கெல்லாம் நல்லவநின்*
*நாமம் துதிக்கும் நலம்பெறவே*
*சொல்லாற் புனைந்த மாலையொடும்*
*தொழுது தணிகை தனைத்துதிக்க*
*வல்லார்க் கருளும் நின்திருத்தாள்*
*அடியேன் முடிமேல் வைப்பாயே (8)*

23. **காணாப் பத்து:** அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பாலான பத்துப் பாடல்களைக் கொண்ட இப்பதிகம் அடிகள் இறைவனைக் காணா நிலையைக் கழறுவது. எல்லாப் பர்டல்களும் "கண்கள் ஆரக் கண்டிலனே" என்று இறுவன. இரண்டு பாடல்களைக் காட்டுவேன்.

*உருத்துள் இகலும சூர்முதலை*
*ஒழித்து வானத் தொண்பதியைத்*
*திருத்தும் அரைசே தென்தணிகைத்*
*தெய்வ மணியே சிவஞானம்*
*அருத்தும் நினது திருவருள்கொண்டு*
*ஆடிப் பாடி அன்பதனால்*
*கருத்துள் உருகி நின்உருவைக்*
*கண்கள் ஆரக் கண்டிலனே (3)*

*விரைவாய் கடப்பந் தார்அணிந்து*
*விளங்கும் புயனே வேலோனே*
*தரைவாய் தவத்தால் தணிகைஅமர்*
*தருமக் கடலே தனிஅடியேன்*
*நிரைவாய் சனனக் கடல்படிந்தே*
*தயங்கி அலைந்தேன் சிவஞானக்*
*கரைவாய் ஏறி நின்உருவைக்*
*கண்கள் ஆரக் கண்டிலனே (8)*

இப்பாடல்களில் அடிகளின் ஆற்றாமை பளிச்சிடுகின்றது.

31. உறுதி உணர்த்தல்: கட்டளைக் கலித்துறையா லான மூன்று பாடல்களைக் கொண்டது இப்பதிகம். அடிகள் நெஞ்சுக்கு உறுதி உணர்த்துவது.

*அறியாத நம்பிணி ஆதியை*
*நீக்கும் அருள்மருந்தின்*
*நெறியாம் தணிகையன் ஆறெழுத்*
*துண்டு;வெண் ணீறுண்டு;நீ*
*எறியா திரவும் பகலும்*
*துதிசெய் திடுதிகண்டாய்*
*குறியா திருக்கலை என்ஆணை*
*என்றன் குணநெஞ்சமே (2)*

என்பது இரண்டாம் பாடல்.

39. நாள் எண்ணி வருந்தல்: அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்திலான இப்பதிகம் தான் இறைவனது திருவருளைப் பெற எத்தனை நாள் செலும் என்று அடிகள் இரங்கி வருந்துதலைக் கூறுவது. இதில் மூன்று பாடல்கள்:

*இன்னும் எத்தனை நாள்செலும்*
*ஏழையேன் இடர்க்கடல் விடுத்தேற*
*மின்னும் வேற்படை மிளிர்தரும்*
*கைத்தல வித்தகப் பெருமானே*
*துன்னும் நற்றணி காசலத்*
*தமர்ந்தருள் தோன்றலே மயில்ஏறி*
*மன்னும் உத்தம வள்ளலே*
*நின்திரு மனக்கருத் தறியேனே (1)*

*பாவி யேன்இன்னும் எத்தனை*
*நாள்செலும் பருவரல் விடுத்துய்யக்*
*கூவி யேஅன்பர்க் கருள்தரும்*
*வள்ளலே குணப்பெருங் குன்றேஎன்*

*ஆவி யேஎனை ஆள்குரு*
*வடிவமே ஆனந்தப் பெருவாழ்வே*
*வாவி ஏர்தரும் தணிகமா*
*மலைமிசை மன்னிய அருள்தேனே (5)*

*தொண்ட னேன்இன்னும் எத்தனை*
*நாள்செலும் துயர்க்கடல் விடுத்தேற*
*அண்ட னேஅண்டர்க் கருள்தரும்*
*பரசிவன் அருளிய பெருவாழ்வே*
*கண்ட னேகர்வந் தனைசெய*
*அசுரனைக் களைந்தருள் கலைகண்ணே*
*விண்ட னேர்புகுஞ் சிகரிசூழ்*
*தணிகையில் விளங்கிய வேலோனே (7)*

அடிகளாரின் ஏக்கநிலையைப் பாடல்களில் காண முடிகின்றது. 'எத்தனை நாள் செலும்' என்ற சொற்றொடர் பாடல்தோறும் தலைகாட்டி இதனைத் தெரிவிக்கின்றது.

50. சண்முகர் கொம்மி: தாழிசையால் அமைந்த பதினைந்து பாடல்களைக் கொண்டது இப்பதிகம். இதில் மூன்று பாடல்கள்:

*குறவர் குடிசை நுழைந்தாண்டி - அந்தக்*
*கோமாட்டி எச்சில் விழைந்தாண்டி*
*துறவர் வணங்கும் புகழாண்டி - அவன்*
*தோற்றத்தைப் பாடி அடியுங்கடி (1)*

*வேங்கை மரமாகி நின்றாண்டி - வந்த*
*வேடர் தமைஎலாம் வென்றாண்டி*
*தீங்குசெய் சூரனைக் கொன்றாண்டி - அந்தத்*
*தீரனைப் பாடி அடியுங்கடி (4)*

*வேதமுடி சொல்லும் நாதனடி - சதுர்*
*வேதமு டிதிகழ் பாதனடி*

*நாத வடிவுகொள் நீதனடி - பர*
*நாதங் கடந்த நலத்தனடி (8)*

பக்தி மீதூர்ந்து நின்றால் சும்மா விடாது; துள்ளிக் குதித்தாடச் செய்யும்; கும்மி கொட்டிக் குதிக்கச் செய்யும். பின் என்னென்னவோ செய்யும்.

51. **சண்முகர் வருகை:** இது பன்னிரண்டு சிந்துப் பாடல்களைக் கொண்டது. 'சிந்து' என்றாலே அண்ணா மலை ரெட்டியார் காவடிச் சிந்தை நினைக்கச் செய்யும்.

*வாரும் வாரும்தெய்வ வடிவேல் முருகரே*
*வள்ளி மணாளரே வாரும்*
*புள்ளி மயிலோரே வாரும். (1)*

*பொழுது விடிந்தது பொற்கோழி கூவிற்று*
*பொன்னான வேலரே வாரும்*
*மின்னார்முந் நூலரே வாரும் (3)*

*அருணன் உதித்தனன் அன்பர்கள் சூழ்ந்தனர்*
*ஆறுமுகத் தோரே வாரும்*
*மாறில்அகத் தோரே வாரும் (6)*

*பக்தர்கள் சூழ்ந்தனர் பாடல் பயின்றனர்*
*பன்னிரு தோளரே வாரும்*
*பொன்மலர்த் தாளரே வாரும் (10)*

*தொண்டர்கள் நாடினர் தோத்திரம் பாடினர்*
*சுப்பிர மணியரே வாரும்*
*வைப்பின் அணியரே வாரும் (12)*

ஆடிப்பாடி மகிழ வேண்டிய பாடல்கள். கூட்டமாகக் கூடியாடினால் பின்னும் சிறக்கும்.

## அகத்துறைப் பதிகங்கள்

**நான்கை முன்னர்க் குறிப்பிட்டேன். அவை:**

20. ஆற்றாவிரகம்
37. கூடல் விழைதல்
41. பவனிச் செருக்கு
47. இங்கிதப் பத்து

என்பவையாகும்.

20. **ஆற்றா விரகம்:** அடிகள் தணிகைமலை கந்த வேளின்மீது ஆராக் காதல் விரகம் மேலிட்டுத் தலைவி கூற்றாக அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப் பில் அமைந்த பத்துப் பாடல்களைக் கொண்டது இப்ப திகம். சில பாடல்களில் ஆழங்கால் பட்டு நாமும் தலைவி நிலையில் பாவனை செய்ய முயல்வோம்.

*எளியேன் என்ன இருப்பாரோ*
*ஏழைக் கிரங்கும் விருப்பாரோ*
*அளியேன் பேர்நெஞ் சிருப்பாரோ*
*அழியாக் காமம் திருப்பாரோ*
*களியேன் என்னை உருப்பாரோ*
*கருதும் அருட்குக் கருப்பாரோ*
*தெளியேன் யான்என் செய்கேனே*
*தென்பால் தணிகைப் பொருப்பாரே (2)*

*வந்தென் எதிரில் நில்லாரோ*
*மகிழ ஒருசொல் சொல்லாரோ*
*முந்தம் மதனை வெல்லாரோ*
*மோகம தீரப் புல்லாரோ*
*கந்தன் எனும்பேர் அல்லாரோ*
*கருணை நெஞ்சம் கல்லாரோ*
*சந்தத் தணிகை இல்லாரோ*
*சகத்தில் எல்லாம் வல்லாரோ (4)*

*காமப் பயலைத் தடுப்பாரோ*
*கடப்ப மலர்த்தார் கொடுப்பாரோ*
*ஏமத் தனத்தைக் கடுப்பாரோ*
*என்மேல் அன்பை விடுப்பாரோ*
*மாமற் றொருவீ டடுப்பாரோ*
*மனத்தில் கோபம் தொடுப்பாரோ*
*தாமத் தாழ்வைக் கெடுப்பாரோ*
*தணிகை தனில்வேல் எடுப்பாரே (6)*

*தணிகா சலம்போய்த் தழையேனோ*
*சாமி திருத்தாள் விழையேனோ*
*பணிகா தலித்துப் பிழையேனோ*
*பாடி மனது குழையேனோ*
*திணிகாண் உலகை அழையேனோ*
*சேர்ந்தவ் வீட்டுள் நுழையேனோ*
*பிணிக்காண் உலகில் பிறந்துழன்றே*
*பேதுற் றலையும் பழையேனே. (9)*

பாடல்களைப் பக்தியுடன் பாடி அநுபவித்தால் நாமும் நாயகியின் நிலையை அநுபவித்து மகிழலாம்.

37. **கூடல் விழைதல்:** அடிகள் நாயகி நிலையில் இருந்து ஆறுமுகத்தான்மீது காதல் கொண்டு அவ னோடு கூட விழையும் பாங்கில் ஆர்வத்துடன் கழறுவ தாக எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தயாப்பில் அமைத்த பத்துப் பாடல்களைக் கொண்டது இந்த அகத்துறைப் பதிகம். நான்கு பாடல்களில் ஆழங்கால் படுவோம்.

*சகம்ஆ றுடையார் அடையா நெறியார்*
*சபையார் விடையார் தனிஆனார்*
*உகமா ருடையார் உமைஓர் புடையார்*
*உதவும் உரிமைத் திருமகனார்*

*முகம்ஆ றுடையார் முகம்மா றுடையார்*
*எனவே எனது முன்வந்தார்*
*அகமா ருடையேன் பதியாது என்றேன்*
*அலைவாய் என்றார் அஃதென்னே (1)*

*காயோ டுடணாய்க் கனல்கை ஏந்திக்*
*காடே இடமாக் கணங்கொண்ட*
*பேயோ டாடிப் பலிதேர் தரும்ஓர்*
*பித்தப் பெருமான் திருமகனார்*
*தாயோ டுறளும் தணிகா சலனார்*
*கைசேர் மயிலார் தனிவேலார்*
*வேயோ டுறழ்தோள் பாவையர் முன்என்*
*வெள்வளை கொண்டார் வினவாமே (3)*

*கல்லால் அடியார் கல்லடி உண்டார்*
*கண்டார் உலகம் களைவேதம்*
*செல்லா நெறியார் செல்லுறும் முடியார்*
*சிவனார் அருமைத் திருமகனார்*
*எல்லாம் உடையார் தணிகா சலனார்*
*என்நா யகனார் இயல்வேலார்*
*நல்லார் இடைஎன் வெள்வளை கொடுபின்*
*நண்ணார் மயில்மேல் நடந்தாரே (5)*

*மழுவார் தருகைப் பெருமான் மகனார்*
*மயில்வா கனனார் அயில்வேலார்*
*தழுவார் வினையைத் தணியார் அணியார்*
*தணிகா சலனார் தம்பாதம்*
*தொழுவார் அழுவார் விழுவார் எழுவார்*
*துதியா நிற்பார் அவர்நிற்கப்*
*புழுவார் உடலோம் பிடும்என் முனர்வந்*
*தருள்தந் தருளிப் போனாரே (8)*

பாடல்களை உள்நெகிழ்ந்து பாடி அநுபவித்தால் நாமும் அடிகள் கொண்ட தலைவி நிலையை அடையலாம்.

41. பவனிச் செருக்கு: ஆறுமுகப் பெருமான் மயில் மீது உலா வரும்போது அதனைக் கண்ட அடிகள்

பெருமிதங் கொண்டு நாயகி நிலையை எய்தி கலிவிருத்த யாப்பில் பத்துப் பாடல்களைப் பாடி பயன்பெறுகின் றார். அவற்றில் நான்கு பாடல்களில் உளங்கரைந்து உருகுவோம்.

*பூவுண்டவெள் விடையேறிய புனிதன்தரு மகனார்*
*பாவுண்டதொர் அமுதன்னவர் பசுமாமயில் மேல்வந்*
*தாவுண்டனர் எனதின்நலம் அறியார்என இருந்தால்*
*நாவுண்டவர் திருமுன்பிது நலம்அன்றுமக் கெனவே (1)*

*வாரார்முலை உமையாள்திரு மணவாளர்தம் மகனார்*
*ஆராஅமு தனையார்உயிர் அனையார்அயில் அவனார்*
*நேரார்பணி மயிலின்மிசை நின்றார்அது கண்டேன்*
*நீரார்விழி இமைநீங்கின நிறைநீங்கிய தன்றே (3)*

*மான்கண்டகை உடையார்தரு மகனார்தமை மயில்மேல்*
*நான்கண்டனன் அவர்கண்டனர் நகைகொண்டனம் உடனே*
*மீன்கண்டன விழியார்அது பழியாக விளைத்தார்*
*ஏன்கண்டனை என்றாள்அனை என்என்றுரைக் கேனே (6)*

*மாவீழ்ந்திடு விடையார்திரு மகனார்பசு மயில்மேல்*
*நீவீழ்ந்திட நின்றார்அது கண்டேன்என்றன் நெஞ்சே*
*பூவீழ்ந்தது வண்டேமதி போய்வீழ்ந்தது வண்டே*
*நாவீழ்ந்தது மலரேகழை நாண்வீழ்ந்தது மலரே (9)*

நளினமான பாடல்கள். நான்கையும் நம் நாவில் தாண் டவமாடச் செய்து அநுபவித்தால் ஆறுமுகனாரை மானத தக் காட்சியில் கண்டு மகிழலாம்.

47. இங்கிதப் பத்து: ஆறுமுகப் பெருமான் மயிலின் மீது உலா வருங்கால் அக்காட்சியில் ஈடுபட்டுக் கொள்ளை போன மகளிரின் மனத்தை மிக இங்கிதமா கச் சொல்லுகிறார் அடிகள் - கலிநிலை வண்ணத்துறை யாலமைந்த பத்துப் பாடல்களில். நான்கு பாடல்களில் ஆழங்கால் படுவோம்.

*சீர்வளர் குவளைத் தார்வளர்*
*புயணார் சிவனார்தம்*
*பேர்வளர் மகனார் கார்வளர்*
*தணிகைப் பெருமானார்*

*ஏர்வளர் மயில்மேல் ஊர்வளர்*
*நியமத் திடைவந்தால்*
*வார்வளர் முலையார் ஆர்வளர்*
*கில்லார் மயல்அம்மா (1)*

*நதியும் மதியும் பொதியும்*
*சடையார் நவின்மாலும்*
*விதியும் துதிஐம் முகனார்*
*மகனார் மிகுசீரும்*
*நிதியும் பதியும் கதியும்*
*தருவார் நெடுவேலார்*
*வதியும் மயின்மேல் வருவார்*
*மலரே வரும்ஆறே (3)*

*காமலர் நறவுக் கேமலர்*
*மூவிரு காலேநீ*
*தேமலர் தணிகைத் தேவர்*
*மருங்கில் சேர்வாயேல்*
*ஆமல ருடையாட் கென்பெயர்*
*பலவாம் அவையுள்ளே*
*ஓமலர் அடிகேள் ஒன்றினை*
*ஒன்றென் றுரையாயே (7)*

*பொன்னை இருத்தும் பொன்மலர்*
*எகினப் புள்ளேநீ*
*அன்னை இகழ்ந்தே அங்கலர்*
*செய்வான் அனுராகம்*
*தன்னை அளிக்கும் தண்டணி*
*கேசர் தம்பாற்போய்*
*என்னை இகழ்ந்தாள் என்செயல்*
*கொண்டாள் என்பாயே (9)*

பாடல்களைப் பக்தியுணர்வுடன் இசையூட்டிப் படித்தால் அடிகளார் பெற்ற அநுபவத்தை நாமும் பெறலாம்.

இத்துடன் இதனை நிறுத்தி இரண்டாம் திருமுறையைக் காணச் செல்வோம்.

# 4. இரண்டாம் திருமுறைப் பாடல்கள்

இத்திருமுறையில் 103 பதிகங்கள் அடக்கம். இவற்றுள் அடங்கிய பாடல்கள் 1388. இத்திருமுறையில் 23 அகத்துறைப் பதிகங்கள் உள்ளன. இதில் அடங்கிய பாடல்களின் தொகை 452. இத்திருமுறையில் சில பதிகங்களையும் அவற்றில் அடங்கிய சில பாடல்களையும் காண்போம்.

1. **கருணை விண்ணப்பம்:** இது அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பில் அமைந்த பத்துப் பாடல்களைக் கொண்டது. பாடல்கள் யாவும் பொதுவானவை.

*இடமே பொருளே ஏவலே*
*என்றென் றெண்ணி இடர்ப்படுவோர்*
*மடமே உடையேன் தனக்கருள்நீ*
*வழங்கல் அழகோ ஆநந்த*
*நடமே உடையோய் நினைஅன்றி*
*வேற்றுத் தெய்வம் நயவேற்குத்*
*திடமே அருள்தான் வழங்காது*
*தீர்த்தல் அழகோ தெரிப்பாயே (2)*

*நாயேன் துன்பக் கடல்வீழ்ந்து*
*நலிதல் அழகோ நல்லோர்க்கிங்கு*
*ஈயேன் ஒன்றும் இல்லேன்நான்*
*என்செய் கேனோ என்னுடைய*
*தாயே அனையாய் சிறிதென்மேல்*
*தயவு புரிந்தால் ஆகாதோ*

*சேயேன் தன்னை விடுப்பாயோ*
*விடுத்தால் உலகஞ் சிரியாதோ (6)*

*சொல்லற் கரிய பெரியபரஞ்*
*சுடரே முக்கட் சுடர்க்கொழுந்தே*
*மல்லற் கருமால் அயன்முதலோர்*
*வழுத்தும் பெருஞ்சீர் மணிக்குன்றே*
*புல்லற் கரிதாம் எளியேன்றன்*
*பிழைகள் யாவும் பொறுத்திந்த*
*அல்லற் கடல்நின் றெனைஎடுத்தே*
*அருள்வாய் உன்றன் அருள்நலமே (10)*

இப்பாடல்களில் பல்வேறு விதமாக இறைவன் கருணையை வேண்டி விண்ணப்பிப்பதைக் காண்கின்றோம்.

2. பிரார்த்தனைப் பதிகம்: இதில் திருவொற்றியூரிலும் திருத்தில்லையிலும் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான்களைப் பிரார்த்திக்கும் முறையில் கட்டளைக் கலித்துறை யாப்பில் அமைந்த பத்துப் பாடல்கள் அடக்கம்.

*அருளார் அமுதப் பெருங்கட*
*லேதில்லை அம்பலத்தில்*
*பொருளார் நடம்புரி புண்ணிய*
*னேநினைப் போற்றுகிலேன்*
*இருளார் வனத்தில் இடர்உழந்*
*தேன்இனி யாதுசெய்வேன்*
*மருளார் மலக்குடில் மாய்நதிடில்*
*உன்அருள் வாய்ப்பதற்கே (4)*

இது தில்லைச் சிற்றம்பலத்தானைப் பிரார்த்திப்பதாக அமைந்தது.

*கடலே அனைய துயர்மிகை*
*யால்உட் கலங்கும்என்னை*

*விடலே அருளன் றெடுத்தாளல்*
*வேண்டும்என் விண்ணப்பமீ*
*தடல்ஏ றுவந்த அருட்கட*
*லேஅணி அம்பலத்துள்*
*உடலே மருவும் உயிர்போல்*
*நிறைஒற்றி யூரப்பனே (10)*

இது ஒற்றியூர் அப்பனைப் பிரார்த்திப்பதாக அமைந்துள்ளது.

இப்பதிகத்தில் பொதுவாக அமைந்த பாடல்களும் உள்ளன.

*நிலத்தே சிறுவர்செய் குற்றங்கள்*
*யாவும் நினைத்தறவோர்*
*சலத்தே உளத்தை விடார்என்பர்*
*ஆதலின் தாதையென்றே*
*குலத்தேவர் போற்றும் குணக்குன்ற*
*மேஎங் குலதெய்வமே*
*புலத்தே இழிதகை யேன்பிழை*
*யாவும் பொறுத்தருளே (3)*

என்பது இதற்கு ஓர் எடுத்துக்காட்டு.

3. பெருவிண்ணப்பம்: பொதுவாக அமைந்த பாடல்கள். அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தயாப்பில் அமைந்தவை இப்பத்துப் பாடல்கள்.

*உண்மை அறியேன் எனினும்எனை*
*உடையாய் உனையே ஒவ்வொருகால்*
*எண்மை உடையேன் நினைக்கின்றேன்*
*என்னே உன்னை ஏத்தாத*
*வெண்மை யுடையார் சார்பாக*
*விட்டாய் அந்தோ வினையேனை*
*வண்மை உடையாய் என்செய்கேன்*
*மற்றோர் துணைஇங் கறியேனே (2)*

*வஞ்ச மடவார் மயலொருபால்*
*மணியே நின்னை வழுத்தாத*
*நஞ்சம் அனையார் சார்பொருபால்*
*நலியும் வாழ்க்கைத் துயர்ஒருபால்*
*விஞ்சும் நினது திருவருளை*
*மேவா துழலும் மிடிஒருபால்*
*எஞ்சல் இலவாய் அலைக்கின்ற*
*தென்செய் கேன்இவ் எளியேனே (10)*

தம்மை நல்வழியில் உய்விக்குமாறு விண்ணப்பிப் பதைப் பாடல்களில் கண்டு மகிழலாம்.

6. அச்சத்திரங்கல்: இதில் வரும் பாடல்கள் 'கோ யில்' என வழங்கும் திருத்தில்லையைப் பற்றியவை. எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பில் எழுந் தவை.

*துறையிடும் கங்கைச் செழுஞ்சடைக் கனியே*
*சுயம்பிர காசமே அமுதில்*
*கரையிடும் கண்டத் தொருபெருங் கருணைக்*
*கடவுளே கண்ணுதற் கரும்பே*
*குறையிடும் குணத்தால் கொடியனேன் எனினும்*
*கொடுந்துய ரால்அலைந் தையா*
*முறையிடு கின்றேன் அருள்தரா தென்னை*
*மூடன்என் றிகழ்வது முறையோ (1)*

*ஆண்டநின் கருணைக் கடலிடை ஒருசிற்*
*றணுத்துணைத் திவலையே எனினும்*
*ஈண்டஎன் தலைமேல் தெறிந்தியேல் உய்வேன்*
*இல்லையேல் என்செய்கேன் எளியேன்*
*நீண்டவன் அயன்மற் றேனைவா னவர்கள்*
*நினைப்பரும் நிலைமையை அன்பர்*
*வேண்டினும் வேண்டா விடினும்ஆங் களிக்கும்*
*விமலனே விடைப்பெரு மானே (4)*

என்பவை இரண்டு பாடல்கள். உலக வாழ்க்கையில் படும் அச்சத்தால் பேதுறும் அடிகள் இறைவனை இரங்கி வேண்டுவதைப் பாடல்களில் காண்கின்றோம்.

9. **அருளியல் வினாவல்:** இது திருமுல்லைவாயில் என்ற தலத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவனை நோக்கி வினவுவதாக அமைந்த பதிகம். எழுசீர்க் கழி நெடிலாசிரிய விருத்தங்கள் பத்தைக் கொண்டது. இத னுள் **இரண்டு** பாடல்கள்:

*தேன்என இனிக்கும் திருவருட் கடலே*
*தெள்ளிய அமுதமே சிவமே*
*வான்என நிற்கும் தெய்வமே முல்லை*
*வாயில்வாழ் மாசிலா மணியே*
*ஊன்என நின்ற உணர்விலேன் எனினும்*
*உன்திருக் கோயில்வந் தடைந்தால்*
*ஏன்எனக் கேளா திருந்தனை ஐயா*
*ஈதுநின் திருவருட் கியல்போ (1)*

*முன்னிய மறையின் முடிவின்உட் பொருளே*
*முக்கணா மூவர்க்கும் முதல்வா*
*மன்னிய கருணை வாரியே முல்லை*
*வாயில்வாழ் மாசிலா மணியே*
*அன்னியன் அல்லேன் தொண்டனேன் உன்தன்*
*அரும்பெரும் கோயில்வந் தடைந்தால்*
*என்இது சிவனே பகைவரைப் போல்பார்த்து*
*இருப்பதுன் திருவருட் கியல்போ (7)*

ஓர் இல்லத்தில் வந்து இரக்கும் எளியன்போல, திருமுல் லைவாயில் வந்து அங்கு எழுந்தருளியிருக்கும் இறை வன் திருவருளை வேண்டுகின்றார் அடிகள்.

10. **திருமுல்லைவாயில் திருவிண்ணப்பம்:** இது கலி விருத்தத்தாலான பத்துப் பாடல்களைக் கொண்டது.

*தாயின் மேவிய தற்பர மேமுல்லை*
*வாயின் மேவிய மாமணி யேஉன்தன்*
*கோயின் மேவிநின் கோமலர்த் தாள்தொழா*
*தேயின் மேவி இருந்தனன் என்னையே (1)*

*தில்லை வாய்ந்த செழுங்கனி யேதிரு*
*முல்லை வாயில் முதல்சிவ மூர்த்தியே*
*தொல்லை யேன்உன்தன் தூய்திருக் கோயிலின்*
*எல்லை சேரஇன் றெத்தவம் செய்ததே (2)*

*மண்ணின் ஓங்கி வளர்முல்லை வாயில்வாழ்*
*கண்ணுண் மாமணி யேகரும் பேஉனை*
*எண்ணும் அன்பர் இழிவடைந் தால்அது*
*பண்ணும் நின்அருள் பாரிடை வாழ்கவே (8)*

இனிமையான பாடல்கள். இத்தலம் பற்றி ஒரு குறிப்பு: பழங்காலத்தில் இத்தலம் முல்லைக் காட்டாக இருந்தது. தொண்டை நாட்டைச் சேர்ந்த மன்னன் ஒருவன் இவ் வழியாக ஏகினபோது அவனது யானையின் காலில் முல்லைக் கொடிகள் சிக்கி யானை நின்றது. மன்னன் இறங்கி, கொடிகளை வெட்டினான். வெட்டுண்ட இடத் திலிருந்து இரத்தம் பீறிட்டது. அகழ்ந்து பார்க்கையில் சிவலிங்கம் ஒன்று தென்பட்டது. வெட்டுப்பட்ட இலிங்கத்திலிருந்து குருதி வழிந்தது. மன்னன் காடு வெட்டி நாடாக்கிக் கோயில் கட்டினான். இதனால் இத்தலத்து இறைவனுக்கு 'வெட்டுத் தாங்கி ஈசுவரர்' என்ற காரணத் திருநாமமும் ஏற்பட்டது. திருக்கோயி லின் அர்த்த மண்டபத் தூண்கள் இரண்டும் எருக்க மரத்தாலானவை. இது தலத்தின் சிறப்பு.

13. அபராத விண்ணப்பம்: பத்துத் திருப்பாடல் களாலமைந்த இப்பதிகம் திருவொற்றியூர் எம்பெரு மானை நோக்கி வேண்டுவதாக அமைந்தது. எழுசீர்க் கழிநெடில் ஆசிரிய விருத்தயாப்பால் அமைந்த பாடல்

களைக் கொண்டது. தாம் ஏதாவது பிழைகள் புரிந்திருந் தால் அவற்றைப் பொறுத்துத் தம்மை மன்னித்தருளு மாறு விண்ணப்பிக்கின்றார்.

*தேவியல் அறியாச் சிறியனேன் பிழையைத்*
*திருவுளத் தெண்ணிநீ கோபம்*
*மேவிஇங் கையோ கைவிடில் சிவனே*
*வேறுநான் யாதுசெய் வேனே*
*மூவிரு முகம்சேர் முத்தினை அளித்த*
*முழுச்சுவை முதிர்ந்தசெய் கரும்பே*
*சேவின்மேல் ஓங்கும் செழுமணிக் குன்றே*
*திருவொற்றி யூர்மகிழ் தேவே (1)*

*அஞ்செழுத் தோதி உய்ந்திடாப் பிழையை*
*ஐயநின் திருவுளத் தெண்ணி*
*வெஞ்சனென் றையோ கைவிடில் சிவனே*
*வேறுநான் யாதுசெய் வேனே*
*கஞ்சன்மால் முதலோர் உயிர்பெற விடத்தைக்*
*களத்திருத் தியஅருட் கடலே*
*சஞ்சித மறுக்கும் சண்முகம் உடையோன்*
*தந்தையே ஒற்றிஎம் தவமே (6)*

அற்புதமான பாடல்கள். கல்நெஞ்சையும் உருக்கு பவை. கல்வடிவமாக எழுந்திருளியிருக்கும் கடவு ளிடம் சமர்ப்பிக்கும் விண்ணப்பம் கல்நெஞ்சமுடைய நம்மையே நெகிழச் செய்கின்றது. பாடல்கள் யாவும் திருப்பதி இலட்டுபோல் இனிக்கின்றன. பாடிய வாய் தேனூறும் பான்மையனவாய்த் திகழ்கின்றன.[1]

16. எழுத்தறியும் பெருமாள் மாலை: இங்கு, பதிகம் 31 பாடல்களைக் கொண்ட மாலையாக வளர்ந்து ஒற்றி

1. இரண்டாம் திருமுறையில் திருவொற்றியூர் திருத்தலத்தைப் பற்றி அதிகமான பாடல்கள் காணப் பெறுகின்றன.

யூர் பெருமானை மகிழ்விக்கின்றது. பாமாலை கொச்சக கக் கலிப்பாவால் ஆக்கப் பெற்றுள்ளது. ஒவ்வொரு பாடலும் 'எழுத்தறியும் பெருமாளே' என்று முடிவு பெறுகின்றது. ஒற்றியூர் பெருமாளின் திருநாமம் எழுத் தறியும் பெருமாள் என்று குறிக்கப் பெறுகின்றது. இப்பதிகத்தில் சில பாடல்களைக் காண்போம்.

*சிந்தை மயங்கித் தியங்குகின்ற நாயேனை*
*முந்தை வினைதொலைத்துன் மொய்கழற்காள் ஆக்காதே*
*நிந்தைஉறும் நோயால் நிகழவைத்தல் நீதியதோ*
*எந்தைநீ ஒற்றி எழுத்தறியும் பெருமாளே (1)*

*நில்லா உடம்பை நிலைஎன்றே நேசிக்கும்*
*பொல்லாத நெஞ்சப் புலையனேன் இவ்வுலகில்*
*சொல்லா மனநோயால் சோர்வுற் றலையும்அல்லல்*
*எல்லாம் அறிவாய் எழுத்தறியும் பெருமாளே (5)*

*வீட்டுக் கடங்கா விளையாட்டுப் பிள்ளைஎனத்*
*தேட்டுக் கடங்காத தீமனத்தால் ஆந்துயரம்*
*பாட்டுக் கடங்காநின் பத்தர் அடிப்புகழ்போல்*
*ஏட்டுக் கடங்கா தெழுத்தறியும் பெருமாளே (16)*

*ஊழை அகற்ற உளவறியாப் பொய்யன்இவன்*
*பீழைமனம் நம்மைப் பெறாதம் மனங்கொடிய*
*தாழைஎன எண்ணிஎன்னைத் தள்ளிவிட்டால் என்செய்வேன்*
*ஏழைநான் ஒற்றி எழுத்தறியும் பெருமாளே (24)*

*பண்ண முடியாப் பரிபவங்கொண் டிவ்வுலகில்*
*நண்ண முடியா நலங்கருதி வாடுகின்றேன்*
*உண்ணமுடி யாஅமுதாம் உன்னைஅன்றி எவ்வெவர்க்கும்*
*எண்ணமுடி யாதே எழுத்தறியும் பெருமாளே (27)*

திருவொற்றியூர் பற்றிய இம் மாலையுள் அடங்கிய எல்லாப் பாடல்களும் படித்து இன்புறத்தக்கவை. அடி களின் வெள்ளை மனம் எப்படியெல்லாம் இறைவ

னோடு ஊடாடுகின்றது என்பதை காணும் நாம் வியப் புக் கடலில் ஆழ்கின்றோம்.

20. **திருவடிச் சரண்புகல்:** பத்துப் பாடல்களைக் கொண்ட இப்பதிகம் இறைவனைச் சரண்புகுதலைக் காட்டுகின்றது. பாடல்கள் யாவும் எண்சீர்க் கழிநெடி லடி ஆசிரிய விருத்த யாப்பில் அமைந்தவை. நெஞ்சை நோக்கி அடிகள் பேசுவனவாக அமைந்தவை இப்பா டல்கள்.

*ஓடல் எங்கணும் நமக்கென்ன குறைகாண்*
*உற்ற நற்றுணை ஒன்றும்இல் லார்போல்*
*வாடல் நெஞ்சமே வருதிஎன் னுடனே*
*மகிழ்ந்து நாம்இரு வரும்சென்று மகிழ்வாய்க்*
*கூடல் நேர்திரு ஒற்றியூர் அகத்துக்*
*கோயில் மேவிநம் குடிமுழு தாளத்*
*தாள்த லந்தரும் நமதருள் செல்வத்*
*தந்தை யார்அடிச் சரண்புக லாமே (1)*

*நாட்டம் உற்றெனை எழுமையும் பிரியா*
*நல்ல நெஞ்சமே நங்கையர் மயலால்*
*வாட்டம் உற்றிவண் மயங்கினை ஐயோ*
*வாழ வேண்டிடில் வருதிஎன் னுடனே*
*கோட்டம் அற்றிரு மலர்க்கரம் கூப்பிக்*
*கும்பி டும்பெரும் குணத்தவர் தமக்குத்*
*தாள்த லந்தரும் ஒற்றியூர்ச் செல்வத்*
*தந்தை யார்அடிச் சரண்புக லாமே (7)*

*பசிஎ டுக்குமுன் அமுதுசே கரிப்பார்*
*பாரி னோர்கள்அப் பண்பறிந் திலையோ*
*வசிஎ டுக்குமுன் பிறப்பதை மாற்றா*
*மதியில் நெஞ்சமே வருதிஎன் னுடனே*
*நிசிஎ டுக்கும்நல் சங்கவை ஈன்ற*
*நித்தி லக்குவை நெறிப்பட ஓங்கிச்*

*சசிள டுக்குநல் ஒற்றியூர்ச் செல்வத்*
*தந்தை யார்அடிச் சரண்புக லாமே (10)*

என்பவை இப்பதிகத்தில் மூன்று பாடல்கள். ஒவ்வொரு பாடலிலும் அடிகள் நெஞ்சை 'நெஞ்சமே!' என விளித்து 'தந்தையார் அடிச் சரண் புகலாமே' என்று தம்முடன் வந்து சரண்புகுமாறு கேட்பது நம்போலியர் அனைவரையும் அழைப்பதைப் போன்ற உணர்வைப் பெறுகின்றோம்.

21. **அருள் நாம விளக்கம்:** இதுவும் திருஒற்றியூர்ப் பதிகமே. எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப் பால் அமைந்த பத்துப் பாடல்களைக் கொண்டது. ஒவ்வொரு பாடலும் 'நமசிவ சண்முக சிவஓம்' என்னும் மந்திரத்தையும் 'ஓம் நமச்சிவாய' என்ற ஐந்தெழுத்து மந்திரதையும் உன்னுமாறு மனத்தை ஆற்றுப்படுத்தித் தம்முடன் ஒற்றியூர் வருமாறு அழைக்கின்றார் அடிகள்.

*வாங்கு வில்நுதல் மங்கையர் வழியால்*
*மயங்கி வஞ்சர்பால் வருந்தி நாள்தோறும்*
*ஏங்கு கின்றதில் என்பயன் கண்டாய்*
*எழில்கொள் ஒற்றியூர்க் கென்னுடன் போந்து*
*தேங்கு லாவுசெங் கரும்பினும் இனிதாய்த்*
*தித்தித் தன்பர்தம் சித்தத்துள் ஊறி*
*ஓங்கும் ஓம்சிவ சண்முக சிவஓம்*
*ஓம்சி வாயஎன் றுன்னுதி மன்னே (1)*

*நண்ணும் மங்கையர் புழுமலக் குழியில்*
*நாளும் வீழ்வுற்று நலிந்திடேல் நிதமாய்*
*எண்ணும் என்மொழி குருமொழி ஆக*
*எண்ணி ஒற்றியூர்க் கென்னுடன் போந்து*
*பண்ணும் இன்சுவை அமுதினும் இனிதாய்ப்*
*பத்தர் நாள்தொறும் சித்தமுள் ளூற*
*உண்ணும் ஒம்சிவ சண்முக சிவஓம்*
*ஓம்சி வாயஎன் றுன்னுதி மனனே. (7)*

ஒவ்வொரு பாடலிலும் 'ஒற்றியூர்க் கென்னுடன் போந்து... ஓம்சிவ சண்முக சிவஓம் ஓம்சிவாய என்று உன்னுதி மனமே' என்ற தொடர்கள் உயிர் போல் அமைந்திருப்பதைக் கண்டு மகிழலாம்.

24. **திருவருள் வழங்க விளக்கம்:** திருவொற்றியூர் பற்றிய இப்பதிகம் கட்டளைக் கலித்துறை யாப்பினால் அமைந்துள்ளது. ஒவ்வொரு பாடலிலும் அடிகள் தம் கடவுள் யார் என உறுதிப்படுத்துகின்றார்.

*தோடுடை யார்புலித் தோலுடை*
*யார்கடல் தூங்கும்ஒரு*
*மாடுடை யார்மழு மான்உடை*
*யார்பிர மன்தலையாம்*
*ஓடுடை யார்ஒற்றி யூர்உடை*
*யார்புகழ் ஓங்கியவெண்*
*காடுடை யார்நெற்றிக் கண்உடை*
*யார்எம் கடவுளரே (1)*

*ஏணப் பரிசெஞ் சடைமுத*
*லானஎல் லாம்மறைத்துச்*
*சேணப் பரிகள் நடத்திடு*
*கின்றநல் சேவகன்போல்*
*மாணப் பரிபவம் நீக்கிய*
*மாணிக்க வாசகர்க்காய்க்*
*காணப் பரிமிசை வந்தன*
*ரால்எம் கடவுளரே (7)*

என்பவை இரண்டு பாடல்கள். ஈண்டுக் காட்டிய இரண்டாம் பாடலில் மாணிக்கவாசகர் பற்றிய வரலாற்றுக் குறிப்பு இருப்பதுபோல் ஒவ்வொரு பாடலும் ஏதோ ஒரு வரலாற்றுக் குறுப்பைத் தாங்கி நின்று பாடலுக்குச் சுவையூட்டி நிற்கின்றது. இவற்றால் அடிகளாரின் சைவ இலக்கியப் புலமை புலனாகின்றது.

28. **நாள் அவத்து அலைசல்:** இப்பதிகத்தில் அடங்கிய பத்துப் பாடல்களும் எழுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்த யாப்பில் அமைந்தவை. ஒவ்வொரு பாடலும் யாக்கை நிலையாமையைக் குறிப்பிட்டு விரைவில் தமக்குத் திருவருள் பாலிக்குமாறு இறைவனை இறைஞ்சுகின்றார். இதுவும் ஒற்றியூர்த் தலம்பற்றிய பதிகமே.

*இன்றிருந் தவரை நாளைஇவ் வுலகில்*
*இருந்திடக் கண்டிலேம் ஆஆ*
*என்றிருந் தவத்தோர் அரற்றுகின் றனரால்*
*ஏழையேன் உண்டுடுத்து அவமே*
*சென்றிருந் துறங்கி விழிப்பதே அல்லால்*
*செய்வன செய்கிலேன் அந்தோ*
*மன்றிருந் தோங்கும் மணிச்சுடர் ஒளியே*
*வள்ளலே ஒற்றியூர் வாழ்வே (1)*

*நீரின்மேல் எழுதும் எழுத்தினும் விரைந்து*
*நிலைபடா உடம்பினை ஓம்பிப்*
*பாரின்மேல் அலையும் பாவியேன் தனக்குப்*
*பரிந்தருள் பாலியாய் என்னில்*
*காரின்மேல் வரல்போல் கடாமிசை வரும்அக்*
*காலன்வந் திடில்எது செய்வேன்*
*வாரின்மேல் வளரும் திருமுலை மலையாள்*
*மணாளனே ஒற்றியூர் வாழ்வே (3)*

என்பவை இப்பதிகத்தின் இரண்டு பாடல்கள். எல்லாப் பாடல்களும் 'ஒற்றியூர் வாழ்வே' என்று முடிகின்றன.

33. **ஆனந்தப் பதிகம்:** பதினொரு பாடல்கள் கொண்ட இப்பதிகம் அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பினால் இயன்றது. ஒற்றியூர் எம்பெருமான் தம்மைத் திருத்தலத்திற்கு வரச் செய்த திருவருளுக்குப் பேரானந்தம் அடைந்து தாம் என்ன கைம்மாறு செய்ய முடியும் என மனம் இரங்கிப் பேசுகிறார். இதில் மூன்று பாடல்களைக் காட்டுவேன்.

*சாதல் பிறத்தல் எனும்கடலில்*
*தாழ்ந்து கரைகா ணாதழுந்தி*
*ஈதல் இரக்கம் என்அளவும்*
*இல்லா தலையும் என்றனைநீ*
*ஓதல் அறிவித் துணர்வறிவித்*
*தொற்றி யூர்ச்சென் றுனைப்பாடக்*
*காதல் அறிவித் தாண்டதற்கோர்*
*கைம்மா றறியேன் கடையேனே (2)*

*பாவம் எனும்ஓர் பெருஞ்சரக்குப்*
*பையை எடுத்துப் பண்பறியாக்*
*கோவம் எனும்ஓர் குரங்காட்டும்*
*கொடியோன் தன்னைப் பொருட்படுத்தித்*
*தேவர் அமுதே சிவனேநின்*
*திருத்தாள் ஏத்த ஒற்றிஎனும்*
*காவல் நகரம் வரச்செய்தாய்*
*கைம்மா றறியேன் கடையேனே (7)*

*புண்ணும் வழும்பும் புலால்நீரும்*
*புழுவும் பொதிந்த பொதிபோல*
*நண்ணும் கொடிய நடைமனையை*
*நான்என் றுளறும் நாயேனை*
*உண்ணும் அமுதே நீஅமர்ந்த*
*ஒற்றி யூர்க்கண் டென்மனமும்*
*கண்ணும் களிக்கச் செய்ததற்கோர்*
*கைம்மா றறியேன் கடையேனே (10)*

எல்லாப் பாடல்களும் 'கைம்மாறு அறியேன் கடையேனே' என்று முடிகின்றன.

37. நற்றுணை விளக்கம்: பத்துப் பாடல்கள் கொண்ட இப்பதிகம் நாம் பெறும் துணை நமச்சிவாயம் காண் என்று விளக்குகின்றது. பாடல்கள் யாவும் எண் சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தயாப்பால் இயன்

றவை. நெஞ்சை நோக்கி அடிகள் அறிவுறுத்துவதாக அமைகின்றது பதிகம்.

*எஞ்ச வேண்டிய ஐம்புலப் பகையால்*
*இடர்கொண் டோய்ந்தனை என்னினும் இனிநீ*
*அஞ்ச வேண்டிய தென்னைஎன் நெஞ்சே*
*அஞ்சல் அஞ்சல்காண் அருமறை நான்கும்*
*விஞ்ச வேண்டியும் மாலவன் மலரோன்*
*விளங்க வேண்டியும் மிடற்றின்கண் அமுதா*
*நஞ்சை வேண்டிய நாதன்தன் நாமம்*
*நமச்சி வாயகாண் நாம்பெறும் துணையே (1)*

*மாலும் துஞ்சுவான் மலரவன் இறப்பான்*
*மற்றை வானவர் முற்றிலும் அழிவார்*
*ஏலும் நற்றுணை யார்நமக் கென்றே*
*எண்ணி நிற்றியோ ஏழைநீ நெஞ்சே*
*கோலும் ஆயிரம் கோடிஅண் டங்கள்*
*குலைய நீக்கியும் ஆக்கியும் அளிக்கும்*
*நாலு மாமறைப் பரம்பொருள் நாமம்*
*நமச்சி வாயகாண் நாம்பெறும் துணையே (7)*

என்பவை இப்பதிகத்தின் இரண்டு பாடல்கள். 'நமச்சி வாயவே நாம் பெறும் துணையே' என்று பாடல்கள் யாவும் முடிவுறுகின்றன. 'நாம்' என்பது உளப்பாட்டுத் தன்மை. நெஞ்சை தம்முடன் இணைத்துக் கொள் வதைக் காட்டுவது. இப்பதிகமும் திருவொற்றியூர் இறை வனை நாடுவதாக அமைந்தது.

40. அவலத் தழுங்கல்: திருவொற்றியூர் எம்பெரு மான் சந்நிதிமுன் அடிகள் தம் அவல நிலையை நினைந்து நினைந்து அழுங்குவதைக் காட்டுவது. பாடல் கள் யாவும் எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பில் அமைந்தவை.

*ஊதி யம்பெறா ஓதியனேன் மதிபோய்*
*உழலும் பாவியேன் உண்மைஒன் றறியேன்*
*வாதி யம்புறும் வஞ்சகர் உடனே*
*வாய்இ ழுக்குற உண்மைகள் பேசி*
*ஆதி எம்பெரு மான்உனை மறந்தேன்*
*அன்பி லாதஎன் வன்பினை நினைக்கில்*
*நீதி யம்பிய நஞ்சமும் கலங்கும்*
*நிகழும் ஒற்றியூர்த் தியாகமா மணியே (1)*

*காயம் என்பதா காயம்என் றறியேன்*
*கலங்கி னேன்ஒரு கலைகணும் இல்லேன்*
*சேய நன்னெறி அணித்தெனக் காட்டும்*
*தெய்வ நின்னருள் திறம்சிறி தடையேன்*
*தூய நின்அடி யவருடன் கூடித்*
*தொழும்பு கொள்வதே சுகம்எனத் துணியேன்*
*தீய னேன்தனை ஆள்வதெவ் வாறோ*
*திகழும் ஒற்றியூர்த் தியாகமா மணியே (8)*

என்பவை இப்பதிகத்தின் இரண்டு பாடல்கள். எல்லாப் பாடல்களும் 'திகழும் ஒற்றியூர்த் தியாக மாமணியே' என்று இறைவனை விளித்து தம் அவல நிலையைப் புலப்படுத்திப் புலம்புவன.

45. **வழிமொழி விண்ணப்பம்:** இப்பதிகம் திருவொற்றியூர்த் தியாக மணியையும் தில்லை அம்பல வனையும் ஒருசேர விளித்துத் தம்மைத் தவிர்க்காது ஆட்கொள்ளு மாறு இறைஞ்சுவதாக அமைந்தது. பாடல்கள் யாவும் எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பில் அமைந்தவை. கழிவிரக்கத்தைக் காட்டுபவை. இதில் மூன்று பாடல்களைக் காட்டுவேன்.

*நீல னேன்கொடும் பொய்யல துரையா*
*நீசன் என்பதென் நெஞ்சறிந் ததுகாண்*

*சால ஆயினும் நின்கழல் அடிக்கே*
*சரண்பு குந்திடில் தள்ளுதல் வழக்கோ*
*ஆலம் உண்டநின் தன்மைமா றுவதேல்*
*அகில கோடியும் அழிந்திடும் அன்றே*
*சீல மேவிய ஒற்றியம் பரனே*
*தில்லை அம்பலம் திகழ்ஒளி விளக்கே (1)*

*நல்லன் அல்லனான் ஆயினும் சிறியேன்*
*நான்அ றிந்ததோ நாடறிந் ததுகாண்*
*சொல்ல வாயிலை ஆயினும் எனைநீ*
*தொழும்பு கொண்டிடில் துய்யனும் ஆவேன்*
*வல்ல உன்கருத் தறிந்திலேன் மனமே*
*மயங்கு நின்றதியான் வாடுகின் றனன்காண்*
*செல்லல் நீக்கிய ஒற்றியூர் அரசே*
*தில்லை அம்பலம் திகழ்ஒளி விளக்கே (3)*

*உய்ய ஒன்றிலேன் பொய்யன்என் பதனை*
*ஒளித்தி லேன்இந்த ஒதியனுக் கருள்நீ*
*செய்ய வேண்டுவ தின்றெனில் சிவனே*
*செய்வ தென்னைநான் திகைப்பதை அன்றி*
*மையல் நெஞ்சினேன் ஆயினும் உன்னை*
*மறந்தி லேன்இது வஞ்சமும் அன்றே*
*செய்ய மேனிஎம் ஒற்றியூர் வாழ்வே*
*திருச்சிற் றம்பலம் திகழ்ஒளி விளக்கே (8)*

எல்லாப் பாடல்களும் ஒருவாறு 'ஒற்றியூர் அரசே, தில்லை அம்பலம் திகழ்ஒளி விளக்கே' என்று முடிவுறுவனவாக அமைந்தவை.

இப்பதிக விண்ணப்பத்தை தொடர்ந்து 'சிறுமை விண்ணப்பம் (46), ஆற்றா விண்ணப்பம் (47), இரங்கல் விண்ணப்பம் (49), ஈதல் விண்ணப்பம் (52), பொருள் விண்ணப்பம் (53), திருவண்ண விண்ணப்பம் (54), நாடக விண்ணப்பம் (55), கொடி விண்ணப்

பம் (56) மருட்கை விண்ணப்பம் (57), கொடைமட விண்ணப்பம் (58) என்று ஒரே விண்ணப்பங்கள் மயந்தான் ஒற்றியூரான்மீது.

51. சிவானந்தப் பத்து: பத்துப் பாடல்கள் அமைந்த இப்பதிகம் திருவொற்றியூர்த் தேனையும் தில்லை ஓங் கிய சிவானந்தத் தேனையும் விளித்து முறையிடுவதாக அமைந்தது. பாடல்கள் யாவும் எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பில் அமைந்தவை.

*இச்சை உண்டெனக் குன்திரு மலர்த்தாள்*
*எய்தும் வண்ணம்இங் கென்செய வல்லேன்*
*கொச்சை நெஞ்சம்என் குறிப்பின்றில் லாது*
*குதிப்பில் நின்றது மதிப்பின்இவ் வுலகில்*
*பிச்சை உண்டெனில் பிச்சரில் சீறும்*
*பேய ருண்மனை நாயென உழைத்தேன்*
*செச்சை மேனிஎம் திருவொற்றி அரசே*
*தில்லை ஓங்கிய சிவானந்தத் தேனே (1)*

*பேதை நெஞ்சினேன் செய்பிழை எல்லாம்*
*பேசி னால்பெரும் பிணக்கினுக் கிடமாம்*
*தாதை நீஅவை எண்ணலை எளியேன்*
*தனக்கு நின்திருத் தண்அளி புரிவாய்*
*கோதை நீக்கிய முனிவர்கள் காணக்*
*கூத்து கந்தருள் குணப்பெருங் குன்றே*
*தீதை நீக்கிய ஒற்றிஎம் பெருமான்*
*தில்லை ஓங்கிய சிவானந்தத் தேனே (6)*

*எளிய னேன்பிழை இயற்றிய எல்லாம்*
*எண்ணி னுட்படா வேனும்மற் றவையை*
*அளிய நல்லருள் ஈந்திடும் பொருட்டால்*
*ஆய்தல் நன்றல ஆதலின் ஈண்டே*
*களிய நெஞ்சமாம் கருங்கலைக் கரைத்துக்*
*கருணை ஈகுதல் கடன்உனக் கையா*
*தெளிய ஓங்கிய ஒற்றிஎன் அமுதே*
*தில்லை ஓங்கிய சிவானந்தத் தேனே (9)*

என்பவை இவற்றின் மூன்று பாடல்கள். பாடல்களில் ஆழங்கால்பட்டு அநுபவிக்கும்போது உண்மையில் சிவானந்தத் தேனின் சுவையை உணர முடிகின்றது.

52. காதல் விண்ணப்பம்: அகத்துறை போல் காட்சி அளிக்கும் இப்பதிகம் அகத்துறையின்பாற் பட்ட தன்று. ஈண்டுக் காதல் 'பக்தி' என்னும் பொருளில் அமைந்துள்ளது. இது திருவொற்றியூர் எம்பெருமானை நோக்கி விண்ணப்பிப்பது. எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பில் நடைபெறுவது. அடிகளின் பக்திப் பெருக்கு எம்பெருமான் மீது கரை புரண்டோடு கின்றது இப்பதிகத்தில்.

*வஞ்சக வினைக்கோர் கொள்கலம் அனைய*
*மனத்தினேன் அனைத்தினும் கொடியேன்*
*தஞ்சம்என் றடைந்தே நின்திருக் கோயில்*
*சந்நிதி முன்னர்நிற் கின்றேன்*
*எஞ்சலில் அடங்காப் பாவிஎன் றெனைநீ*
*இகழ்ந்திடில் என்செய்வேன் சிவனே*
*கஞ்சன்மால் புகழும் ஒற்றியங் கரும்பே*
*கதிதரும் கருணையங் கடலே (1)*

*ஞானம்என் பதிலோர் அணுத்துணை யேனும்*
*நண்ணிலேன் புண்ணியம் அறியேன்*
*ஈனம்என் பதனுக் கிறைஎனல் ஆனேன்*
*எவ்வணம் உய்குவ தறியேன்*
*வானநா டவரும் பெறற்கரு நினது*
*மலரடித் தொழும்புசெய் வேனோ*
*கானவேட் டுருவாம் ஒருவனே ஒற்றிக்*
*கடவுளே கருணையங் கடலே (6)*

*மறைகளும் இன்னும் தலைத்தலை மயங்க*
*மறைந்துல குயிர்தொறும் ஒளித்த*

*இறைவநின் திருத்தாட் கன்பிலாக் கொடியன்*
*என்னினும் ஏழையேன் தனக்கு*
*நிறைதரும் நினது திருவருள் அளிக்க*
*நினைத்தலே நின்கடன் கண்டாய்*
*கறைமணி மிடற்றுத் தெய்வமே ஒற்றிக்*
*காவல்கொள் கருணையங் கடனே (10)*

இப்பதிகப் பாடல்கள் அனைத்தும் 'ஒற்றிக் கடவுளே கருணையங் கடலே' என முடிகின்றன.

59. **திருக்காட்சிக்கிரங்கல்:** திருவொற்றியூர் இறைவனின் திருவுருலாக் காட்சியைக் காணத் துடிக்கின்றார் அடிகள். தரவுக் கொச்சகக் கலிப்பா யாப்பால் அமைந்த பத்துப் பாடல்களில் இதனைக் காணலாம்.

*மண்ணேயும் வாழ்க்கையிடை*
*மாழாந்து வன்பிணியால்*
*புண்ணேயும் நெஞ்சம்*
*புழுங்குகின்ற பொய்யவனேன்*
*பண்ணேயும் இன்பப்*
*பரஞ்சுடரே என்இரண்டு*
*கண்ணேஉன் பொன்முகத்தைக்*
*காணக் கிடைத்திலனே (1)*

*நண்ணும் வினையால்*
*நலிகின்ற நாயடியேன்*
*எண்ணும் சுகாதீத*
*இன்பமே அன்புடையோர்*
*கண்ணும் கருத்தும்*
*களிக்கவரும் கற்பகமே*
*பெண்ஒருபால் வாழும்உருப்*
*பெற்றிதனைக் கண்டிலனே (6)*

*நீதியிலார் வாயிலிடை*
*நின்றலைந்த நெஞ்சகனேன்*
*சோதிஎலாம் சூழ்ந்தபரஞ்*
*சோதியே நெஞ்சடைமேல்*
*பாதிநிலா ஓங்கும்*
*பரமேநீ ஒற்றிநகர்*
*வீதிஉலா வந்தஎழில்*
*மெங்குளிரக் கண்டிலனே (10)*

என்பவை இப்பதிகத்தின் மூன்று பாடல்கள். பாடல்களில் ஆழங்கால்பட்டு அநுபவிக்கும்போது நம்மிடமும் அத்துடிப்பு எழுவது போன்ற உணர்வு ஏற்படுவதை உணர்கின்றோம்.

60. **திருஅருட்கிரங்கல்:** திருவொற்றியூர் அப்பனின் திருவருள் தம்மீது பொழிய வேண்டும் என்று இப்பதிகத்தால் வேண்டுகின்றார். கொச்சகக் கலிப்பா யாப்பால் அமைந்த பத்துப் பாடல்களில் இந்த ஏக்கத்தைக் காண்கின்றோம்.

*ஒப்பாரும் இல்லாத உத்தமனே ஒற்றியில்என்*
*அப்பாஉன் பொன்னடிக்கே அன்பிலேன் ஆனாலும்*
*தப்பா தகமலியச் சஞ்சலத்தால் ஏங்குகின்ற*
*இப்பா தகத்தேற் கிரங்கினால் ஆகாதோ (1)*

*பற்றும் செழுந்தமிழால் பாடுகின்றார் செய்தபெருங்*
*குற்றம் குணமாகக் கொள்ளும் குணக்கடலே*
*மற்றங்கும் எண்தோள் மலையே மரகதமே*
*பெற்றிங் கடியேன் பிணிகெடுத்தால் ஆகாதோ (3)*

*முத்திக்கு வித்தே முழுமணியே முத்தர்உளம்*
*தித்திக்கும் தேனே சிவமே செழுஞ்சுடரே*
*சத்திக்கும் நாதத் தலங்கடந்த தத்துவனே*
*எத்திக்கும் இல்லேன் இளைப்பொழிந்தால் ஆகாதோ (7)*

*கண்ணுள் மணிபோல் கருதுகின்ற நல்லோரை*
*எண்ணும் கணமும்விடுத் தேகாத இன்னமுதே*
*உண்ணும் உணவுக்கும் உடைக்கும்முயன் றோடுகின்ற*
*மண்ணுலகத் தென்றன் மயக்கறுத்தால் ஆகாதோ (10)*

என்பன நான்கு பாடல்கள். இப்பாடல்களில் அடிகளாரின் இந்த ஏக்கத்தைக் காணலாம். பாடல்களைப் படித்து அவற்றில் ஆழங்கால் படும்போது நம்மிடமும் அந்த ஏக்கம் எழுவதையும் உணர முடிகின்றது.

61. **பழமொழி மேல் வைத்துப் பரிவு கூர்தல்:** திருஒற்றியூர்ப் பெருமான்மீது பாடிய பத்துப் பாடல்களைக் கொண்டது இப்பதிகம். பாடல்கள் யாவும் எண்சீர்க் கழிநெடிலாசிரிய விருத்தத்தாலானவை. ஒவ்வொரு பாடலும் ஒரு பழமொழியைத் தன்னகத்தே கொண்டது.[2]

*முதல்இ லாமல்ஊ தியம்பெற விழையும்*
*மூடன் என்னநின் மொய்கழல் பதமேத்*
*துதல்இ லாதுநின் அருள்பெற விழைந்தேன்*
*துட்ட னேன்அருட் சுகம்பெறு வேனோ*
*நுதலில் ஆர்அழல் கண்ணுடை யவனே*
*நோக்கும் அன்பர்கள் தேக்கும்இன் அமுதே*
*சிதல்இ லாவளம் ஓங்கிஎந் நாளும்*
*திகழும் ஒற்றியூர்த் தியாகநா யகனே (7)*

என்பது ஏழாம் பாடல். முதல் அடியில் 'முதல் இலார்க்கு ஊதியம் இல்லை' என்ற பழமொழி இதில் அமைந்திருத்தல் காணலாம்.

*நீர்சொ ரிந்தொளி விளக்கெரிப் பவன்போல்*
*நித்தம் நின்னிடை நேசம்வைத் திடுவான்*

2. திருமங்கையாழ்வாரின் 'பழமொழியால் பணிந்துரைத்த பாட்டு' (பெரி. திரு.10.9) இப்பதிகத்துடன் ஒப்பிடல் தகும்.

பார்சொ ரிந்திடும் பவநெறி முயன்றேன்
பாவி யேன்தனைக் கூவிநின் றாள்வாய்
கார்சொ ரிந்தெனக் கருணைஈந் தன்பர்
களித்த நெஞ்சிடை ஒளித்திருப் பவனே
தேர்சொ ரிந்தமா மணித்திரு வீதித்
திகழும் ஒற்றியூர்த் தியாகநா யகனே (10)

என்பது பத்தாம் பாடல். 'நீர் சொரிந்து விளக்கு எரிக்க முடியுமா?' என்ற பழமொழி இதில் அமைந்திருப்பதைக் காணலாம்.

66. தனிமைக்கிரங்கல்: இதுவும் திரு ஒற்றியூர் இறைவனை நோக்கி வேண்டுவதாக அமைந்த பத்துப் பாடல்களைக் கொண்டது. பாடல்கள் எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பில் அமைந்தவை.

*இமைக்கும் அவ்வள வேனும்நெஞ் சொடுங்கி*
*இருக்கக் கண்டிலேன் இழிவுகொள் மலத்தின்*
*சுமைக்கு நொந்துநொந் தையவோ நாளும்*
*துயர்கின் றேன்அவர் கின்றஎன் துயரைக்*
*குமைக்கும் வண்ணம்நின் திருவருள் இன்னும்*
*கூடப் பெற்றிலேன் கூறுவ தென்னே*
*உமைக்கு நல்வரம் உதவிய தேவே*
*ஒற்றி ஓங்கிய உத்தமப் பொருளே (3)*

*முன்னை நான்செய்த வல்வினை இரண்டின்*
*முடிவு தேர்ந்திலன் வடிவெடுத் துலகில்*
*என்னை நான்கண்ட தந்தநாள் தொடங்கி*
*இந்த நாள்மட்டும் இருள்என்ப தல்லால்*
*பின்னை யாதொன்றும் பெற்றிலேன் இதனைப்*
*பேச என்னுளம் கூசுகின் றதுகாண்*
*உன்னை நம்பினேன் நின்றுகிப் புணரேன்*
*ஒற்றி ஓங்கிய உத்தமப் பொருளே (7)*

என்பவை இப்பதிகத்தின் இரண்டு பாடல்கள். பாடல்கள்

யாவும் 'ஒற்றி ஓங்கிய உத்தமப் பொருளே' என்று முடிவுபெறுகின்றன. இறைவனுடன் தம்மைச் சேர்த்துக் கொள்ளுமாறு வேண்டுகின்றார். இப்பதிகத்தை அடுத்து 'இரங்கல்' தலைப்புகள் பல அமைகின்றன. கருணை பெறாதிரங்கல் (67), அர்ப்பித்திரங்கல் (68), கழிபகற்கிரங்கல் (69) என்பன காண்க.

70. **தரிசனப் பதிகம்:** இது 'கோயில்' என்று சைவர்களால் வழங்கப்பெறும் சிதம்பரத்தைப்பற்றியது. பாடல்களனைத்தும் அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பில் அமைந்தவை. 'சிதம்பரம் போகாமல் இருப்பேனோ' என்று நந்தனார் ஏங்கினதைப்போல, அடிகள் அம்பலவாணனை ஒருசமயமேனும் காணவேண்டும் என்று துடிக்கின்றார்.

*தாயிற் பெரிய கருணையினார்*
*தலைமா லையினார் தாழ்சடையார்*
*வாயிற் கினிய புகழுடைய*
*வள்ளல் அவர்தந் திருஅழகைக்*
*கோயிற் கருகே சென்றுமனம்*
*குளிரக் கண்டேன் பிரிவுற்றேன்*
*ஈயில் சிறியேன் அவர்அழகை*
*இன்னும் ஒருகால் காண்பேனோ (3)*

*அருளே வடிவாய் அம்பலத்தே*
*ஆடும் பெருமாள் அடிகள்தமைத்*
*தெருளே வடிவாம் அடியவர்போல்*
*சிறியேன் கண்டேன் சீர்உற்றேன்*
*மருளே வடிவேன் ஆதலினால்*
*மறந்தே பிரிந்தே மதிகெட்டேன்*
*இருளோர் மனத்தேன் அவர்தமைநான்*
*இன்னும் ஒருகால் காண்பேனோ (8)*

என்பன இப்பதிகத்தின் இரண்டு பாடல்கள். பாடல்கள்

யாவும் 'இன்னும் ஒருகால் காண்பேனோ' என்னும் ஏக்கத் தொடரால் இறுகின்றன.

75. வடிவுடை **மாணிக்கமாலை:** திருஒற்றியூர் பெருமான் நாயகி வடிவாம்பிகை என்னும் திருப்பெயரினள். அப்பெருமாட்டியின்மீது அமைந்தது இப்பாமாலை. காப்புடன் 101 பாடல்களைக் கொண்டது. யாவும் கட்டளைக் கலித்துறை யாப்பில் அமைந்தவை. காப்பு பிராட்டிமீது பாட பெருமானின் திருவருள் வேண்டுவதாக அமைந்தது.

*சீர்கொண்ட ஒற்றிப் பதியுடை*
*யானிடம் சேர்ந்தமணி*
*வார்கொண்ட கொங்கை வடிவாம்*
*பிகைதன் மலரடிக்குத்*
*தார்கொண்ட செந்தமிழ்ப் பாமாலை*
*சாத்தத் தமியனுக்கே*
*ஏர்கொண்ட நல்லருள் ஈயும்*
*குணாலய ஏரம்பனே.*

என்பது காப்புப் பாடல்.

பாமாலையின் சில பாமலர்களைக் காண்போம்.

*மானேர் விழிமலை மானேஎம்*
*மானிடம் வாழ்மயிலே*
*கானேர் அனகப் பசுங்குயி*
*லேஅருட் கட்கரும்பே*
*தேனே திருவொற்றி மாநகர்*
*வாழும் சிவசத்தியே*
*வானே கருணை வடிவே*
*வடிவுடை மாணிக்கமே (3)*

*உன்னேர் அருள்தெய்வம் காணேன்*
*மனத்தும் உரைக்கப்படாப்*

பொன்னேஅப் பொன்னற் புத்ஒளி
 யேமலர்ப் பொன்வணங்கும்
அன்னே எம்ஆருயிர்க் கோர்உயி
 ரேஒற்றி யம்பதிவாழ்
மன்னே ரிடம்வளர் மின்னே
 வடிவுடை மாணிக்கமே (6)

பின்னீன்ற பிள்ளையின் மேலார்வம்
 தாய்க்கெனப் பேசுவர்நீ
முன்னீன்ற பிள்ளையின் மேலாசை
 யுள்ளவா மொய்யசுரர்
கொன்னீன்ற போர்க்கிளம் பிள்ளையை
 ஏவக் கொடுத்ததென்னே
மன்னீன்ற ஒற்றி மயிலே
 வடிவுடை மாணிக்கமே (15)

நீயே எனது பிழைகுறிப்
 பாயெனில் நின்னடிமைப்
பேயேன் செயும்வண்ணம் எவ்வண்ண
 மோஎனைப் பெற்றளிக்கும்
தாயே கருணைத் தடங்கட
 லேஒற்றிச் சார்குமுத
வாயேர் சவுந்தர மானே
 வடிவுடை மாணிக்கமே (26)

அடியார் தொழுநின் அடிப்பொடி
 தான்சற் றணியப்பெற்ற
முடியால் அடிக்குப் பெருமைபெற்
 றார்அம் முகுந்தன்சந்தக்
கடியார் மலர்அயன் முன்னோர்தென்
 ஒற்றிக் கடவுட்செம்பால்
வடியாக் கருணைக் கடலே
 வடிவுடை மாணிக்கமே (44)

*கணமொன்றி லேனும்என் உள்ளக்*
*கவலைக் கடல்கடந்தே*
*குணமொன்றி லேன்எது செய்கேன்நின்*
*உள்ளக் குறிப்பறியேன்*
*பணமொன்று பாம்பணி ஒற்றிஎம்*
*மாணிடப் பாலில்தெய்வ*
*மணமொன்று பச்சைக் கொடியே*
*வடிவுடை மாணிக்கமே (61)*

*பத்தர்தம் உள்ளத் திருக்கோயில்*
*மேவும் பரம்பரையே*
*சுத்தமெய்ஞ் ஞான ஒளிப்பிழம்*
*பேசிற் சுகாநந்தமே*
*நித்தநின் சீரசொல எற்கருள்*
*வாய்ஒற்றி நின்மலர்உன்*
*மத்தர்தம் வாம் மயிலே*
*வடிவுடை மாணிக்கமே (83)*

*வாழிநின் சேவடி போற்றிநின்*
*பூம்பத வாரிசங்கள்*
*வாழிநின் தாண்மலர் போற்றிநின்*
*தண்ணளி வாழிநின்சீர்*
*வாழிஎன் உள்ளத்தில் நீயுநின்*
*ஒற்றி மகிழ்தரும்நீ*
*வாழிஎன் ஆருயிர் வாழ்வே*
*வடிவுடை மாணிக்கமே (101)*

பாடல்கள் யாவும் குழைவுடையனவாய் நெஞ்சு நெகிழ்வுடையனவாய் மகன் ஒருவன் தன் தாயிடம் முறையிடும் பான்மையனவாய் பயில்தொறும் பாடிய வாய் தேனூறும் பெற்றியனவாய்த் திகழ்வதைக் கண்டு மகிழலாம். பாடல்கள் அனைத்தையும் பயின்று துய்க்க வேண்டும் என்ற ஆர்வத்தை எழுப்புவதையும் அறியலாம்.

77. திருவுலாப் பேறு: ஒற்றியூர் எம்பெருமான் திருவுலா மேற்கொள்ளும் போது அதனைக் கண்ணுற்ற தலைவியொருத்தி[3] தன் தோழியிடம் தன் அநுபவத்தை எடுத்துரைப்பதாக அமைந்துள்ளது இப்பதிகம். அறு சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாபபில் அமைந்த பத்துப் பாடல்களைக் கொண்டது.

*சீரார் வளஞ்சேர் ஒற்றிநகர்த்*
*தியாகப் பெருமான் பவனிதனை*
*ஊரார் உடன்சென் றெனதுநெஞ்சம்*
*உவகை ஓங்கப் பார்த்தனன்காண்*
*வாரார் முலைகண் மலைகளென*
*வளர்ந்த வளைகள் தளர்ந்தனவால்*
*ஏரார் குழலாய் என்னடிநான்*
*இச்சை மயமாய் நின்றதுவே (1)*

*சேயை அருளும் திருஒற்றித்*
*தியாகப் பெருமான் வீதிதனில்*
*தூய பவனி வரக்கண்டேன்*
*சூழ்ந்த மகளிர் தமைக்காணேன்*
*தாயை மறந்தேன் அன்றியும்என்*
*தனையும் மறந்தேன் தலைப்பட்டேன்*
*ஏயென் தோழி என்னடிநான்*
*இச்சை மயமாய் நின்றதுவே (6)*

*தேடார்க் கரியான் ஒற்றிநகர்த்*
*தியாகப் பெருமான் பவனிவரத்*
*தோடார் பணைத்தோள் பெண்களொடும்*
*சூழ்ந்து மகிழ்ந்து கண்டதன்றி*
*வாடாக் காதல் கொண்டறியேன்*
*வளையும் துகிலும் சோர்ந்ததுடன்*

3. அடிகளே தம்மைத் தலைவியாகப் பாவித்துக் கொண்டு பேசுவதாகக் கருத லாம். அகத்துறைப் பதிகம் இது.

*ஏடார் கோதை என்னடிநான்*
*இச்சை மயமாய் நின்றதுவே (9)*

அகப்பொருள் துறையில் அமைந்து ஆழ்வார் களின் '**மகள் பாசுரம்**' போல் அடிகளாரின் மகள் நிலைப் பாசுரமும் நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகின் றது. நாமே மகளாய் விடும் உணர்வைப் பெறுகின் றோம். நம்மையும் மறந்த நிலை எய்துகின்றோம்.

78. **நாரையும் கிளியும் நாட்டுறு தூது:** ஒற்றியூர் இறைவன் பவனி வரும்போது அவனைக் கண்டு அவன்மீது மையலுற்ற தலைவி நாரையையும் கிளியை யும் அவன்பால் தூதனுப்புவதாக அமைந்தது. அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பில் அமைந்த பத் துப் பாடல்களைக் கொண்டது இப்பதிகம்.

*கண்ணன் நெடுநாள் மண்ணிடத்தும்*
*காணக் கிடையாக் கழலுடையார்*
*தண்ணும் ஒற்றி நகரார்க்கு*
***நாரார்** சென்று நவிற்றாயோ*
*அண்ணல் உமது பவனிகண்ட*
*அன்று முதலாய் இன்றளவும்*
*உண்ணும் உணவோடு உறக்கமுநீத்த*
*துற்றாள் என்றிவ் வொருமொழியே (1)*

*மாய மொழியார்க் கறிவரியார்*
*வண்கை உடையார் மறைமணக்கும்*
*தூய மொழியார் ஒற்றியிற்போய்ச்*
***சுகங்காள்** நின்று சொல்லீரோ*
*நேய மொழியாள் பந்தாடாள்*
*நில்லாள் வாச நீராடாள்*
*ஏய மொழியாள் பாலனமும்*
*ஏலாள் உம்மை எண்ணிஎன்றே (4)*

*(சுகங்கள் - கிளிகள்)*

*ஒல்லார் புரமூன் றெரிசெய்தார்*
*ஒற்றி அமர்ந்தார் எல்லார்க்கும்*
*நல்லார் வல்லார் அவர்முன்போய்*
***நாராய்** இன்று நவிற்றுதியே*
*அல்லார் குழலாள் கண்ணீராம்*
*ஆற்றில் அலைந்தாள் அணங்கனையார்*
*பல்லார் சூழ்ந்து பழிதூற்றப்*
*படுத்தாள் விடுத்தாள் பாயல்என்றே (5)*

*வேலை விடத்தை மிடற்றணிந்த*
*வெண்ணீற் றழகர் விண்ணளவும்*
*சோலை மருவும் ஒற்றியிற்போய்ச்*
***சுகங்காள்** அவர்முன் சொல்லீரோ*
*மாலை மனத்தாள் கற்பகப்பூ*
*மாலை தரினும் வாங்குகிலாள்*
*காலை அறியாள் பகல்அறியாள்*
*கங்குல் அறியாள் கனிந்தென்றே (8)*

ஆழ்வார் பாசுரங்களில் அகத்துறையிலமைந்த தூது பற்றிய பாசுரங்கள் மிகுபுகழ் பெற்றவை. தலைவியின் காதலைப் பளிங்குபோல் காட்டுபவை. அங்ஙனமே அடிகளாரின் தூதுப் பாடல்களும் நம் உள்ளத்தை உருக்குகின்றன. நம்மையும் தலைவி நிலைக்குத் தள்ளுகின்றன.

80. **திருவுலாவியப்பு:** திருஒற்றியூர் பெருமான் உலாவைக் கண்டு களித்த நங்கையின் மனம் பரிபக்குவமடைந்து பெருமான்பால் சென்று விட்டதாக வியக்கும் நிலையை விரித்துரைப்பது இப்பதிகம். பாடல்கள் யாவும் அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பில் அமைந்தவை. படிப்போரையும் வியக்கச் செய்து அவர்தம் உள்ளத்தை உருக்குபவை.

*வெள்ளச் சடையார் விடையார்செவ்*
*வேலார் நூலார் மேலார்தம்*
*உள்ளத் துறைவார் நிறைவார்நல்*
*ஒற்றித் தியாகப் பெருமானார்*
*வள்ளற் குணத்தார் திருப்பவனி*
*வந்தார் என்றார் அம்மொழியை*
*விள்ளற் குள்ளே மனம்என்னை*
*விட்டங் கவர்முன் சென்றதுவே (1)*

*காண இனியார் என்இரண்டு*
*கண்கள் அனையார் கடல்விடத்தை*
*ஊணின் நுகர்ந்தார் உயர்ந்தார்நல்*
*ஒற்றித் தியாகப் பெருமானார்*
*மாண வீதி வருகின்றார்*
*என்றார் காண வருமுன்நான்*
*நாண எனைவிட் டென்மனந்தான்*
*நயந்தங் கவர்முன் சென்றதுவே. (4)*

*கண்ணார் நுதலார் மணிகண்டர்*
*கனக வரையாங் கனசிலையார்*
*பொண்ணார் பாகர் தியாகர்எனப்*
*பேசும் அருமைப் பெருமானார்*
*நண்ணார் பொழில்சூழ் ஒற்றிதனில்*
*சார்ந்தார் பவனி என்றனர்நான்*
*நண்ணா முன்னம் என்மனந்தான்*
*நாடி அவர்முன் சென்றதுவே (8)*

வியப்புணர்ச்சி ததும்பி நிற்கும் பாடல்கள் இவை; பாடல்களில் ஆழங்கால்பட்டு அநுபவிக்கும்போது நாமும் தலைவி நிலையை எய்தி விடுகின்றோம்.

84. **திருவுலாத்திறம்:** திருஒற்றியூர் பெருமான் உலாக் காட்சியைக் கண்ட தலைவி தன் உள்ளத்தை அதில் பறிகொடுத்து விட்டதால் உறக்கம் கொள்ள

முடியாத நிலையை விரித்துரைப்பது இப்பதிகம். பாடல்கள் அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தயாப்பில் அமைந்தவை. மூன்று பாடல்களைக் காட்டுவேன். (பத்துப் பாடல்கள் கொண்டவை இப்பதிகம்.)

*தேனார் கமலத் தடஞ்சூழும்*
*திருவாழ் ஒற்றித் தியாகர்அவர்*
*வானார் அமரர் முனிவர்தொழ*
*மண்ணோர் வணங்க வரும்பவனி*
*தானார் வங்கொண் டகமலரத்*
*தாழ்ந்து சூழ்ந்து கண்டலது*
*கானார் அலங்கல் பெண்ணேநான்*
*கண்கள் உறக்கம் கொள்ளேனே (1)*

*செல்வந் துறளும் பொழில்ஒற்றித்*
*தெய்வத் தலங்கொள் தியாகர்அவர்*
*வில்வந் திகழும் செஞ்சடைமின்*
*விழுங்கி விளங்க வரும்பவனி*
*சொல்வந் தோங்கக் கண்டுநின்று*
*தொழுது துதித்த பின்அலது*
*அல்வந் தளகப் பெண்ணேநான்*
*அவிழ்ந்த குழலும் முடியேனே (4)*

*சிந்தைக் கினியார் ஒற்றிநகர்*
*திகழும் செல்வத் தியாகர்அவர்*
*சந்தத் தடந்தோள் கண்டவர்கள்*
*தம்மை விழுங்க வரும்பவனி*
*முந்தப் புகுந்து புளகமுடன்*
*மூடிக் குளிரக் கண்டலது*
*கந்தக் குழல்வாய்ப் பெண்ணேநான்*
*கண்ணீர் ஒழியக் காணேனே (7)*

பாடல்கள் யாவும் பவனித் திறனை பாங்குடன் புலப்படுத்துகின்றன. பாடல்களைப் படித்து அநுபவிக்கும்

நாமும் தலைவியின் நிலையை எய்துகின்றோம். இங்குத் தலைவி என்பது தலைவி நிலையை அடைந்த அடிகளே.

85. வியப்பு மொழி: அடிகள் நற்றாய் நிலையில் தன் மகள் இறைவனது திருவருள் வாய்க்கப் பெற்றதனை வியந்து பேசுவதாக அமைத்தது இப்பதிகம். இஃது அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தால் அமைந்த பத்துப் பாடல்களைக் கொண்டது.

*திருவில் தோன்றும் மகளேநீ*
*செய்த தவந்தான் யார்அறிவார்*
*மருவில் தோன்றும் கொன்றையந்தார்*
*மார்பர் ஒற்றி மாநகரார்*
*கருவில் தோன்றும் எங்கள்உயிர்*
*காக்க நினைத்த கருணையினார்*
*குருவிற் றோன்றும் தியாகர்தமைக்*
*கூடி உடலம் குளிர்ந்தனையே (2)*

*அஞ்சொற் கிளியே மகளேநீ*
*அரிய தவமே தாற்றினையோ*
*வெஞ்சொற் புகலார் வஞ்சர்தமை*
*மேவார் பூவார் கொன்றையினார்*
*கஞ்சற் கரியார் திருஒற்றிக்*
*காவல் உடையார் இன்மொழியால்*
*கொஞ்சத் தருவார் அவர்தம்மைக்*
*கூடி உடலம் குளிர்ந்தனையே (7)*

*மயிலின் இயல்சேர் மகளேநீ*
*மகிழ்ந்து புரிந்த தெத்தவமோ*
*வெயிலின் இயல்சேர் மேனியினார்*
*வெண்ணீ றுடையார் வெள்விடையார்*
*பயிலின் மொழியாள் பாங்குடையார்*
*பணைசூழ் ஒற்றிப் பதிஅமர்ந்தார்*

*குயிலிற் குலவி அவர்தம்மைக்*
*கூடி உடலம் குளிர்ந்தனையே (10)*

பாடல்களில் ஆழங்கால்பட்டு அவற்றை அநுபவிக்கும்போது நாமும் நற்றாய் நிலையை அடைந்து விடுகின்றோம்.

87. **குறி ஆராய்ச்சி:** இதுவும் திருஒற்றியூர் பெருமான்மீது அமைந்த திருப்பதிகமாகும். குறத்தியிடம் குறிகேட்டல், வேலனை வினாவுதல் என்பன போன்றவை அக இலக்கிய மரபுகள். சிலப்பதிகாரம்முதல் காவியங்களிலும் இடம் பெற்றுள்ளன. குறி கேட்டலை அடிப்படையாகக் கொண்டு 'குற்றாலக் குறவஞ்சி' என்ற இலக்கியமும் தோன்றியுள்ளது. இந்த மரபு அடிகளின் திருப்பாடல்களிலும் இடம்பெற்றுள்ளது. இப்பதிகம் குறத்தியைக் குறி கேட்பதாய் அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பில் பதினொரு பாடல்களால் இயன்றது.

*நந்தி மகிழ்வாய்த் தரிசிக்க*
*நடனம் புரியும் நாயகனார்*
*அந்தி திறத்தார் திருஒற்றி*
*அமர்ந்தார் என்னை அணைவாரோ*
*புந்தி இலள்என் றணைவாரோ*
*யாதும் தெரியேன் புலம்புகின்றேன்*
*சிந்தை மகிழக் குறமடவாய்*
*தெரிந்தோர் குறிதான் செப்புவையே (1)*

*பொன்னார் புயத்துப் போர்விடையார்*
*புல்லர் மனத்துட் போகாதார்*
*ஒன்னார் புறந்தீ உறநகைத்தார்*
*ஒற்றி எனும்ஓர் ஊர்அமர்ந்தார்*
*என்னா யகனார் எனைமருவல்*
*இன்றோ நாளை யோஅறியேன்*
*மின்னார் மருங்குல் குறமடவாய்*
*விரைந்தோர் குறிநீ விளம்புவையே (5)*

*கற்றைச் சடைமேல் கங்கைதனைக்*
*கலந்தார் கொன்றைக் கண்ணியினார்*
*பொற்றைப் பெருவில் படைஉடையார்*
*பொழில்சூழ் ஒற்றிப் புண்ணியனார்*
*இற்றைக் கடியேன் பள்ளியறைக்*
*கெய்து வாரோ எய்தாரோ*
*சுற்றுங் கருங்கட் குறமடவாய்*
*சூழ்ந்தார் குறிநீ சொல்லுவையே. (10)*

என்பன இப்பதிகத்தில் மூன்று பாடல்கள். ஒவ்வொரு பாடலும் குறத்தியைக் குறி சொல்லுமாறு வேண்டுவ தாக அமைந்துள்ளது. பாடல்களைப் பயிலும் நாமும் தலைமகள் நிலையில் குறத்தியைக் குறி கேட்கும் உணர் வைப் பெறுகின்றோம்.

88. **காட்சி அற்புதம்:** நம்மாழ்வார் போன்ற ஞானச் செல்வர்களின் மனத்தில் ஓரிரு கண நேரத்தில் இறை வன் காட்சி தந்து மறைகின்றான். அந்தக் காட்சியை மீட்டுக் காண ஆசைப்படுகின்றது அவர்கள் திருவுள் ளம். அந்த ஏக்கம் தானான தன்மையிலும் நாயகியான நிலையிலும் பாடல்களாக மலர்கின்றது. இங்ஙனமே அடிகளின் மனத்தில் காட்சி தந்த ஒற்றியூர்ப் பெருமான் காட்சியை நினைவு கூரவே ஏக்கப் பாடல்கள் பிறக்கின் றன. அங்ஙனம் தோன்றியதே இப்பதிகம். அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பில் அமைந்த பத்துப் பாடல்களைக் கொண்டது. தலைவி தோழியிடம் இரங் கிக் கூறுவனவாகப் பாடல்கள் அமைந்துள்ளன.

*பூணா அணிபூண் புயமுடையார்*
*பொன்னம் பலத்தார் பொங்குவிடம்*
*ஊணா உவந்தார் திருஒற்றி*
*யூர்வாழ் வுடையார் உண்மைசொலி*

*நீணால் இருந்தார் அவர்இங்கே*
*நின்றார் மீட்டும் நின்றிடவே*
*காணா தயர்ந்தேன் என்னடிநான்*
*கனவோ நனவோ கண்டதுவே (1)*

*ஆல நிழற்கீழ் அன்றமர்ந்தார்*
*ஆதி நடுவீ றாகிநின்றார்*
*நீல மிடற்றார் திருஒற்றி*
*நியமத் தெதிரே நீற்றுருவக்*
*கோல நிகழக் கண்டேன்பின்*
*குறிக்கக் காணேன் கூட்டுவிக்கும்*
*காலம் அறியேன் எண்ணடிநான்*
*கனவோ நனவோ கண்டதுவே. (7)*

*நிரந்தார் கங்கை நீள்சடையார்*
*நெற்றி விழியார் நித்தியனார்*
*சிரந்தார் ஆகப் புயத்தணிவார்*
*திருவாழ் ஒற்றித் தியாகர்அவர்*
*பரந்தார் கோயிற் கெதிர்நிற்கப்*
*பார்த்தேன் மீட்டும் பார்ப்பதன்முன்*
*கரந்தார் கலுழ்ந்தேன் என்னடிநான்*
*கனவோ நனவோ கண்டதுவே (10)*

எல்லாப் பாடல்களிலும் தோழியை விழித்து 'என்னடி நான் கனவோ நனவோ கண்டதுவே' என்று முடிகின்றன.

90. **திருக்கோலச்சிறப்பு:** திருஒற்றியூர் இறைவன் திருவுலாக் காட்சியைக் கண்ட தலைவி அவனது திருக் கோலச் சிறப்பைக் கண்டு வாய்ப்பெய்தியதாகப் பாடல்கள் அமைகின்றன. பாடல்கள் அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பில் அமைந்துள்ளன. பத்துப் பாடல்களைக் கொண்டது இப்பதிகம்.

*பொன்னென் றொளிரும் புரிசடையார்*
*புனைநூல் இடையார் புடைஉடையார்*
*மன்னென் றுலகம் புகழ்ஒற்றி*
*வாணர் பவனி வரக்கண்டேன்*
*மின்னென் றிலங்கு மாதரெலாம்*
*வேட்கை அடைய விளங்கிநின்ற(து)*
*இன்னென் றறியேன் அவரழகை*
*என்னென் றுரைப்ப தேந்திழையே (1)*

*புன்னை இதழிப் பொலிசடையார்*
*போக யோகம் புரிந்துடையார்*
*மன்னும் விடையார் திருஒற்றி*
*வாணர் பவனி வரக்கண்டேன்.*
*உன்னும் உடலம் குளிர்ந்தோங்க*
*உவகை பெருக உற்றுநின்ற*
*என்னை விழுங்கும் அவரழகை*
*என்னென் றுரைப்ப தேந்திழையே (5)*

*கண்ணன் அறியாக் கழற்பதத்தார்*
*கண்ணார் நெற்றிக் கடவுள்அருள்*
*வண்ணம் உடையார் திருஒற்றி*
*வாணர் பவனி வரக்கண்டேன்*
*நண்ண இமையார் எனஇமையா*
*நாட்டம் அடைந்து நின்றனடி*
*எண்ண முடியா அவரழகை*
*என்னென் றுரைப்ப தேந்திழையே (9)*

பாடல்கள் யாவும் 'என்னென்றுரைப்ப தேந்திழை யே' என்று முடிகின்றன. பெரும்பாலும் உலா இலக்கியத்தில் ஏழு பருவ மாதர்களின் அழகை வருணிப்பது மரபு. ஈண்டு உலாவந்த இறைவன் அழகை வருணிப்பதாகப் பாடல்கள் அமைகின்றன. அங்கு மாதர்களின் அழகை வருணிப்பவர் கவிஞர். ஈண்டு உலாவரும்

தலைவன் அழகை வருணிப்பவர் உலாவைக் கண்ட தலைவி.

91. **சோதிடம் நாடல்:** ஒற்றியூர் இறைவனைக் காணும் நாள் என்றோ என்று கண்டறியத் தலைவி சோதிடரை நாடுதலைச் சாற்றுவதாக அமைந்தது இப்பதிகம். அறுசீர்க் கழிநெடில் ஆசிரிய விருத்த யாப்பில் அமைந்தவை. பத்துப் பாடல்களையுடையது இப்பதிகம்.

*பெற்றி அறியாப் பிரமனுக்கும்*
*பெரிய மாற்கும் பெறஅறியார்*
*புற்றின் அரவார் கச்சைஉடைப்*
*புனிதர் என்னைப் புணரும்இடம்*
*தெற்றி மணிக்கால் விளங்குதில்லைச்*
*சிற்றம் பலமோ அன்றிஇந்த*
*ஒற்றி நகரோ சோதிடம்பார்த்*
*துரைப்பீர் புரிநூல் உத்தமரே (2)*

*எண்தோள் இலங்கும் நீற்றணிய*
*ரியார்க்கும் இறைவர் எனைஉடையார்*
*வண்டோ லிடும்பூங் கொன்றைஅணி*
*மாலை மார்பர் வஞ்சமிலார்*
*தண்தோய் பொழில்சூழ் ஒற்றியினார்*
*தமக்கும் எனக்கும் மணப்பொருத்தம்*
*உண்டோ இலையோ சோதிடம்பார்த்*
*துரைப்பீர் புரிநூல் உத்தமரே (4)*

*வெண்மை நீற்றர் வெள்ளேற்றர்*
*வேத கீதர் மெய்உவப்பார்*
*வண்மை உடையார் ஒற்றியினார்*
*மருவ மருவி மணமகிழ்ந்து*
*வண்மை அகலா தருட்கடல்நீர்*
*ஆடு வேனோ ஆடேனோ*

*உண்மை அறிந்தீர் சோதிடம்பார்த்*
*துரைப்பீர் புரிநூல் உத்தமரே (8)*

பாடல்கள் யாவும் 'சோதிடம் பார்த்து உரைப்பீர் புரிநூல் உத்தமரே' என்று இறுவனவாய் அமைந்துள் ளன. தலைவியின் ஏக்கம் பாடலில், புலனாகின்றது. இஃது அடிகளாரின் இறையைக் காணும் துடிப்புக்குக் குறியீடாகும்.

92. **திருஅருட் பெருமிதம்:** தன் மகள் ஒற்றியூர் பெருமானது திருவருள் பெற்றதைக் குறித்துச் செவிலித் தாய் பெருமிதம் கொள்வதைக் கழறுவதாக அமைத்தது பத்துப் பாடல்களைக் கொண்ட இப்பதிகம். பாடல்கள் யாவும் அறுசீர்க் கழிநெடில் ஆசிரிய விருத்த யாப்பில் அமைந்தவை. பாடியவாய் தேனூறும் பான்மையவை.

*மட்டுக் கடங்கா வண்கையினார்*
*வளஞ்சேர் ஒற்றி வாணர்அவர்*
*பட்டுத் துகிலே திசைகளெலாம்*
*படர்ந்த தென்னைப் பரிந்தனையோ*
*கட்டத் துகிலும் கிடையாது*
*கந்தை உடுத்தது அறிந்திலையோ*
*இட்டுப் புணர்ந்திங் கெதுபெறுவாய்*
*ஏழை அடிநீ என்மகளே (3)*

*திருக்கண் நுதலால் திருமகனைத்*
*தீர்த்தார் ஒற்றித் தேவர்அவர்*
*எருக்க மலரே சூடுவர்நீ*
*எழில்மல் லிகைஎன் றெண்ணினையால்*
*உருக்கும் நெருப்பே அவர்உருவம்*
*உனக்கும் அவர்க்கும் உறவாமோ*
*இருக்க மயல்கொண் டெதுபெறுவாய்*
*ஏழை அடிநீ என்மகளே (5)*

*விண்பார் புகழும் திருஒற்றி*
*மேவும் புனிதர் விடந்தரினும்*
*உண்பார் இன்னும் உனக்கதுதான்*
*உடன்பா டாமோ உளமுருகித்*
*தண்பார் என்பார் தமையெல்லாம்*
*சார்வார் அதுஉன் சம்மதமோ*
*எண்பார் மயல்கொண் டெதுபெறுவாய்*
*ஏழை அடிநீ என்மகளே (8)*

பாடல்கள் யாவும் 'மயல் கொண்டு எது பெறுவாய் ஏழை அடிநீ என் மகளே' என்று வினவுவனவாக அமைந்துள்ளன. ஆனால் 'அனைத்தையும் பெற்று உய்வாய்' என்பது குறிப்பாக உள்ளதை உணரவேண்டும்.

93. **காதற்சிறப்புக் கதுவா மாண்பு:** செவிலி ஒற்றியூர் இறைவன்மீது காதல் கொள்வது பயன் அற்றது என்று கழறியதனை மறுத்து உரைக்கும் பாங்கில் உரைத்ததை, 12 பாடல்களால் விவரிப்பது இப்பதிகம். இது அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பில் அமைந்த பாடல் களைக் கொண்டது.

*உலகம் உடையார் தம்ஊரை*
*ஒற்றி வைத்தார் என்றாலும்*
*அலகில் புகழார் காபாலி*
*ஆகத் திரிந்தார் என்றாலும்*
*திலகம் அனையார் புறங்காட்டி*
*சேர்ந்து நடித்தார் என்றாலும்*
*கலக விழியாய் நான்அவர்மேல்*
*காதல் ஒழியேன் கனவிலுமே (1)*

*எல்லாம் உடையார் மண்கூலிக்*
*கெடுத்துப் பிழைத்தார் என்றாலும்*
*கொல்லா நலத்தார் யானையின்தோல்*
*கொன்று தரித்தார் ஆனாலும்*

வல்லார் விசயன் வில்அடியால்
வடுப்பட் டுவந்தார் ஆனாலும்
கல்லாம் முலையாய் நான்அவர்மேல்
காதல் ஒழியேன் கனவிலுமே (3)

என்றும் இறவார் மிடற்றில்விடம்
இருக்க அமைத்தார் என்றாலும்
ஒன்று நிலையார் நிலையில்லா
தோடி உழல்வார் என்றாலும்
நன்று புரிவார் தருமன்உயிர்
நலிய உதைத்தார் என்றாலும்
கன்றுண் கரத்தாய் நான்அவர்மேல்
காதல் ஒழியேன் கனவிலுமே (5)

வாழ்வை அளிப்பார் மாடேறி
மகிழ்ந்து திரிவார் என்றாலும்
தாழ்வை மறுப்பார் பூதகணத்
தானை உடையார் என்றாலும்
ஊழ்வை அறுப்பார் பேய்க்கூட்டத்
தொக்க நடிப்பார் என்றாலும்
காழ்கொள் முலையாய் நான்அவர்மேல்
காதல் ஒழியேன் கனவிலுமே. (7)

மான்கொள் கரத்தார் தலைமாலை
மார்பில் அணிந்தார் என்றாலும்
ஆன்கொள் விடங்கர் சுடலைஎரி
அடலை விழைந்தார் என்றாலும்
வான்கொள் சடையார் வழுத்துமது
மத்தர் ஆனார் என்றாலும்
கான்கொள் குழலாய் நான்அவர்மேல்
காதல் ஒழியேன் கனவிலுமே (9)

கோதே மருவார் மால்அயனும்
குறியா நெறியார் என்றாலும்

*சாதே மகிழ்வார் அடியாரைத்*
*தம்போல் நினைப்பார் என்றாலும்*
*மாதே வருக்கும் மாதேவர்*
*மௌன யோகி என்றாலும்*
*காதோர் குழையாய் நான்அவர்மேல்*
*காதல் ஒழியேன் கனவிலுமே (11)*

பாடல்கள் பன்னிரண்டும் அற்புதமானவை. ஆயினும் ஆறு பாடல்களே காட்டப் பெற்றன. பாடல்கள் யாவும் 'நான் அவர்மேல் காதல் ஒழியேன் கனவிலுமே' என்ற தொடரால் இறுகின்றன. இதனால் இறைவன்மீது தாம் கொண்ட நெஞ்சுறுதியைக் காட்டுகின்றார் தலைவி நிலையில் உள்ள அடிகள்.

94. ஆற்றா விரகம்: திருஒற்றியூர் இறைவன்மீது தலைவி தான் கொண்ட 'ஆற்றாவிரகத்தை'த் தோழி யொடு பத்துப் பாடல்களால் பகிர்ந்து கொள்வனவாக அமைந்தது இப்பதிகம். பாடல்கள் யாவும் அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பில் அமைந்தவை. பாடியவாய் தேன் சுரக்கும் பான்மையனவாய்த் திகழ் கின்றன.

*ஓணம் உடையான் தொழுதேத்தும்*
*ஒற்றி நகர்வாழ் உத்தமர்பால்*
*மாண வலியச் சென்றென்னை*
*மருவி அணைவீர் என்றேநான்*
*நாணம் விடுத்து நவின்றாலும்*
*நாமார் நீயார் என்பாரேல்*
*ஏண விழியாய் என்செய்வேன்*
*என்னை மடவார் இகழாரோ (1)*

*ஊர்என் றுடையீர் ஒற்றிதனை*
*உலக முடையீர் என்னைஅணை*
*வீர்என் றவர்முன் பலர்அறிய*
*வெட்கம் விடுத்துக் கேட்டாலும்*

*சேர்என் றுரைத்தால் அன்றிஅவர்*
*சிரித்துத் திருவாய் மலர்ந்தெனைநீ*
*யார்என் றுரைத்தால் என்செய்வேன்*
*என்னை மடவார் இகழாரோ (4)*

*வில்லை மலையாய்க் கைக்கொண்டார்*
*விடஞ்சூழ் கண்டர் விரிபொழில்சூழ்*
*தில்லை நகரார் ஒற்றியுளார்*
*சேர்ந்தார் அல்லர் நான்அவர்பால்*
*ஒல்லை அடைந்து நின்றாலும்*
*உன்னை அணைதல் ஒருபோதும்*
*இல்லை எனிலோ என்செய்வேன்*
*என்னை மடவார் இகழாரோ (6)*

*அசையா தமர்ந்தும் அண்டமெலாம்*
*அசையப் புலியூர் அம்பலத்தே*
*நசையா நடிக்கும் நாதர்ஒற்றி*
*நாட்டார் இன்னும் நண்ணிலர்நான்*
*இசையால் சென்றிங் கென்னைஅணை*
*வீர்என் றுரைப்பேன் எனில்அதற்கும்*
*இசையார் ஆகில் என்செய்கேன்*
*என்னை மடவார் இழாரோ (8)*

என்பவை நான்கு பாடல்கள். எல்லாப் பாடல்களும் 'என் செய்வேன் என்னை மடவார் இகழாரோ' என்று இறுகின்றன. தன்னை மடவார் இகழ்ந்தாலும் தான் ஒற்றியூர் பெருமான்மீது கொண்ட காதல் உறுதி என் பதை நிலைநாட்டுகின்றார் தலைவி நிலையை ஏறிட்டுக் கொண்ட அடிகள்.

95. காதல் மாட்சி: ஒற்றியூர் இறைவனின் உலாக் காட்சியில் உள்ளத்தைப் பறிகொடுத்து அப்பெருமான் மீது காதல் கொண்ட தலைவி அவரைப் பிடிக்க ஓடினா லும் அவரது ஓட்டத்தைப் பிடிக்கவொண்ணாதுள்ளது

என்று தன் காதலின் மாட்சியைக் கழறுவதாக அமைந்தது இப்பதிகம். அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தங்கள் பத்து கொண்டது.

*தாயாய் அளிக்கும் திருஒற்றித்*
*தலத்தார் தமது பவனிதனை*
*மாயா நலத்தில் காணவந்தால்*
*மருவும் நமது மனங்கவர்ந்து*
*பாயா விரைவில் நமைத்திரும்பிப்*
*பாரா தோடு கின்றார்நாம்*
*ஓயா தோடி னாலும்அவர்*
*ஒட்டம் பிடிக்க ஒண்ணாதே. (3)*

*தில்லை உடையார் திருஒற்றித்*
*தியாகர் அவர்தம் பவனிதனைக்*
*கல்லை உருக்கிக் காணவந்தால்*
*கரணம் நமது கரந்திரவி*
*பல்லை இறுத்தார் நமைத்திரும்பிப்*
*பாரா தோடு கின்றார்நாம்*
*ஒல்லை ஓடி னாலும்அவர்*
*ஒட்டம் பிடிக்க ஒண்ணாதே (9)*

பாடல்களின் இறுதி இரண்டு அடிகளில் 'நமை திரும்பிப் பாரா தோடுகின்றார் நாம், ..... ஓட்டம் பிடிக்க ஒண்ணாதே' என்ற பகுதி திரும்பத் திரும்ப அமைந்துள்ளது. இது தலைவியின் காதல் உறைப்பைக் கழறுவதாக அமைந்துள்ளமை காணத்தக்கது.

அருள் மாலை (96) 31 பாடல்களாலும், இன்ப மாலை (97) 11 பாடல்களாலும், இங்கித மாலை (98) 165 பாடல்களாலும் அமைந்துள்ளன. இராமநாம சங்கீர்த்தனம் (100),

*காராய வண்ண மணிவண்ண கண்ண*
*கனசங்கு சக்ர தரநீள்*
*சீராய தூய மலர்வாய நேய*
*சீராம ராம வெனவே*
*தாராய வாழ்வு தருநெஞ்சு சூழ்க*
*தாமோத ராய நமவோம்*
*நாராய ணாய நமவாம னாய*
*நமகேச வாய நமவே*

என்ற ஒரே ஒரு பாடல் எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தாலானது.

101. இராமநாமப் பதிகம்[4]: இது எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பில் அமைந்த பத்துப் பாடல்களைக் கொண்டது.

*திருமகள்எம் பெருமாட்டி மகிழும் வண்ணச்*
*செழுங்கனியே கொழும்பாகே தேனேதெய்வத்*
*தருமகனைக் காத்தருளக் கரந்தே வென்றித்*
*தனுஎடுத்த ஒருமுதலே தருமப் பேறே*
*இருமையும்என் னுளத்தமர்ந்த ராம நாமத்*
*தென்அரசே என்அமுதே என்தா யேநின்*
*மருமலர்ப்பொன் அடிவழுத்தும் சிறியேன் அந்தோ*
*மனந்தளர்ந்தேன் அதிந்தும்அருள் வழங்கி லாயே (1)*

*மண்ணாளா நின்றவர்தம் வாழ்வு வேண்டேன்*
*மற்றவர்போல் பற்றடைந்து மாள வேண்டேன்*
*விண்ணாளா நின்றஒரு மேன்மை வேண்டேன்*
*வித்தகத்தின் திருவருளே வேண்டி நின்றேன்*
*புண்ணாளா நின்றமனம் உடையேன் செய்த*
*பொய்யனைத்தும் திருவுளத்தே பொறுப்பாய் அன்றிக்*

4. கொந்தமூர் சீநிவாச வரதாச்சாரிய சுவாமிகள் வேண்டிக் கொண்டதற்கிணங்க அருளிச் செய்த பதிகம் இது.

*கண்ணாளா சுடர்க்கமலக் கண்ணா என்னைக்*
*கைவிடில்என் செய்வேனே கடைய னேனே (3)*

*கல்லாய வன்மனத்தர் தம்பால் சென்றே*
*கண்கலக்கம் கொள்கின்றேன் கவலை வாழ்வை*
*எல்லாம்உள் இருந்தறிந்தாய் அன்றோ சற்றும்*
*இரங்கிலைஎம் பெருமானே என்னே என்னே*
*பொல்லாத செவ்வினையேன் எனினும் என்னைப்*
*புண்ணியனே புரப்பதருட் புகழ்ச்சி அன்றோ*
*அல்லார்ந்த துயர்க்கடல்நின் றெடுத்தி டாயேல்*
*ஆற்றேன்நான் பழிநின்பால் ஆக்கு வேனே (8)*

*கூறுவதோர் குணமில்லாக் கொடிதாம் செல்வக்*
*குருட்டறிவோர் இடைப்படும்என் குறைகள் எல்லாம்*
*ஆறுவதோர் வழிகாணேன் அந்தோ அந்தோ*
*அவலமெனும் கருங்கடலில் அழுந்து கின்றேன்*
*ஏறுவதோர் வகைஅறியேன் எந்தாய் எந்தாய்*
*ஏற்றுகின்றோர் நின்னைஅன்றி, இல்லேன் என்னைச்*
*சீறுவதோ இரங்குவதோ யாதோ உன்றன்*
*திருவுளத்தைத் தெரியேனே சிறிய னேனே (10)*

என்பன இப்பதிகத்தின் நான்கு பாடல்கள். இவற்றால் சைவ வைணவ வேறுபாடு கருதா அடிகளைக் காண முடிகின்றது.

102. வீரராகவர் போற்றிப் பஞ்சகம்: இது திருஎவ்வுளூர்[5] திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள வீரராகவப் பெருமான்மீது அமைந்த பஞ்சகம். பஞ்சகம் - ஐந்து பாடல் களைக் கொண்டது. பாடல்கள் அறுசீர்க் கழிநெடில் ஆசிரிய விருத்த யாப்பால் ஆனவை.

5. 108 திவ்விய (வைணவ) தேசங்களுள் ஒன்று. சென்னை - அரக்கோணம் இருப்பூர்தி வழியில் உள்ள நிலையம்.

*பாண்டவர் தூத னாகப்*
*பலித்தருள் பரனே போற்றி*
*நீண்டவன் என்ன வேதம்*
*நிகழ்த்துமா நிதியே போற்றி*
*தூண்டலில் லாமல் ஓங்குஞ்*
*சோதிநல் விளக்கே போற்றி*
*வேண்டவர் எவ்வு ளூர்வாழ்*
*வீரரா கவனே போற்றி (2)*

*அற்புதத் திருவை மார்பில்*
*அணைந்தபே ரழகா போற்றி*
*பொற்புறு திகிரி சங்கு*
*பொருந்துகைப் புனிதா போற்றி*
*எற்புறு பிணிதீர்த் தென்னை*
*மகிழ்வித்த வரதா போற்றி*
*வெற்புயர் எவ்வு ளூர்வாழ்*
*வீரரா கவனே போற்றி (5)*

என்பன இப்பஞ்சகத்தின் இரண்டு பாடல்கள். இத்திருப் பதி பற்றிய விவரமான குறிப்புகள் இவ்வாசிரியர் எழுதி யுள்ள நூலில் காணலாம்.[6]

103. இரேணுகை தோத்திரம்[7]: இது சென்னை 'ஏழுகி ணறு' என்ற இடத்தில் அமைந்த திருக்கோயிலில் எழுந் தருளியுள்ள இரேணுகாதேவியின்மீது ஆசிரிய விருத்த யாப்பில் அமைந்த ஐந்து பாடல்களைக் கொண்டது. இரண்டு பாடலகள் ஈண்டுக் காட்டப் பெறுகின்றன.

*உவந்தொரு காசும் உதவிடாக் கொடிய*
*உலுத்தர்தம் கடைதொறும் ஓடி*

6. தொண்டை நாட்டுத் திருப்பதிகள் கட்டுரை காண்க.

7. அன்பர் ஒருவர் வேண்டுகோளுக்கிணங்க அடிகள் அருளிச் செய்தது.

*அவந்தனில் அலையா வகைஎனக் குன்தன்*
*அகமலர்ந் தருளுதல் வேண்டும்*
*நவந்தரு மதிய நிவந்தபூங் கொடியே*
*நலந்தரு நகைமணிக் கோவை*
*இவந்தொளிர் பசுந்தோள் இசைதுலுக் காணத்*
*திரேணுகை எனும்ஒரு திருவே (2)*

*புண்ணியம் புரியும் புனிதர்தம் சார்பும்*
*புத்திரர் மனைவியே முதலாய்*
*நண்ணய குடும்ப நலம்பெறப் புரியும்*
*நன்கும் எனக்கருள் புரிவாய்*
*விண்ணிய கதிரின் ஒளிசெயும் இழையாய்*
*விளங்கருள் ஒழுகிய விழியாய்*
*எண்ணிய அடியர்க் கிசைதுலுக் காணத்*
*திரேணுகை என்னும்ஒரு திருவே (4)*

எல்லாப் பாடல்களும் 'இசைத் துலுக்காணத் திரேணுகை எனும் ஒரு திருவே' என்று இறுகின்றதைக் கண்டு மகிழலாம்.

# 5. மூன்றாம் திருமுறைப் பாடல்கள்

இத்திருமுறையில் 27 பதிகங்களும் அவற்றுள் 612 பாடல்களும் அடங்கியுள்ளன. இதில் அகப்பொருட் பதிகங்கள் இல்லை. இத்திருமுறையில் சில பதிகங்களை யும் அவற்றுள் அடங்கிய சில பாடல்களையும் காண் போம்.

1. **திருவடிப் புகழ்ச்சி:** இது காப்பாக திருநேரிசை வெண்பாவையும் நூற்றுத் தொண்ணூற்றிரு சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம் ஒன்றும் கொண்டது.

*இன்றுவரு மோநாளைக் கேவருமோ அல்லதுமற்று*
*என்றுவரு மோஅறியேன், எங்கோவே - துன்றுமல*
*வெம்மாயை அற்று வெளிக்குள் வெளிகடந்து*
*சும்மா இருக்கும் சுகம்.*

என்பது காப்பு. நீண்ட ஆசிரிய விருத்தம் ஈண்டுத் தரப் பெறவில்லை.

2. **விண்ணப்பக் கலிவெண்பா:** இது காப்பாக ஒரு நேரிசை வெண்பாவையும் 417 கண்ணிகளையும் கொண்ட ஒரு கலிவெண்பாவையும் கொண்டது.

*அவ்வவ் விடைவந் தகற்றி அருள்தரலால்*
*எவ்வெவ் விடையூறும் எய்தலிலம் - தெவ்வர்தமைக்*
*கன்றுமத மாமுகமும் கண்மூன்றும் கொண்டிருந்த*
*தொன்றதுநம் உள்ளம் உறைந்து.*

என்பது காப்பு.

விண்ணப்பக் கலிவெண்பாவை நோக்குவோம்.

*சொற்பெறுமெய்ஞ் ஞானச் சுயஞ்சோதி யாந்தில்லை*
*சிற்சபையில் வாழ்தலைமைத் தெய்வமே - நற்சிவையாந்*

*தாயின் உலகனைத்தும் தாங்கும் திருப்புலியூர்க்*
*கோயில் அமர்ந்தகுணக் குன்றமே - மாயமிகும்*

*வாட்களமுற் றாங்குவிழி மாதர்மய லற்றவர்சூழ்*
*வேட்களமுற் றோங்கும் விழுப்பொருளே (1-3)*

..... ...... ..... .....
*கார்காட்டித் தையலர்தங் கண்காட்டிச் சோலைகள்சூழ்*
*சீர்காட்டுப் பள்ளிச் சிவக்கொழுந்தே - பார்காட்டு*

*உருகாவூர் எல்லாம் ஒளிநயக்க வோங்கும்*
*குருகாவூர் வெள்ளடைவெங் கோவே - (13-14)*

..... ...... ..... .....
*கண்விசைய மங்கைக் கலிபோற் பெறத்தொண்டர்*
*எண்விசைய மங்கையில்வாழ் என்குருவே - மண்ணுலகில்*

*வைகாவூர் நம்பொருட்டான் வைகியதென் றன்பர்தொழும்*
*வைகாவூர் மேவியஎன்ற வாழ் முதலே - (48-49)*

..... ...... ..... .....
*காழ்க்கோட்ட நீங்கக் கருதும் குடமூக்கில்*
*கீழ்க்கோட்ட மேவுமன்பர் கேண்மையே - வாழ்கோட்டத்*

*தேரோண மட்டுந் திகழ்குடந்தை மட்டுமன்றிக்*
*காரோண மட்டுங் கமழ்மலரே - (92-93)*

..... ...... ..... .....
*சேட்டியத் தானே தெரிந்துசுரர் வந்தேந்து*
*நாட்டியத் தான்குடிவாழ் நல்லினமே - நாட்டுமொரு*

*நூறாயி லன்பர்தமை நோக்கி யருள்செய்திருக்*
*காறாயின் மேலோர் கடைப்பிடியே - (182-183)*

..... ...... ..... .....

*பூவணமும் பூமணமும் போல அமர்ந்ததிருப்*
*பூவணத்தில் ஆனந்தப் பொக்கிஷமே - தீவணத்தில்*

*கண்சுழிய லென்று கருணையளித் தென்னுளஞ்சேர்*
*தண் சுழியில் வாழ்சீவ சாட்சியே - (203-204)*

..... ...... ..... .....

*தாமாத்தூர் வீழத் தடிந்தோள் கணேசனொடும்*
*ஆமாத்தூர் வாழ்மெய் அருட்பிழம்பே - யாமேத்தும்*

*உண்ணா முலையாள் உமையோடு மேவுதிரு*
*அண்ணா மலைவாழ் அருட்சுடரே - (235-236)*

..... ...... ..... .....

இப்படியெல்லாம் பல்வேறு தலத்துஎம் பெருமான்களை விளித்து,

*நீறுடையாய் ஆறுடைய நீண்முடியாய் தேடரிய*
*வீறுடையாய் நின்றனக்கோர் விண்ணப்பம் - மாறுபட*

*எள்ள லடியேன் எனக்கருள் ஒளியாமல்*
*உள்ள படியே உரைக்கின்றேன் - (290-291)*

என்று கூறி தம்முடைய குறைபாடுகளையெல்லாம் பட்டியலிட்டுக் காட்டுகின்றார்.

*பொய்யுரைக்க வென்றால் புடையெழுவேன் அன்றியொரு*
*மெய்யுரைக்க வென்னும் விழைந்ததிலை - வையகத்தில*

*பொல்லா விரதத்தைப் போற்றியுவந் துண்பதல்லால்*
*கொல்லா விரதத்தைக் கொண்டதிலை - அல்லாதார்*

*வன்புகழைக் கேட்கமனங் கொண்ட தல்லாமல்*
*நின்புகழைக் கேட்க நினைந்ததிலை - (293-295)*

..... ...... ..... .....

*மெய்யடிய னென்றுரைக்க வித்தகநின் பொன்னடிக்குப்*
*பொய்யடிமை வேடங்கள் பூண்டதுண்டு - நையமிகு*

*மையல் வினைக்குவந்த மாதர் புணர்ச்சியெனும்
வெய்ய வினைக்குழியில் வீழ்ந்ததுண்டு - (305-306)*

..... ...... ..... .....
*காடுபோன் ஞாலக் கடுநடையி லேயிருகான்
மாடுபோல் நின்றுழைத்து வாழ்ந்ததுண்டு - நாடகன்ற*

*கள்ளிவா யோங்குபெருங் காமக் கடுங்காட்டில்
கொள்ளிவாய்ப் பேய்போல் குதித்ததுண்டு - (320-321)*

..... ...... ..... .....
*கைக்குடைய வேயெழுதிக் கட்டிவைத்த இவ்வுலகப்
பொய்க்கதையே யான்படிக்கும் புத்தகங்கள் - மெய்ப்படுநின்*

*மந்திரத்தை உச்சரியா வாயுடையேன் என்போலத்
தந்திரத்தில் கைதேர்ந் தவரில்லை - (362-363)*

..... ...... ..... .....
*வீணவமாம் வஞ்ச வினைக்குமுத லாகிநின்ற
ஆணவமே என்காணி ஆட்சியதாம் - மாணிறைந்த*

*நல்லறிவே என்னைநெடு நாட்பகைத்த தன்றிமற்றைப்
புல்லறிவே என்னுட் பொருள்கண்டாய் - சொல்லவொணா*

*வேடருக்குங் கிட்டாத வெங்குணத்தால் இங்குழலும்
மூடருக்குள் யானே முதல்வன்காண - (366-368)*

..... ...... ..... .....

இவற்றைக் கூறிய பின் எம்பெருமானின் அருட் குணங்களை எடுத்துக்காட்டி அத்தகு ஆண்டவனைத் தவிர தமக்கு ஒரு பற்றுக்கோடும் இல்லை எனக் கூறு கின்றார்.

*அன்புடைய தாயர்களோர் ஆயிரம்பே ராணாலும்
அன்புடையாய் நின்னைப்போல் ஆவாரோ - இன்பமுடன்*

*ஈண்டவரும் தந்தையர்கள் எண்ணிலரே ஆயினும்என்
ஆண்டவனே நினைப்போல் ஆவாரோ - பூண்டகைகொள்*

*ஏனுடைய நின்னையன்றி எந்தை பிரானேஉன்*
*ஆணைஎனக் குற்றதுணை யாருமில்லை - நாணமுளன்*

*ஆனேன் பிழைக ளனைத்தினையும் ஐயாநீ*
*தானே பொறுக்கத் தகுங்கண்டாய் - (387-390)*

என்பவற்றில் இதனைக் காணலாம். ஆதலால் தாம் என்ன செய்ய வேண்டும்? கூறுகின்றார்:

*மாற்றனுக்கும் எட்டா மலர்க்கழலோய் நீயென்னைக்*
*கூற்றனுக்குக் காட்டிக் கொடுக்கற்க - பாற்றவள*

*நந்தக் கடற்புவியில் நானின்னும் வன்பிறவிப்*
*பந்தக் கடலழுந்தப் பண்ணற்க - முந்தைநெறி*

*நின்றேஉன் பொற்றாள் நினையாதார் பாழ்மனையில்*
*சென்றே உடலோம்பல் செய்யற்க - நன்றேநின்று*

*ஓங்கு நெறியோர் உளத்தமர்ந்தோய் என்றன்னைத்*
*தீங்கு நெறியில் செமலுத்தற்க - வீங்கடங்கி*

*வாழி எனத்தான் வழுத்தினும்என் சொற்கடங்கா*
*ஏழை மனத்தால் இளைக்கின்றேன் - (391-395)*

..... ...... ..... .....
*இப்பாரில் உன்மேலன் பில்லெனினும் அன்பனென*
*ஒப்பாரி யேனும் உடையேன்காண் - தப்பாய்ந்த*

*மட்டுவிடேன் உன்தாள் மறக்கினும்வெண் ணீற்றுநெறி*
*விட்டுவிடேன் என்றனைக்கை விட்டுவிடேல் - துட்டனென*

*மாலும் திசைமுகனும் வானவரும் வந்துதடுத்*
*தாலும் சிறியேனைத் தள்ளிவிடேல் - சாலுலக*

*வாதனைகொண் டேனென்று மற்றெவரா னாலும்வந்து*
*போதனைசெய் தாலும்மெனைப் போக்கிவிடேல் - நீதயவு*

*சூழ்ந்திடுக என்னையுநின் தொண்டருடன் சேர்த்தருள்க*
*வாழ்ந்திடுக நின்தாள் மலர். (413-417)*

இஃது அற்புதமான பாடல். பாடல் முழுவதையும் படித்து அநுபவிக்க வேண்டியது. அடிகளாரின் இறை யநுபவத்தை நாமும் துயக்க வேண்டியது.

3. நெஞ்சறிவுறுத்தல்: இது காப்பாக இரண்டு குறள் வெண்பாக்களையும் 703 கண்ணிகளைக் கொண்ட கலிவெண்பாவையும் கொண்டது.

*சீர்சான்ற முக்கட் சிவகளிற்றைச் சேர்ந்திடலாம்*
*பேர்சான்ற இன்பம் பெரிது.*

*ஆறு முகத்தான் அருளடையின் ஆம்எல்லாப்*
*பேறு மிகத்தான் பெரிது (1,2)*

இந்த இரண்டும் காப்பாக வருவன.

நெஞ்சை நோக்கி விளிக்கும் போக்கில் அடிகளார்,

*பொன்னார் மலைபோல் பொலிவுற் றசையாமல்*
*எந்நாளும் வாழியநீ என்நெஞ்சே - பின்னான*

*இப்பிறப்பி னோடிங்கு எழுபிறப்பும் அன்றியெனை*
*எப்பிறப்பும் விட்டகலா என்நெஞ்சே - செப்பமுடன்*

*செவ்வொருசார் நின்று சிறியேன் கிளக்கின்ற*
*இவ்வொருசொல் கேட்டிடும் என்நெஞ்சே - (1-3)*

என்று நெஞ்சை விளித்து தன் அறிவுரையைத் தொடங்கு கின்றார். தத்துவங்கலந்த இறைவனின் நிலை பேசப் பெறுகின்றது.

*உலகும் பரவும் ஒருமுதலாய் எங்கும்*
*இலகும் சிவமாய் இறையாய் - விலகும்*

*உருவாய் உருவில் உருவாய் உருவுள்*
*அருவாய் அருவில் அருவாய் - உருஅருவாய்*

*நித்தியமாய் நிற்குணமாய் நிற்சலமாய் நின்மலமாய்ச்*
*சத்தியமாய்ச் சத்துவமாய்த் தத்துவமாய் - முத்தியருள்*

*ஒன்றாய்ப் பலவாய் உயிராய் உயிர்க்குயிராய்*
*நன்றாய் நவமாய் நடுநிலையாய் - நின்றோங்கும்*

*வேதமாய் வேதாந்த வித்தாய் விளங்குபர*
*நாதமாய் நாதாந்த நாயகமாய் - ஓதும் - (4-8)*
..... ...... ..... .....

என்று தொடங்கி ஆலமரம்போல் விரியத் தொடங்கு கின்றது. ஆங்காங்கு சிலவற்றைக் காட்டிச் செல்வேன்.

*அகமாய் புறமாய் அகம்புறமாய் நீங்கும்*
*சகமாய்ச் சுகமாயை தானாய் - சகமாயை*

*இல்லாதாய் என்றும் இருப்பதாய் யாதொன்றும்*
*கொல்லாதார்க் கின்பம் கொடுப்பதாய் - எல்லார்க்கும்*

*நண்ணுவதாய் நண்ணாதாய் நல்வினையாய் அல்வினையாய்*
*எண்ணுவதாய் எண்ணில் இயலாதாய் - எண்ணுகின்ற*

*வானாய் நிலனாய் வளியாய் அனலாய்நீர்*
*தானாய் வழிபடுநான் தான் தானாய் - (21-24)*
..... ...... ..... .....

என்றும்,

*நிற்கும் பிரம நிரதிசயா னந்தமதாய்*
*நிற்கும் பரம நிருத்தனெவன் - தற்பரமாய்*

*நின்றான் எவனன்பர் நேயமனத் தேவிரைந்து*
*சென்றான் எவன்சர்வ தீர்த்தனெவன் - வன்தீமை*

*இல்லான் எவன்யார்க்கும் ஈசன்எவன் யாவும்*
*வல்லான் எவனந்தி வண்ணனெவன் - கல்லாலில்*

*சுட்டகன்ற ஞான சுகாதீதம் காட்டிமுற்றும்*
*விட்டகன்ற யோக விநோதனெவன் - மட்டகன்ற*

*அண்டங்கள் எல்லாம் அணுவில் அடைத்தருளித்*
*திண்டங்கு மாறிருத்தும் சித்தனெவன் - (56-60)*
..... ...... ..... .....

என்றும் கூறுவார்.

கண்ணி 60 தொடங்கி கண்ணி 99 வரை இறைவனைச் சித்தனாகக் காட்டுகின்றார். அடுத்து அப்பெருமானைக் கள்வனாகக் காட்டத் தொடங்குகின்றார்.

*நீட்டாது நெஞ்சம் நிலைத்தவர்க்கும் தன்னுண்மை*
*காட்டாது காட்டிநிற்கும் கள்வனெவன் - பாட்டோடு*

*வண்டாலும் கொன்றை மலரோய் எனமறைகள்*
*கண்டாலும் காணாத கள்வனெவன் தொண்டாக*

*அள்ளம் செறியார்க்கே அன்றி அறியார்க்குக்*
*கள்ளம் செறியாத கள்வனெவன் - எள்ளலறக்*

*கொண்டவெலாம் தன்பால் கொடுக்குமவர் - தம்மிடத்தில்*
*கண்டவெலாம் கொள்ளைகொளும் கள்வானவன்*
*- கொண்டுளத்தில்*

*தன்னையொளிக் கின்றோர்கள் தம்முளொளித் துள்ளவெலாம்*
*கன்னமிடக் கைவந்த கள்வனெவன் - மண்ணுலகைச்*

*சற்பனைசெய் கின்றதிரோ தானமெனும் சத்தியினால்*
*கற்பனைசெய் தேமயக்கும் கள்வனெவன் - முற்படுமித்*

*தொண்டுலகில் உள்ளஉயிர் தோறுமொளித் தாற்றலெலாம்*
*கண்டுலவு கின்றதொரு கள்வனெவன் - (100-106)*
..... ...... ..... .....

என்று காட்டி இக்'கள்வன்' என்ற கருத்தை 109 கண்ணி வரை நீட்டி மகிழ்கின்றார்.

அடுத்து ஐந்து கண்ணிகளில் (110-114) இறைவனைச் 'சதுரன்' எனச் சாற்றுகின்றார்.

*நான்என்று நிற்கின் நடுவேயந் நானாணத்*
*தானென்று நிற்கும் சதுரனெவன் - மானென்ற*

*மாயைதனைக் காட்டி மறைப்பித்தம் மாயையிற்றன்*
*சாயைதனைக் காட்டும் சதுரனெவன் - நேயமுடன்*

*நான்மறையும் நான்முகனும் நாரணனும் நாடுதொறும்*
*தான்மறையும் மேன்மைச் சதுரனெவன் - (110-112)*

*..... ...... ..... .....*

என்பன காண்க. அடுத்து ஐந்து கண்ணிகளில் (116-120) இறைவனைத் 'தேவன்' என்று தெரிவிக்கின்றார்.

*- முத்தரென*
*யாவர் இருந்தார் அவர்காண வீற்றிருக்கும்*
*தேவர் புகழ்தலைமைத் தேவனெவன் - யாவர்களும்*

*இவ்வணத்தன் இவ்விடத்தன் இவ்வியலன் என்றறியார்*
*செவ்வணத்தன் ஆம்தலைமைத் தேவனெவன் (115-116)*

*..... ...... ..... .....*

என்பன காண்க.

இன்னும் இறைவனைப் புற்றி 'தயாளன்' (145-149), 'வள்ளல்' (151-156) என்றெல்லாம் அறிமுகம் செய்யும் கண்ணிகள் உள்ளன. மேலும் 'அப்பன்' (165-174), 'நற்றாய்' (175-186) என்று அறிமுகம் செய்யும் கண்ணிகளும் உள்ளன. இறைவன் அழகே வடிவானவன். இதனை (208-233) என்ற கண்ணிகளில் காணலாம்.

*கங்கைச் சடையழகும் காதன்மிகும் அச்சடைமேல்*
*திங்கட் கொழுந்தின் திருவழகும் - திங்கள்தன்மேல்*

*சார்ந்திலங்கும் கொன்றைமலர்த் தாரழகும் அத்தார்மேல்*
*ஆர்த்திலங்கும் வண்டின் அணியழகும் - தேர்ந்தவர்க்கும்*

*நோக்கரிய நோக்கழகும் நோக்கார் நுதலழகும்*
*போக்கரிய நன்னுதலில் பொட்டழகும் - தேக்குதிரி*
*புண்டரத்தின் நல்லழகும் பொன்னருள்தான்*
*கண்டவர்பால் ஊற்றுகின்ற கண்ணழகும் - தொண்டர்கள்தம்*

*நேசித்த நெஞ்சமலர் நீடு மணமுகந்த*
*நாசித் திருக்குமிழின் நல்லழகும் - (208-212)*

..... ...... ..... .....

என்ற கண்களில் அழகு கொப்பளிப்பதைக் காணலாம்.

இன்னும் அடிகள் நெஞ்சுக்குரைப்பவை:

*நற்றுணையென் றேத்துமந்த நாவரசர்க் கன்றுகடற்*
*கற்றுணையோர் தெப்பமெனக் காட்டியதை - இற்றெனநீ*

*மாவுலகில் கேட்டும் வணங்குகிலாய் அன்படையப்*
*பூவுலகர்க் கீதொன்றும் போதாதோ (247-248)*

..... ...... ..... .....

என்பவற்றில் நாவரசர் வரலாற்றுக் குறிப்பு நவிலப் பெற்றுள்ளது.

மேலும்,

*பாரறியாத் தாயாகிப் பன்றிக் குருளைகட்கு*
*ஊரறிய நன்முலைப்பால் ஊட்டியதைச் - சீரறிவோர்*

*சொல்லிநின்றார் கேட்டும் துதிக்கின் றிலையன்பு*
*புல்லஎன்றால் யாதொன்றும் போதாதோ (253-254)*

..... ...... ..... .....

என்பவற்றில் பன்றிக் குட்டிகட்கு முலையூட்டிய பரமன் திருவிளையாடல் காட்டப் பெறுகின்றது.

இன்னும் மாதர் வலைப்பட்டதைக் கூறி நெஞ்சைத் தெருட்டுகின்றார்.

*காரிருளில் செல்லக் கலங்குகின்றாய் - மாதர்குழல்*
*பேரிருளில் செல்வதனைப் பேர்த்திலையே - பாரிடையோர்*

*எண்வாள் எனில்அஞ்சி ஏகுகின்றாய் ஏந்திழையார்*
*கண்வாள் அறுப்பக் கனிந்தனையே - மண்வாழும்*

*ஓரானை யைக்கண்டால் ஓடுகின்றாய் மாதர்முலை*
*ஈரானை யைக்கண்டி சைந்தனையே - சீரான*

*வெற்பென்றால் ஏற விரைந்தறியாய் மாதர்முலை*
*வெற்பென்றால் ஏற விரைந்தனையே - பொற்பொன்றும்*

*சிங்கமென்றால் வாடித் தியங்குகின்றாய் மாதரிடைச்*
*சிங்கமெனில் காணத் திரும்பினையே - இங்குசிறு*

*பாம்பென்றால் ஓடிப் பதுங்குகின்றாய் மாதரல்குல்*
*பாம்பென்றால் சற்றும் பயந்திலையே - (308-313)*

..... ...... ..... .....

இங்ஙனம் 396 கண்ணி வரையில் இந்த அறிவுரை நீளுகின்றது.

அடுத்து மனம் பொன்மேல் கொண்டுள்ள ஆசையைப் பற்றி அறைகின்றார்.

*நின்னாசை என்னென்பேன் நெய்வீழ் நெருப்பெனவே*
*பொன்னாசை மேன்மேலும் பொங்கினையே - பொன்னாசை*

*வைத்திழந்து வீணே வயிறெரிந்து மண்ணுலகில்*
*எத்தனைபேர் நின்கண் எதிர்நின்றார் - தத்துகின்ற*

*பொன்னுடையார் துன்பப் புணரியொன்றே அல்லதுமற்*
*றென்னுடையார் கண்டிங் கிருந்தனையே - (397-399)*

..... ...... ..... .....

*ஒன்றொருசார் நில்என்றால் ஓடுகின்ற நீஅதனை*
*என்றும் புரப்பதனுக் கென்செய்வாய் - வென்றியொடு*

*பேர்த்துப் புரட்டிப் பெருஞ்சினத்தால் மாற்றலர்கள்*
*ஈர்த்துப் பறிக்கில்அதற் கென்செய்வாய் - (403-404)*

..... ...... ..... .....

*உன்நேயம் வேண்டி உலோபம் எனும்குறும்பன்*
*இன்னே வருவன்அதற் கென்செய்வாய் - முன்னேதும்*

*இல்லா நமக்குண்டோ இல்லையோ என்னுநலம்*
*எல்லாம் அழியும்அதற் கென்செய்வாய் - நில்லாமல்*

*ஆய்ந்தோர் சிலநாளில் ஆயிரம்பேர் பக்கல்அது*
*பாய்ந்தோடிப் போவதுநீ பார்த்திலையே - ஆய்ந்தோர்சொல்*

*கூத்தாட் டவைசேர் குழாம்விளித்தாற் போலுமென்ற*
*சீர்த்தாட் குறள்மொழியும் நேர்திலையே[1] (408-411)*

என்று பொன் போன்ற செல்வ நிலையாமையைச் செப்புகின்றார்.

அடுத்து மண்ணாசையைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். மனித மனம் மண்ணின்மீது கொண்டுள்ள ஆசை சொல்லும் தரமன்று. இதனை அடிகள்,

*மண்ணாசை கொண்டனைநீ மண்ணாளும் மன்னரெலாம்*
*மண்ணால் அழிதல் மதித்திலையே - எண்ணாது*

*மண்கொண்டார் மாண்டார்தம் மாய்ந்தவுடல் வைக்கவயல்*
*மண்கொண்டார் தம்இருப்பில், வைத்திலரே - திண்கொண்ட*

*விண்ணேகுங் கால்அங்கு வேண்டுமென ஈண்டுபிடி*
*மண்ணேனும் கொண்டேக வல்லாரோ - (418-420)*

என்று மனத்தை நோக்கிப் பேசுகின்றார். பூமித்தாய் தான் மறைத்து வைத்திருக்கும் நிலக்கரி, மண்எண்ணெய்

1. கூத்தாட் டவைகுழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்று (332)　　(54-நிலையாமை-2)
என்பது காண்க.

முதலிய பல செல்வங்களை மன்பதைக்கு நல்கி உதவு கின்றாள். கையூட்டு வாங்குவோர், கறுப்புச் சந்தைக் காரர்கள், அரசியல் எத்தர்கள் தாம் தகாத வழியில் ஈட்டிய செல்வத்தை மண் வாங்கி மறைக்கின்றனர். இதுபற்றிய அன்றாட நீதிமன்ற வழக்குகள் நமக்குப் பறைசாற்றுகின்றன. ஐம்பெரும் பூதங்களில் மண் ஒன்றே திண்ணியது. மறைப்பதற்கு ஏற்ற வகையில் அமைந்தது.

நிலையாமையைப் பற்றி நெஞ்சுக்கு அறிவுறுத்து வதை நாம் படித்து நெஞ்சில் நிறுத்த வேண்டியதொன் றாகும்.

*பொய்என்று அறவோர் புலம்புறவும் இவ்வுடம்பை*
*மெய்என்று பொய்ம்மயக்கம் மேவினையே - கைநின்று*

*கூகா எனமடவார் கூடி அழல்கண்டும்*
*நீகாதல் வைத்து நிகழ்ந்தனையே - மாகாதல்*

*பெண்டிருந்து மாள்கப் பிணங்கொண்டு செல்வாரைக்*
*கண்டிருந்தும் அந்தோ கலங்கிலையே - பண்டிருந்த*

*ஊரார் பிணத்தின் உடன்சென்று நாம்மீண்டு*
*நீராடல் சற்றும் நினைந்திலையே - சீராக*

*இன்றிருந்தார் நாளைக்கு இருப்பதுபொய் என்றுஅறவோர்*
*நன்றிருந்த வார்த்தையும்நீ நாடிலையே - ஒன்றி*

*'உறங்குவது போலும்'என்ற ஒண்குறளின் வாய்மை*
*மறங்கருதி அந்தோ மறந்தாய்[2] - கறங்கின்*

*'நெருநல் உளன்ஒருவன்'[3] என்னும் நெடுஞ்சொல்*
*மருவும் குறட்பா மறந்தாய் - தெருவில்*

2. *உறங்குவது போலும் சாக்காடு உறங்கி*
*விழிப்பது போலும பிறப்பு (33) - (34 நிலையாமை - 9)*

3. *நெருநல் உளன்ஒருவன் இன்றில்லை என்னும்*
*பெருமை உடைத்துஇவ் வுலகு (336) - மேலது - 6*

*இறந்தார் பிறந்தார் இறந்தார் எனும்சொல்*
*மறந்தாய் மறந்தாய் மறந்தாய் - இறந்தார்*

*பறையோசை அண்டம் படீர்என்று ஒலிக்க*
*மறையோசை அன்றே மறந்தாய் - இறையோன்*

*'புலனைந்தும்'*[4] *என்றருளும் பொன்மொழியை மாயா*
*மலமொன்றி அந்தோ மறந்தாய் - நிலனொன்றி*

*விக்குள் எழநீர் விடுமின் எனஅயலோர்*
*நெக்குருகல் அந்தோ நினைந் திலையே (461-471)*

என்ற கண்ணிகளில் இந்த அறவுரையைக் காணலாம். இன்னும் இப்பகுதி மிகவும் நீளுகிறது. (கண்ணி 496 வரை).

அடுத்து, இறுதிவரை வரும் கண்ணிகள் ஒவ்வொன்றும் தனித்தனிக் கருத்துகள் அற்புதமாய்ச் சொல்லப் பெறுகின்றன. அவை ஒவ்வொன்றையும் ஆழ்ந்து கற்று அசைபோட்டு உணர்ந்தால் வள்ளல் பெருமானின் வான்புகழ் தெளியப்படும். அவர்தம் மனவிரிவும் நுண்ணுணர்வும் அறியப்பெறும். இறுதிக் கண்ணி.

*பாழ்வாழ்வு நீங்கப் பதிவாழ்வில் எஞ்ஞான்றும்*
*வாழ்வாய்என் னோடும் மகிழ்ந்து*

என்று முடிகின்றது. அறிவுறுத்திய நெஞ்சைத் தம்மோடு அன்புடன் இணைத்துக் கொள்ளுகின்றார்.

4. புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
அறிவழிந்திட்(டு) ஐமேல் உந்தி
அலமந்த போதாக அஞ்சேல்என்(று)
அருள்செய்வான் அமருங் கோயில
வலம்வந்த மடவார்கள் நடமாட
முழவதிர மழைஎன்று அஞ்சி
சிலமந்தி அலமாது மரமேறி
முகில்பார்க்கும் திருவை யாறே (சம்பந்.தேவா.1.130:1)

4. **சிவநேச வெண்பா:** இது காப்பு இரண்டும், நூலில் 100 வெண்பாக்களும் கொண்டது. உள்ளத்தை உருக்கிச் சிவனோடு ஐக்கியமாக்கும் பல வெண்பாக்கள் இதில் அடங்கியுள்ளன.

*முன்னவனே யானை முகத்தவனே முத்திநலம்*
*சொன்னவனே தூய்மெய்ச் சுகத்தவனே - என்னவனே*
*சிற்பரனே ஐங்கரனே செஞ்சடையஞ் சேகரனே*
*நற்பரனே நின்தாள் சரண். (1)*

இது விநாயகர்மேல் காப்பாக அமைந்திருப்பது. நூல் இனிது முடிய ஐங்கரனிடம் சரண்புகுந்து வேண்டுகின்றார். அடுத்து வருவது அவன்தம்பி ஆறுமுகத்தான்மீது அமைந்தது.

*வீறுடையாய் வேலுடையாய்*
*விண்ணுடையாய் வெற்புடையாய்*
*நீறுடையாய் நேயர்கடந்*
*நெஞ்சுடையாய் - கூறு*
*முதல்வாழோர் ஆறு*
*முகவா முக்கண்ணன்*
*புதல்வா நின்தாள்என்*
*புகல் (2)*

இதுவும் ஒரு முறையில் முருகனைச் சரண்புகுந்து வேண்டுவது. நூலில் உருக்கமான சில பாடல்களைக் காட்டுவேன்.

*சீர்சான்ற வேதச் செழும்பொருளே சிற்சொரூபப்*
*பேர்சான்ற உண்மைப் பிரமமே - நேர்சான்றோர்*
*நாடும் பரசிவமே நாயேனுக் கன்புநின்பால்*
*நீடும் படிநீ நிகழ்த்து (1)*

இது நூலின் முதற்பாடல் பொருள் வெளிப்படை.

*அப்பகலுன் சித்தம் அறியேன் எனக்கம்மை*
*அப்பாநின் தாளன்றி யார்கண்டாய் - இப்பாரில்*

*சாதிஉரு வாக்குந் தனைஅவிழ்த்துத் தன்மயமாம்*
*சோதிஉரு வாக்குந் துணை (5)*

*தேன்என்ற இன்சொல் தெரிந்துநினைப் பாடுகின்றேன்*
*நான்என்று உரைத்தல் நகைஅன்றோ - வான்நின்ற*
*ஒண்பொருள்நீ உள்ளம் உவந்தருளால் இன்சொல்லும்*
*வன்பொருளும் ஈதல் மறந்து (8)*

*அண்டங்க ளோஅவற்றின் அப்பாலோ இப்பாலோ*
*பண்டங்க லோர்சிற் பரவெளியோ - கண்தங்க*
*வெம்பெருமால் நீத்தவர்தம் மெய்யுளமோ தையலொடும்*
*எம்பெருமான் நீவாழ் இடம் (9)*

இறைவன் எங்கும் நிறைபொருளாக இருப்பவன் என்பதைச் சாற்றுவது.

*பேருருவோ சோதிப் பிழம்பாகும் சின்மயத்தின்*
*சீருருவோ தேவர் திருவுருவம் - நேருருவில்*
*சால்புறச்சேர் அண்ட சராசரங்கள் எல்லாம்நும்*
*கால்விரற்பால் நின்றொடுங்குங் கால் (12)*

உருவமிலா ஒருவனை உருவமாகக் காட்டும் அற்புதப் பாடல் இது.

*ஊட்டுகின்ற வல்வினையாம் உட்கயிற்றால் உள்ளிருந்தே*
*ஆட்டுகின்ற நீதான் அறிந்திலையோ - வாட்டுகின்ற*
*அஞ்சுபுல வேடர்க் கறிவைப் பறிகொடுத்தென்*
*நெஞ்சுபுலர்ந் தேங்கு நிலை (15)*

*வாய்அன்றேல் வெம்மலஞ்செல் வாய்அன்றேல் மாநரக*
*வாய்அன்றேல் வல்வெறிநாய் வாய்என்பால் - தாய்என்றே*
*ஊழ்த்தாதா ஏத்தும் உடையாய் சிவஎன்றே*
*வாழ்த்தாதார் நாற்றப்பாழ் வாய் (24)*

*கண்குன்ழநது வாடும் கடுநரகின் பேருரைக்கில்*
*ஒண்குழந்தை யேனுமுலை உண்ணாதால் - தன்குழைய*

பூண்டாதார்க் கொன்றைப் புரிசடையோய் நின்புகழை
வேண்டதார் வீழ்ந்து விரைந்து (34)

கண்ணுதலே நின்தாள் கருதாரை நேசிக்க
எண்ணுதலே செய்யேன்மற் றெண்ணுவனே - மண்ணுலகில்
ஆமிடத்து நின்அடியார்க் காசையுரைத் தில்லையென்பார்
போமிடத்தில் போவேன் புலர்ந்து (35)

வெள்ளமுதும் தேனும் வியன்கரும்பும் முக்கனியின்
உள்ளமுதும் தெள்ளமுதும் ஒவ்வாதால் - கள்ளமிலா
நின்அன்பர் தம்புகழின் நீள்மதுரந் தன்னைஇனி
என்னென்ப தையா இயல்பு (40)

எங்கோவே யான்புகலி எம்பெருமான் தன்மணத்தில்
அங்கோர் பொருட்சுமையாள் ஆனேனேல் - இங்கேநின்
தாள்வருந்த வேண்டேன் தடைபட்டேன் ஆதலினிந்
நாள்வருந்த வேண்டுகின்றேன் நான் (42)

பூவுக் கரையரும்வான் புங்கவரும் போற்றுதிரு
நாவுக் கரையரெனு நன்னாம் - மேவுற்ற
தொண்டர்க்கு நீகட்குச் சோறெடுத்தாய் என்றறிந்தோ
தொண்டர்க்குத் தொண்டனென்பார் சொல் (43)

முன்மணத்தில் சுந்தரரை முன்வலுவில் கொண்டதுபோல்
என்மணத்தில் நீவந் திடாவிடினும் - நின்கணத்தில்
ஒன்றும் ஒருகணம்வந் துற்றழைக்கில் செய்ததன்றி
இன்றும் ஒருமணம்செய் வேன் (52)

மாதேவா ஓவா மருந்தேவா மாமணிஇப்
போதேவா என்றே புலம்புகின்றேன் - நீதாவா
யானாலும் சித்த மறியேன் உடம்பொழிந்து
போனாலென் செய்வேன் புகல் (59)

வெள்ளைப் பிறைஅணிந்த வேணிப் பிரானேநான்
பிள்ளைப் பிராயத்தில் பெற்றாளை - எள்ளப்

*பொறுத்தாள்அத் தாயில் பொறுப்படையோய் நீதான்*
*வெறுத்தால் இனிஎன்செய் வேன் (67)*

*மாலெங்கே வேதனுயர் வாழ்வெங்கே இந்திரன்செங்*
*கோலொங்கே வானோர் குடியெங்கே - கோலஞ்சேர்*
*அண்டமெங்கே அவ்வவ் வரும்பொருளெங் கேநினது*
*கண்டமங்கே நீலமுறாக் கால் (77)*

*மெய்யாக நின்னைவிட் வேறோர் துணையில்லேன்*
*ஐயா அதுநீ அறிந்ததுகாண் - பொய்யான*
*தீதுசெய்வேன் தன்பிழையைச் சித்தம் குறித்திடில்யான்*
*யாதுசெய்வேன் அந்தோ இனி (82)*

*என்சிறுமை நோக்கா தெனக்கருளல் வேண்டுமென்றே*
*நின்பெருமை நோக்கிஇங்கு நிற்கின்றேன் - என்பெரும*
*யாதோநின் சித்தம் அறியேன் அடியேற்கெப்*
*போதோ அருள்வாய் புகல் (86)*

*கண்ணப்பன் ஏத்துநுதற் கண்ணப்ப மெய்ஞ்ஞான*
*விண்ணப்ப நின்றனக்கோர் விண்ணப்பம் - மண்ணிற்சில்*
*வானவரைப் போற்றும் மதத்தோர் பலருண்டு*
*நானவரைச் சேராமல் நாட்டு (99)*

*பொன்னின் றொளிரும் புரிசடையோய் நின்னையன்றிப்*
*பின்னொன் றறியேன் பிழைநோக்கி - என்னை*
*அடித்தாலு நீயே அணைத்தாலு நீயே*
*பிடித்தேனுன் பொற்பாதப் பேறு (100)*

*இப்பாரில் என்பிழைகள் எல்லாம் பொருத்தருளென்*
*அப்பாநின் தாட்கே அடைக்கலங்காண் - இப்பாரில்*
*நானினது தாள்நீழல் நண்ணுமட்டும் நின்னடியர்*
*பானினது சீர்கேட்கப் பண் (102)*

அனைத்தும் இனிய வெண்பாக்கள். படித்து அநுபவித்து அநுபூதி நிலையைப் பெற முயல்வோமாக.

5. மகாதேவ மாலை: இது நூல் மட்டும் 100 பாடல் களைக் கொண்டது. காப்பு மட்டும் அறுசீர்க் கழிநெடி லடி ஆசிரிய விருத்தத்தாலனது. பாடல்கள் யாவும் 'தேவே' என்று இறுவன. நூலின் பாடல்கள் யாவும் எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பில் அமைந்தவை.

*கருணைநிறைந் தகம்புறமும் துளும்பிவழிந்*
*துயிர்க்கெல்லாம் களைகண் ஆகித்*
*தெருள்நிறைந்த இன்பநிலை வளர்க்கின்ற*
*கண்ணுடையோய் சிறையா ஞானப்*
*பொருள்நிறைந்த மறையமுதம் பொழிகின்ற*
*மலர்வாயோய் பொய்ய னேன்றன்*
*மருள்நிறைந்த மனக்கருங்கல் பாறையும்உட்*
*கசிந்துருக்கும் வடிவத் தோயே!*

என்பது காப்பு. நூலில் சில (பல) பாடல்களைக் காண் போம்.

*உலகநிலை முழுதாகி ஆங்காங் குள்ள*
*உயிராகி உயிர்க்குயிராம் ஒளிதான் ஆகிக்*
*கலகநிலை அறியாத காட்சி ஆகிக்*
*கதியாகி மெய்ஞ்ஞானக் கண்ண தாகி*
*இலகுசிதா காசமதாய்ப் பரமா காச*
*இயல்பாகி இணையொன்றும் இல்லா தாகி*
*அலகில்அறி வானந்த மாகிச் சச்சி*
*தானந்த மயமாகி அமர்ந்த தேவே (1)*

*வித்தாகி முளையாகி விளைவ தாகி*
*விளைவிக்கும் பொருளாகி மேலு மாகிக்*
*கொத்தாகிப் பயனாகிக் கொள்வோ னாகிக்*
*குறைவாகி நிறைவாகிக் குறைவி லாத*
*சத்தாகிச் சித்தாகி இன்ப மாகிச்*
*சதாநிலையாய் எவ்வுயிர்க்கும் சாட்சி யாகி*
*முத்தாகி மாணிக்க மாகித் தெய்வ*
*முழுவயிரத் தனிமணியாய் முளைத்த தேவே (3)*

*இந்தியமாய்க் கரணாதி அனைத்து மாகி*
*இயல்புருட ணாய்க்கால பரமு மாகிப்*
*பந்தமற்ற வீயோமமாய்ப் பரமாய் அப்பால்*
*பரம்பரமாய் விசுவமுண்ட பான்மை யாகி*
*வந்தஉப சாந்தமதாய் மவுன மாகி*
*மகாமவுன நிலையாகி வயங்கா நின்ற*
*அந்தமில்தொம் பதமாய்த்தற் பதமாய் ஒன்றும்*
*அசிபதமாய் அதீதமாய் அமர்ந்த தேவே (7)*

*அண்டங்கள் பலவாகி அவற்றின் மேலும்*
*அளவாகி அளவாத அதீத மாகிப்*
*பிண்டங்கள் அனந்தவகை யாகிப் பிண்டம்*
*பிறங்குகின்ற பொருளாகிப் பேதந் தோற்றும்*
*பண்டங்கள் பலவாகி இவற்றைக் காக்கும்*
*பதியாகி ஆனந்தம் பழுத்துச் சாந்தம்*
*கொண்டெங்கும் நிழல்பரப்பித் தழைந்து ஞானக்*
*கொழுங்கடவுள் தருவாகிக் குலவுந் தேவே (11)*

*உருவாகி உருவினுள் உருவ மாகி*
*உருவத்தில் உருவாகி உருவுள் ஒன்றாய்*
*அருவாகி அருவினில்உள் அருவ மாகி*
*அருவத்தில் அருவாகி அருவுள் ஒன்றாய்க்*
*குருவாகிச் சத்துவசிற் குணத்த தாகிக்*
*குணரகிதப் பொருளாகிக் குலவா நின்ற*
*மருவாகி மலராகி வல்லி யாகி*
*மகத்துவமாய் அணுத்துவமாய் வயங்குந் தேவே (14)*

*மலைமேலும் கடல்மேலும் மலரின் மேலும்*
*வாழ்கின்ற மூவுருவின் வயங்கும் கோவே*
*நிலைமேலும் நெறிமேலும் நிறுத்து கின்ற*
*நெடுந்தவத்தோர் நிறைமேலும் நிகழ்த்தும் வேதக்*
*கலைமேலும் எம்போல்வார் உளத்தின் மேலும்*
*கண்மேலும் தோள்மேலும் கருத்தின் மேலும்*
*தலைமேலும் உயிர்மேலும் உணர்வின் மேலும்*
*தருமன்பின் மேலும்வளர் தாண்மெய்த் தேவே (21)*

விண்ணேவிண் உருவேவிண் முதலே விண்ணுள்
வெளியேஅவ் வெளிவிளங்கு வெளியே என்றன்
கண்ணேகண் மணியேகண் ஒளியே கண்ணுட்
கலந்துநின்ற கதிரேஅக் கதிரின் வித்தே
தண்ணேதண் மதியேஅம் மதியிற் பூத்த
தண்ணமுதே தண்ணமுத சார மேசொல்
பண்ணேபண் ணிசையேபண் மயமே பண்ணின்
பயனேமெய்த் தவர்வாழ்த்திப் பரவும் தேவே (26)

மறைமுடிக்குப் பொறுத்தமுறு மணியே ஞான
வாரிதியே அன்பர்கடம் மனத்தே நின்ற
குறைமுடிக்கும் குணக்குன்றே குன்றா மோனக்
கோமளமே தூயசிவக் கொழுந்தே வெள்ளைப்
பிறைமுடிக்கும் பெருமானே துளவ மாலைப்
பெம்மானே செங்கமலப் பிரானே இந்த
இறைமுடிக்கு மூவர்கட்கு மேலாய் நின்ற
இறையேஇவ் வுருவுமின்றி இருந்த தேவே (33)

அண்டமெலாம் கண்ணாகக் கொளினும் காண்டற்
கணுத்துணையும் கூடாவென் றனந்த வேதம்
விண்டலறி ஓலமிட்டுப் புலம்ப மோன
வெளிக்குள்வெளி யாய்நிறைந்து விளங்கும் ஒன்றே
கண்டவடி வாய்அகண்ட மயமாய் எங்கும்
கலந்துநின்ற பெருங்கருணை கடவு ளேஎம்
சண்டவினைத் தொடக்கறச்சின் மயத்தைக் காட்டும்
சற்குருவே சிவகுருவே சாந்தத் தேவே (43)

உடல்குளிர உயிர்தழைக்க உணர்ச்சி ஓங்க
உளங்கனிய மெய்யன்பர் உள்ளத் தூடே
கடலனைய பேரின்பம் துளும்ப நாளும்
கருணைமலர்த் தேன்பொழியும் கடவுட் காவே
விடலரிய எம்போல்வார் இதயங் தோறும்
வேதாந்த மருந்தளிக்கும் விருந்தே வேதம்

தொடலரிய வெளிமுழுதும் பரவி ஞானச்
சோதிவிரித் தொளிர்கின்ற சோதித் தேவே (45)

பொங்குபல சமயமெனும் நதிக ளெல்லாம்
புகுந்துகலந் திடநிறைவாய்ப பொங்கி ஓங்கும்
கங்குகரை காணாத கடலே எங்கும்
கண்ணாகக் காண்கின்ற கதியே அன்பர்
தங்கநிழல் பரப்பிமயல் சோடை யெல்லாம்
தணிக்கின்ற தருவேபூந் தடமே ஞானச்
செங்குமுத மலரவரு மதியே எல்லாம்
செய்யவல்ல கடவுளே தேவ தேவே (48)

மெய்யுணர்த்த வாதவூர் மலையைச் சுத்த
வெளியாக்கிக் கலந்துகொண்ட வெளியே முற்றும்
பொய்யுணர்த்த எமைப்போல்வார் தமக்கும் இன்பம்
புரிந்தருளும் கருணைவெள்ளம் பொற்பே அன்பர்
கையுறைந்து வளர்நெல்லிக் கனியே உள்ளம்
கரைந்துகரைந் துருகஅவர் கருத்தி னூடே
உய்யுநெறி ஒளிகாட்டி வெளியும் உள்ளும்
ஓங்குகின்ற சுயஞ்சுடரே உண்மைத் தேவே (52).

பேராய அண்டங்கள் பலவும் பிண்ட
பேதங்கள் பற்பலவும் பிண்டாண் டத்தின்
வாராய பலபொருளும் கடலும் மண்ணும்
மலையுளவும் கடலுளவும் மணலும் வானும்
ஊராத வான்மீனும் அணுவும் மற்றை
உள்ளளவும் அளந்திடலாம் ஓகோ உன்னை
ஆராலும் அளப்பரிதென் றளந்த வேதம்
அறைந்திளைக்க அதிதூர மாகுந் தேவே (54)

உருநான்கும் அருநான்கும் நடுவே நின்ற
உருஅருவ மொன்றும்இவை உடல்மேல் உற்ற
ஒருநான்கும் இவைகடந்த ஒன்றுமாய்அவ்
வொன்றினடு வாய்நடுவுள் ஒன்றாய் நின்றே

இருநான்கும் அமைந்தவரை நான்கி னோடும்
எண்ணான்கின் மேலிருந்தும் இறையே மாயைக்
கருநான்கும் பொருள்நான்கும் காட்டு முக்கட்
கடவுளே கடவுளார்கள் கருதும் தேவே (57)

எழுத்தறிந்து தமைஉணர்ந்த யோகர் உள்ளத்
தியலறியாம் தருவினில்அன் பெனுமோர் உச்சி
பழுத்தளித்து மவுனநறுஞ் சுவைமேற் பொங்கிப்
பதம்பொருந்த அநுபவிக்கும் பதமே மாயைக்
கழுத்தரிந்து கருமமலத் தலையை வீசும்
கடுந்தொழிலோர் நமக்கேநற் கருணை காட்டி
விழுத்துணையாய் அமர்ந்தருளும் பொருளே மோன
வெளியினிறை ஆனந்த விளைவாந் தேவே (59)

அருமறையா கமங்கள்முதல் நடுவீ றெல்லாம்
அமைந்தமைந்து மற்றவைக்கும் அப்பா லாகிக்
கருமறைந்த உயிர்கள்தொறும் கலந்து மேவிக்
கலவாமல் பன்னெறியும் கடந்து ஞானத்
திருமணிமன் றகத்தின்ப உருவாய் என்றும்
திகழ்கருணை நடம்புரியும் சிவனே மோனப்
பெருமலையே பரம்இன்ப நிலையே முக்கட்
பெருமானே எத்திறத்தும் பெரிய தேவே (67)

தானாகித் தானல்ல தொன்று மில்லாத்
தன்மையனாய் எவ்வெவைக்கும் தலைவ னாகி
வானாகி வளியனலாய் நீரு மாகி
மலர்தலைய உலகாகி மற்று மாகித்
தேனாகித் தேனினறும் சுவைய தாகித்
தீஞ்சுவையின் பயனாகித் தேடு கின்ற
நானாகி என்னிறையாய் நின்றோய் நின்னை
நாயடியேன் எவ்வாறு நவிற்று மாறே (69)

ஆனேறும் பெருமானே அரசே என்றன்
ஆருயிருக் கொருதுணையே அமுதே கொன்றைத்

தேனேறு மலர்ச்சடைஎஞ் சிவனே தில்லைச்
 செழுஞ்சுடரே ஆனந்தத் தெய்வ மேஎன்
ஊனேறும் உயிர்க்குள்நிறை ஒளியே எல்லாம்
 உடையானே நின்னடிச்சீர் உன்னி அன்பர்
வானேறு நின்றார்நான் ஒருவன் பாவி
 மண்ணேறி மயக்கேறி வருந்துற் றேனே (70)

அன்னையினும் பெரிதினிய கருணை ஊட்டும்
 ஆரமுதே என்உறவே அரசே இந்த
மண்ணுலகில் அடியேனை என்னே துன்ப
 வலையிலகப் படஇயற்றி மறைந்தாய் அந்தோ
பொன்னைமதித் திடுகின்றோர் மருங்கே சூழ்ந்து
 போனகமும் பொய்யுறவும் பொருந்தல் ஆற்றேன்
என்னைஉளங் கொள்ளிதியோ கொள்கி லாயோ
 என்செய்வேன் என்செய்வேன் என்செய் வேனே (72)

மத்தேறி அலைதயிர்போல் வஞ்ச வாழ்க்கை
 மயலேறி விருப்பேறி மதத்தி னோடு
பித்தேறி உழல்கின்ற மனத்தால் அந்தோ
 பேயேறி நலிகின்ற பேதை யானேன்
வித்தேறி விளைவேறி மகிழ்கின் றோர்போல்
 மேலேறி அன்பரெலாம் விளங்கு கின்றார்
ஒத்தேறி உயிர்க்குயிராய் நிறைந்த எங்கள்
 உடையானே இதுதகுமோ உணர்கி லேனே (74)

மதியணிந்த முடிக்கனியே மணியே எல்லாம்
 வல்லஅருட் குருவேநின் மலர்த்தாள் வாழ்த்திக்
கதியணிந்தார் அன்பரெலாம் அடியேன் ஒன்றும்
 கண்டறியேன் கருமத்தால் கலங்கி அந்தோ
பொதியணிந்து திரிந்துழலும் ஏறு போலப்
 பொய்யுலகில் பொய்சுமந்து புலம்பா நின்றேன்
துதியணிந்த நின்னருளென் றனக்கு முண்டோ
 இன்றேனிலிப் பாவியேன் சொல்வ தென்னே (75)

வன்கொடுமை மலநீக்கி அடியார் தம்மை
வாழ்விக்கும் குருவேநின் மலர்த்தாள் எண்ண
முன்கொடுசென் றிடுமடியேன் தன்னை இந்த
மூடமனம் இவ்வுலக முயற்சி நாடிப்
பின்கொடுசென் றழைந்திழுக்கு தந்தோ நாயேன்
பேய்பிடித்த பித்தனைப்போல் பிதற்றா நின்றேன்
என்கொடுமை என்பாவம் எந்தாய் எந்தாய்
என்னுரைப்பேன் எங்குறுவேன் என்செய் வேனே (78)

கற்றவனை தனக்கும்உண வளிக்கும் உன்றன்
கருணைநிலை தனைஅறியேன் கடையேன் இங்கே
எற்றவளை எறும்பேபோல் திரிந்து நாளும்
இளைத்துநின தருள்காணா தெந்தாய் அந்தோ
பெற்றவளைக் காணாத பிள்ளை போலப்
பேதுறுகின் றேன்செய்யும் பிழையை நோக்கி
இற்றவளைக் கேள்விடல்போல் விடுதி யேல்யான்
என்செய்வேன் எங்குறுவேன் என்சொல் வேனே (81)

எனையறியாப் பருவத்தே ஆண்டு கொண்ட
என்னரசே என்குருவே இறையே இன்று
மனையறியாப் பிழைகருது மகிழ்நன் போல
மதியறியேன் செய்பிழையை மனத்துட் கொண்டே
தனையறியா முகத்தவர்போல் இருந்தாய் எந்தாய்
தடங்கருணைப் பெருங்கடற்குத் தகுமோ கண்டாய்
அனையறியார் சிறுகுழவி யாகி இங்கே
அடிநாயேன் அரற்றுகின்றேன் அந்தோ அந்தோ (85)

எம்பெருமன் நின்விளையாட் டென்சொல் கேன்நான்
ஏதுமறியாச் சிறியேன் எனைத்தான் இங்கே
செம்புனலால் குழைந்தபுலால் சுவர்சூழ் பொத்தைச்
சிறுவீட்டில் இருட்டறையில் சிறைசெய் தந்தோ
கம்பமுறப் பசித்தழலும் கொளுந்த அந்தக்
கரணமுதல் பொறிபுலப்பேய் கவர்ந்து சூழ்ந்து

வம்பியற்றக் காமாதி அரட்டர் எல்லாம்
மடிபிடித்து வருத்தவென்றோ வளர்த்தாய் எந்தாய் (87)

கண்ணுடைய நுதற்கரும்பே மன்றில் ஆடும்
காரணகா ரியங்கடந்த கடவு ளேநின்
தண்ணுடைய மலரடிக்கோர் சிறிதும் அன்பு
சார்ந்தேனோ செம்மரம்போல் தணிந்த நெஞ்சேன்
பெண்ணுடைய மயலாலே சுழல்கின் றேன்என்
பேதைமையை என்புகல்வேன் பேய னேனைப்
புண்ணுடைய புழுவிரும்பும் புள்ளென் கேனோ
புலைவிழைந்து நிலைவெறுத்தேன் புலைய னேனே (89)

பொன்மலையோ சிறிதெனப்பே ராசை பொங்கிப்
புவிநடையில் பற்பலகால் போந்து போந்து
நென்மலையோ நிதிமலையோ என்று தேடி
நிலைகுலைந்த தன்றிஉனை நினைந்து நேடி
மன்மலையோ மாமணியோ மருந்தோ என்று
வழுத்தியதே இல்லைஇந்த வஞ்ச நெஞ்சம்
கன்மலையோ இரும்போசெம் மரமோ பாறைக்
கருங்கல்லோ பராய்முருட்டுக் கட்டை யேயோ (92)

கண்மயக்கும் பேரிருட்டுக் கங்குற் போதில்
கருத்தறியாச் சிறுவனைஓர் கடுங்கா னத்தே
உண்மயக்கம் கொளவிடுத்தே ஒருவன் பின்போம்
ஒருதாய்போல் மாயைஇருள் ஓங்கும் போதின்
மண்மயக்கம் பெறும்விடயக் காட்டில் அந்தோ
மதியிலேன் மாழாந்து மயக்க நீதான்
வண்மையுற்ற நியதியின்பின் என்னை விட்டே
மறைந்தனையே பரமேநின் வண்மை என்னே (95)

நற்றாயும் பிழைகுறிக்கக் கண்டோம் இந்த
நானிலத்தே மற்றவர்யார் நாடார் வீணே
பற்றாயும் அவர்தமைநாம் பற்றோம் பற்றில்
பற்றாத பற்றுடையார் பற்றி உள்ளே

*உற்றாயும் சிவபெருமன் கருணை ஒன்றே*
*உறுபிழைகள் எத்துணையும் பொறுப்ப தென்றுன்*
*பொற்றாளை விரும்பியது மன்று ளாடும்*
*பொருளேஎன் பிழையனைத்தும் பொறுக்க வன்றே (96)*

*அன்பர்திரு உளங்கோயி லாகக் கொண்டே*
*அற்புதச்சிற் சபையோங்கும் அரசே இங்கு*
*வன்பரிடைச் சிறியேனை மயங்க வைத்து*
*மறைந்தனையே ஆனந்த வடிவோய் நின்னைத்*
*துன்பவடி வுடைப்பிறரில் பிரிந்து மேலோர்*
*துரியவடி வினனென்று சொன்ன வெல்லாம்*
*இன்பவடி வடைந்தன்றே எந்தாய் அந்தோ*
*எள்ளளவென் சொல்கேனிவ் வேழை யேனே. (98)*

*அருளுடைய பரம்பொருளே மன்றி லாடும்*
*ஆனந்தப் பெருவாழ்வே அன்பு ளோர்தம்*
*தெருளுடைய உளமுழுதும் கோயில் கொண்ட*
*சிவமேமெய் அறிவுருவாம் தெய்வ மேஇம்*
*மருளுடைய மனப்பேதை நாயி னேன்செய்*
*வன்பிழையைச் சிறிதேனும் மதித்தி யாயில்*
*இருளுடைய பவக்கடல்விட் டேறேன் என்னை*
*ஏற்றுவதற் கெண்ணுகஎன் இன்பத் தேவே (100)*

எதை விடுவது என்று அறிய முடியாத நிலை. ஏதோ என் உள்ளங்கவர்ந்தவற்றை மட்டிலும்தான் ஈண்டு எடுத்துக் காட்டியுள்ளேன். இவற்றை நம் நெஞ்சு நெக்குவிடப் பாடி அநுபவித்தால் வள்ளலாரின் திருவுள் ளத்துடன் நம் உள்ளமும் கலந்து மகிழ வாய்ப்பு ஏற்படும்.

6. திருவருள் முறையீடு: கட்டளைக் கலித்துறையாப் பில் அமைந்த 232 பாடல்களைக் கொண்டது இப்பகுதி. தம் குறைகளிருப்பினும் அவற்றைக் களைந்து தம்மை உய்யும் நெறியில் செலுத்துமாறு திருவருளை வேண்டு கின்றார் அடிகள். இதில் சில பல பாடல்களைக் காட்டு வேன்.

*தண்டாத சஞ்சலம் கொண்டேன்*
*நிலையைஇத் தாரணியில்*
*கண்டார் இரங்குவர் கேட்டார்*
*உருகுவர் கங்கைதிங்கள்*
*துண்டார் மலர்ச்சடை எந்தாய்*
*இரங்கிலை தூய்மையிலா*
*அண்டார் விழையும் பொறுப்போய்*
*இதுநின் அருட்கழகே (3)*

*நான்படும் பாடு சிவனே*
*உலகர் நவிலும்பஞ்சு*
*தான்படு மோசொல்லத் தான்படு*
*மோஎண்ணத் தான்படுமோ*
*கான்படு கண்ணியின் மான்படு*
*மாறு கலங்கிநின்றேன்*
*ஏன்படு கின்றனை என்றிரங்*
*காய்என்னில் என்செய்வேனே (9)*

*தேன்சொல்லும் வாய்மை பாகாநின்*
*தன்னைத் தெரிந்தடுத்தோர்*
*தான்சொல்லும் குற்றம் குணமாகக்*
*கொள்ளும் தயாளுவென்றே*
*நான்சொல்வ தென்னைபொன் நாண்சொல்லும்அவ்*
*வாணிதன் நாண்சொல்லும்அவ்*
*வான்சொல்லும் எம்மலை மான்சொல்லும்*
*கைம்மலை மான்சொல்லுமே (11)*

*அருளறி யாச்சிவ தேவருந்*
*தம்மை அடுத்தவர்கட்(கு)*
*இருளறி யாவிளக்கு என்றாலும்*
*நெஞ்சும் இரங்குகின்றார்*
*மருள்அறி யாப்பெருந் தேவேநின்*
*தன்னடிவந்தடுத்தேன்*

*தெருளறி யாச்சிறி யேன்ஆயி*
*னும்செய்க சீர்அருளே (21)*

*வாளேய் நெருங்கண்ணி எம்பெரு*
*மாட்டி வருடுமலர்த்*
*தாளே வருந்த மணிக்கூடற்*
*பாணன் தனக்கடிமை*
*ஆளே எனவிற கேற்றுவிற்*
*றோய்நின் னருள்கிடைக்கும்*
*நாளேநன் னாள்அந்த நாட்கா*
*யிரந்தெண்டன் நான்செய்வனே (26)*

*நெறிகொண்ட நின்னடித் தாமரைக்*
*காட்பட்டு நின்றஎன்னைக்*
*குறிகொண்ட வாழ்க்கைத் துயராம்*
*பெரிய கொடுங்கலிப்பேய்*
*முறிகொண் டலைக்க வழக்கோ*
*வளர்த்த முடக்கிழநாய்*
*வெறிகொண்ட தேனும் விடத்துணி*
*யார்இவ் வியனிலத்தே (36)*

*சேல்வைக்கும் கண்ணுமை பாகாநின்*
*சித்தம் திருவருள்என்*
*பால்வைக்கு மேல்இடர் எல்லாம்*
*எனைவிட்டப் பால்நடக்கக்*
*கால்வைக்கு மேநற் சுகவாழ்வென்*
*மீதினில் கண்வைக்குமே*
*மால்வைக்கும் மாயைகள் மண்வைக்கு*
*மேதங்கள் வாய்தனிலே (43)*

*மான்எழுந் தாடும் கரத்தோய்நின்*
*சாந்த மனத்தில்சினந்*
*தான்எழுந் தாலும் எழுகஎன்*
*றேஎன் தளர்வைஎல்லாம்*

ஊன்எழுந் தார்க்கநின் பால்உரைப்
பேன்அன்றி ஊர்க்குரைக்க
நான்எழுந் தாலும்என் நாஎழு
மோமொழி நல்கிடவே (49)

மருப்பா வனத்துற்ற மாணிக்கு
மன்னன் மனமறிந்தோர்
திருப்பா சுரம்செய்து பொற்கிழி
ஈந்தநின் சீர்நிறைந்தே
விருப்பா நினையடுத் தேன்எனக்
கீந்திடவே இன்றென்னை
கருப்பாநின் சித்தம் திருப்பாய்என்
மீது கறைகண்டனே (54)

வாய்மூடிக் கொல்பவர் போலேஎன்
உள்ளத்தை வன்துயராம்
பேய்மூடிக் கொண்டதென் செய்கேன்
முகத்தில் பிறங்குகையைச்
சேய்மூடிக் கொண்டுநற் பாற்கழக்
கண்டும் திகழ்முலையைத்
தாய்மூடிக் கொள்ளுவ துண்டோ
அருளுக சங்கரனே (62)

சினத்தாலும் காமத்தி னாலும்என்
தன்னைத் திகைப்பிக்கும்இம்
மனத்தால் உறுந்துயர் போதாமை
என்றுமதித் துச்சுற்றும்
இனத்தாலும் வாழ்க்கை இடும்பையி
னாலும் இளைக்கவைத்தாய்
அனந்தான் புகழும் பதத்தோய்
இதுநின் அருட்கழகே (66)

மெய்விட்ட வஞ்சக நெஞ்சால்
படுந்துயர் வெந்நெருப்பில்

நெய்விட்ட வாறிந்த வாழ்க்கையின்
வாதனை நேரிட்டதால்
பொய்விட்ட நெஞ்சுறும் பொற்பதத்
தையஇப் பொய்யனைநீ
கைவிட் டிடநினை யேல்அருள்
வாய்கரு ணைக்கடலே (70)

பொறுத்தாலும் நான்செயும் குற்றங்கள்
யாவும் பொறாதெனைநீ
ஒறுத்தாலும் நன்றினிக் கைவிட்டி
டேல்என் னுடையவன்நீ
வெறுத்தாலும் வேறிலை வேற்றோர்
இடத்தை விரும்பிஎன்னை
அறுத்தாலும் சென்றிட மாட்டேன்
எனக்குன் அருளிடமே. (79)

வான்மா றினுமொழி மாறாத
மாறன் மனம்களிக்கக்
கான்மாறி யாடிய கற்பக
மேநின் கருணையென்மேல்
தான்மா றினும்விட்டு நான்மாறி
டேன்பெற்ற தாய்க்குமுலைப்
பான்மாறி னும்பிள்ளை பான்மாறு
மோஅதில் பல்லிடுமே (92)

முன்மழை வேண்டும் பருவப்
பயிர்வெயில் மூடிக்கெட்ட
பின்மழை பேய்ந்தென்ன பேறுகண்
டாய்அந்தப் பெற்றியைப்போல்
நின்மழை போற்கொடை இன்றன்றி
மூப்பு நெருங்கியக்கால்
பொன்மழை பேய்ந்தென்ன கன்மழை
பேய்ந்தென்ன பூரணனே (97)

*அம்மா வயிறெரிக் காற்றேன்
எனநின் றழுதலறச்
சும்மாஅச் சேய்முகம் தாய்பார்த்
திருக்கத் துணிவன்கொலோ
இம்மா நிலத்தமு தேற்றாயி
னுந்தந் திடுவள்முக்கண்
எம்மான்இங் கேழை அழுமுகம்
பார்த்தும் இரங்கிலையே (110)*

*கண்கொண்ட நெற்றியும் கார்கொண்ட
கண்டமும் கற்பளிக்கும்
பெண்கொண்ட பாகமும் கண்டேன்முன்
மாறன் பிரம்படியால்
புண்கொண்ட மேனிப் புறங்கண்டி
லேன்அப் புறத்தைக்கண்டால்
ஒண்கொண்ட கல்லும் உருகும்என்
றோஇங் கொளித்தனையே (121)*

*சொற்றுணை வேதியன் என்றும்
பதிகச் சுருதியைநின்
பொற்றுணை வார்கழற் கேற்றியப்
பொன்னடிப் போதினையே
நற்றுணை யாக்கரை ஏறிய
புண்ணிய நாவரசைக்
கற்றுணை யாதிந்தக் கற்றுணை
யாமென் கடைநெஞ்சமே (132)*

*துடிவைத்த செங்கை அரசேநல்
லூரில்நின் தூமலர்ப்பொன்
அடிவைத்த போதெங்கள் அப்பர்தம்
சென்னி யதுகுளிர்ந்தெப்
படிவைத்த தோஇன்ப மியான்எணுந்
தோறும்இப் பாவிக்குமால்*

*குடிவைத்த புன்தலை ஒன்றோ*
*மனமும் குளிர்கின்றதே (151)*

*பிட்டுக்கும் வந்துமுன் மண்சுமந்*
*தாயென்பர் பித்தனென்ற*
*திட்டுக்கும் சீரருள் செய்தளித்*
*தாயென்பர் தீவிறகுக்*
*கட்டுக்கும் பொன்முடி காட்டிநின்*
*றாயென்பர் கண்டிடஎன்*
*மட்டுக்கும் வஞ்சகத் தெய்வமென்*
*கோமுக்கண் மாணிக்கமே (156)*

*சேலுக்கு நேர்விழி மங்கைபங்*
*காஎன் சிறுமதிதான்*
*மேலுக்கு நெஞ்சையுட் காப்பது*
*போல்நின்று வெவ்விடய*
*மாலுக்கு வாங்கி வழங்கவும்*
*தான்சம் மதித்ததுகாண்*
*பாலுக்கும் காவல்வெம் பூனைக்கும்*
*தோழன்என் பார்இதுவே (168)*

*வண்டுகொண் டார்நறுங் கொன்றையி*
*னான்றன் மலரடிக்குத்*
*தொண்டுகொண் டார்தஞ் சுகத்துக்கும்*
*வாழ்க்கைச் சுழலிற்றள்ளும்*
*பெண்டுகொண் டார்தம் துயருக்கும்*
*ஒப்பின்று பேசில்என்றே*
*கண்டுகொண் டாய்இனி நெஞ்சேநின்*
*உள்ளக் கருத்தெதுவே. (179)*

*தேரோங்கு காழிக்கண் மெய்ஞ்ஞானப்*
*பாலுண்ட செம்மணியைச்*
*சீரோங்கு முத்துச் சிவிகையின்*
*மேல்வைத்த தேவஉன்றன்*

பேரோங்கும் ஐந்தெழுத் தன்றோ
படைப்பைப் பிரமனுக்கும்
ஏரோங்கு காப்பைத் திருநெடு
மாலுக்கும் ஈந்ததுவே (191)

கடும்புல வேடர்கள் ஓரைவர்
இந்தியக் கள்வரைவர்
கொடுங்கர ணத்துட்டர் நால்வர்கள்
வன்மலக் கோளரைவர்
அடும்படை கோடிகொண் டுற்றார்மற்
றேழையன் யானொருவன்
இடும்படை யாதுமி லேன்வெல்வ
தெங்ஙன் இறையவனே (206)

நான்முகத் தோனும் திருநெடு
மாலுமெய்ஞ் ஞானமென்னும்
வான்முகக் கண்கொண்டு காணாமல்
தம்உரு மாறியும்நின்
தேன்முகக் கொன்றை முடியும்செந்
தாமரைச் சேவடியும்
ஊன்முகக் கண்கொண்டு தேடிநின்
றார்சற் றுணர்விலரே (212)

இலங்கா புரத்தன் இராக்கதர்
மன்னன் இராவணன்முன்
மலங்காநின் வெள்ளி மலைக்கீ
ழிருந்து வருந்தநின்சீர்
கலங்காமல் பாடிடக் கேட்டே
இரங்கிக் கருணைசெய்த
நலங்காணின் தன்மைஇன் றென்னள
வியாண்டையின் நண்ணியதே (217)

புரிகின்ற வீட்டகம் போந்தடி
பட்டுப் புறங்கடையில்

*திரிகின்ற நாய்க்கும் சிரிப்பாம்என்*
*பாவிச் சிறுபிழைப்பைச்*
*சொரிகின்ற புண்ணில் கனலிடல்*
*போலெணுந் தோறுநெஞ்சம்*
*எரிகின்ற தென்செய்கு வேன்பிறை*
*வார்சடை என்னமுதே (223)*

*இறையேற்று துன்பக் குடும்ப*
*விகார இருட்கடலில்*
*புரையேற்று நெஞ்சம் புலர்ந்துநின்*
*றேனைப் பொருட்படுத்திக்*
*கரையேற்ற வேண்டுமென் கண்ணே*
*பவத்தைக் கடிமருந்தே*
*திரையேற்று செஞ்சடைத் தேவே*
*அமரர் சிகாமணியே (232)*

இப்பாடல்கள் யாவும் பாடிய வாய் தேனூறும் பான்மையன. பாடியவர்களை அநுபூதி நிலையை எய்தச் செய்து பரத்தின் திருவடிகளை எட்டும்படிச் செய்வன.

7. **சிகாமணி மாலை:** பதினைந்து பாடல்களைக் கொண்ட இம்மாலை புள்ளிருக்கு வேளூரில் எழுந்தருளி யிருக்கும் வைத்திய நாதர் புகழ்பாடுவதாகக் கட்டளைக் கலித்துறையாப்பில் அமைந்தது. இந்தப் பெருமானைக் காளமேகப் புலவர்,

*'மருகிருக்கும் வேளூரில் வைத்திமகன்*
*குறமகளை மணந்தான் என்று*
*உருகியரன் நஞ்சுண்டான்'*

என்று கற்பனை நயந்தோன்றக் குறிப்பிடுவர். இப்பெருமான் பற்றிய பாடல்களில் ஒரு சிலவற்றில் ஆழங்கால் பட்டு அநுபவிப்போம்.

வல்வினை யேனைஇவ் வாழ்க்கைக்
　　கடல்நின்றும் வள்ளல்உன்தன்
நல்வினை வாழ்க்கைக் கரைஏற்றி
　　மெய்அருள் நல்குகண்டாய்
கொல்வினை யானை உரித்தோல்
　　வயித்திய நாத குன்றார்
செல்வினை மேலவர் வாழ்வே
　　அமரர் சிகாமணியே (1)

கல்லேன் மனக்கருங் கல்லேன்
　　சிறிதும் கருத்தறியாப்
பொல்லேன்பொய் வாஞ்சித்த புல்லேன்
　　இரக்கம் பொறைசிறிதும்
இல்லேன் எனினும்நின் பால்அன்றி
　　மற்றை இடத்தில்சற்றும்
செல்லேன் வயித்திய நாதா
　　அமரர் சிகாமணியே (3)

நானே நினக்குப் பணிசெயல்
　　வேண்டும்நின் நாள்மலர்த்தாள்
தானே எனக்குத் துணைசெயல்
　　வேண்டும் தயாநிதியே
கோனே கரும்பின் சுவையேசெம்
　　பாலொடு கூட்டுநறும்
தேனே வயித்திய நாதா
　　அமரர் சிகாமணியே (5)

ஐவாய் அரவில் துயில்கின்ற
　　மாலும் அவனும்தங்கள்
கைவாய் புதைத்தும் பணிகேட்க
　　மேவும்முக் கண்அரசே
பொய்வாய் விடாஇப் புலையேன்
　　பிழையைப் பொறுத்தருள்நீ

*செய்வாய் வயித்திய நாதா*
*அமரர் சிகாமணியே (8)*

*ஊன்கொண்ட தேகத்தும் உள்ளத்தும்*
*மேவி உறும்பிணியால்*
*நான்கொண்ட துன்பம் தவிர்ப்பாய்*
*வயித்திய நாதஎன்றே*
*வான்கொண்ட நின்அருள் சீரேத்து*
*கின்ற வகைஅறியேன்*
*தேன்கொண்ட கொன்றைச் சடையாய்*
*அமரர் சிகாமணியே (13)*

*மால்விடை மேற்கொண்டு வந்தெளி*
*யேனுடை வல்வினைக்கு*
*மேல்விடை ஈந்திட வேண்டுங்கண்*
*டாய்இது வேசமயம்*
*நீல்விட முண்ட மிடற்றாய்*
*வயித்திய நாதநின்பால்*
*சேல்விடு வாட்கண் உமையொடும்*
*தேவர் சிகாமணியே (15)*

எல்லாப் பாடல்களும் 'சிகாமணியே' என்று இறுகின்றன என்பது நோக்கத்தக்கது. பாசுரங்களை உளந் தோய்ந்து ஈடுபட்டுப் பாடி அநுபவித்தால் அவை வள்ளல் பெருமான் எட்டிய அநுபூதி நிலையை எட்ட முடியும் என்பது அடியேனின் அதிராத நம்பிக்கை.

இப்புள்ளிருக்கும் வேளூர் பற்றி 12 பாடல் கொண்ட, பன்னிரு சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தால் அமைந்த பகுதி ஒன்றும் (8), 'சிந்து' மெட்டில் அமைந்த 29 பாடல்களைக் கொண்ட 'நல்ல மருந்து' என்ற தலைப்பில் (9) நடைபெறும் பகுதி ஒன்றும் உள்ளது.

9. நல்ல மருந்து: இப்பகுதி

*நல்ல மருந்திம் மருந்து - சுகம்*
*நல்கும் வைத்திய நாத மருந்து*

என்ற 'பல்லவி'யில் தொடங்கி அதே 'பல்லவி'யில் முடிகின்றது. 29 கண்ணிகளைக் கொண்டது இப்பகுதி. 'சிந்து' என்று சொல்லும்போதே அண்ணாமலை ரெட்டி யார் 'காவடிச் சிந்து' நம்மனத்தில் எழுகின்றது. சிந்துக் குத் தந்தையல்லவா அவர்? சில கண்ணிகளைக் காட்டு வேன்.

*அருள்வடி வான மருந்து - நம்முன்*
*அற்புத மாக அமர்ந்த மருந்து*
*இருளற வோங்கும் மருந்து - அன்பர்க்*
*கின்புரு வாக இருந்த மருந்து* *நல்ல (1)*

*பிறப்பை யொழிக்கு மருந்து டயார்க்கும்*
*பேசப் படாத பெரிய மருந்து*
*இறப்பைத் தவிர்க்கும் மருந்து - என்னுள்*
*என்று மதுரித் தினிக்கு மருந்து* *நல்ல (4)*

*புத்தமு தாகு மருந்து - பார்த்த*
*போதே பிணிகளைப் போக்கு மருந்து*
*பத்த ரருந்து மருந்து - அநு*
*பானமுந் தாணாம் பரம மருந்து* *நல்ல (6)*

*அம்பலத் தாடு மருந்து - பர*
*மாநந்த வெள்ளத் தழுந்து மருந்து*
*எம்பல மாகு மருந்து - வேளூர்*
*என்னும் தலத்தி லிருக்கு மருந்து* *நல்ல (9)*

*ஆர்க்கு மரிதா மருந்து - தானே*
*ஆதி யநாதியு மான மருந்து*
*சேர்க்கும் புநித மருந்து - தன்னைத்*
*தேடுவோர் தங்களை நாடு மருந்து* *நல்ல (11)*

*கோதிலா தோங்கு மருந்து - அன்பர்*
*கொள்ளைகொண் டுண்ணக் குலாவு மருந்து*
*மாதொரு பாக மருந்து - என்னை*
*வாழ்வித்த என்கண் மணியா மருந்து நல்ல (15)*

*கோமளங் கூடு மருந்து - நலங்*
*கொடுக்கத் துசங்கட்டிக் கொண்ட மருந்து*
*நாமள வாத மருந்து - நம்மை*
*நாமறி யும்படி நண்ணு மருந்து நல்ல (17)*

*பெண்ணாசை தீர்க்கு மருந்து - பொருட்*
*பேராசை யெல்லாம் பிளக்கு மருந்து*
*மண்ணாசை தீர்க்கு மருந்து - எல்லாம்*
*வல்ல மருந்தென்று வாழ்த்து மருந்து நல்ல (20)*

*மறந்தா லொளிக்கு மருந்து - தன்னை*
*மறவா தவருள் வழங்கு மருந்து*
*இறந்தா லெழுப்பு மருந்து - எனக்*
*கென்றுந் துணையா யிருக்கு மருந்து நல்ல (26)*

*மூவர்க் கரிய மருந்து - செல்வ*
*முத்துக் குமாரனை யீன்ற மருந்து*
*நாவிற் கினிய மருந்து - தையல்*
*நாயகிக் கண்டு தழுவு மருந்து நல்ல (29)*

*நல்ல மருந்திம் மருந்து - சுகம்*
*நல்கும் வைத்திய நாத மருந்து*

உலகிலுள்ள மருந்து வகைகள் யாவும் உடலில் நேரிடும் பிணிகளை எல்லாம் தீர்க்கும். சில பிணிகளைத் தீர்க்காமலும் போகலாம். ஆனால், அம்பலத்தாடும் அருமருந்து, அடிகளாரின் கருத்துப்படி பிறவிப் பிணியைத் தீர்க்கும் மருந்தாகும்; தப்பாமல் தீர்க்கும் மருந்துமாகும்.

10. திருவாரூர்ப் பதிகம்: சோழ நாட்டுச் சிவத்தலங்களுள் ஒன்று; மிகு புகழ் வாய்ந்தது. மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றாலும் சிறந்தது. இங்குள்ள தியாகராசர் சந்நிதி புகழ் வாய்ந்தது. ஆரூர் அண்ணல் சுந்தரருக்கு உதவிய செயல்கள் மிகு புகழ் வாய்ந்தவை. திருமுறைகளில் மிகுதியான பாசுரங்கள் இத்திருத்தலத்திற்கே உண்டு. இத்தலத்தின்மீது அடிகளார் பாடியுள்ள பதிகம் அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பில் அமைந்த பத்துப் பாடல்களைக் கொண்டது. சில பாடல்களில் ஆழங்கால் படுவோம்.

*தண்ணார் மதிபோல் சீதள வெண்*
*தரளக் கவிகைத் தனிநிழற்கீழ்க்*
*கண்ணார் செல்வச் செருக்கிளர்தம்*
*களிப்பில் சிறிய கடைநாயேன்*
*பெண்ணார் பாகப் பெருந்தகைதன்*
*பெரிய கருணைக் குரியம்என்றே*
*எண்ணா நின்று களிக்கின்றேன்*
*ஆரூர் எந்தாய் இரங்காயே. (1)*

*மணியார் கண்டத்து எண்தோள்செவ்*
*வண்ணப் பவள மாமலையே*
*அணியால் விளங்கும் திருஆரூர்*
*ஆரா அமுதே அடிச்சிறியேன்*
*தணியா உலகச் சழக்கிடையே*
*தளர்ந்து கிடந்து தவிக்கின்றேன்.*
*திணியார் முருட்டுக் கடைமனத்தேன்*
*செய்வ தொன்றும் தெரியேனே. (3)*

*கருணைக் கடலே திருஆரூர்க்*
*கடவுட் சுடரே நின்னுடைய*
*அருணக் கமல மலரடிக்கே*
*அடிமை விழைந்தேன் அருளாயேல்*

*வருணக் கொலைமா பாதகனாம்*
*மறையோன் தனக்கு மகிழ்ந்தன்று*
*தருணக் கருணை அளித்தபுகழ்*
*என்னாம் இந்நாள் சாற்றுகவே. (6)*

*உள்ளக் கவலை ஒருசிறிதும்*
*ஒருநா ளேனும் ஒழிந்திடவும்*
*வெள்ளக் கருணை இறையேனும்*
*மேவி விடவும் பெற்றறியேன்*
*கள்ளக் குரங்காய் உழல்கின்ற*
*மனத்தேன் எனினும் கடையேனைத்*
*தள்ளத் தகுமோ திருஆரூர்த்*
*எந்தாய் எந்தாய் தமியேனே. (8)*

*இருப்பு மனத்துக் கடைநாயேன்*
*என்செய் வேன்நின் திருஅருளாம்*
*பொருப்பில் அமர்ந்தார் அடியர்எலாம்*
*அந்தோ உலகப் புலைஒழுக்காம்*
*திருப்பில் சுழன்று நான்ஒருவன்*
*திகைக்கின் றேன்ஓர் துணைகாணேன்*
*விருப்பில் கருணை புரிவாயோ*
*ஆரூர் தண்ணார் வியன்அமுதே. (10)*

பாடல்களை உள்ளம் உருகிச் சேவித்தால் அடிகளாரின் அநுபவத்தை நாமும் பெறலாம்.

12. **கலைமகள் வாழ்த்து:** நாவின் கிழத்தியை அடிகளார் மூன்று பாடல்களால் வாழ்த்துகிறார். பாக்கள் அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பில் அமைந்தவை. அவற்றுள் ஒன்று:

*கலைபயின்ற உளத்தினிக்கும் கரும்பிணைமுக்*
*கனியைஅருட் கடலை ஓங்கும்*
*நிலைபயின்ற முனிவரரும் தொழுதேத்த*
*நான்முகனார் நீண்ட நாவின்*

*தலைபயின்ற மறைபயின்று மூவுலகும்*
*காக்கின்ற தாயை வாகைச்*
*சிலைபயின்ற நுதலாளைக் கலைவாணி*
*அம்மையைநாம் சிந்திப் போமே. (3)*

என்பது மூன்றாம் பாடல்.

13. பழமலைப் பதிகம்: இது அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பாலான பத்துப் பாடல்களைக் கொண்டது. பழமலை - விருத்தாசலம். பாடல்கள் யாவும் 'கண்டேனே' என்று முடிகின்றன. சில பாடல் களில் ஆழங்கால் படுவோம்.

*திருமால் கமலத் திருக்கண்மலர்*
*திகழு மலர்த்தாட் சிவக்கொழுந்தைக்*
*கருமா லகற்றும் தனிமருந்தைக்*
*கனக சபையிற் கலந்தஒன்றை*
*அருமா மணியை ஆரமுதை*
*அன்பை அறிவை அருட்பெருக்கைக்*
*குருமா மலையைப் பழமலையிற்*
*குலவி யோங்கக் கண்டேனே (1)*

*வான நடுவே வயங்குகின்ற*
*மவுன மதியை மதிஅமுதைத்*
*தேனை அளித்த பழச்சுவையைத்*
*தெய்வ மணியைச் சிவபதத்தை*
*ஊனம் அறியார் உளத்தொளிரும்*
*ஒளியை ஒளிக்கும் ஒருபொருளை*
*ஞான மலையைப் பழமலைமேல்*
*நண்ணி விளங்கக் கண்டேனே. (2)*

*இளைத்த இடத்தில் உதவிஅன்பர்*
*இடத்தே இருந்த ஏமவைப்பை*

*வளைத்த மதின்மூன் றெரித்தருளை*
*வளர்த்த கருணை வாரிதியைத்*
*திளைத்த யோகர் உளத்தோங்கித்*
*திகழும் துரியா தீதமட்டுங்*
*கிளைத்த மலையைப் பழமலையிற்*
*கிளர்ந்து வயங்கக் கண்டேனே! (4)*

*கருணைக் கடலை அக்கடலிற்*
*கலந்த அமுதை அவ்வமுதத்*
*தருணச் சுவையை அச்சுவையிற்*
*சார்ந்த பயனைத் தனிச்சுகத்தை*
*வருணப் பவளப் பெருமலையை*
*மலையிற் பச்சை மருந்தொருபால்*
*பொருணச் சுறவே பழமலையிற்*
*பொருந்தி யோங்கக் கண்டேனே. (7)*

*நல்ல மனத்தே தித்திக்க*
*நண்ணும் கனியை நலம்புரிந்தென்*
*அல்லல் அகற்றும் பெருவாழ்வை*
*அன்பால் இயன்ற அருமருந்தைச்*
*சொல்ல முடியாத் தனிச்சுகத்தைத்*
*துரிய நடுவே தோன்றுகின்ற*
*வல்ல மலையைப் பழமலையில்*
*வயங்கி யோங்கக் கண்டேனே. (9)*

பாடல்களை ஈடுபட்டுப் பாடி அநுபவிக்கும் பொழுது பக்திச் சுவை ததும்பும்; அடிகளாரின் மனத்துடன் ஒன்றி வாழும் நிலையை எய்தவும் முடியும்.

14. பழமலையோ கிழமலையோ: இத்தலைப்பின் கீழ் இரண்டு எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தங்களும், ஒரு நேரிசை வெண்பாவும் அடக்கம்.

*ஆதிமலை அனாதிமலை அன்புமலை எங்கும்*
*ஆனமலை ஞானமலை ஆனந்த மலைவான்*
*சோதிமலை துரியமலை துரியமுடிக் கப்பால்*
*தோன்றுமலை தோன்றாத சூதான மலைவெண்*
*பூதிமலை சுத்தஅநு பூதிமலை எல்லா*
*பூத்தமலை வல்லியெனப் புகழுமலை தனையோர்*
*பாதிமலை முத்தரெல்லாம் பற்றுமலை என்னும்*
*பழமலையைக் கிழமலையாய்ப் பகருவதென் உலகே (1)*

*சாக்கியனார் எறிந்தசிலை சகித்தமலை சித்த*
*சாந்தர்உளஞ் சார்ந்தோங்கித் தனித்தமலை சபையில்*
*தூக்கியகா லொடுவிளங்கும் தூயமலை வேதம்*
*சொன்னமலை சொல்லிறந்த துரியநடு மலைவான்*
*ஆக்கியளித் தழிக்குமலை அழியாத மலைநேல்*
*அன்பருக்கின் பந்தருமோர் அற்புதப்பொன் மலைநற்*
*பாக்கியங்க ளெல்லாமும் பழுத்தமலை என்னும்*
*பழமலையைக் கிழமலையாய்ப் பகருவதென் உலகே (2)*

இரண்டு பாடல்களிலும் ''பழமலையைக் கிழமலையாய்ப் பகருவதென் உலகே' என அருளியதில் அரிய நயம் காணலாம். இத்தலத்தின் பெயர் முதுகுன்றம்; பழமலை. ஆயினும் இன்று உலகம் இதனை 'விருத்தாசலம்' என்றே வழங்குகின்றது. 'விருத்தம்' என்ற சொல் 'முதுமை' எனப் பொருள்பட்டு கிழத்தன்மையைக் குறிக்குமேயன்றிப் பழைமையைக் குறிக்காது. ஆதலின் முதுகுன்றைப் '**பழமலை**' என்னல் சிறப்பேயன்றி 'விருத்தாசலம்' என்னல் சிறப்பன்று. அங்ஙனம் கூறின் அது கிழமலையாம் பழமலைப் பதிகத்தில் தாம் கண்ட காட்சியை இனிதாகப் பாடுவதை மேலே குறிப்பிட்ட (13)-வதில் '**திருமால் கமலத்**' என்ற முதற்குறிப்புடைய பாடலில் (1) கண்டு மகிழலாம்.

16. திருவண்ணாமலைப் பதிகம்: திருவண்ணா மலை, பெரியோர்கள் பலராலும் போற்றித் துதிக்கப் பெற்ற தலம் 'கற்றார் தொழும் அருணாசலம்' என்று புகழ் பாடுவார் வில்லிபுத்தூராழ்வார். 'அண்ணாம லைக்கு அரோகரா' என்ற முழக்கம் இத்தலத்தில் பெருகி வழங்கும். இத்திருமலைமேல் அடிகள் எழுசீர்க் கழி நெடிலடி ஆசிரியவிருத்த யாப்பில் பத்துப் பாடல்கள் அருளியுள்ளார். அவற்றுள் சிலவற்றுள் ஆழங்கால் பட்டு அநுபவிப்போம்.

*அன்பர்தம் மனத்தே இன்பமுற் றவைகள்*
*அளித்தவர் களித்திடப் புரியும்*
*பொன்பொலி மேனிக் கருணையங் கடலே*
*பொய்யனேன் பொய்மைகண் டின்னும்*
*துன்பமுற் றலையச் செய்திடேல் அருணைத்*
*தொல்நக ரிடத்துன தெழில்கண்டு*
*என்புளம் உருகத் துதித்திடல் வேண்டும்*
*இவ்வரம் எனக்கிவண் அருளே (2)*

*அருள்பழுத் தோங்கும் ஆனந்தத் தருவே*
*அற்புத அமலநித் தியமே*
*தெருள்பழுத் தோங்கும் சித்தர்தம் உரிமைச்*
*செல்வமே அருணையந் தேவே*
*இருள்பழுத் தோங்கும் நெஞ்சினேன் எனினும்*
*என்பிழை பொறுத்துநின் கோயில்*
*பொருள்பழுத் தோங்கும் சந்நிதி முன்னர்ப்*
*போந்துனைப் போற்றுமா றருளே (3)*

*அருட்பெருங் கடலே ஆனந்த நறவே*
*அடிநடு அந்தமும் கடந்த*
*தெருட்பெரு மலையே திருஅணா மலையில்*
*திகழ்சுயஞ் சோதியே சிவனே*
*மருட்பெருங் கடலின் மயங்குகின் றேன்என்*
*மயக்கெலாம் ஒழிந்துவன் பிறவி*

*இருட்பெருங் கடல்விட் டேறநின் கோயிற்*
*கெளியனேன் வரவரம் அருளே. (8)*

*ஏதுசெய் திடினும் பொறுத்தருள் புரியும்*
*என்உயிர்க் கொருபெருந் துணையே*
*தீதுசெய் மனத்தார் தம்முடன் சேராச்*
*செயல்எனக் களித்தஎன் தேவே*
*வாதுசெய் புலனால் வருந்தல்செய் கின்றேன்*
*வருந்துறா வண்ணம்ஏற் றருளித்*
*தாதுசெய் பவன்ஏத் தருணையங் கோயில்*
*சந்நிதிக் கியான்வர அருளே. (10)*

அண்ணாமலைபற்றி அருமையான பாடல்கள் இவை. 'அருணகிரி விளங்க வளர்ந்த சிவக்கொழுந்து' என்ற தலைப்பில் (17) எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பில் ஓர் அற்புதமான பாடல் உள்ளது. ஒரே பாடல் இது. அது இது:

*திருவிளங்கச் சிவயோக சித்தியெலாம் விளங்கச்*
*சிவஞான நிலைவிளங்கச் சிவாநுபவம் விளங்கத்*
*தெருவிளங்கு திருத்தில்லைத் திருச்சிற்றம் பலத்தே*
*திருக்கூத்து விளங்கஒளி சிறந்ததிரு விளக்கே*
*உருவிளங்க உயிர்விளங்க உணர்ச்சியது விளங்க*
*உலகமெலாம் விளங்கஅரு ளுதவுபெருந் தாயாம்*
*மருவிளங்கு குழல்வல்லி மகிழ்ந்தொருபால் விளங்க*
*வயங்கருணை கிரிவிளங்க வளர்ந்தசிவக் கொழுந்தே (1)*

இதனைப் பாடிப் பாடி பக்தியுடன் அநுபவித்தால் அண்ணாமலையாரை மனக்காட்சியில் கண்டு களிக்க லாம்.

21. **சிங்கபுரிக் கந்தர் பதிகம்:** இதில் காப்பாக நேரிசை வெண்பா ஒன்றும், அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தங்கள் பத்தும் அடக்கம். பாடல்கள் யாவும் கந்தவேளைப் பற்றியவை. பாடல்கள் யாவும்

'சிங்கபுரிதனில் அமர்ந்த தெய்வக் குன்றே' என இறு கின்றன.

*பொன்மகள்வாழ் சிங்கபுரி போதன்அறு மாமுகன்மேல்*
*நன்மைமிகு செந்தமிழ்ப்பா நாம்உரைக்கச் - சின்மயத்தின்*
*மெய்வடிவாம் நங்குருதாள் வேழமுகன் தன்னிருதாள்*
*பொய்அகலப் போற்றும்இப் போது (1)*

இது தம்பியைப் பாட அண்ணனை - வேழமுகத்தானை - உதவுமாறு வேண்டுவது. காப்பாக அமைந்திருப்பது.

கந்தவேளைப் பற்றிய சில பாடல்களில் ஆழங்கால் படுவோம்.

*உம்பர்துயர் கயிலைஅரற் கோதிடவே*
*அப்பொழுதே உவந்து நாதன்*
*தம்பொருவில் முகமாறு கொண்டுநுதல்*
*ஈன்றபொறி சரவ ணத்தில்*
*நம்புமவர் உயவிடுத்து வந்தருளும்*
*நம்குகனே நலிவு தீர்ப்பாய்*
*திங்கள்தவழ் மதிசூழும் சிங்கபுரி*
*தனில்அமர்ந்த தெய்வக் குன்றே. (3)*

*வானவர்கோன் மேனாளில் தரமறியா*
*நிகழ்ந்துவிட விரைவில் சென்று*
*மானமதில் வீற்றிருந்தே அவன்புரிந்த*
*கொடுமைதனை மாற்றும் எங்கள்*
*தானவர்தம் குலம்அடர்த்த சண்முகனே*
*இப்பிணியைத் தணிப்பாய் வாசத்*
*தேனவிழும் பொழில்சூழும் சிங்கபுரி*
*தனில்அமர்ந்த தெய்வக் குன்றே. (6)*

*முன்செய்த மாதவத்தால் அருணகிரி*
*நாதர்முன்னே முறையிட் டேத்தும்*
*புன்செயல்தீர் திருப்புகழை ஏற்றருளும்*
*மெய்ஞ்ஞான புனிதன் என்றே*

*என்செயலில் இரவுபகல் ஒழியாமல்*
*போற்றியிட இரங்கா தென்னே*
*தென்திசைசேர்ந் தருள்புரியும் சிங்கபுரி*
*தனில்அமர்ந்த தெய்வக் குன்றே. (8)*

*மாசகன்ற சிவமுனிவர் அருளாலே*
*மானிடமாய் வந்த மாதின்*
*ஆசில்தவப் பேறளிக்க வள்ளிமலை*
*தனைச்சார்ந்தே அங்குக் கூடி*
*நேசம்மிகு மணம்புரிந்த நின்மலனே*
*சிறியேனை நீயே காப்பாய்*
*தேசுலவு பொழில்சூழும் சிங்கபுரி*
*தனில்அமர்ந்த தெய்வக் குன்றே.*

இவற்றை உள்ளம் உருகிப் பாடிப் படித்தால் கந்தவேள் நம் மனத்தில் எழுந்தருள்வான் என்பது என் அதிராத நம்பிக்கை.

விநாயகர் பதிகங்கள்: இவை நான்கு பதிகங்கள். எல்லாக் கடவுளர்கள் கையிலும் ஏதோ ஒருவகை ஆயுதமிருக்க இவர் கையில் எந்தவித ஆயுதமும் இல்லாதிருத்தல் சிந்திக்கத்தக்கது. பக்தர்கட்கு நேரிடும் ஆபத்துகளைத் தம் சங்கல்பத்தாலே போக்கி விடுகின்றார் என்பது ஐதிகம். இங்ஙனம் விக்கினங்களைத் தீர்ப்பதால்தான் இவர் 'விக்கினேசுவரர்' என்ற பெயரையும் பெற்றுள்ளார். இனி இவர்பற்றிய பதிகங்களில் கவனம் செலுத்துவோம்.

22. **சித்தி விநாயகர் பதிகம்:** இது காப்புபோல் இரண்டு நேரிசை வெண்பாக்களையும் நூலில் எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பில் அமைந்த ஒன்பது பாடல்களையும் கொண்டது. பாடல்கள் யாவும் 'சித்தி விநாயக விக்கினேச் சுரனே' என்று முடிகின்றன.

*அஞ்சுமுகத் தான்மகன்மால் அஞ்சுமுகத் தான்அருள்வான்*
*அஞ்சுமுகத் தான்அஞ் சணிகரத்தான் - அஞ்சுமுக*

*வஞ்சரையான் காணா வகைவதைத்தான் ஓர்அரையோ*
*டஞ்சரையான் கண்கள் அவை. (1)*

*உள்ளமும் உயிரும் உணர்ச்சியும் உடம்பும்*
*உறுபொருள் யாவும்நின் தனக்கே*
*கள்ளமும் கரிசும் நினைந்திடா துதவிக்*
*கழல்இணை நினைந்துநின் கருணை*
*வெள்ளம்உண் டிரவு பகல்அறி யாத*
*வீட்டினில் இருந்துநின் னோடும்*
*விள்ளல்இல் லாமல் கலப்பனோ சித்தி*
*விநாயக விக்கினேச் சுரனே. (4)*

*நாதமும் கடந்து நிறைந்துநின் மயமே*
*நான்என அறிந்துநான் தானாம்*
*பேதமும் கடந்த மௌனராச் சியத்தைப்*
*பேதையேன் பிடிப்பதெந் நாளோ*
*ஏதமும் சமய வாதமும் விடுத்தோர்*
*இதயமும் ஏழையேன் சிரமும்*
*வேதமும் தாங்கும் பாதனே சித்தி*
*விநாயக விக்கினேச் சுரனே. (5)*

*சச்சிதா னந்த வடிவம்நம் வடிவம்*
*தரும்அதிட் டானம்மற் றிரண்டும்*
*பொய்ச்சிதா பாசக் கற்பனை இவற்றைப்*
*போக்கியாங் கவ்வடி வாகி*
*அச்சிதா கார போதமும் அதன்மேல்*
*ஆனந்த போதமும் விடுத்தல்*
*மெய்ச்சிதாம் வீடென் றுரைத்தனை சித்தி*
*விநாயக விக்கினேச் சுரனே. (6)*

*கானல்நீர் விழைந்த மான்என உலகக்*
*கட்டினை நட்டுழன் றலையும்*
*ஈனவஞ் சகநெஞ் சகம்புலை யேனை*
*என்றுகொண் டருளும்நாள் உளதோ*

*ஊனம்ஒன் றில்லா உத்தமர் உளத்தே*
*ஓங்குசீர்ப் பிரணவ ஒளியே*
*வேல்நல் கரத்தோர்க் கினியவா சித்தி*
*விநாயக விக்கினேச் சுரனே. (11)*

23. வல்லபை **கணேசர் பிரசாத** மாலை: இது எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பினால் இயன்ற பதினொரு பாடல்களைக் கொண்டது. ஒவ்வொரு பாடலும் 'வல்லபைக் கணேசமா மணியே' என்று இறுகின்றது.

*நளினமா மலர்வாழ் நான்முகத் தொருவன்*
*நண்ணிநின் துணையடி வழுத்திக்*
*களிநலன் உடன்இவ் வுலகெலாம் படைக்கக்*
*கடைக்கணித் ததைஉளம் மறவேன்*
*அளிநலன் உறுபேர் ஆனந்தக் கடலே*
*அருமருந் தேஅருள் அமுதே*
*வளிநிறை உலகுக் கொருபெருந் துணையே*
*வல்லபைக் கணேசமா மணியே (2)*

*நாரையூர் நம்பி அமுதுகொண் டூட்ட*
*நற்றிரு வாய்மலர்ந் தருளிச்*
*சீரைமே வுறச்செய் தளித்திடும் நினது*
*திருஅருள் நாள்தொறும் மறவேன்*
*தேரையூர் வாழ்வும் திரம்அல எனுநற்*
*றிடம்எனக் கருளிய வாழ்வே*
*வாரைஊர் முலையாள் மங்கைநா யகிஎம்*
*வல்லபைக் கணேசமா மணியே (5)*

*முன்அருந் தவத்தோன் முற்களன் முதலா*
*முனிவர்கள் இனிதுவீ டடைய*
*இன்அருள் புரியும் நின்அருட் பெருமை*
*இரவினும் பகலினும் மறவேன்*
*என்அரும் பொருளே என்உயிர்க் குயிரே*
*என்அர சேஎன துறவே*

*மன்அரு நெறியில் மன்னிய அறிவே*
*வல்லபைக் கணேசமா மணியே (8)*

*துதிபெறும் காசி நகரிடத் தனந்தம்*
*தூயநல் உருவுகொண் டாங்கண்*
*விதிபெறும் மலைகள் தொறும்விருந் தினனாய்*
*மேவிய கருணையை மறவேன்*
*நதிபெறும் சடிலப் பவனநற் குன்றே*
*நான்மறை நாடரு நலமே*
*மதிபெறும் உளத்தில் பதிபெறும் சிவமே*
*வல்லபைக் கணேசமா மணியே (9)*

*பெருவயல் ஆறு முகன்நகல் அமர்ந்துன்*
*பெருமைகள் பேசிடத் தினமும்*
*திருவளர் மேன்மைத் திறமுறச் சூழும்*
*திருஅருட் பெருமையை மறவேன்*
*மருவளர் தெய்வக் கற்பக மலரே*
*மறைமொழி கடந்தவான் பொருளே*
*வருமலை வல்லிக் கொழுமுதற் பேறே*
*வல்லபைக் கணேசமா மணியே (11)*

24. **கணேசத் திருஅருள் மாலை:** இஃது எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பில் அமைந்த பத்துப் பாடல்களைக் கொண்ட மாலையாகும். பாடல்கள் யாவும் 'விளக்கும் சித்தி விநாயக வள்ளலே' என இறுகின்றன.

*திருவும் கல்வியும் சீரும்சி றப்பும்உன்*
*திருவ டிப்புகழ் பாடுந்தி றமும்நல்*
*உருவும் சீலமும் ஊக்கமும் தாழ்வுறா*
*உணர்வும் தந்தென துள்ளத்த மர்ந்தவா*
*குருவும் தெய்வமும் ஆகிஅன் பாளர்தம்*
*குறைத விர்க்கும்கு ணப்பெருங் குன்றமே*
*வெருவும் சிந்தைவி லகக்க ஜானனம்*
*விளங்கும் சித்தி விநாயக வள்ளலே (1)*

*என்னை வேண்டிஎ னக்கருள் செய்தியேல்*
*இன்னல் நீங்கும்நல் இன்பமும் ஓங்கும்நின்*
*தன்னை வேண்டிச்ச ரண்புகுந் தேன்என்னைத்*
*தாங்கிக் கொள்ளும்ச ரண்பிறி தில்லைகாண்*
*அன்னை வேண்டிஅ ழும்மகப் போல்கின்*
*றேன்அறிகி லேன்நின்தி ருவுளம் ஐயனே*
*நின்னை வேண்டிய செஞ்சடை யாளனே*
*விளங்கும் சித்தி விநாயக வள்ளலே (3)*

*தஞ்சம் என்றுனைச் சாந்தனன் எந்தைநீ*
*தானும் இந்தச் சகத்தவர் போலவே*
*வஞ்சம் எண்ணிஇ ருந்திடில் என்செய்வேன்*
*வஞ்சம் அற்றம னத்துறை அண்ணலே*
*பஞ்ச பாதகம் தீர்த்தனை என்றுநின்*
*பாத பங்கயம் பற்றினன் பாவியேன்*
*விஞ்ச நல்அருள் வேண்டித்த ருதியோ*
*விளங்கும் சித்தி விநாயக வள்ளலே (5)*

*மண்ணில் ஆசைம யக்கற வேண்டிய*
*மாத வர்க்கும்ம திப்பரி யாய்உனை*
*எண்ணி லாச்சிறி யேனையும் முன்நின்றே*
*ஏன்று கொண்டனை இன்றுவி டுத்தியோ*
*உண்ணி லாவிய நின்திரு உள்ளமும்*
*உவகை யோடுவர்ப் பும்கொள ஒண்ணுமோ*
*வெண்ணி லாமுடிப் புண்ணிய மூர்த்தியே*
*விளங்கும் சித்தி விநாயக வள்ளலே (7)*

*நாவி னால்உனை நாள்தொறும் பாடுவார்*
*நாடு வார்நமை நண்ணிப்பு கழவும்*
*ஓவி லாதுனைப் பாடவும் துன்பெலாம்*
*ஓட வும்மகிழ் ஓங்கவும் செய்குவாய்*
*காவி நேர்களத் தான்மகிழ் ஐங்கரக்*
*கடவு ளேநற்க ருங்குழி என்னும்ஊர்*
*மேவி அன்பர்க்க ருள்கண நாதனே*
*விளங்கும் சித்தி விநாயக வள்ளலே (10)*

25. **கணேச தனித்திரு மாலை:** இதில் ஆறு பாடல்கள் அடக்கம். அறுசீர்க் கழிநெடி ஆசிரிய விருத்தம், கலி வண்ணத்துறை, எழுசீர்க் கழிநெடி ஆசிரிய விருத்தம், கட்டளைக் கலித்துறை என்ற நான்குவகை யாப்பு களால் அமைந்து ஒரு 'கதம்ப மாலை'யாகக் காட்சி யளிக்கின்றது. நான்கு பாடல்களில் ஆழங்கால் படு வோம்.

*திங்கள்அம் கொழுந்து வேய்ந்த*
*செஞ்சடைக் கொழுந்தே போற்றி*
*மங்கைவல் லபைக்கு வாய்த்த*
*மகிழ்நநின் மலர்த்தாள் போற்றி*
*ஐய்ங்கர நால்வாய் முக்கண்*
*அருட்சிவ களிறே போற்றி*
*கங்கையை மகிழும் செல்வக்*
*கணேசநின் கழல்கள் போற்றி (1)*

இஃது அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் - ஒரே பாடல்.

*அடியார் உள்ளம் தித்தித்*
*தூறும் அமுதென்கோ*
*கடியார் கொன்றைச் செஞ்சடை*
*யானைக் கன்றென்கோ*
*பொடியார் மேனிப் புண்ணியர்*
*புகழும் பொருள்என்கோ*
*அடிகேள் சித்தி விநாயக*
*என்என் றறைகேனே (3)*

இஃது 'கலிவண்ணத் துறை'யில் அமைந்த இரண்டு பாடல்களில் இரண்டாவது.

*கமலமலர் அயன்நயனன் முதல்அமரர் இதயம்உறு*
*கரிசகல அருள்செய்பசு பதியாம்*

*நிமலநிறை மதியின்ஒளிர் நிரதிசய பரமசுக*
*நிலையை அருள் புரியும்அதி பதியாம்*
*விமலபிர ணவவடிவ விகடதட கடகரட*
*விபுலகய முகசுகுண பதியாம்*
*அமலபர சிவஒளியின் உதயசய விசயசய*
*அபயஎனும் எமதுகண பதியே (4)*

இஃது எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பில் அமைந்தது. சந்தக் குழிப்புடன் திகழ்வதாகக் காணப்ப டுகின்றது - ஒரே பாடல்.

*அம்பொன்று செஞ்சடை அப்பரைப்*
*போல்தன் அடியர்தம்துக்*
*கம்பொன்றும் வண்ணம் கருணைசெய்*
*தாளும் கருதுமினோ*
*வம்பொன்று பூங்குழல் வல்லபை*
*யோடு வயங்கியவெண்*
*கொம்பொன்று கொண்டெமை ஆட்கொண்*
*டருளிய குஞ்சரமே (5)*

*திருமால் வணங்கத் திசைமுகன்*
*போற்றச் சிவமுணர்ந்த*
*இருமா தவர்தொழ மன்றகத்*
*தாடு மிறைவடிவாக்*
*குருமா மலர்ப்பிறை வேணியு*
*முக்கணும் கூறுமைந்து*
*வருமா முகமுங்கொள் வல்லபை*
*பாகனை வாழ்த்துதுமே (6)*

இவை இரண்டும் கட்டளைக் கலித்துறை யாப்பில் அமைந்தவை.

ஒரு குறிப்பு: அடிகளார் விநாயகப் பெருமான்மீது அளவு கடந்த பக்தியுடையவராதலால், நாலு பதிகங்கள் பாடி அப்பெருமானைப் போற்றுகின்றார். செட்டிநாட் டுப் பிள்ளையார்பட்டி விநாயகர் மிகுபுகழ் வாய்ந்தவர்.

சிறுத் தொண்டர் போன்ற அடியார்கள் 'கடத்திச் சென்று விடுவார்கள்' என்ற அச்சத்தால் இங்கு இப்பெருமான் பாறையில் செதுக்கப் பெற்றுத் திகழ்கின்றார். நகரத்தார் பெருமக்களுக்கு இது குலதெய்வம். தவிர, அவர்தம் ஒன்பது கோயில்களைச் சேர்ந்தவர்களும் பிள்ளையார் கோயிலாகவே அமைந்துள்ளமை இதனை வலியுறுத் தும். வைணவர்களும் கணநாதரைத் 'தும்பிக்கையாழ் வார்' என்று போற்றி வழிபடுகின்றனர்.

27. **மங்களம்:** இது இத்திருமுறையின் இறுதிப் பதிகமாக அமைந்துள்ளது. சிந்துப் பாடலாகத் திகழ்கின் றது. அடிகளார் திருமுறைகளில் 'சிந்தும்' 'கும்மியும்' (கொம்மி என்று அடிகளாரால் குறிக்கப் பெறுவது) இடம்பெற்றுள்ளன. மங்களத்தில் 7 பாடல்கள் அமைந் துள்ளன.

*புங்கவர் புகழுமா தங்கமு கந்திகழ்*
*எங்கள் கணேசராந் துங்கற்கு - மங்களம் (1)*

*போதந் திகழ்கபர நாதந் தனில்நின்ற*
*நீதராஞ் சண்முக நாதற்கு - மங்களம் (2)*

*பூசைசெய் வாருளம் ஆசைசெய் வார்தில்லை*
*ஈசர் எமதுநட ராசற்கு - மங்களம் (3)*

*பூமி புகழ்குரு சாமி தனைஈன்ற*
*வாமி எனும்சிவ காமிக்கு - மங்களம் (4)*

*புங்கமி குஞ்செல்வந் துங்கமு றத்தரும்*
*செங்க மலத்திரு மங்கைக்கு - மங்களம் (5)*

*பூணி லங்குந்தன வாணி பரம்பர*
*வாணி கலைஞர்கொள் வாணிக்கு - மங்களம் (6)*

*புண்ணிய ராகிய கண்ணிய ராய்த்தவம்*
*பண்ணிய பத்தர்க்கு முத்தர்க்கு - மங்களம் (7)*

# 6. நான்காந்திருமுறைப் பாடல்கள்

இத்திருமுறையில் 41 பதிகங்கள் அடக்கம். இவற்றுள் அடங்கிய பாடல்கள் 458. இத்திருமுறையில் பதினொரு அகப்பொருட் பதிகங்கள் உள்ளன; அவற்றின் பாடல் தொகை 78. இனித் திருமுறையில் உள்ள சில பதிகங்களையும் அவற்றுள் அடங்கிய பாடல்களையும் காண்போம். அகப்பொருட்பதிகங்களின் பாடல்களைத் தனியாகக் காண்போம்.

2. போற்றித் திருப்பதிகம்: இறைவனைப் போற்றும் பாங்கில் எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பால் அமைந்த பத்துப் பாடல்களைக் கொண்டவை இப்பதிகம். பாடியவாய் தேனூறும் சில பாடல்களில் உளங்கரைவோம்.

*அருள்தரல் வேண்டும் போற்றிஎன் அரசே*
*அடியனேன் மனத்தகத் தெழுந்த*
*இருள்கெடல் வேண்டும் போற்றிஎன் தாயே*
*ஏழையேன் நின்றனைப் பாடும்*
*தெருள்உறல் வேண்டும் போற்றிஎன் அறிவே*
*சிந்தைநைந் துலகிடை மயங்கும்*
*மருள்அறல் வேண்டும் போற்றிஎன் குருவே*
*மதிநதி வளர்சடை மணியே (1)*

*போற்றுவார் உள்ளம் புகுந்தொளிர் ஒளியாய்*
*போற்றிநின் பூம்பதம் போற்றி*
*ஆற்றுவார் சடைஎன் அப்பனே போற்றி*
*அமலநின் அடிமலர் போற்றி*

*ஏற்றுவார் கொடிகொள் எந்தையே போற்றி*
*இறைவநின் இருங்கழல் போற்றி*
*சாற்றுமா றரிய பெருமையே போற்றி*
*தலைவநின் தாட்டுணை போற்றி (7)*

*நான்செயும் பிழைகள் பலவும்நீ பொறுத்து*
*நலன்தரல் வேண்டுவன் போற்றி*
*ஏன்செய்தாய் என்பார் இல்லைமற் றெனக்குள்*
*இன்னருள் நோக்கஞ்செய் போற்றி*
*ஊன்செய்நா வால்உன் ஐந்தெழுத் தெளியேன்*
*ஓதநீ உவந்தருள் போற்றி*
*மான்செயும் நெடுங்கண் மலைமகள் இடங்கொள்*
*வள்ளலே போற்றிநின் அருளே (10)*

பாடல்களை உளங்கரைந்து ஓதி அநுபவித்தால் மணிவாசகப் பெருமானின் 'போற்றித் திருஅகவலை' ஓதினால் பெறும் அநுபவம் போன்று ஓர் இனிய அநுபவத்தை நுகரலாம்.

5. **எதிர்கொள் பத்து:** எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பால் அமைந்த பத்துப் பாடல்களைக் கொண்டது இப்பதிகம். இதில் சில பாடல்களில் ஆழங் கால் படுவோம்.

*ஆனந்தக் கூத்தனை அம்பலத் தானை*
*அற்புதத் தேனைஎம் ஆதிப் பிரானைத்*
*தேனந்தக் கொன்றைஅம் செஞ்சடை யானைச்*
*செங்கண்வி டையனை எங்கண் மணியை*
*மோனந்தத் தார்பெறும் தானந்தத் தானை*
*முத்தனை முத்தியின் வித்தனை முத்தை*
*ஈனந்தக் காதெனை என்றுகொண் டானை*
*இன்றைஇ ரவில்எ தீர்ந்துகொள் வேனே (1)*

*மாலயன் தேடியும் காணா மலையை*
*வந்தனை செய்பவர் கண்டம ருந்தை*
*ஆலம்அ முதின்அ ருந்தல்செய் தானை*
*ஆதியை ஆதியோ டந்தமி லானைக்*

*காலன்வ ருந்திவி ழவுதைத் தானைக்*
*கருணைக்க டலைஎன் கண்ணனை யானை*
*ஏலம ணிகுழ லாள்இடத் தானை*
*இன்றைஇ ரவில்எ திர்கொள் வேனே (3)*

*கண்ணுத லானைஎன் கண்ணமர்ந் தானைக்*
*கருணாநி தியைக்க றைமிடற் றானை*
*ஒண்ணுத லான்உமை வாழ்இடத் தானை*
*ஒருவனை ஒப்பிலா உத்தமன் தன்னை*
*நண்ணுதல் யார்க்கும்அ ருமையி னானை*
*நாதனை எல்லார்க்கும் நல்லவன் தன்னை*
*எண்ணுதல் செய்தெனக் கின்பளித் தானை*
*இன்றைஇ ரவில்எ திர்ந்துகொள் வேனே (6)*

*குற்றமெல் லாம்குண மாகக்கொள் வானைக்*
*கூத்துடை யானைப்பெண் கூறுடை யானை*
*மற்றவர் யார்க்கும்அ ரியவன் தன்னை*
*வந்திப்ப வர்க்கும் மிகஎளி யானைப்*
*பெற்றம தேறும்பெ ரியபி ரானைப்*
*பிறைமுடி யோனைப்பெம் மானைஎம் மானை*
*எற்றிஎன். துன்பம்எ லாம்ஒழித் தானை*
*இன்றை இரவில் எதிர்ந்துகொள் வேனே (10)*

எல்லாப் பாடல்களும் 'இன்றை இரவில் எதிர்கொள் வேனே' என்று இறுகின்றன. பாடல்களை மனங்க ரைந்து பாடி அநுபவித்தால் வள்ளல் பெருமான் அநுப வத்தை எட்டலாம்.

6. **புறமொழிக் கிரங்கல்:** கட்டளைக் களித்துறை யாப்பில் அமைந்த பத்துப் பாடல்களைக் கொண்டது இப்பதிகம். தனக்கு எம்பெருமான் அருள் தராவிடில் தன்னைப் பொய் வேடன் என்று உலகம் நகைக்குமே என்று இரங்கி நைகின்றார். உண்மை உணர்வை உரைக் கும் பாடல்கள் இவை. நான்கு பாடல்களை அநுபவிப் போம்.

அப்பாநின் பொன்அருள் என்மேல்
தயைசெய் தளித்திலையேல்
துப்பா னவும்ஒரு போதுதுவ்
வாது சுழன்றனையே
இப்பாரில் ஈசன் திருவருள்
நீபெற்ற தெங்ஙனமோ
செப்பாய் எனவரிப் பார்சிரிப்
பார்இச் செகத்தவரே (2)

எண்ணாமல் நாயடி யேன்செய்த
குற்றங்கள் யாவும்எண்ணி
அண்ணாநின் சித்தம் இரங்காய்
எனில்இங் கயலவர்தாம்
பெண்ஆர் இடத்தவன் பேரருள்
சற்றும் பெறாதநினக்கு
ஒண்ணாதிவ் வண்மை விரதம்என்
றால்என் உரைப்பதுவே (5)

பொய்யான வஞ்சக னேன்பிழை
யாவும் பொறுத்துனருள்
செய்யாய் எனில்எது செய்குவன்
யான்இச் செகதலத்தோர்
எய்யா விரதத்தில் யாதுபெற்
றாய்என் றிகழ்வர்கண்டாய்
அய்யாஎன் இன்அமு தேஅர
சேஎன தாண்டவனே (6)

ஆசும் படியில் அகங்கா
ரமும்உடை யான்என்றெண்ணாப்
பேசும் படியில் எனக்கரு
ளாய்எனில் பேருலகோர்
ஏசும் படிவரும் பொய்வேடன்
என்றதை எண்ணிஎண்ணிக்

*கூசும் படிவரு மேஎன்செய்*
*கேன்என் குலதெய்வமே (9)*

அனைத்தும் அருமையான பாடல்கள்; படிப்போர் உள்ளத்தை உருக்கிக் கரையச் செய்பவை. அங்ஙனம் நாம் அநுபவித்தால் வள்ளல் பெருமான் இரங்குவது போல் நாமும் இரங்கலாம்.

8. **சிந்தைத் திருப்பதிகம்:** கொச்சகக் கலிப்பாவா லான பத்துப் பாடல்களைக் கொண்டது இப்பதிகம். தம்முடைய குறைகளையெல்லாம் கருதாமல், தாம் அவரையே கதி என்று கொண்டிருப்பதையே கொண்டு ஆட்கொள்ளுமாறு அழுது வேண்டுவனவாக அமைந் தவை இப்பாடல்கள்.

*கற்றே அறியாக் கடைப்புலையேன் ஆனாலும்*
*உற்றேநின் தன்னைநினைந் தோதுகின்றேன் அல்லாமே*
*மற்றேதும் தேறேன்என் வன்துயர்தீர்த் துள்குளிரச்*
*சற்றே இரங்கித் தயவுசெய்தால் ஆகாதோ (2)*

*கள்ளநெறி கொள்ளும் கடைநாயேன் என்னினும்நின்*
*வள்ளல் மலர்த்தாளே வழுத்துகின்றேன் என்னுடைய*
*உள்ள மெலிவோ டுடல்மெலிவும் கண்டும்அந்தோ*
*எள்ளளவும் எந்தாய் இரங்கா திருந்தனையே (4)*

*வெள்ள மருவும் விரிசடையாய் என்னுடைய*
*உள்ள விரிவும் உடல்மெலிவும் கண்டிருந்தும்*
*தள்ளரிய நின்னருள்ஓர் சற்றும் புரியாமே*
*கள்ளவினைக் கென்உளத்தைக் கைகாட்டி நின்றனையே (7)*

*குற்றம்எலாம் நல்ல குணமாகக் கொண்டருளும்*
*உற்றதுணை நீயேமற் றோர்துணையும் இல்லைஎன்றே*
*நற்றலைமை யாம்உனது நாமம் நவில்கின்றேன்*
*கற்றவனே என்றனைநீ கைவிடில்என் செய்வேனே (9)*

என்பன இப்பதிகத்தின் நான்கு பாடல்கள். வள்ளலார் அப்பழுக்கற்ற அருளாளர் என்பதை நாம் அறிவோம். ஆயினும் நம் குறைகளை நினைந்து கொண்டு நாம் அழுது வேண்டினால் நமக்கு இறைவன் அருள்கிட்டும் என நம்பி அமைவோம்.

10. அபராத விண்ணப்பம்: இப்பதிகம் இருபத்தி ரண்டு பாடல்களைக் கொண்டது. பாடல்கள் அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பில் அமைந்தவை. இறைவனே தமக்குக் கதி என்ற நினைவுடையவர் அடிகள். தமக்கு அறிவையும் பணிவையும் நல்கியவர் எனினும், தாம் அறியாப் பிழைகள் புரிந்திருக்கலாம். அவற்றையெல்லாம் கருத்தில் கொள்ளாமல் மன்னித்து அருளுமாறு விண்ணப்பிக்கும் போக்கில் அமைந்தவை பாடல்கள். ஒரு சிலவற்றில் ஆழங்கால் படுவோம்.

*அன்றோர் பொருளாய் அடியேனை*
*ஆட்கொண் டருளி அறிவளித்தாய்*
*இன்றோ சிறியேன் பிழைகருதி*
*இரங்கா தகற்ற எண்ணுதியோ*
*குன்றோர் அனைய குறைசெயினும்*
*கொண்டு குலம்பேசு சுதல்எந்தாய்*
*நன்றோ கருணைப் பெருங்கடலே*
*ஆனாய் இந்த நாயினையே (2)*

பெரும்பாலும் அருளாளர்கள் தம்மைக் கடையேனாகக் கருதித் தாழ்த்திக் கொள்ளுதல் மரபாக இருந்து வருவதைக் காண்கிறோம். இதனை வைணவ ஆசிரியர்கள் நைச்சியாநுசந்தானம் என்று பேசுவர். அத்தகைய போக்கு அவர்தம் பாடலில் அமைந்திருப்பதைக் காணலாம். இங்கும் பாடல்கள் யாவும் அப்போக்கிலேயே அமைந்திருப்பவை.

*நாய்க்கும் கடையேன் பிழையனைத்தும்*
*நாட்டில் தவத்தால் நல்கியநல்*
*தாய்க்கும் கோபம் உறும்என்னில்*
*யாரே என்பால் சலியாதார்*
*வாய்க்கும் கருணைக் கடல்உடையாய்*
*உன்பால் அடுத்தேன் வலிந்தெளிய*
*பேய்க்கும் தயவு புரிகின்றோய்*
*ஆள வேண்டும் பேதையையே (3)*

*எண்ணி நலிவேன் நின்பாதம்*
*எந்நாள் அடைவோம் எனஎன்பால்*
*நண்ணி நலிவைத் தவிராயேல்*
*என்செய் திடுவேன் நாயகனே*
*கண்ணி நலியப் படும்பறவைக்*
*கால்போல் மனக்கால் கட்டுண்ணப்*
*பண்ணி நலஞ்சேர் திருக்கூட்டம்*
*புகுத எனினும் பரிந்தருளே (7)*

*எளியேன் கருணைத் திருநடஞ்செய்*
*இணைத்தாள் மலர்கண் டிதயமெலாம்*
*களியேன் கருங்கல் பாறையெனக்*
*கிடக்கின் றேன்இக் கடையேனை*
*அளியே பெருக ஆளுதியோ*
*ஆள்கி லாயோ யாதொன்றும்*
*தெளியேன் அந்தோ அந்தோஎன்*
*செய்வேன் விலங்கிற் சிறியேனே (11)*

*வினையே பெருக்கிக் கடைநாயேன்*
*விடயச் செருக்கால் மிகநீண்ட*
*பனையே எனநின் றுலர்கின்றேன்*
*பாவி யேனுக் கருளுதியோ*
*நினையே நினையாப் பிழைகருதி*
*நெகிழ விடவே நினைதியோ*

*அணையே அனையாய் திருக்குறிப்பை*
*அறியேன் ஈதென் றடியேனே (15)*

*நின்பால் அடைந்தார் அன்பாலே*
*அடியார் எல்லாம் நெடுவினையேன்*
*வன்பால் மனப்பேய் தன்பாலே*
*வருந்திச் சுழன்று மயர்கின்றேன்*
*தென்பால் நோக்கி இன்பநடம்*
*செய்யும் இறைவா சிறுவனுக்கா*
*முன்பால் அமுதக் கடல்அளித்த*
*முதல்வா என்னை முன்னுதியே (22)*

இப்பாடல்களை உள்ளம் உருகிப் பாடி அநுபவித்தால் நாமும் வள்ளலாரின் மனநிலையை எய்திவிடுவோம் என்பது திண்ணம்.

11. **கலி விண்ணப்பம்:** கட்டளைக் கலித்துறை யாப்பால் அமைந்த **பத்துத்** திருப்பாடல்களைக் கொண்டது இப்பதிகம். தாம் செய்த பிழைகளையெல்லாம் பொறுத்தருளி மன்னிக்குமாறு விண்ணப்பிக்கும் பாங்கில் அமைந்தவை இப்பதிகப் பாடல்கள். நான்கு பாடல்களில் ஆழங்கால் படுவோம்.

*செறியாத நெஞ்சக வஞ்சக*
*னேன்இச் சிறுதலத்தே*
*அறியா தறிந்தவன் போற்சில*
*செய்திடல் ஐயநின்தாள்*
*குறியா தரித்தல தாணைமற்*
*றில்லைஎங் கொற்றவனே*
*முறியா தருள்செய்தி யோதெரி*
*யேன்எந்தனை முன்னியதே (1)*

*எல்லாம் தெரிந்த இறைவாநின்*
*தண்ணருள் எய்துகிலாப்*

*பொல்லாத பாவிப் புலையேன்*
*பிழையைப் பொறுத்தருள்வாய்*
*கல்லா மனக்கடை யாலே*
*கடைவைத்துக் கண்டதுதுன்*
*பல்லால் அணுத்துணை யும்அறி*
*யேன்இன்பம் ஆவதுவே. (3)*

*ஒன்றுந் தெரிந்திட மாட்டாப்*
*பருவத் துணர்வுதந்தாய்*
*இன்றுந் தருதற் கிறைவா*
*நின்உள்ளம் இயைதிகொலோ*
*கன்றுங் கருத்தொடு மாழ்குகின்*
*றேன்உன் கழல்அடிக்கே*
*துன்றுங் கருத்தறி யேன்சிறி*
*யேன்என் துணிவதுவே (8)*

*பள்ளத்தி லேசெலும் நீர்போல்என்*
*உள்ளம் பரப்பதலால்*
*எள்ளத்தி லேசிறி தாயினும்*
*நாள்செல்வ தில்லைஎந்தாய்*
*கள்ளத்தி லேசொல்லு கின்றேன்*
*அலநின் கழலிணைஎன்*
*உள்ளத்தி லேநின்ற ஆங்கவை*
*காண்க உடையவனே (10)*

இந்த நான்கு பாடல்களையும் உள்ளம் கரைந்து பாடி வள்ளற்பெருமான் பெற்ற அநுபவத்தை நாமும் பெறுவோமாக.

12. அடிமைப் பதிகம்: தம்மைத் தன் திருவடிக்கீழ் அடிமை கொள்ள வேண்டும் என வள்ளல் பெருமான் இறைவனை வேண்டுவதாக அமைந்தது இப்பதிகம். எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பில் அமைந்த பத்துப் பாடல்களைக் கொண்டது. நான்கு பாடல்களில் ஆழங்கால் படுவோம்.

*ஆள்வினையால் பயன்உறுவர் அசதி ஆட*
*அந்தோஇப் புலைநாயேன் அன்பால் நின்பால்*
*வேள்விசெயும் பெருந்தவர்க்கே வேள்வி செய்ய*
*வேண்டும்இதற் கெம்பெருமான் கருணை செய்யும்*
*நாள்விளைவில் சின்னாளே இதுதான் உண்மை*
*நம்பும்என நவின்றுனையே நம்பி நின்றேன்*
*கேள்வியிலாத் துரைத்தனமோ அலது நாயேன்*
*கிளக்குமுறை கிளக்கிலனோ கேட்டி லாயோ (1)*

*என்னைஅறி யாப்பருவத் தாண்டு கொண்ட*
*என்குருவே எனக்குரிய இன்ப மேஎன்*
*தன்னைஇன்று விடத்துணிந்தாய் போலும் அந்தோ*
*தகுமோநின் பெருங்கருணைத் தகவுக் கெந்தாய்*
*உனைஅலா தொருவர்தம்பால் செல்லேன் என்னை*
*உடையானே என்னுள்ளத் துள்ளே நின்று*
*முன்னைவினைப் பயன்ஊட்ட நினைப்பிக் கின்றாய்*
*முடிப்பிக்கத் துணிந்திலையேல் மொழிவ தென்னை (4)*

*வகைஅறியேன் சிறியேன்சன் மார்க்க மேவும்*
*மாண்புடைய பெருந்தவத்தோர் மகிழ வாழும்*
*தகைஅறியேன் நலம்ஒன்றும் அறியேன் பொய்ம்மை*
*தான்அறியேன் நல்லோரைச் சலஞ்செய் கின்ற*
*மிகைஅறிவேன் தீங்கென்ப எல்லாம் இங்கே*
*மிகஅறிவேன் எனினும்எனை விடுதி ஆயில்*
*பகைஅறிவேன் நின்மீதில் பழிவைத் திந்தப்*
*பாவிஉயிர் விடத்துணிவேன் பகர்ந்திட் டேனே (7)*

*நிலைஅறியேன் நிலைஅறிந்து பெற்ற நல்லோர்*
*நெறிஅறியேன் எனினும்உன்றன் நேச மன்றி*
*இலைஅறியேன் மற்றவரைக் கனவி லேனும்*
*எட்டுணைஓர் துணைஎனவும் எண்ணு றேன்நல்*
*கலைஅறியேன் கருத்திலிருந் தறிவித் தாய்நான்*
*கண்டறிந்தேன் எனினும்அவை காட்ட வேண்டும்*

*அலைஅறியா அருட்கடலே அமுதே தேனே*
*அம்பலத்தென் குருவேநான் அடிமை ஆளே (10)*

பாடல்களை மனங்கரைந்து இசையூட்டிப் பாடி அநுபவித்தால் வள்ளல் பெருமான் அநுபவத்தை நாமும் எட்டிப் பிடிக்கலாம்.

13. சரணப் பதிகம்: இது கலிநிலைத் துறை யாப்பில் அமைந்த பதினொரு பாடல்களைக் கொண்டது. வைண வம் விளக்கும் பிரபத்தி நெறிபோல் - சரணாகதி தத்து வம் போல் - சாமியே சரணம் ஐயப்பா என்று சாற்றுவ துபோல் - அமைந்தவை இத்திருப்பாடல்கள்.

*படிமேல் அடியேன் உனைஅன்*
*றிஓர்பற்றி லேன்என்*
*முடிமேல் அடிவைத் தருள்செய்*
*திடமுன்னு கண்டாய்*
*கொடிமேல் விடைநாட் டியஎண்கு*
*ணக்குன் றமே*
*பொடிமேல் விளங்கும் திருமே*
*னிஎம்புண் ணியனே (2)*

*மறவா துனைவாழ்த் துமெய்அன்*
*பரைமாநி லத்தே*
*இறவா வகைஆட் கொண்டரு*
*ளியஈச னேமெய்*
*உறவா கியநின் பதம்அன்றிஒன்*
*றோர்கி லேன்நான்*
*பிறவா நெறிதந் தருள்என்பதென்*
*பேசி டாயே (5)*

*ஆனே றிவந்தன் பரைஆட்*
*கொளும்ஐய னேஎம்*
*மானே மணிமண் றில்நடம்*
*புரிவள்ள லேசெந்*

*தேனே அமுதே முதலா*
*கியதெய்வ மேநீ*
*தானே எனைஆண் டருள்வாய்*
*நின்சரண் சரணே (11)*

இம் மூன்று பாடல்களும் முக்கனிபோல் இனிப்பவை. உரிய ஓசையில் பாடி அநுபவித்தால் வள்ளல் பெருமான் காட்டும் 'சரணாகதி நெறி' தட்டுப்படும்.

17. தனித் திருப்புலம்பல்: அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பால் அமைந்த நான்கு திருப் பாடல்களைக் கொண்டது இப்பதிகம். இறைவனைத் தாம் எண்ணாதிருந்தமைக்காக வருந்தி அடிகள் புலம்பு வதாக அமைந்தவை இப்பாடல்கள். இரண்டை ஈண்டுக் காட்டுவேன்.

*திங்கள் விளங்கும் சடைத்தருவைத்*
*தீம்பாற் சுவையைச் செந்தேனை*
*செங்கை மருவும் செழுங்கனியைச்*
*சீரார் முக்கட் செங்கரும்பை*
*மங்கை மலையாள் மணந்தபெரு*
*வாழ்வைப் பவள மலைதன்னை*
*எங்கள் பெருமான் தனைஅந்தோ*
*என்னே எண்ணா திருந்தேனே (1)*

*ஒருமைப் பயனை ஒருமைநெறி*
*உணர்ந்தார் உணர்வின் உள்ளுணர்வைப்*
*பெருமை கதியைப் பசுபதியைப்*
*பெரியோர் எவர்க்கும் பெரியோனை*
*அருமைக் களத்தில் கருமைஅணி*
*அம்மான் தன்னை எம்மானை*
*இருமைப் பயனுந் தருவானை*
*என்னே எண்ணா திருந்தேனே (3)*

'என்னே எண்ணா திருந்தேனே' என்று இறும் பாடல் களை அழுது புலம்பிப் பாடினால் வள்ளல் பெருமன் அநுபவத்தைப் பெற முயலலாம்.

19. திருப்புகழ்ச்சி: எம்பெருமானைப் புகழ்ந்து பாடு தல் ஒரு தனிப் பெரும் மகிழ்ச்சியை அளிப்பது. இப்பதிகத்தில் மூன்றே பாடல்கள்தாம் உள்ளன. முதற் பாடலும் மூன்றாம் பாடலும் எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பிலும் இரண்டாம் பாடல் எண் சீர்க் கழிநெடிலடி யாப்பிலும் அமைந்தவை. மூனறு பாடல்களையும் முறையே தருவோம்.

*திருவுளந் தெரியேன் திகைப்புறு கின்றேன்*
*சிறியரிற் சிறியனேன் வஞ்சக்*
*கருவுளக் கடையேன் பாவியேன் கொடிய*
*கன்மனக் குரங்கனேன் அந்தோ*
*வெருவுறு கின்றேன் அஞ்சல்என் றின்னே*
*விரும்பிஆட் கொள்ளுதல் வேண்டும்*
*மருவுமா கருணைப் பெருங்கடல் அமுதே*
*வள்ளலே என்பெரு வாழ்வே (1)*

*தாயும தந்தையும் தெய்வமும் குருவும்*
*தாங்கு கின்றதோர் தலைவனும் பொருளும்*
*ஆயும் இன்பமும் அன்புமெய் அறிவும்*
*அனைத்தும் நீஎன ஆதரித் திருந்தேன்*
*ஏயும் என்னள விரக்கம்ஒன் றிலையோ*
*என்செய் வேன்இதை யார்க்கெடுத் துரைப்பேன்*
*சேயும் நின்னருள் நசைஉறுங் கண்டாய்*
*தில்லை மன்றிடைத் திகழ்ஒளி விளக்கே (2)*

*அருள்பழுத் தோங்கும் கற்பகத் தருவே*
*அருள்மருந் தொளிர்குணக் குன்றே*
*அருள்எனும் அமுதந் தரும்ஒரு கடலே*
*அருட்கிர ணங்கொளும் சுடரே*

*அருள்ஒளி வீசும் அரும்பெறன் மணியே*
*அருட்சுவை கனிந்தசெம் பாகே*
*அருள்மணம் வீசும் ஒருதனி மலரே*
*அருள்மய மாம்பர சிவமே (3)*

பாடல்கள் யாவும் பாடிய வாய் தேனூறும் பான்மையில் அமைந்துள்ளன. பக்தியுடன் உளங்கரைந்து ஓதினால் வள்ளல் பெருமான் பெற்ற அநுபவத்தை நாமும் பெறலாம்.

22. **சிவசிதம்பர சங்கீர்த்தனம்:** இப்பதிகம் எண்சீர்க் கழிநெடிலடிச் சந்த விருத்த யாப்பில் அமைந்த ஐந்து பாடல்களைக் கொண்டது. பரசிவமாம் சிவசிதம்பரத்தை மனத்தில் அமைத்துக் கொண்டு பாடி மகிழும் பாங்கில் அமைந்தவை. இதில் இரண்டு பாடல்களைக் காட்டுவேன்.

*உலக மும்சரா சரமும் நின்றுநின்*
*றுலவு கின்றபேர் உலகம் என்பதும்*
*கலகம் இன்றிஎங் கணுநி றைந்தசிற்*
*கனம்வி ளங்குசிற் ககனம் என்பதும்*
*இலக ஒன்றிரண் டெனல்அ கன்றதோர்*
*இணையில் இன்பமாம் இதயம் என்பதும்*
*திலகம் என்றநங் குருசி தம்பரம்*
*சிவசி தம்பரம் சிவசி தம்பரம் (1)*

*அருள்அ ளித்துமெய் அன்பர் தம்மைஉன்*
*அங்கை நெல்லிபோல் ஆக்கு கின்றதும்*
*பொருள்அ ளித்துநான் மறையின் அந்தமே*
*புகழு கின்றதோர் புகழ்அ ளிப்பதும்*
*வெருள்அ ளித்திடா விமல ஞானவான்*
*வெளியி லேவெளி விரவி நிற்பதாம்*
*தெருள்அ ளிப்பதும் இருள்கெ டுப்பதும்*
*சிவசி தம்பரம் சிவசி தம்பரம் (4)*

பாடல்கள் யாவும் 'சிவசிதம்பரம், சிவசிதம்பரம்' என்றே இறுகின்றன. மனம் அதைச் 'சங்கீர்த்தனம்' செய்து மகிழ்கின்றது; முக்தி உலக நாட்டத்தை நம்மிடம் உண்டாக்குகின்றன பாடல்கள்.[1]

23. **சிவகாமவல்லி துதி:** இப்பதிகத்திலும் ஐந்து திருப்பாடல்களே அடக்கம். முதற் பாடல் எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பிலும், 2,3,4 எண்களிட்ட பாடல்கள் அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பிலும் ஐந்தாம் பாடல் கட்டளைக் கலித்துறை யாப்பிலும் அமைந்துள்ளன. மகன் ஒருவன் தாயைப் பாசத்தால் அணைவதுபோல அடிகளார் சிவகாம வல்லித் தாயிடம் அடைக்கலம் புகும் பாங்கில் பாடல்கள் அமைந்துள்ளன.

*அரங்காய மனமாயை அளக்கர் ஆழம்*
*அறியாமல் காலிட்டிங் கழுந்து கின்றேன்*
*இரங்காயோ சிறிதும்உயிர் இரக்கம் இல்லா*
*எம்மனமோ நின்மனமும் இறைவி உன்றன்*
*உரங்காணும் அரசியற்கோல் கொடுங்கோல் ஆனால்*
*ஓடிஎங்கே புகுந்தெவருக் குறைப்ப தம்மா*
*திரங்காணாப் பிள்ளைஎனத் தாய்வி டாளே*
*சிவகாம வல்லிஎனும் தெய்வத் தாயே (1)*

*திருவே திகழும் கலைமகளே*
*திருவே மலையான் திருமகளே*
*உருவே இச்சை மயமேமெய்*
*உணர்வின் வணமே உயர்இன்பக்*
*குருவே ஆதித் தனித்தாயே*
*குலவும் பரையாம் பெருந்தாயே*

1. இப்பாடல்களைக் 'கட்டளைக் கலிப்பா' என்று தொழுவூர் வேலாயு முதலியாரும் 'எழுசீர்க் கழிநெடிலடி சந்த விருத்தம்' என்று ஆ.பாலகிருஷ்ண பிள்ளையும் குறித்துள்ளனர்.

*மருவே மலரே சிவகாம*
*வல்லி மணியே வந்தருளே (3)*

*தருவாய் இதுநல் தருணங்கண்*
*டாய்என்னைத் தாங்கிக்கொண்ட*
*குருவாய் விளங்கு மணிமன்ற*
*வாணனைக் கூடிஇன்ப*
*உருவாய்என் உள்ளத்தின் உள்ளே*
*அமர்ந்துள்ள உண்மைஎலாம்*
*திருவாய் மலர்ந்த சிவகாம*
*வல்லிநின் சீர்அருளே (5)*

இங்கு மூன்று வகை யாப்பில் காட்டிய மூன்று பாடல்களையும் மனங்கரைந்து அழுது பாடி சிவகாம வல்லித் தாயாரை அடிகள் அநுபவிப்பதைப்போல் நாமும் அநுபவிப்போம்; அன்னையின் திருவருளையும் பெறுவோம்.

**பாடல்களின் பண்புகள்:** முதல் ஏழு திருமுறை ஆசிரியர்கள் தலங்கள்தோறும் சென்று ஆங்கு எழுந்தருளியிருக்கும் மூர்த்திகளின் முன்னால் நின்று தாம் கருதிய திட்டப்படிப் பதிகம் (10,11 பாடல்கள்) பாடி வந்தார்கள். பாடல்களும் ஒவ்வொரு வகை சந்தத்தில் அமைந்தன. பாடல்களின் எண்ணிக்கையும் மாறுவதில்லை; ஒவ்வொரு பதிகமும் ஒரே வகை சந்தத்திலேயே அமைந்திருக்கும்.

ஆனால் வள்ளல் பெருமான் சில தலங்களைத்தாம் வழிபட்டார் - சந்தர்ப்ப சூழ்நிலைகள் அமைந்ததற்கேற்ப. மூர்த்திகள்முன் நின்று அருளால் பாடுவதில்லை. தாம் தங்குமிடத்தில் தியான நேரங்கள் தவிர, மீதி நேரங்களில் எம்பெருமான்களை நீள நினைந்து பாடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். சில பதிகங்கள் திட்டப்படி 10,11 பாடல்களால் அமைந்தன. ஏனைய

வற்றின் எண்களும் ஒருவகைக் கணக்கில் அமைய வில்லை. ஒரே பதிகத்திலேயே பல வகை யாப்பு வகைகளும் சந்த வகைகளும் அமைந்தன. இத்தகைய பண்புகளை வள்ளல் பெருமான் பாடல்களில் காண முடிகின்றது.

## அகப்பொருட் பதிகங்கள்

இவை பத்துப் பதிகங்கள். அவை வருமாறு:

| | |
|---|---|
| 25. நடராஜ அலங்காரம் | 3 பாடல்கள் |
| 26. பாங்கிமார் கண்ணி | 27 பாடல்கள் |
| 32. தோழியர் உரையாடல் | 6 பாடல்கள் |
| 33. தெண்டனிட்டேன் | 9 பாடல்கள் |
| 34. இன்னந்தயவு வரவில்லையா | 7 பாடல்கள் |
| 35. வினாவிடை | 3 பாடல்கள் |
| 36. நற்றாய் கவன்றது | 9 பாடல்கள் |
| 37. சல்லாப லகரி | 2 பாடல்கள் |
| 38. தலைமகள் முன்னமுடிபு | 10 பாடல்கள் |
| 39. வேட்கைக் கொத்து | 10 பாடல்கள் |

இவை தவிர தனித்திருவிருத்தம் என்பதில் 2 பாடல்கள் (55,56) அகத்துறையைச் சார்ந்தவை. இனி இவற்றிலுள்ள பாடல்களை நோக்குவோம்.

25. நடராஜ அலங்காரம்: இதில் அடங்கியவை மூன்று பாடல்கள். அவற்றுள்,

*இரண்டே காற்கை முகந்தந்தீர*
*இன்ப நடஞ்செய் பெருமானீர்*
*இரண்டே காற்கை முகங்கொண்டீர்*
*என்னே அடிகள் என்றுரைத்தேன்*
*இரண்டே காற்கை முகம்புடைக்க*
*இருந்தாய் எனக்கென் றிங்கேநீ*

*இரண்டே காற்கை முகங்கொண்டாய்*
*என்றார் மன்றில் நின்றாரே. (1)*

என்பது. கடினமான பாடல். தலைவி தோழியை நோக்கிக் கூறுவதாக அமைந்தது.

பதவுரை: இன்பம் - பேரின்பம் தருவதாகிய; நடம் செய் - திருக்கூத்தைப் புரியாநின்ற; பெருமான்நீர் - பெருமானாகிய நீர்; இரண்டே - இரண்டேயாகிய; காற்கு - பாதங்களையுடைய எனக்கு; ஐ - அழகிய; முகம் - முகம் ஒன்றினை; தந்தீர் - கொடுத்தீர்; (இங்ஙனம் இருக்க) இரண்டேகாற்கு - இரண்டு பாதாம் புயங்களுக்கு; ஐமுகம் - பஞ்சமுகங்களை; கொண்டீர் - கொண்ட நீராக இருக்கின்றீர்; என்னே - யாதுபற்றி; அடிகள் - அடிகளே; என்றுரைத்தேன் - எனப் புகன்றேன்; அதற்கு மன்றில் நின்றார் - அம்பலத்தின்கண் நின்ற இவர் அடியார்களைக் கண்ணுற்று; இரண்டே கால் - இரண்டு காலாகப் பெற்றநீ; கைமுகம் புடைக்க விருந்தாய் - கைத்த முகம் பெருக்கக் காட்டினை; எனக்கென்று - யாது பற்றி என வினவி; இங்கேநீ - இப்போது இவ்விடத்து; இரண்டே காற்கு - இரு காலாகிய அரை (அங்குலத்துக்கு இன்பம் பெருக்க எண்ணி); ஐமுகம் கொண்டாய் என்றார் - சுமுகம் கொண்டனை எனப் புகல்கின்றனர்; ஏ! தோழி! இஃது என்? என வினவியது.

*இரண்டே காற்கை முகங்கொண்டீர்*
*என்னை உடையீர் அம்பலத்தீர்*
*இரண்டே காற்கை முகந்தந்தீர்*
*என்னை இதுதான் என்றுரைத்தேன்*
*இரண்டே காற்கை முகங்கொண்டிங்கு*
*இருந்த நீயும் எனைக்கண்டே*
*இரண்டே காற்கை முகங்கொண்டாய்*
*என்றார் தோழி இவர்வாழி (2)*

இஃது இரண்டாவது பாடல். இது படிக்கக் கடினமானது. இதற்கும் உரை தருவோம்.

பதவுரை: இரண்டே காற்கு - இருவினை வழி செல்லாதவர்களுக்கு; ஐமுகம் - ஆசாரிய முகத்தினை; கொண்டனை - கொண்ட நீராயிருக்கின்றீர்; என்னை - அடியானை; உடையீர் - உடையவரே; அம்பலத்தீர் - திருஅம்பலத்தில் நடிக்கின்றவரே; இரண்டே காற்கு - சூரிய கலை, சந்திர கலையாகிய வாசியநுபவத்திற்கு; ஐ - அழகிய; முகம்தந்தீர் - முகத்தினைத் தந்தவரே; என்னை இதுதானென்று - இஃது என் விஷயத்திற்கு என்று; உரைத்தேன் - செப்பினேன்; அதற்கு அன்னார் இரண்டே கால், கை, முகங் கொண்டிருந்த நீயும் - இரண்டு காலும், இரு கையும், முகமும் அடையப் பெற்றிரா நின்ற நீயும்; எனைக் கண்டே - நம்மைத் தரிசித்த அப்பொழுதே நீ முன் உரைத்தவண்ணமே; இரண்டே காற்கு - வாசிக்கு; ஐம்முகம் கொண்டாய் - அழகிய முகத்தினை அநுபவ இடமாகக் கொண்டு விட்டனை என்கின்றனர். தோழி, இன்னார் நீடூழி வாழ்க எனத் தலைவி வாழ்த்தியதாகக் கொள்க.

இரண்டே காற்கை - தமிழில் எழுதினால் இரண்டு (உ), கால் (வ), கை; உவகை.

இரண்டே காற்கை முகந்தந்தீர் என்றதற்கு, விநாயகருக்கு துதிக்கையையுடைய முகத்தினைத் தந்தீர் எனப் பொருள் கூறுவாரும் உளர். தலைவி தலைவருக்குள் நடந்த அலங்கார விவகாரத்துள் விநாயகரைப் பற்றிக் கூறுதல் அவ்வளவு சிறப்பு அன்றெனக் கொள்ளல் அமையும்.

*ஆடுங் கருணைத் திருநடத்தீர்*
*ஆடும் இடந்தான் யாதென்றேன்*
*பாடும் திருவும் சவுந்தரமும்*
*பழமும் காட்டும் இடமென்றார்*

*நாடும் படிநன் கருளுமென்றேன்*
*நங்காய் முன்பின் ஒன்றேயாய்*
*ஈடுந் தியபன் னடுவுளதால்*
*என்றார் தோழி இவர்வாழி (3)*

என்பது மூன்றாவது பாடல்.

குறிப்பு: ஆடும் இடம் - நடனம் செய்யும் இடம்; பாடும் - வேதாகமங்களால் புகழப்படும்; திருவும் - பொன் என்னும் சொல்லும்; சவுந்தரமும் - அழகு, அழகுக்குப் பிரதிபதமாகிய அம் என்னும் சொல்லும்; பழமும் - (பழம் = பலம் வடமொழி) - பலம் என்னும் சொல்லும் சேர்ந்தால் பொன்னம்பலம் என்றாகின்றது. முன்பின் ஒன்றேயாய் - முன்னும் பின்னும் ஒரு சொல்லாகிய அம். பல் நடுவுளது - பல் என்னும் சொல் நடுவுளது. அம்+பல்+அம் = அம்பலம்.

இந்த மூன்று பாடல்களும் மும்மணிகள்; முக்கனிகள். நினைந்து நினைந்து சுவைத்து இன்புறத்தக்கவை.

26. **பாங்கிமார் கண்ணி:** இதில் உள்ளவை யாவும் சிந்துப் பாடல்கள். சாதாரண மக்களிடம் நடமாடத் தகுந்தவை. தோழி ஒருத்தி தன் நண்பர் தோழிகளை விளித்துப் பாடும் பாங்கில் அமைந்தவை. இதில் 27 கண்ணிகள் அடக்கம். தில்லைச் சிற்றம்பலவனின் கூத்தை அநுபவித்து மகிழ்ந்து உள்ள பாங்கில் அமைந்தவை. சிலவற்றை நோக்குவோம்.

*அம்பலத்தில் ஆடுகின்றார் பாங்கிமா ரே-அவர்*
*ஆட்டங்கண்டு நாட்டங் கொண்டேன் பாங்கிமா ரே (1)*

*ஆடுகின்ற சேவடிமேல் பாங்கிமா ரே-மிக*
*ஆசைகொண்டு வாடுகின்றேன் பாங்கிமா ரே (2)*

*உத்தமர்பொன் னம்பலத்தே பாங்கிமா ரே-இன்ப*
*உருவாகி ஓங்குகின்றார் பாங்கிமா ரே (5)*

*கற்பனையெல் லாங்கடந்தார் பாங்கிமா ரே-என்*
*கற்பனைக்குட் படுவாரோ பாங்கிமா ரே (7)*

*கண்டிலர்நான் படும்பாடு பாங்கிமா ரே-மூன்று*
*கண்ணுடையார் என்பார்ஐயோ பாங்கிமா ரே (8)*

*கண்மனமெல் லாங்கரைப்பார் பாங்கிமா ரே-மனங்*
*கரையாரென் னளவிலே பாங்கிமா ரே (9)*

*கற்பழித்துக் கலந்தாரே பாங்கிமா ரே-இன்று*
*கைநழுவ விடுவாரோ பாங்கிமா ரே (11)*

*கரமனைக்கண் ணாலெரித்தார் பாங்கிமா ரே-என்றன்*
*காதலைக்கண் டறிவாரோ பாங்கிமா ரே (13)*

*காவலையெல் லாம்கடந்து பாங்கிமா ரே-என்னைக்*
*கைகலந்த கள்ளரவர் பாங்மா ரே (14)*

*கிட்டவர வேண்டுமென்றார் பாங்கிமா ரே-நான்*
*கிட்டுமுன்னே யெட்டநின்றார் பாங்கிமா ரே (16)*

*கிள்ளையைத்தூ தாவிடுத்தேன் பாங்கிமா ரே-அது*
*கேட்டுவரக் காணேன்ஐயோ பாங்கிமா ரே (18)*

*குற்றமெல்லாம் குணமாகப் பாங்கிமாரே - கொள்ளுங்*
*கொற்றவரென் கொழுநர்காண் பாங்கிமா ரே (22)*

*குஞ்சிதபொற் பாதங்கண்டாற் பாங்கிமா ரே-உள்ள*
*குறையெல்லாம் தீருங்கண்டீர் பாங்கிமா ரே (24)*

*கூடல்விழைந் தேனவரைப் பாங்கிமா ரே-அது*
*கூடும் வண்ணம் கூட்டிடுவீர் பாங்கிமா ரே (27)*

அற்புதமானக் கண்ணிகள். தோழி ஒருத்தி நிலையில் தம்மைப் பாவித்துக் கொண்டு மற்றைய தோழிமார்

களுடன் கூறுவதுபோல் அடிகள் இறைவனின் திருவடிகளின்மீது தம் காதல் ஏக்கத்தைப் புலப்படுத்துவன இவை.

32. **தோழியர் உரையாடல்:** தோழியர் தம்முள் உரையாடிக் கொள்வதுபோல தாழிசையால் அமைந்த ஆறு பாடல்களைக் கொண்டது இப்பகுதி. நாயகர் யார் என்று கேட்க அவர் அம்பலத்து ஆடல் அரசர் என்று அறைவது.

*தண்மதி யொண்முகப் பெண்மணி யே - உன்னைத்*
*தான்கொண்ட நாயக ராரே டி*
*அண்மையிற் பொன்னணி யம்பலத் தாடல்செய்*
*ஐய ரமுத ரழக ரடி (1)*

*தீமையி லாதபெண் மாமயி லே - உன்னைச்*
*சேர்ந்து கலந்தவ ராரே டி*
*தாமமு டிக்கணிந் தம்பலத் தேயின்பத்*
*தாண்டவஞ் செய்யும் சதுர ரடி (3)*

*காரள கப்பெண் சிகாமணி யே - உன்றன்*
*கற்பை யழித்தவ ராரே டி*
*பேரள வைக்கடந் தம்பலத் தேநின்ற*
*பித்தர் பரானந்த நித்த ரடி (6)*

அற்புதமான தாழிசைகள். அனைத்திற்கும் காரணர் அம்பலத்தாடும் நடராசப் பெருமானே என நவில்வன.

33. **தெண்டனிட்டேன்:** நடராசப் பெருமானுக்குத் தெண்டனிட்டதாகச் சொல்வது. சிந்து மெட்டில் அமைந்த ஏழு பாடல்களைக் கொண்டது.

**பல்லவி**

*தெண்டனிட் டே னென்று சொல்ல டி-சு வாமிக்குநான்*
*தெண்டனிட் டே னென்று சொல்ல டி (1)*

### பல்லவி எடுப்பு

*தண்டலை விளங்கும் தில்லைத் தலத்தின்பொன் னம்பலத்தே*
*கண்டவர் மயங்கவேடங் கட்டியாடு கின்றவர்க்கு தெண்ட (1)*

### கண்ணிகள்

*கற்பூர வாசம்வீசும் பொற்பாந்தி ருமுகத்தே*
*கனிந்தபுன் னகையாடக் கருணைக்க டைக்கணாட*
*அற்பார்பொன் னம்பலத்தே ஆனந்தத் தாண்டவம்*
*ஆடிக்கொண் டேயென்னை ஆட்டங்கொண்டாருக்கு தெண்ட (1)*

*சுட்டதிரு நீறுபூசித் தொந்தோமென் றாடுவார்க்குத்*
*தோன்றுதலை மாலையணி தோள்விளங்க வருவார்க்குப்*
*பிட்டுக்காசைப் பட்டுமாறன் பிரம்படி பட்டவர்க்குப்*
*பிள்ளைக்கறிக் காசைகொண்ட கள்ளத்தவ வேடருக்கு தெண்ட (3)*

*தாய்வயிற்றிற் பிறவாது தானே முளைத்தவர்க்குச்*
*சாதிகுல மறியாது தாண்டவஞ்செய் கின்றவர்க்கு*
*ஏய தொழிலருளு மென்பிராண நாயகர்க்கு*
*ஏமாந்த வரையெல்லாம் ஏமாத்து மீசருக்கு (7)*

*தெண்டனிட் டே னென்று சொல்ல டி-சு வாமிக்குநான்*
*தொண்டனிட்டே னென்று சொல்லடி*

சரணாகதி தத்துவத்தைச் சாற்றுவன இப்பாடல்கள்.

34. இன்னந் தயவு வரவில்லையா: சிந்து மெட்டில் அமைந்த ஆறு கண்ணிகளைக் கொண்டது இப்பகுதி. தலைவியாகப் பாவித்துக் கொண்டு அடிகளார் இறை வனை (தலைவனை) வினவுவது.

### பல்லவி

*இன்னந் தயவுவர விலையா - உனக்கென்மீதில்*
*என்ன வர்மஞ் சொலையா*

**கண்ணிகள்**

*அன்னம் பாலிக்குந்தில்லைப் பொன்னம் பலத்திலாடும்*
*அரசே - அரசே - அரசேயென் றலறவும் இன்னந் - 1*

*சின்னஞ் சிறுவயதி லென்னை யடிமைகொண்ட*
*சிவமே - சிவமே - சிவமேயென் றலறவும் இன்னம் - 2*

*பண்டு மகிழ்ந்தெனையாட் கொண்டு கருணைசெய்த*
*பரமே - பரமே - பரமேயென் றலறவும் இன்னந் - 5*

*இன்னந் தயவுவர விலையா - உனக்கென்மீதில்*
*என்ன வர்மஞ் சொலையா.*

பாடலை மனமுருகிப் பாடி அநுபவித்தால் அடிகளை ஆட்கொண்ட இறைவன் நம்மையும் ஆட்கொள்வான். அவர்தம் விண்ணப்பப் படிவத்தில் நாம் கையெழுத்திடுவது போன்ற நிலை இது.

35. **வினா விடை:** கொச்சகக் கலிப்பா யாப்பில், தோழியர் இருவரின் வினா - விடையாகவும், தாய் - மகள் வினா - விடையாகவும் அமைந்த மூன்று பாடல்களைக் கொண்டது.

**கொச்சகக் கலிப்பா**

*ஆகமமும் ஆரணமும் அரும்பொருளென் றொருங்குரைத்த*
*ஏகவுரு வாகிநின்றா வரார்சொல் தோழி*
*மாகநதி முடிக்கணிந்து மணிமன்று ளனவரத*
*நாகமணி மிளிரநட நவில்வார்காண் பெண்ணே (1)*

**தாழிசை**

*அருளாளே அருளிறை அருள்கின்ற பொழுதங்*
*கநுபவ மாகிநின்ற தென்னடி தாயே*
*தெருளாலே மருளாலே தெரியாது தெரியும்*
*திருநட இன்பம்என் றறியாயோ மகளே (2)*

*அறிவாலே அறிவினை அறிகின்ற பொழுதங்*
*கநுபவ மாகின்ற தென்னடி தாயே*
*செறிவாலே பிறிவாலே தெரியாது தெரியும்*
*திருவருள் உருவம்என் றறியாயோ மகளே (3)*

அடிகளார் அம்பலவனின் திருக்கூடத்தைப் பல் வேறு விதமாக அநுபவிக்கும் பாங்கு நம்மை வியக்க வைக்கின்றது. நம்மிடமும் அவ்வித உணர்வு எழச் செய்கின்றது.

36. நற்றாய் கவன்றது: நற்றாய் - ஈன்றதாய். இவள் தன் மகள் தில்லைத் திருக்கூத்தனை நினைந்து நைவதாக உள்ள நிலையை எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத் தத்தாலமைந்த ஒன்பது பாடல்களால் உரைப்பது, இப் பகுதி. சில பாடல்களில் ஆழங்கால்படுவோம்.

*திருஅருட் புனிதை மகிழநின் றாடும்*
*தில்லைமன் றழகனே என்பாள்*
*மருவருட் கடலே மாணிக்க மலையே*
*மதிச்சடை வள்ளலே என்பாள்*
*இருவருக் கரிய ஒருவனே எனக்கிங்*
*கியார்துணை நின்னலா தென்பாள்*
*வெருவிஉட் குழைவாள் விழிகணீர் துளிப்பாள்*
*வெய்துயிர்ப் பாள்என்றன் மின்னே (1)*

*உலகெலாம் தழைப்பப் பொதுவினில் ஓங்கும்*
*ஒருதனித் தெய்வம்என் கின்றாள்*
*இலகுபே ரின்ப வாரிஎன் கின்றாள்*
*என்னுயிர்க் கிறைவன்என் கின்றாள்*
*அலகிலாக் கருணை அமுதன்என் கின்றாள்*
*அன்பர்கட் கன்பன்என் கின்றாள்*
*திலகவா ணுதலாள் இவ்வணம் புலம்பித்*
*தியக்கமுற் றழுங்குகின் றாளே (3)*

*கருங்களிற் றுரிபோர்த் தம்பலத் தாடும்*
*கருணைஎங் கடவுள்என் கின்றாள்*
*பெருங்களி துளும்ப வடவனத் தோங்கும்*
*பித்தரில் பித்தன்என் கின்றாள்*
*ஒருங்களி மிழற்றும் குழலினார் என்போல்*
*உறுவரோ அவனைஎன் கின்றாள்*
*தருங்களி உண்டாள் போல்கின்றாள் நாணும்*
*தவிர்க்கின்றாள் என்அருந் தவளே (6)*

*திருத்தரு தில்லைச் திருச்சிற்றம் பலத்தே*
*தெய்வம்ஒன் றுண்டெமக் கென்பாள்*
*பெருத்தகுங் குமப்பொற் கலசவாண் முலையார்*
*பேசுக பல்பல என்பாள்*
*மருத்தகு குழலாள் மனமொழி உடலம்*
*மற்றவும் அவன்கழற் கென்பாள்*
*குருத்தகு குவளைக் கண்ணின்நீர் கொழிப்பாள்*
*குதுகுலிப் பாள்பசுங் கொடியே (8)*

*அம்பலத் தாடும் அழகனைக் காணா*
*தருந்தவும் பொருந்துமோ என்பாள்*
*கம்பமுற் றிடுவாள் கண்கள்நீர் உகுப்பாள்*
*கைகுவிப் பாள்உளங் கனிவாள்*
*வம்பணி முலைகள் இரண்டும்நோக் கிடுவாள்*
*வள்ளலைப் பரிகிலீர் என்பாள்*
*உம்பரன் தவஞ்செய் திடுமினீர் என்பாள்*
*உயங்குவாள் மயங்குவாள் உணர்வே (9)*

அடிகள் மகள் நிலையிலிருந்து கொண்டு ஆடலரசன்மீது தம் காதல் உணர்வுகளையும், அவரே தாய் நிலையிலிருந்து கொண்டும் அக்காதலைப் பகர்வதைப் பாடல்களில் காணலாம். உளவியல் தத்துவத்தை அறிந்து கொண்டு பாடல்களைச் சிந்தித்தால் பாடல்களின் உணர்வு பளிச் சிடும். மனம் கரைந்து பாடல்க

ளைப் பாடி அநுபவித்தால் வள்ளல் பெருமான் தில்லை அம்பலவன்மீது கொண்டுள்ள பக்தி நிலைகளை உணரலாம்.

37. சல்லாப லகரி: இதிலுள்ள இரு பாடல்களும் கலிச்சந்த விருத்தம் என்று தொழுவூர் வேலாயுத முதலியாரும், கலிநிலைத் துறை என்று ஆ.பாலகிருஷ்ண பிள்ளையும் குறித்துள்ளனர். அடிகள் பெண் நிலையிலிருந்து கொண்டு நடராசப் பெருமானைச் சந்தித்தாகவும் அடிகள் 'வந்தனம்' என்று சொல்ல அதற்கு அவர் 'அந்தனம் இலநம் வாழ்வெல்லாம் அந்தரம்' என்று முதற் பாடலும், இரண்டாம் பாடல் 'எம்பல மாவீர் எம்பெருமுன் நீரே' என்று அடிகள் சொல்ல அதற்கு அவர் 'எம்முடை இன்ப வாழ்வெல்லாம் அம்பலம்' என்று சொல்லுமாறும் நடைபெறுகின்றன. ஆதலால் இவை 'சல்லாப லகிரி' என்ற தலைப்பின்கீழ் அமைந்துள்ளன.

(38) தலைமகளின் முன்ன முடிவு: பத்துப் பாடல்களைக் கொண்ட பதிகம் இது. பாடல்கள் எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பில் அமைந்தவை. தலைமகளின் நிலையில் இருந்து கொண்டு அடிகள் தம் பிழைகளையெல்லாம் பொறுத்தருளுமாறு வேண்டுவதாகப் பாடல்கள் நடைபெறுகின்றன. ஒருசில பாடல்களில் ஆழங்கால் படுவோம்.

*வெறுத்துரைத்தேன் பிழைகள்எலாம் பொறுத்தருளல் வேண்டும்*
*விளங்கறிவுக் கறிவாகி மெய்ப்பொதுவில் நடிப்போய்*
*கறுத்துரைத்தார் தமக்கும்அருள் கனிந்துரைக்கும் பெரிய*
*கருணைநெடுங் கடலேமுக் கண்ணோங்கு கரும்பே*
*மறுத்துரைப்ப தேவன்அருள்நீ வழங்கினும் அன்றி*
*மறுத்திடினும் உன்னையலால் மற்றொருசார் பறியேன்*
*செறுத்துரைத்த உரைகளெலாம் திருவருளே என்று*
*சிந்திப்ப தல்லாமல் செய்வகைஒன் றிலனே (1)*

*மிகுத்துரைத்தேன் பிழைகள்எலாம் சகித்தருளல் வேண்டும்*
*மெய்யறிவின் புருவாகி வியன்பொதுவில் நடிப்போய்*
*தொகுத்துரைத்த மறைகளும்பின் விரித்துரைத்தும் காணாத்*
*துரியநடு வேஇருந்த பெரியபரம் பொருளே*
*பகுத்துரைத்த பயன்உரைக்கோர் பொருளாகி விளங்கும்*
*பரஞ்சுடரே பரம்பரனே, பசுபதியே அடியேன்*
*வகுத்துரைப்ப தெவன்அருள்நீ வழங்குகினும் அன்றி*
*மறுத்திடினும் உன்னையலால் மற்றொருசார் பிலனே (2)*

*என்னுளம்நீ கலந்துகொண்டாய் உன்னுளம்நான் கலந்தேன்*
*என்செயல்உன் செயல்உன்றன் இருஞ்செயல்என் செயலே*
*பின்னுளநான் பிதற்றல்எலாம் வேறுகுறித் தெனைநீ*
*பிழைஏற்ற நினைத்திடிலோ பெருவழக்கிட் டிடுவேன்*
*அன்னையினும் தயவுடையாய் அப்பன்எனக் கானாய்*
*அன்றியும்என் ஆருயிருக் காருயிராய் நிறைந்தாய்*
*மன்னுமணிப் பொதுநடஞ்செய் மன்னவனே கருணை*
*மாநிதியே எனக்கருள்வாய் மனக்கலக்கந் தவிர்த்தே (6)*

*நாயகரே உமதுவசம் நான்இருக்கின் றதுபோல்*
*நாடியதத் துவத்தோழி நங்கையர்என் வசத்தே*
*மேயவர்ஆ காமையினால் அவர்மேல்அங் கெழுந்த*
*வெகுளியினால் சிலபுகன்றேன் வேறுநினைத் தறியேன்*
*தூயவரே வெறுப்புவரில் விதிவெறுக்க என்றார்*
*சூழவிதித் தாரைவெறுத் திடுதல்அவர் துணிவே*
*தீயவர்ஆ யினும்குற்றம் குறியாது புகன்றால்*
*தீமொழிஅன் றெனத்தேவர் செப்பியதும் உளதே (9)*

*குற்றம்ஒரு சிறிதெனினும் குறித்தறியேன் வேறோர்*
*குறைஅதனால் சிலபுகன்றேன் குறித்தறியேன் மீட்டும்*
*சற்றுமனம் வேறுபட்ட தில்லைகண்டீர் எனது*
*சாமிஉம்மேல் ஆணைஒரு சதுரும்நினைத் தறியேன்*
*பெற்றவளும் உற்றவரும் சுற்றமும்நீர் என்றே*
*பிடித்திருக்கின் றேன்பிறிதோர் வெடிப்பும்உரைத் தறியேன்*

*இற்றைதொடுத் தென்அளவில் வேறுநினை யாதீர்*
*என்னுடைய நாயகரே என்ஆசை இதுவே (10)*

இந்தப் பாடல்களை நாமும் அடிகள் நிலையில் பெண்ணாகப் பாவித்துக் கொண்டு ஓதினால் அடிகளாரின் அநுபவம் நமக்கும் கிட்டும்.

39. **வேட்கைக் கொத்து:** அடிகளார் தலைவி நிலையை அடைந்து தோழியோடு கூறுவனவாகப் பத்துப் பாடல்களைக் கொண்டது இப்பதிகம். அடிகளார் 'பதிகம்' என்பதற்குப் பதிலாகக் 'கொத்து' என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். "இளம் பருவத்தில் மாலையிட்டுத் தன்னிடம் காதலை எழுப்பி விட்டான்; மறித்தும் பாராது நழுவிவிட்டான். அவனை விடுவேனோ?" என்று தன் விடாப்பிடி வேட்கை உணர்வைப் புலப்படுத்துகின்றார். பாடல்கள் பத்தும் எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தால் அமைந்தவை. ஒவ்வொரு பாடலும் 'விடுவேனோ?' என்ற சொல் இறுதியடியில் உயிர்நாடியாகப் பேசுகின்றது. இரண்டு பாடல்களில் ஆழங்கால்பட்டு அநுபவிப்போம்.

*என்னுயிரில் கலந்துகலந் தினிக்கின்ற பெருமான்*
*என்இறைவன் பொதுவில்நடம் இயற்றும்நட ராசன்*
*தன்னைஅறி யாப்பருவத் தென்னைமணம் புரிந்தான்*
*தனைஅறிந்த பருவத்தே எனைஅறிய விரும்பான்*
*பின்னைஅன்றி முன்னும்ஒரு பிழைபுரிந்தேன் இல்லை*
*பெண்பரிதா பங்காணல் பெருந்தகைக்கும் அழகோ*
*கன்னல்என்றால் கைக்கின்ற கணக்கும்உண்டோ அவன்றன்*
*கணக்கறிந்தும் விடுவேனோ கண்டாய்என் தோழி (3)*

*தனித்தபர நாதமுடித் தலத்தின்மிசைத் தலத்தே*
*தலைவரெலாம் வணங்கநின்ற தலைவன்நட ராசன்*

*இனித்தசுகம் அறிந்துகொளா இளம்பருவந் தனிலே*
*என்புருவ நடுஇருந்தான் பின்புகண்டேன் இல்லை*
*அனித்தம்இலா இச்சரிதம் யார்க்குரைப்பேன் அந்தோ*
*அவன்அறிவான் நான்அறிவேன் அயலறியார் உளரோ*
*துனித்தநிலை விடுத்தொருகால் சுத்தநிலை அதனில்*
*சுகங்கண்டும் விடுவேனோ சொல்லாய்என் தோழி (10)*

இக்கொத்தில் ஒரு பாடலைக் கூட விட மனம் இல்லை. விரிவஞ்சி விடுத்தேன். அடிகளின் அடியார்கள் அனைத்திலும் ஆழங்கால்பட்டு அநுபவிக்க வேண்டும் என்பது என் ஆசை. அப்படிச் செய்தால் அடிகளின் ஆராக்காதல் நம்மையும் தொத்து நோய்போல் விடாப்பிடியாய்ப் பிடித்துக் கொள்ளும்.

# 7. ஐந்தாம் திருமுறைப் பாடல்கள்

இதில் 12 மாலைகளும், 238 பாடல்களும் அடக்கம். திருமுறைகள் ஆறிலும் இதுதான் மிகச் சிறியது; குறைந்த பதிகங்கள்; குறைவான எண்ணிக்கையில் பாடல்கள். 'மாலைகள்' என்ற தலைப்புகள் 12 மாலைகளைக் கொண்டவை. இவற்றையும் இவற்றில் மனங்கவரும் சில பாடல்களையும் காண்போம்.

1. அன்பு மாலை: இஃது எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பால் அமைந்த 31 பாடல்களைக் கொண்டது. உள்ளத்தைக் கவரும் ஒரு சில பாடல்களில் ஆழங்கால் பட்டுத் துய்ப்போம். 'அன்பே சிவம்' என்பது திருமூலர் வாக்காதலால் 'அன்பு மாலை' முதலாவதாக இத்திருமுறையில் அமைக்கப் பெற்றதுபோலும் எனக் கருதலாம்.

*அற்புதப்பொன் அம்பலத்தே ஆடுகின்ற அரசே*
*ஆரமுதே அடியேன்றன் அன்பேஎன் அறிவே*
*கற்புதவு பெருங்கருணைக் கடலேஎன் கண்ணே*
*கண்ணுதலே ஆனந்தக் களிப்பேமெய்க் கதியே*
*வெற்புதவு பசுங்கொடியை மருவுபெருந் தருவே*
*வேதஆ கமமுடிவின் விளங்கும்ஒளி விளக்கே*
*பொற்புறவே இவ்வுலகில் பொருந்துசித்தன் ஆனேன்*
*பொருத்தமும் நின்திருவருளின் பொருத்தமது நானே (1)*

*ஆண்பனைபெண் பனையாக்கி அங்கமதங் கனையாய்*
*ஆக்கிஅருண் மணத்தில்ஒளி அனைவரையும் ஆக்கும்*

*மாண்பனைமிக் குவந்தளித்த மாகருணை மலையே*
*வருத்தமெலாம் தவிர்த்தெனக்கு வாழ்வளித்த வாழ்வே*
*நாண்பனையும் தந்தையும்என் நற்குருவும் ஆகி*
*நாயடியேன் உள்ளத்து நண்ணியநா யகனே*
*வீண்பனைபோன் மிகநீண்டு விழற்கிறைப்பேன் எனினும்*
*விருப்பமெலாம் நின்அருளின் விருப்பம்அன்றி இலையே (3)*

*திருநெறிசேர் மெய்அடியார் திறன்ஒன்றும் அறியேன்*
*செறிவறியேன் அறிவறியேன் செய்வகையை அறியேன்*
*கருநெறிசேர்ந் துழல்கின்ற கடையரினும் கடையேன்*
*கற்கின்றேன் சாகாத கல்விநிலை காணேன்*
*பெருநெறிசேர் மெய்ஞ்ஞான சித்தநிலை பெறுவான்*
*பிதற்றுகின்றேன் அதற்குரிய பெற்றியிலேன் அந்தோ*
*வருநெறியில் என்னைவலிந் தாட்கொண்ட மணியே*
*மன்னுடைய பெருவாழ்வே வழங்குகநின் அருளே (7)*

*பூணாத பூண்களெலாம் பூண்டபரம் பொருளே*
*பொய்யடியேன் பிழைமுழுதும் பொறுத்தருளி என்றும்*
*காணாத காட்சியெலாம் காட்டிஎனக் குள்ளே*
*கருணைநடம் புரிகின்ற கருணையைஎன் புகல்வேன்*
*மாணாத குணக்கொடியேன் இதைநினைக்கும் தோறும்*
*மனமுருகி இழுகண்ணீர் வடிக்கின்றேன் கண்டாய்*
*ஏணாதன் என்னினும்யான் அம்மையின்நின் அடியேன்*
*எனஅறிந்தேன் அறிந்தபின்னர் இதயமலர்த் தேனே. (9)*

*அன்பர்உளக் கோயிலிலே அமர்ந்தருளும் பதியே*
*அம்பலத்தில் ஆடுகின்ற ஆனந்த நிதியே*
*வன்பர்உளத் தேமறைந்து வழங்கும்ஒளி மணியே*
*மறைமுடிஆ கமமுடியின் வயங்குநிறை மதியே*
*என்பருவம் குறியாமல் என்னைவலிந் தாட்கொண்*
*டின்பநிலை தனைஅளித்த என்னறிவுக் கறிவே*
*முன்பருவம் பின்பருவங் கண்டருளிச் செய்யும்*
*முறைமைநின தருள்நெறிக்கு மொழிதல்அறிந் திலனே (11)*

*சற்றும்அறி வில்லாத எனையும்வலிந் தாண்டு*
*தமியேன்செய் குற்றமெலாம் சம்மதமாக் கொண்டு*
*கற்றுமறிந் துங்கேட்டுந் தெளிந்தபெரி யவருங்*
*கண்டுமகி ழப்புரிந்து பண்டைவினை அகற்றி*
*மற்றும்அறி வனவெல்லாம் அறிவித்தென் உளத்தே*
*மன்னுகின்ற மெய்இன்ப வாழ்க்கைமுதற் பொருளே*
*பெற்றுமறி வில்லாத பேதைஎன்மேல் உனக்குப்*
*பெருங்கருணை வந்தவகை எந்தவகை பேசே (15)*

*நான்கேட்கின் றவையெல்லாம் அளிக்கின்றாய் எனக்கு*
*நல்லவனே எல்லாமும் வல்லசிவ சித்தா*
*தான்கேட்கின் றவையின்றி முழுதொருங்கே உணர்ந்தாய்*
*தத்துவனே மதிஅணிந்த சடைமுடிவும் இறைவா*
*தேன்கேட்கும் மொழிமங்கை ஒருபங்கில் உடையாய்*
*சிவனேஎம் பெருமானே தேவர்பெரு மானே*
*வான்கேட்கும் புகழ்த்தில்லை மன்றில்நடம் புரிவாய்*
*மணிமிடற்றுப் பெருங்கருணை வள்ளல்என்கண் மணியே (20)*

*ஏதும்அறி யாதிருளில் இருந்தசிறி யேனை*
*எடுத்துவிடுத் தறிவுசிறி தேய்ந்திடவும் புரிந்து*
*ஓதுமறை முதற்கலைகள் ஓதாமல் உணர*
*உணர்விலிருந் துணர்த்திஅருள் உண்மைநிலை காட்டித்*
*தீதுநெறி சமயநெறி செல்லுதலைத் தவிர்த்துத்*
*திருஅருண்மெய்ப் பொதுநெறியில் செலுத்தியும் நான்மருளும்*
*போதுமயங் கேல்மகனே என்றுமயக் கெல்லாம்*
*போக்கிஎனக் குள்ளிருந்த புனிதபரம் பொருளே (25)*

*மன்னியபொன் னம்பலத்தே ஆனந்த நடஞ்செய்*
*மாமணியே என்னிருகண் வயங்கும்ஒளி ணியே*
*தன்னியல்பின் நிறைந்தருளும் சத்துவபூ ரணமே*
*தற்பரமே சிற்பரமே தத்துவப்பே ரொளியே*
*அன்னியமில் லாதசுத்த அத்துவித நிலையே*
*ஆதியந்த மேதுமின்றி அமர்ந்தபரம் பொருளே*
*என்னியல்பின் எனக்கருளி மயக்கம்இன்னுந் தவிர்த்தே*
*எனைஆண்டு கொளல்வேண்டும் இதுதருணங் காணே (29)*

பாடல்களை ஆனந்தமாகப் பாடி அநுபவிக்க வேண்டும். பாட்டிலுள்ள உருவகங்கள் நம்மைக் கற்பனையில் ஆழ்த்தி அடிகளார் குறிப்பிடும் அன்புருவாய ஆண்டவனை மானசீகமாகக் காண வழியமையும்.

2. அருட்பிரகாச மாலை: 'அருள் என்னும் அன்பு ஈன் குழவி' (குறள் - 757) என்றார் வள்ளுவர் பெருமான். அந்த அருள் வடிவமான ஆண்டவனை அடிகளார் 100 எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பில் அமைந்த பாடல்களால் வழுத்தி அவனை 'அருட்பிரகாசமாக'க் காட்டுகின்றார் நமக்கு. இந்தப் பாமாலை அடிகளாரின் வாழ்க்கை நிகழ்ச்சிகளை உணர்த்துவதுபோல் தோன்றுகிறது. ஒரு சில பாடல்களில் ஆழங்கால்பட்டு அந்த 'அருட்பெருஞ்சோதியை' நாமும் காண முயல்வோம்.

கருங்குழி வாழ்க்கையில் ஒரு நாள் இறைவன் மானிடத் திருமேனி தாங்கி அடிகள் இருக்குமிடம் தேடி வந்து கதவைத் தட்டித் திறக்குமாறு கூற, அவரும் திறக்க, வந்த இறைவன் தன் திருவடிகளில் ஒன்றை வாயிற்படியின் அகத்தும் மற்றொன்றைப் புறத்தும் வைத்தவாறு சில இதவார்த்தைகளைச் சொல்லிச் சென்றார். இந்நிகழ்ச்சியை,

*உலகமெலாம் உதிக்கின்ற ஒளிநிலைமெய் இன்பம்*
*உறுகின்ற வெளிநிலையென் றுபயநிலை யாகி*
*இலகியநின் சேவடிகள் வருந்தியிட நடந்தே*
*இரவில்எளி யேன்இருக்கும் இடந்தேடி அடைந்து*
*கலகமிலாத் தெருக்கதவங் காப்பவிழ்க்கப் புரிந்து*
*களித்தெனையங் கழைத்தெனது கையில்ஒன்று கொடுத்தாய்*
*அலகில்அருட் கடலாம்உன் பெருமையைஎன் என்பேன்*
*ஆனந்த வல்லிமகிழ் அருள்நடநா யகனே (1)*

என்ற பாடலிலும் தொடர்ந்து வரும் பாடல்களிலும் குறித்தருளியுள்ளார்.

3. பிரசாத மாலை: இஃது எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பில் அமைந்த பத்துப் பாடல் களைக் கொண்டது. இவற்றில் நான்கு பாடல்களில் ஆழங்கால் படுவோம்.

*திருஉருக்கொண் டெழுந்தருளிச் சிறியேன்முன் அடைந்து*
*திருநீற்றுப் பைஅவிழ்த்துச் செஞ்சடர்ப்பூ அளிக்கத்*
*திருவுருக்கொண் டெதிர்வணங்கி வாங்கியநான் மீட்டும்*
*தயாநிதியே திருநீறும் தருகஎனக் கேட்ப*
*மருவுருக்கொண் டன்றளித்தாம் திருநீறின் றுனக்கு*
*மகிழந்தளித்தாம் இவைஎன்று வாய்மலர்ந்து நின்றாய்*
*குருவுருக்கொண் டம்பலத்தே அருள்நடனம் புரியும்*
*குருமணியே என்னைமுன்னாட் கொண்டகுணக் குன்றே (1)*

*அழகுநிறைந் திலகஒரு திருமேனி தரித்தே*
*அடியேன்முன் எழுந்தருளி அருள்நகைகொண் டடியார்*
*கழகநடு எனைஇருத்தி அவர்க்கெல்லாம் நீறு*
*கனிந்தருளி என்னளவிற் கருணைமுக மலர்ந்து*
*குழகியற்செஞ் சுடர்ப்பூவைப் பொக்கணத்தில் எடுத்துக்*
*கொடுத்தருளி நின்றானைநின் குறிப்பறியேன் குருவே*
*மழகளிற்றின் உரிவிளங்க மணிப்பொதுவற் சோதி*
*மயவடிவோ டின்பநடம் வாய்ந்தியற்றும் பதியே (3)*

*உலர்ந்தமரந் தழைக்கும்ஒரு திருவுருவம் தாங்கி*
*உணர்விலியேன் முன்னர்உவந் துறுகருணை துளும்ப*
*மலர்ந்தமுகம் காட்டிநின்று திருநீற்றுப் பையை*
*மலர்க்கரத்தால் அவிழ்ந்தங்கு வதிந்தவர்கட் கெல்லாம்*
*அலர்ந்ததிரு நீறளித்துப் பின்னர்என்றன் கரத்தில்*
*அருள்மணப்பூ அளித்தனைநின் அருட்குறிப்பே தறியேன்*
*கலந்தவரைக் கலந்துமணிக் கனகமன்றில் நடஞ்செய்*
*கருணைநெடுங் கடலேஎன் கண்அமலர்ந்த ஒளியே (5)*

*உன்னுதற்கும் உணர்வதற்கும் உவட்டாத வடிவம்*
*ஒன்றெடுத்து மெய்யன்பர் உவக்கஎழுந் தருளி*

*முன்னுதற்கோர் அணுத்துணையும் தரமில்லாச் சிறியேன்*
*முகநோக்கிச் செழுமணப்பூ முகமலர்ந்து கொடுத்தாய்*
*துன்னுதற்கிங் கரிதாம்நின் திருஉள்ளக் குறிப்பைத்*
*துணிந்தறியேன் என்னினும்ஓர் துணிவின்உவக் கின்றேன்*
*பொன்னுதற்குத் திலகமெனும் சிவகாம வல்லிப்*
*பூவைஒரு புறங்களிப்பப் பொதுநடஞ்செய் பொருளே (10)*

இந்தப் பாடல்களை இசையூட்டிப் பாடி அநுபவித்தால் வள்ளலார் அநுபவத்தை நாமும் பெறலாம். இவற்றில் குறிப்பிட்ட நிகழ்ச்சி: ஒருநாள் அடிகள் அன்பர்கள் புடைசூழ இருந்தபோது இறைவன் எழுந்தருளி அங்கி ருந்த மற்றவர்க்கெல்லாம் திருநீறு அளித்து அடிகளை நோக்கிப் புன்னகைத்துத் திருநீற்றுப் பையிலிருந்து செஞ்சுடர்ப் பூ ஒன்றை அளித்தருளினார். அச்சுடர்ப் பூவைப் பெற்ற அடிகள் 'திருநீறும் தருக!' என வேண்ட, இறைவன் 'அன்று உனக்கு திருநீறு அளித்த னம்; இன்று இதனை அளித்தோம்' என்று சொல்லிச் சென்றார். பாடல்களில் செஞ்சுடர்ப்பூ, மணச் செழும்பூ, அருண்மணப்பூ, செழுமணப்பூ என்றும் குறிக்கப் பெற்றுள்ளன. இத்திருவருள் நிகழ்ச்சி அடிகள் பலரோடு இருக்கும்போது நடந்ததாகும்.

4. **ஆனந்த மாலை:** அன்னை சிவகாமி உளங் களிப்ப ஆடலரசன் ஆனந்த நடனமாடுவதை எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பில் பாடப் பெற்ற பத்துப் பாடல்களைக் கொண்டது இந்த மாலை. படிப் போரின் உள்ளத்தைக் கரைக்கச் செய்யும் பான்மை யுடையவை. நான்கு பாடல்களில் ஆழங்கால்பட்டு மகிழ்வோம்.

*திருவருடுந் திருவடிப்பொற் சிலம்பசைய நடந்தென்*
*சிந்தையிலே புகுந்துநின்பால் சேர்ந்துகலந் திருந்தாள்*
*தெருமரலற் றுயர்ந்தமறைச் சிரத்தமர்ந்த புனிதை*
*சிவகாம வல்லிபெருந் தேவிஉளங் களிப்பப்*

பொருவருமெய் யன்புடையார் இருவருங்கண் டுவந்து
போற்றமணிப் பொதுவில்நடம் புரிகின்ற துரையே
பருவரல்சுற் றடிச்சிறியேன் பெருவரம்பெற் றுனையே
பாடுகிறேன் பெரியஅருட் பருவமடைந் தனனே (1)

அருளுடைய நாயகிஎன் அம்மைஅடி யார்மேல்
அன்புடையாள் அமுதனையாள் அற்புதப்பெண் ணரசி
தெருடுடைய சிந்தையிலே தித்திக்கும் பதத்தாள்
சிவகாம வல்லிபெருந் தேவிஉளங் களிப்ப
மருளுடைய மாயையெலாம் தேயமணி மன்றின்
மாநடஞ்செய் துரையேநின் மன்னருளின் திறத்தை
இருளுடைய மனச்சிறியேன் பாடுகின்றேன் பருவம்
எய்தனன்என் றறிஞரெலாம் எண்ணிமதித் திடவே (3)

அறங்கனிந்த அருட்கொடிஎன் அம்மைஅமு தளித்தாள்
அகிலாண்ட வல்லிசிவா னந்திசௌந் தரிசீர்த்
திறங்கலந்த நாதமணிச் சிலம்பணிந்த பதத்தாள்
சிவகாம வல்லிபெருந் தேவிஉளங் களிப்ப
மறங்கனிந்தார் மயக்கமெலாந் தெளியமணிப் பொதுவில்
மாநடஞ்செய் துரையேநின் வண்மைதனை அடியேன்
புறங்கவியப் பாடுகின்றேன் அகங்கவியப் பாடும்
புண்ணியரெல் லாம்இவன்ஓர் புதியன்எனக் கொளவே (6)

தன்னொளியில் உலகமெலாந் தாங்குகின்ற விமலை
தற்பரைஅம் பரைமாசி தம்பரைசிற சத்தி
சின்னவய தினில்என்னை ஆளநினக் கிசைந்தாள்
சிவகாம வல்லிபெருந் தேவிஉளங் களிப்ப
மன்னியபொன் மணிப்பொதுவில் இன்பநடம் புரிந்து
வயங்குகின்ற துரையேநின் மாகருணைத் திறத்தை
உன்னிஉவந் துணர்ந்துருகிப் பாடுகின்றேன் எங்கள்
உடையானே நின்னருளில் அடையாளம் இதுவே (10)

பாடல்களை உளம் உருகப் பாடினால் வள்ளல் பெருமான் பெற்ற அநுபவத்தை நாமும் பெறலாம்.

5. பத்தி மாலை: வள்ளல் பெருமான் பத்தி நிலையை அவர்தம் சொற்களாலேயே காட்டுவது இப் பதிகம். எண்சீர்க் கழிநெடிலாசிரிய விருத்த யாப்பில் அமைந்த பத்துப் பாடல்களைக் கொண்டது. ஒவ்வொரு பாடலும் ''இனித்தநடம் புரிந்துமன்றில் தனித்த சிவக்கொழுந்தே '' என்று இறுவது. நான்கு பாடல்களில் ஆழங்கால்படு வோம்.

*அருளுடையாய் அடியேன்நான் அருளருமை அறியேன்*
*அறியாதே மறுத்தபிழை அத்தனையும் பொறுத்து*
*மருளுடையேன் தனைஅழைத்துத் திரும்பவும்என் கரத்தே*
*மகிழ்ந்தளித்த பெருங்கருணை வண்ணம்என்றன் மனமும்*
*தெருளுடைய கண்களும்விட் டகலாதே இன்னும்*
*தெரிகின்ற தாயினும்என் சிந்தைஉரு கிலதே*
*இருளுடைய நிலையும்இதற் குருகல்அரி தலவே*
*இனித்தநடம் புரிந்துமன்றில் தனித்தசிவக் கொழுந்தே (1)*

*ஆளுடையாய் சிறியேன்நான் அருளருமை அறியேன்*
*அறியாதே மறுத்தபிழை அத்தனையும் பொறுத்து*
*வாளுடையேன் தனைஅழைத்துத் திரும்பவும்என் கரத்தே*
*வலித்தளித்த பெருங்கருணை வண்ணம்என்றன் மனமும்*
*நீளுடைய கண்களும்விட் டகலாதே இன்னும்*
*நிகழ்கின்ற தாயினும்என் நெஞ்சம்உரு கிலதே*
*ஏளுடைய மலையும்இதற் குருகல்அரி தலவே*
*இனித்தநடம் புரிந்துமன்றில் தனித்தசிவக் கொழுந்தே (3)*

*ஆண்டவநின் அருளருமை அறுயாதே திரிந்தேன்*
*அன்றிரவின் மறுத்தபிழை அத்தனையும பொறுத்து*
*வேண்டிஎனை அருகழைத்துத் திரும்பவும்என் கரத்தே*
*மிகஅளித்த அருள்வண்ணம் வினையுடையேன் மனமும்*
*காண்தகைய கண்களும்விட் டகலாதே இன்னும்*
*காண்கின்ற தாயினும்என் கருத்துருகக் காணேன்*
*ஈண்டுருகாக் கரடும்இதற் குருகல்அரி தலவே*
*இனித்தநடம் புரிந்துமன்றில் தனித்தசிவக் கொழுந்தே (6)*

*அப்பாநின் திருவருட்பேர் அமுதருமை அறியேன்*
*அன்றிரவின் மறுத்தபிழை அத்தனையும் பொறுத்து*
*இப்பாரில் எனைஅழைத்து வலியவும்என் கரத்தே*
*இனிதளித்த பெருங்கருணை இன்பமென்றன் மனமும்*
*துப்பாய கண்களும்விட் டகலாதே இன்னும்*
*தோன்றுகின்ற தாயினும்இத் துட்டநெஞ்சம் உருகா*
*எப்பாவி நெஞ்சுமிதற் குருகல்அரி தலவே*
*இனித்தநடம் புரிந்துமன்றில் தனித்தசிவக் கொழுந்தே (9)*

'அழுதால் உன்னைப் பெறலாமே' என்ற மணிவாசகர் கருத்திற்கொப்ப இப்பாடல்களைக் கண்ணீர் விட்டு அழுது அழுது அநுபவித்தால் வள்ளற் பெருமான் அநுபவத்தை எட்டிப் பிடிக்கலாம். பாடல்களில் அவர் தம் நேரிய அநுபவம் குறிப்பிட்டிருப்பதைக் கண்டு மகிழலாம்.

6. **சௌந்தர மாலை:** இறைவன் அழகன். அவனது அழகில் சொக்கி அநுபவித்த அழகைப் பன்னிரண்டு பாடல்களில் வடித்துக் காட்டுகின்றார் அடிகள். பாடல்கள் யாவும் எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பில் அமைந்தவை. இவற்றுள் ஈண்டு நான்கு பாடல்களில் நாம் ஆழங்கால் படலாம்.

*சேலோடும் இணைந்தவிழிச் செல்விபெருந் தேவி*
*சிவகாம வல்லியொடு சிவபோக வடிவாய்*
*மேலொடு கீழ்நடுவும் கடந்தோங்கு வெளியில்*
*விளங்கியநின் திருவுருவை உளங்கொளும்போ தெல்லாம்*
*பாலோடு பழம்பிழிந்து தேன்கலந்து பாகும்*
*பசுநெய்யும் கூட்டிஉண்ட படிஇருப்ப தென்றால்*
*மாலோடு காண்கின்ற கண்களுக்கங் கிருந்த*
*வண்ணம்இந்த வண்ணம்என எண்ணவும்ஒண் ணாதே (1)*

*சித்தியெலாம் அளித்தசிவ சத்திஎனை யுடையாள்*
*சிவகாம வல்லியொடு சிவஞானப் பொதுவில்*

*முத்தியெலாம் தரவிளங்கும் முன்னவநின் வடிவை*
*மூடமனச் சிறியேன்நான் நாடவரும் பொழுது*
*புத்தியெலாம் ஒன்றாகிப் புத்தமுதம் உண்டால்*
*போலும்இருப் பதுஅதற்கு மேலும்இருப் பதுவேல்*
*பத்திஎலாம் உடையவர்கள் காணுமிடத் திருக்கும்*
*படிதான்எப் படியோஇப் படிஎன்ப தரிதே. (4)*

*தேன்மொழிப்பெண் ணரசிஅருட் செல்வம்எனக் களித்தாள்*
*சிவகாம வல்லியொடு செம்பொன்மணிப் பொதுவில்*
*வான்மொழிய நின்றிலங்கு நின்வடிவைச் சிறியேன்*
*மனங்கொண்ட காலத்தே வாய்த்தஅநு பவத்தை*
*நான்மொழிய முடியாதேல் அன்பர்கண்ட காலம்*
*நண்ணியமெய் வண்ணமதை எண்ணிஎவர் புகல்வார்*
*நூன்மொழிக்கும் பொருட்கும்மிக நுண்ணியதாய் ஞான*
*நோக்குடையார் நோக்கினிலே போக்கியமெய்ப் பொருளே (6)*

*என்பிழையா வையும்பொறுத்தாள் என்னைமுன்னே அளித்தாள்*
*இறைவிசிவ காமவல்லி என்னம்மை யுடனே*
*இன்பவடி வாய்ப்பொதுவில் இலங்கியநின் வண்ணம்*
*இற்றெனநான் நினைத்திடுங்கால் எற்றெனவும் மொழிவேன்*
*அன்புறுவாய் அதுஅதுவாய் அளித்தபழம் ஆகி*
*அப்பழச்சா றாகிஅதன் அருஞ்சுவையும் ஆகி*
*என்புருக மனஞான மயமாகும் என்றால்*
*எற்றேரமெய் அன்புடையார் இயைந்துகண்ட இடத்தே (10)*

அற்புதமான பாடல்கள். அனைத்தும் தம் சொந்த அநுபவத்தில் விளைந்தவை. அருட்பாத் திருமுறைகளிலுள்ள பாடல்கள் அனைத்தும் சொந்த அநுபவ விளைச்சல்களாக இருப்பினும் ஐந்தாம் திருமுறைக்கு ஒரு சிறப்பான இடம் உண்டு. அடுத்து வரும் அதிசய மாலையிலும் அபராத மன்னிப்பு மாலையிலும் உளள பாடல்கள் தமக்கும் எம்பெருமானுக்கும் உள்ள மிக்க நெருக்கத்தைக் காட்டுவன.

7. அதிசய மாலை: இது பதினான்கு பாடல்களைக கொண்டது - சைவ சாத்திரங்கள் பதினான்கைப் போல. எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பில் அமைந்தவை. இத்திருமுறையிலுள்ள பெரும்பாலான பதிகங்களும் (பன்னிரண்டில் மூன்றைத் தவிர) இந்த யாப்பில்தான் நடைபெறுகின்றன. சொற்பொழிவுக்கு ஏற்ற நடைபோல் இருப்பதால் பிற்காலத்தில் பாரதி தாசன் தம்முடைய முக்கியமான காவியங்களில் இந்த யாப்பையே காப்பாக அமைத்துக் கொண்டிருப்பதைக் காணலாம். தவிர, எல்லாப் பாடல்களும் 'அதிசயம், அதிசயம்' என்று ஈரடுக்குத் தொடர்களால் தொடங்கு வதே நமக்கும் அற்புத அதிசயமாகத் தோன்றுகின்றது. மேலும் பாடல்கள் யாவும் 'தனித்த சிவகாம வல்லிக் கினித்த நடத்தவளே' என்று இறுவதும் ஓர் அதிசயமே.

*அச்சோஈ ததிசயம்ஈ ததிசயம்என் புகல்வேன்*
*அரிமுதலோர் நெடுங்காலம் புரிமுதல்நீத் திருந்து*
*நச்சோல மிடவும்அவர்க் கருளாமல் மருளால்*
*நாள்கழித்துக் கோள்கொழிக்கும் நடைநாயிற் கடையேன்*
*எச்சோடும் இழிவினுக்கொன் றில்லேன்நான் பொல்லேன்*
*எனைக்கருதி யானிருக்கும் இடத்திலெழுந் தருளித்*
*தச்சோதி வணப்பொருள்ஒன் றெனக்களித்துக் களித்தான்*
*தனித்தசிவ காமவல்லிக் கினித்தநடத் தவனே (2)*

*அந்தோஈ ததிசயம்ஈ ததிசயம்என் புகல்வேன்*
*அறிவுடையார் ஐம்புலனும் செறிவுடையார் ஆகி*
*வந்தோல மிடவும்அவர்க் கருளாமல் மருளால்*
*மனஞ்சென்ற வழியெல்லாந் தினஞ்சென்ற மதியேன்*
*எந்தோஎன் றுலகியம்ப விழிவழியே உழல்வேன்*
*எனைக்கருதி எளியேன்நான் இருக்குமிடத் தடைந்து*
*சந்தோட முறஎனக்கும் தன்வணம்ஒன் றளித்தான்*
*தனித்தசிவ காமவல்லிக் கினித்தநடத் தவனே (4)*

*ஐயா ஈ ததிசயம் ஈ ததிசயம்என் புகல்வேன்*
*அருமைஅறிந் தருள்விரும்பி உரிமைபல இயற்றிப்*
*பொய்யாத நிலைநின்ற புண்ணியர்கள் இருக்கப்*
*புலைமனத்துச் சிறியேன்ஓர் புல்லுநிகர் இல்லேன்*
*செய்யாத சிறுதொழிலே செய்துழலுங் கடையேன்*
*செருக்குடையேன் எனைத்தனது திருவுளத்தில் அடைந்தே*
*சையாதி அந்தநடுக் காட்டிஒன்று கொடுத்தான்*
*தனித்தசிவ காமவல்லிக் கினித்தநடத் தவனே (9)*

*ஐயோ ஈ ததிசயம் ஈ ததிசயம்என் புகல்வேன்*
*அருவனைகள் அணுகாமல் அறநெறியே நடந்து*
*மெய்யோதும் அருளுரெலாம் விரும்பியிருந் திடவும்*
*வெய்யவினைக் கடல்குளித்து விழற்கிறைத்துக் களித்துப்*
*பொய்ஓதிப் புலைபெருக்கி நிலைசுருக்கி உழலும்*
*புரைமனத்தேன் எணைக்கருதிப் புகுந்தருளிக் கருணைச்*
*சையோக முறஎனக்கும் வலிந்தொன்று கொடுத்தான்*
*தனித்தசிவ காமவல்லிக் கினித்தநடத் தவனே (11)*

*என்னே ஈ ததிசயம் ஈ ததிசயம்என் இசைப்பேன்*
*இரவுபகல் அறியாமல் இருந்தஇடத் திருந்து*
*முன்னேமெய்த் தவம்புரிந்தார் இன்னேயும் இருப்ப*
*மூடர்களில் தலைநின்ற வேடமனக் கொடியேன்*
*பொன்னேயம் மிகப்புரிந்த புலைக்கடையேன் இழிந்த*
*புழுவினும்இங் கிழிந்திழிந்து புகுந்தஎன்னைக் கருதித்*
*தன்னேய முறஎனக்கும் ஒன்றழித்துக் களித்தான்*
*தனித்தசிவ காமவல்லிக் கிளித்தநடத் தவனே (13)*

இந்த ஐந்து பாடல்களையும் உளங்கரைந்து இசையுடன் ஓதி நுகர்ந்தால் வள்ளல் பெருமானின் அநுபவம் நம் அநுபவமாகும். அதற்கும் இறையருள் வேண்டும். 'அழுதால் உன்னைப் பெறலாமே' என்ற மணிவாசகப் பெருமானின் மணிவாக்கை நினைவு கூரலாம்.

8. அபராத மன்னிப்பு மாலை: அடிகளார் அப்பழுக் கற்ற ஞானியார் என்பதை நாம் அறிவோம். எனினும் நைச்சியாநுசந்தானமாக (தம்மையே தாழ்த்திக் கூறும் பாங்கில்) தாம் ஏதோ அறியாமையால் பிழைகள் புரிந்த மாதிரியும் அவற்றையெல்லாம் பொறுத்து மன்னித்த ருள வேண்டும் என்னும் போக்கிலும் பத்துப் பாடல்க ளைப் பாங்குடன் அருளுகின்றார். பாடல்கள் யாவும் எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பில் அமைந்தவை. நான்கு பாடல்களில் ஆழங்கால் படு வோம்.

*செய்வகைநன் கறியாதே திருவருளோ டூடிச்*
*சிலபுகன்றேன் அறிவறியாச் சிறியரினுஞ் சிறியேன்*
*பொய்வகையேன் புகன்றபிழை பொறுத்தருளல் வேண்டும்*
*புண்ணியனே மதியணிந்த புரிசடையாய் விடையாய்*
*மெய்வகையோர் விழித்திருப்ப விரும்பிஎனை அன்றே*
*மிகவலிந்தாட் கொண்டருளி வினைதவிர்த்த விமலா*
*ஐவகைய கடவுளரும் அத்தணரும் பரவ*
*ஆனந்தத் திருநடஞ்செய் அம்பலத்தென் அரசே (1)*

*கலைக்கடைநன் கறியாதே கனஅருளோ டூடிக்*
*கரிசுபுகன் றேன்கவலைக் கடற்புணைஎன் றுணரேன்*
*புலைக்கடையேன் புகன்றபிழை பொறுத்தருளல் வேண்டும்*
*போற்றிசிவ போற்றிசிவ போற்றிசிவ போற்றி*
*தலைக்கடைவாய் அன்றிரவில் தாள்மலரோன் றமர்த்தித்*
*தனிப்பொருள்என் கையலளித்த தயவுடைய பெருமான்*
*கொலைக்கடையார்க் கெய்தரிய குணமலையே பொதுவில்*
*கூத்தாடிக் கொண்டுலகைக் காத்தருளும் குருவே (3)*

*கையடைநன் கறியாதே கனஅருளோ டூடிக்*
*காசுபுகன் றேன்கருணைத் தேசறியாக் கடையேன்*
*பொய்யடியேன் புகன்றபிழை பொறுத்தருளல் வேண்டும்*
*புத்தமுதே சுத்தசுக பூரணசிற் சிவமே*

*ஐயடிகள் காடவர்கோன் அகமகிழ்ந்து போற்றும்*
*அம்பலத்தே அருநடஞ்செய் செம்பவள மலையே*
*மெய்யடியார் உள்ளகத்தில் விளங்குகின்ற விளக்கே*
*வேதமுடி மீதிருந்த மேதகுசற் குருவே (7)*

*தேர்ந்துணர்ந்து தெளியாதே திருவருளே நீடிச்*
*சிலபுகன்றேன் திருக்கருணைத் திறஞ்சிறிதுந் தெளியேன்*
*போந்தகனேன் புகன்றபிழை பொறுத்தருளல் வேண்டும்*
*போதாந்த மிசைவிளங்கு நாதாந்த விளக்கே*
*ஊர்ந்தபணக் கங்கணமே முதற்பணிகள் ஒளிர*
*உயர்பொதுவில் நடிக்கின்ற செயலுடைய பெருமான்*
*சார்ந்தவரை எவ்வகையும் தாங்கிஅளிக் கின்ற*
*தயவுடைய பெருந்தலைமைத் தனிமுதல்எந் தாயே (9)*

அருமையான பாடல்கள். எந்தப் பிழையும் செய்யாத அடிகள் அனைத்துப் பிழைகளையும் செய்யும் நமக்காக அருளிய மாலை இது. நாம் இப்பாடல்களை இசையூட்டிக் கண்ணீர் தாரை தாரையாக ஒழுக உளங் கரைந்து ஓதினால் நம் பிழைகள் யாவற்றையும் இறைவன் மன்னித்து நம்மை உய்விப்பான் என்பது ஒருதலை.

## சமயகுரவர் நால்வர்

திருஞான சம்பந்தர் பிள்ளைப் பருவத்திலேயே இறைவியால் ஞானப் பாலூட்டப் பெற்று இறைவனுக்கும் இறைவிக்கும் பிள்ளையாயினமையால் '**பிள்ளை**' எனப் பெயர் பெற்றார். திருநாவுக்கரசர் நாவுக்கரசரும் சொற்கோவும் ஆனபடியால் அவர் '**அரசு**' என வழங்கப் பெற்றார். சுந்தரமூர்த்திகள் நம்பி ஆரூரர் ஆவதால் அவர் '**நம்பி**' எனப் பெற்றார். மணிவாசகப் பெருமான் அமைச்சுச் செல்வத்தை அறவே நீத்துத் துறவுபூண்ட செம்மனத்தினராதலின் '**அடிகள்**' என்று வழங்கப் பெற்றார். இறைவனால் இவர்கள் ஆட்கொள்ளப் பெற்ற

தால் 'ஆளுடைய' (= ஆட்கொள்ளப்படுதல் உடைய) என்ற அடைமொழி அவர்கள்தம் இப்பெயர்களுடன் சேர்வதாயிற்று. இவ்வகையில் நம் வள்ளல் பெருமான் ஆளுடைய வள்ளலார் ஆகின்றார். வள்ளல் பெருமான் இந்நால்வர்மீது அருளியுள்ள மாலைகளை 'ஆளுடைய நால்வர் அருண்மாலை' எனக் குறிக்கலாம்.[1] இந்த நான்கு மாலைகளைத் தவிர, பிற பாடல்களிலும் இந்த நால்வரையும் இவர்தம் அருளிச் செயல்களையும் அவர் தம் வாழ்க்கையில் நேர்ந்த அற்புதங்களையும் பாராட்டு வர் நம் அடிகள்.

9. **ஆளுடைய பிள்ளையார் அருண் மாலை:** இது எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பில் அமைந்த பத்துப் பாடல்களைக் கொண்டது. ஆளு டைய பிள்ளையாரை அடிகள் தமது இளமையிலேயே வழிபடும் குருவாக (உபசனா குருவாக)க் கொண்டார் கள். இம்மாலையில் அதற்குரிய குறிப்புகள் அகச்சான் றுகளாக அமைகின்றன.

*உலகியல் உணர்வோர் அணுத்துணை யேனும்*
*உற்றிலாச் சிறியஓர் பருவத்*
*திலகிய எனக்குள் இருந்தருள் நெறியில்*
*ஏற்றவும் தரமிலா மையினான்*
*விலகுறுங் காலத்தடிக்கடி ஏற*
*விடுத்துப்பின் விலகுறா தளித்தாய்*
*திகலறற் காழி ஞானசம் பந்தத்*
*தெள்ளமுத தாஞ்சிவ குருவே (1)*

பிள்ளையாருக்குப் பெருமான் உயிர் அநுபவம், அருள் அநுபவம், சிவ அநுபவம் இன்னதெனச் சுட்டி யருளினார்.

1. இதற்கு ஒப்ப சிவப்பிரகாசர் அருளிய 'நால்வர் நான்மணி மாலை'யைக் குறிக்கலாம். இந்த இருவரே நால்வரை அநுபவித்தவர்கள்.

*உயிர்அநு பவம்உற் றிடில்அத னிடத்தே*
*ஓங்கருள் அநுபவம் உறும்;அச்*
*செயிரில்நல் அநுப வத்திலே சுத்த*
*சிவஅநு பவம்உறும் என்றாய் (2)*

என்பதனால் இதனை அறியலாம்.

*தத்துவ நிலைகள் தனித்தனி ஏறித்*
*தனிபர நாதமாந் தலத்தே*
*ஒத்ததன் மயமாம் நின்னைநீ இன்றி*
*உற்றிடில் உயரநு பவம்என்று*
*இத்துணை வெளியின் என்னைஎன் னிடத்தே*
*இருந்தவா றளித்தனை அன்றோ?*
*சித்தநற் காழி ஞானசம் பந்தச்*
*செல்வமே எனதுசற் குருவே (3)*

என்பதில் உயிரநுபவம் அளித்ததைக் குறிப்பிட்டிருப்ப தைக் காணலாம்.

*தனிப்பர நாத வெளியின்மேல் நினது*
*தன்மயம் தன்மயம் ஆக்கிப்*
*பனிப்பிலா தென்றும் உள்ளதாய் விளங்கிப்*
*பரம்பரத் துட்புற மாகி*
*இனிப்புற ஒன்றும் இயம்புறா இயல்பாய்*
*இருந்ததே அருளநு பவம்என்று*
*எனக்கருள் புரிந்தாய் ஞானசம் பந்தன்*
*என்னும்என் சற்குரு மணியே (4)*

என்பதில் அடிகளுக்கு அருளநுபவம் அளித்ததை அறிய முடிகின்றது.

*உள்ளதாய் விளங்கும் ஒருபெரு வெளிமேல்*
*உள்ளதாய் முற்றும்உள் ளதுவாய்*
*நள்ளதாய் எனதாய் நானதாய்த் தனதாய்*
*நவிற்றருந் தானதாய் இன்ன*

*விள்ளொணா அப்பால் அப்படிக் கப்பால்*
*வெறுவெளி சிவஅநு பவம்என்று*
*உள்ளுற அளித்த ஞானசம் பந்த*
*உத்தம சுத்தசற் குருவே (5)*

என்பதால் அடிகளுக்கு சிவாநுபவம் அருளப் பெற்றதை அறியலாம்.

ஞானநெறியில் முன்புறும் நிலை எது பின்புறும் நிலை எது என அடிகள் உளம் மயங்கியபோது ஆளுடைய பிள்ளையார் தாம் அருளிய திருநெறிய தமிழாகிய[2] தேவாரத்தைக் கொண்டு அடிகளின் ஐயம் தீர்க்கப் பெறுகின்றது.

*முன்புறு நிலையும் பின்புறு நிலையும்*
*முன்னிநின் றுளமயக் குறுங்கால்*
*அன்புறு நினையால் திருநெறித் தமிழ்கொண்*
*டையநீத் தருளிய அரசே*
*என்புபெண் ணுருவோ டின்னுயி ரதுகொண்*
*டெழுந்திடப் புரிந்துல கெல்லாம்*
*இன்புறப் புரிந்த மறைத்தனிக் கொழுந்தே*
*என்னுயிர்க் குயிர்எனும் குருவே (9)*

என்ற பாடலால் இதனைத் தெளியலாம்.

பலகற்ப காலம் முயன்றாலும் பெறுதற்கரிய திறனெல்லாம் ஒரு பகலில் சீகாழிப் பிள்ளையார் தமக்கு அளித்ததாக அடிகளின் குறிப்பு,

*வருபகற் கற்பம் பலமுயன் றாலும்*
*வரலருந் திறனெலாம் எனக்கே*
*ஒருபகற் பொழுதில் உறஅளித் தனைநின்*
*உறுபெருங் கருணைஎன் உரைப்பேன்*

2. 'தோடுடைய செவியன்' (1.1:11) என்பதன் திருக்கடைக் காப்பில் 'திருநெறிய தமிழ்' பற்றிய குறிப்பைக் காணலாம்.

*பெருமண நல்லூர்த் திருமணங் காணப்*
*பெற்றவர் தமையெலாம் ஞான*
*உருவடைந் தோங்கக் கருணைசெய் தளித்த*
*உயர்தனிக் கவுணிய மணியே (10)*

என்ற பாடலில் காணப் பெறுவதை அறிந்து மகிழலாம்.

மேலும் வருத்தமில்லாத வகையொன்றைத் தமக்குத் தெரிவித்தருளினமையை,

*செவ்வகை ஒருகால் படுமதி அளவே*
*செறிபொறி மனம்அதன் முடிவில்*
*எவ்வகை நிலையும் தோற்றும்நீ நினக்குள்*
*எண்ணிய படிஎலாம் எய்தும்*
*இவ்வகை ஒன்றே வருத்தமில் வகைஎன்*
*றெனக்கருள் புரிந்தசற் குருவே*
*தெவ்வகை அமண இருளற எழுந்த*
*தீபமே சம்பந்தத் தேவே (8)*

என்ற பாடலால் தெளிந்து மகிழலாம்.

10. **ஆளுடைய அரசுகள் அருண் மாலை:** இப்பதிகம் எண்சீர்க் கழிநெடில் ஆசிரிய விருத்த யாப்பில் அமைந்த பாடல்களைக் கொண்டது. இவற்றில் நம் அடிகள் ஆளுடைய அரசுகளின் அருளிச் செயலில் ஈடுபட்ட குறிப்புகளைக் கண்டு மகிழலாம்.

'ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்' என்ற திருப்புகலூர்த் திருத்தாண்டகத்தில் ('எண்ணுகேன் என் சொல்லி' (6.99:1) ஆளுடைய அரசுகள் அருளுவதை எண்ணி உருகும் அடிகள்,

*கண்ணுளே விளங்குகின்ற மணியே சைவக்*
*கனியேநா வரசேசெங் கரும்பே வேதப்*
*பண்ணுளே விளைந்தஅருட் பயனே உண்மை*
*பதியோங்கு நிதியேநின் பாதம் அன்றி*

*விண்ணுளே அடைகின்ற போகம் ஒன்றும்*
*விரும்பேன்என் றனையாள வேண்டுங் கண்டாய்*
*ஒண்ணுளே ஒன்பதுவாய் வைத்தாய் என்ற*
*உத்தமனே சித்தமகிழ்த்துதவு வோனே (5)*

என்ற பாடலில் குறிப்பிட்டிருப்பதைக் கண்டு மகிழலாம். அருளிச் செயலில் ஈடுபட்ட பொது அநுபவங்களைக் குறிப்பிடும் சில பாடல்களைக் காண்போம்.

*திருத்தகுசீர் அதிகைஅருள் தலத்தில் ஓங்கும்*
*சிவக்கொழுந்தின் அருட்பெருமைத் திறத்தால் வாய்மை*
*உருத்தகுமெய் உணர்ச்சிவடி வாகிச் சைவ*
*ஒளிவிளங்க நாவரசன் றொருபேர் பெற்றுப்*
*பொருத்தமுற உழவாரப் படைகைக் கொண்ட*
*புண்ணியனே தண்ணியசீர்ப் புனித னேஎன்*
*கருத்தமர்ந்த கலைமதியே கருணை ஞானக்*
*கடலேநின் கழல்கருதக் கருது வாயே (1)*

*தேவரெலாம் தொழுந்தலைமைத் தேவர் பாத*
*திருமலரை முடிக்கணிந்து திகழ்ந்து நின்ற*
*நாவரசே நான்முகனும் விரும்பும் ஞான*
*நாயகனே நல்லவர்க்கு நண்ப னேஎம்*
*பாவமெலாம் அகற்றிஅருட் பான்மை நல்கும்*
*பண்புடைய பெருமானே பணிந்து நின்பால்*
*மேவவிருப் புறும்அடியர்க் கன்பு செய்ய*
*வேண்டினேன் அவ்வகைநீ விதித்திட் டாயே (3)*

*ஓங்காரத் தனிமொழியின் பயனைச் சற்றும்*
*ஓர்கிலேன் சிறியேன்இவ் வுலக வாழ்வில்*
*ஆங்காரப் பெருமதமால் யானை போல*
*அகம்பாவ மயனாகி அலைகின் றேன்உன்*
*பாங்காய மெய்யடியர் தம்மைச் சற்றும்*
*பரிந்திலேன் அருளடையும் பரிசொன் றுண்டோ*
*நீங்காய செயலனைத்தும் உடையேன் என்ன*
*செய்வேன்சொல் லரசேஎன் செய்கு வேனே (6)*

*விளங்குமணி விளக்கெனநால் வேதத் துச்சி*
*மேவியமெய்ப் பொருளைஉள்ளே விரும்பி வைத்துக்*
*களங்கறுமெய் யன்பரெல்லாம் களிப்ப அன்றோ*
*கற்றுணையால் கடல்கடந்து கரையிற் போர்ந்து*
*துளங்குபெருஞ் சிவநெறியைச் சார்ந்த ஞானத்*
*துணையேநந் துரையேநற் சுகமே என்றும்*
*வளங்கெழும்ஆ கமநெறியை வளர்க்க வந்த*
*வள்ளலே நின்னருளை வழங்கு வாயே (8)*

*அருள்வழங்கும் திலகவதி அம்மை யார்பின்*
*அவதரித்த மணியேசொல் லரசே ஞானத்*
*தெருள்வழங்கும் சிவநெறியை விளக்க வந்த*
*செழுஞ்சுடர்மா மணிவிளக்கே சிறியனேனை*
*இருள்வழங்கும் உலகியல்நின் றெடுத்து ஞான*
*இன்னருள்தந் தாண்டருள்வாய் இன்றேல் அந்தோ*
*மருள்வழங்கும் பவநெறியிற் சுழல்வேன் உய்யும்*
*வகைஅறியேன் நின்னருட்கு மரபன் றீதே (9)*

*தேர்ந்தஉளத் திடைமிகவும் தித்தித் தூறும்*
*செழுந்தேனே சொல்லரசாம் தேவே மெய்ம்மை*
*சார்ந்துதிகழ் அப்பூதி அடிகட் கின்பம்*
*தந்தபெருந் தகையேஎம் தந்தை யேஉன்*
*கூர்த்தமதி நிறைவேஎன் குருவே எங்கள்*
*குலதெய்வ மேசைவக் கொழுந்தே துன்பம்*
*தீர்ந்தபெரு நெறித்துணையே ஒப்பி லாத*
*செல்வமே அப்பனெனத் திகழ்கின் றோனே (10)*

நாவுக்கரசின் வாழ்க்கையில் நடைபெற்ற நிகழ்ச்சி களடங்கிய பாடல்களை மனங்கரைந்து ஓதி அடிகள் பெற்ற அநுபவத்தை நாமும் பெற முயல்வோமாக. மனம் இருந்தால் வழி பிறக்கும்.

11. **ஆளுடைய நம்பிகள் அருண்மாலை:** நம்பி ஆரூர் பற்றிய பத்துப் பாடல்கள் இம்மாலையில் அடங்கியுள் ளன. இவை யாவும் கொச்சக யாப்பில் அமைந்தவை.

இவரைப் பற்றிய ஒரு பாடல் வடகலைக்கும் தென் கலைக்கும் ஒப்பீடு செய்யும் கணக்கைக் காட்டுகின்றது.

*இலைக்குளநீ ரழைத்ததனில்*
*இடங்கர்உற அழைத்ததன்வாய்த்*
*தலைக்குதலை மதலைஉயிர்*
*தழைப்ப அழைத் தருளியநின்*
*கலைக்கும்வட கலையின்முதற்*
*கலைக்கும்உறு கணக்குயர்பொன்*
*மலைக்கும்அணு நிலைக்கும்உறா*
*வன்தொண்டப் பெருந்தகையே (1)*

இந்தப் பாடல் அவிநாசியில் முதலையுண்ட பாலகனை வர அழைத்தருளிய திருப்பாட்டாகிய 'எற்றான் மறக் கேன்' (7.92) என்ற தேவாரப் பதிகத்தின் 'உரைப்பார் உரையுகத்து' (4) என்ற முதற் குறிப்புடைய பாடலில் வரும்.

*'கரைக்கால் முதலையைப்*
*பிள்ளைதரச்சொல்லு, காலனையே'*

என்ற அடியைப் பாடும்போது நடைபெறும் இந்த அற்புத நிகழ்ச்சியை நினைக்கச் செய்கின்றது.

அடுத்து 'ஏழிசையாய் இசைப்பயனாய்' (7.51:10) என்ற திருவாரூர்த் தேவாரத் திருப்பாட்டை நினைந்து கருவிகரணங்களெல்லாம் கரைந்து கரைந்து இன்புறும் பாங்கில்,

*ஏழிசையாய் இசைப்பயனாய்*
*இன்னமுதாய் என்னுடைய*
*தோழனுமாய் என்றுமுன்நீ*
*சொன்னபெருஞ் சொற்பொருளை*
*ஆழநினைந் திடில்அடியேன்*
*அருங்கரணம் கரைந்துகரைந்து*

*ஊழியல்இன் புறுவதுகாண்*
*உயர்கருணைப் பெருந்தகையே (5)*

என்று போற்றியருளியுள்ளதைக் கண்டு மகிழலாம்.

நாவலூரார் கயிலாயத்திற்குச் சென்றபோது யானை மீது எழுந்தருளிய திருக்கோலத்தைக் காணப் பெரும் பேறு பெறாமைக்கு வருந்திய நிலையை,

*வான்காண இந்திரனும்*
*மாலயனும் மாதவரும்*
*தான்காண இறையருளால்*
*தனித்தவள யானையின்மேல்*
*கோன்காண எழுந்தருளிக்*
*குலவியநின் கோலமதை*
*நான்காணப் பெற்றிலனே*
*நாவலூர்ப் பெருந்தகையே (6)*

என்று உருகுவதை இந்தப் பாடலில் கண்டு நாமும் உருகலாம்.

நாவலூராரின் திருப்பாட்டைத் தாம் நாடோறும் பெற்ற அநுபவத்தை உரைக்கின்றார் ஒரு பாடலில். அப்பாடல்,

*தேன்படிக்கும் அமுதாம்உன்*
*திருப்பாட்டைத் தினந்தோறும்*
*நான்படிக்கும் போதென்னை*
*நான்அறியேன் நாஒன்றோ*
*ஊன்படிக்கும் உளம்படிக்கும்*
*உயிர்படிக்கும் உயிர்க்குயிரும்*
*தான்படிக்கும் அநுபவங்காண்*
*தனிக்கருணைப் பெருந்தகையே (7)*

என்பது. இப்பாடலை மனமுருகிப் படித்தால் இப்பாட் டநுபவம் நம்மிடமும் எழும்.

இவை தவிர மேலும் சில பாடல்களில் ஆழங்கால் படுவோம்.

*நீற்றிலிட்ட நிலையாப்புன்*
*னெறியுடையார் தமைக்கூடிச்*
*சேற்றிலிட்ட கம்பமெனத்*
*தியங்குகின்றேன் தனைஆளாய்*
*ஏற்றிலிட்ட திருவடியை*
*எண்ணிஅரும் பொன்னையெலாம்*
*ஆற்றிலிட்டுக் குளத்தெடுத்த*
*அருட்டலைமைப் பெருந்தகையே (2)*

*இன்பாட்டுத் தொழிற்பொதுவில்*
*இயற்றுகின்ற எம்பெருமான்*
*உன்பாட்டுக் குவப்புறல்போல்*
*ஊர்பாட்டுக் குவந்திலர்என்று*
*என்பாட்டுக் கிசைப்பினும்என்*
*இடும்பாட்டுக் கரணமெலாம்*
*அன்பாட்டுக் கிசைவதுகாண்*
*அரும்பாட்புப் பெருந்தகையே (8)*

*பேரூரும் பரவைமனப்*
*பிணக்கறஎம் பெருமானை*
*ஊரூரும் பலபுகல*
*ஓரிரவில் தூதன்எனத்*
*தேரூரும் திருவாரூர்த்*
*தெருவுதொறும் நடப்பித்தாய்*
*ஆரூர நின்பெருமை*
*அயன்மாலும் அளப்பரிதே (10)*

பாடல்களைப் படிக்கும்தோறும் சுந்தரர் வாழ்வில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் அடிகளின் ஆழ்மனத்தை ஆட்டிவைப்பதை அறிகிறோம். நம் ஆழ் மனத்தையும் அவை தொடுவதையும் உணர்ந்து உளங்கரைகின்றோம்.

12. ஆளுடைய அடிகள் அருள்மாலை: இந்த மாலையின் பத்துப் பாடல்களும் தரவுக் கொச்சகக் கலிப்பா யாப்பில் அமைந்தவை. திருவாசகம் அடிகளின் வழிபடு நூல். திருவாசகத்தைத் தாம் அநுபவிக்க அருளவேண்டும் என மணிவாசகப் பெருமானிடமே அடிகள் வேண்டுவதை மாலையின் முதற்பாடலே அறிவிக்கின்றது.

*தேசகத்தில் இனிக்கின்ற*
*தெள்ளமுதே மாணிக்க*
*வாசகனே ஆனந்த*
*வடிவான மாதவனே*
*மாசகன்ற நீதிருவாய்*
*மலர்ந்ததமிழ் மாமறையின்*
*ஆசகன்ற அநுபவம்நான்*
*அநுபவிக்க அருளுதியே (1)*

இந்த வையகத்தில் எலும்புருவாக இளைத்து நெடுங்காலம் தவம் புரிந்தவர் அடைய முடியாத நிலையை மணிவாசகப் பெருமான் அடைந்த முறையை வியந்து போற்றுவதை,

*மன்புருவ நடுமுதலா*
*மனம்புதைந்து நெடுங்காலம்*
*என்புருவாய் தவம்செய்வார்*
*எல்லாரும் ஏமாக்க*
*அன்புருவம் பெற்றதன்பின்*
*அருளுருவம் அடைந்துபின்னர்*
*இன்புருவம் ஆயினைநீ*
*எழில்வாத வூர்இறையே (3)*

என்ற பாடலால் அறியலாம். சுத்ததேகம், பிரணவ தேகம், ஞான தேகம் என மூவகை உடம்புகளை அடிகள் கூறுவர். இம்மூன்றுமே இங்கு அன்புருவம், அருளுருவம், இன்புருவம் எனக் கூறப் பெற்றன. அன்புருவம், அருளுருவம், இன்புருவம் என்ற வரிசை

யில் கூறுவதே படி முறையைக் காட்டுவதை அறிகின்றோம்.

திருவாசகம் திருஅண்டப் பகுதியில் காணப் பெறும்,

*'என்னையும்*
*இருப்பதாக்கினன்' (அடி 179)*

என்ற அடிக்குப் பொருளைத் தமக்கு விளக்கியருள வேண்டும் என்று பெருமானையே அடிகள் வேண்டுவதை,

*உருஅண்டப் பெருமறைஎன்*
*றுலகமெலாம் புகழ்கின்ற*
*திருஅண்டப் பகுதிஎனும்*
*திருஅகவல் வாய்மலர்ந்த*
*குருஎன்றெப் பெருந்தவரும்*
*கூறுகின்ற கோவேநீ*
*இருஎன்ற தனிஅகவல்*
*எண்ணம்எனக் கியம்புதியே (4)*

என்ற பாடலில் கண்டு மகிழலாம். திருஅண்டப் பகுதியை 'உருஅண்டப் பெருமறை என்று உலகமெலாம் புகழ்கின்ற திருஅண்டப் பகுதி' என்று சிறப்பித்தமை காணத்தக்கது; கருதத்தக்கது.[3] அடிகளாரின் திருப் பாடல்களுள் திருவாசகத் தொடர்கள் அதிகமாக ஆளப் பெற்றிருப்பது அவர்தம் திருவாசக ஈடுபாட்டைக் காட்டி நிற்கும்.

தமது வாட்டமெலாம் வந்தொருகால் மாற்ற வேண்டும் என்று பெருமானை அடிகள் வேண்டுவதை,

3. திருவாசகத்தை உளங்கரைந்து அநுபவித்தவர் மூவர். ஒருவர் துறைமங்கலம் சிவப்பிரகாச அடிகள். மற்றொருவர் அருட்பிரகாச வள்ளலாராம் நம் சுவாமிகள். மூன்றாமவர் டாக்டர் ஜி.யு.போப்.

*தேடுகின்ற ஆனந்தச்*
*சிற்சபையில் சின்மயமாய்*
*ஆடுகின்ற சேவடிக்கீழ்*
*ஆடுகின்ற ஆரமுதே*
*நாடுகின்ற வாதவூர்*
*நாயகனே நாயடியேன்*
*வாடுகின்ற வாட்டமெலாம்*
*வந்தொருகால் மாற்றுதியே (5)*

என்ற பாடலில் குறிப்பிட்டிருப்பதைக் காணலாம்.

சிற்சபையில் இறைவன் செய்யும் திருக்கூத்து சின்மயமானது என அருளியது உளங்கொள்ளப்படும். 'ஆடுகின்ற சேவடிக் கீழ் ஆடுகின்ற ஆரமுதே' என்று பெருமானை அடிகள் குறிப்பிடுவது நயஞ் செறிந்தது. ஆடலரசனின் இடப்புறத்தில் சிவகாமி அம்மையும் வலப்புறத்தில் தூக்கிய திருவடியின்கீழ் கூப்பிய கையுடன் பெருமானும் இருப்பது கண்கொள்ளாக் காட்சி. இதனால்தான் 'ஆடுகின்ற சேவடிக்கீழ் ஆடுகின்ற ஆரமுதே' என்று அடிகள் அருளியுள்ளது உணரப்படும். ஆடலரசரோடு உடனிருக்கும் பாங்கு வாசகப் பெருமானுக்கே உரிய தனிச்சிறப்பாகும்.

திருவாசகத்தை உன்னுந்தோறும் பெறும் உலப்பிலா இன்பம் காமமிகு காதலன்தன் கலவிதனைக் கருதுகின்ற கற்புடையாள் ஒருத்தி எய்தும் இன்பத்தை விட மிக்கது என்று அடிகள் அருளுவதை,

*சேமமிகும் திருவாத*
*வூர்த்தேவென் றுலகுபுகழ்*
*மாமணியே நீயுரைத்த*
*வாசகத்தை எண்ணுதொறும்*
*காமமிகு காலதன்தன்*
*கலவிதனைக் கருதுகின்ற*

*ஏமமிகு கற்புடையாள்*
*இன்பினும்இன் பெய்துவதே (6)*

என்ற பாடலில் காணலாம். இந்த அருளிச் செயல் திருவாசகத்தின்மீது அடிகள் கொண்டிருக்கும் அளவற்ற காதலைக் காட்டும்.

திருவாசகத்தை உள்ளம் உருகிப் பாடுங்கால் ஒரு வர் பெறும் அநுபவம் எத்தகையது என்பதை அடிகள்,

*வான்கலந்த மாணிக்க*
*வாசக!நின் வாசகத்தை*
*நான்கலந்து பாடுங்கால்*
*நற்கருப்பஞ் சாற்றினிலே*
*தேன்கலந்து பால்கலந்து*
*செழுங்கனிதீஞ் சுவைகலந்துஎன்*
*ஊன்கலந்து உயிர்கலந்து*
*உவட்டாமல் இனிப்பதுவே (7)*

என்ற பாடலில் விளக்கம் தருகின்றார். இவ்விடத்தில் 'தனித்தனி முக்கனிபிழிந்து' (6. அருள்விளக்க மாலை - 17) என்ற பாடலை நினைந்து பாடிச் சுவைத்தால் அதன் சுவையே அலாதியானது என்பது தெரியும்.

திருவாசகத்தில் 'ஒரு மொழியே போதும்' - அதுவே தன்னையும் தன்னை உடையானையும் ஒன்றுவிக்கும் பெற்றி வாய்ந்தது' - என்பதை,

*வருமொழிசெய் மாணிக்க*
*வாசகநின் வாசகத்தில்*
*ஒருமொழியே என்னையும்என்*
*உடையனையும் ஒன்றுவித்துத்*
*தருமொழியாம் என்னில்இனிச்*
*சாதகமேன் சஞ்சலமேன்*
*குருமொழியை விரும்பிஅயல்*
*கூடுவதேன் கூறுதியே (8)*

என்ற பாடலில் போற்றுவதைத் தெளியலாம்.

மணிவாசகப் பெருமான் கண்ட மதுரை நிகழ்ச்சி களை ஒரு பாடலில் அநுபவித்து நெஞ்சம் நெக்குருகி அநுபவிக்கின்றார் அடிகள்.

*பெண்சுமந்த பாகப்*
*பெருமான் ஒருமாமேல்*
*எண்சுமந்து நின்றதும்ஓர்*
*எய்தியதும் வைகைநதி*
*மண்சுமந்து நின்றதும்ஓர்*
*மாறன் பிரம்படியால்*
*புண்சுமந்து கொண்டதும்நின்*
*பொருட்டன்றோ புண்ணியனே (9)*

என்ற பாடலை நாம் உளம் கரைந்து பாடினால் நாமும் அடிகள் பெற்ற அநுபவத்தை அடைந்து மகிழலாம்.

மணிவாசகப் பெருமானின் மணிவாக்கு பறவை களையும் விலங்குகளையும் மெய்ஞ்ஞானத்தின்பால் செலுத்தவல்லது என்பதை இம்மாலையின் இறுதிப் பாடலில் தெரிவிக்கின்றார்.

*வாட்டமிலா மாணிக்க*
*வாசகநின் வாசகத்தைக்*
*கேட்டபொழு தங்கிருந்த*
*கீழ்ப்பறவைச் சாதிகளும்*
*வேட்டமுறும் பொல்லா*
*விலங்குகளும் மெய்ஞ்ஞான*
*நாட்டமுறும் என்னில்இங்கு*
*நானடைதல் வியப்பன்றே (10)*

என்பது அப்பாடல். இங்ஙனம் நால்வர்பால் அடிகள் கொண்ட நாட்டம் சிறப்பிக்கப் பெற்றது.

ஐந்தாம் திருமுறை ஏனையவற்றிலும் சிறியது என் றாலும் அவற்றிலுள்ள பாடல்கள் நம் மனத்தை மாணப் பெரியதாக நெகிழ்விப்பதை அறிய முடிகின்றது.

# 8. ஆறாம் திருமுறைப் பாடல்கள்

ஆறாம் திருமுறை மிகப் பெரியது. 'தோட்டத்தில் பாதி கிணறு' என்றாற்போல, ஐந்து திருமுறைகளிலும் உள்ள பாடல்களின் அளவு இதில் அடங்கியுள்ளன. இதில் அடங்கிய பதிகங்கள் 144; பாடல்களின் தொகை 2552. இவற்றுள் அகப்பொருள் பதிகங்கள் பதினொன்று. பாடல்களின் தொகை 217. இவை தவிர, இசைப் பாடல் வகையில் முப்பத்தேழு பதிகங்கள் உள்ளன. இவை பல்வேறு வகைகளில் அமைந்திருந்த போதிலும் 'சிந்து' வகைப் பாடல்களே அதிகமாக உள்ளன.

இனி, இத்திருமுறையில் உள்ள பாடல்களை நோக்குவோம். ஐந்து திருமுறைப் பாடல்களைப் பயிலும் போது மேல்நோக்கிக் கிளம்பும் வானூர்தி தரையில் சிறிது தூரம் ஓடுவதைப் போலவும், ஆறாம் திருமுறைப் பாடல்களைப் பயிலும் போது தரையில் ஓடிக் கொண்டிருந்த வானூர்தி விண்ணில் எழுவது போலவுமான அநுபவத்தைப் பெறுவதை உணர முடிகின்றது.

## 1. தன்னிலையிலிருந்து அநுபவித்தவை

1. பரசிவ வணக்கம்: இது முதற் பதிகமாகத் தொடங்குகின்றது. இதில் மூன்று பாடல்கள அடக்கம்.

*எல்லாம் செயல்கூடும் என்ஆணை அம்பலத்தே*
*எல்லாம்வல் லான்தனையே ஏத்து (1)*

இது குறள் வெண்பா. பொருள் வெளிப்படை.

*திருவிளங்கச் சிவயோக சித்திஎலாம் விளங்கச்*
*சிவஞான நிலைவிளங்கச் சிவாநுபவம் விளங்கத்*
*தெருவிளங்கு திருத்தில்லைத் திருச்சிற்றம் பலத்தே*
*திருக்கூத்து விளங்கஒளி சிறந்ததிரு விளக்கே*
*உருவிளங்க உயிர்விளங்க உணர்ச்சியது விளங்க*
*உலகமெலாம் விளங்கஅருள் உதவுபெருந் தாயாம்*
*மருவிளங்கு குழல்வல்லி மகிழ்ந்தொருபால் விளங்க*
*வயங்குமணிப் பொதுவிளங்க வளர்ந்தசிவக் கொழுந்தே (2)*

*அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே*
*அன்பெனும் குடில்புகும் அரசே*
*அன்பெனும் வலைக்குட் படுபரம் பொருளே*
*அன்பெனும் கரத்தமர் அமுதே*
*அன்பெனும் கடத்துள் அடங்கிடும் கடலே*
*அன்பெனும் உயிர்ஒளிர் அறிவே*
*அன்பெனும் அணுவுள் ளமைந்தபேர் ஒளியே*
*அன்புரு வாம்பர சிவமே (3)*

மூன்று பாடல்களும் பரசிவ வணக்கமாகும். நாமும் இவற்றைத் துதித்து நூலுக்குள் புகுவோம்.

3. ஆற்றாமை: வள்ளல் பெருமான் தம் குறைகளையெல்லாம் பட்டியலிட்டுப் பாடல்களில் காட்டிடுகின்றார். இத்தகைய கொடியவன், அம்பலக் கூத்தன் திருக்குறிப்பினுக்கு ஆற்றாமையால் கலக்கமுறுவதைப் பாடல்கள் கூறுகின்றன. பாடல்கள் யாவும் எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பில் நடைபெறுகின்றன. இப்பதிகம் பத்துப் பாடல்களைக் கொண்டது.

*கடுமையேன் வஞ்சக் கருத்தினேன் பொல்லா*
*கன்மனக் குரங்கனேன் கடையேன்*
*நெடுமைஆண் பனைபோல் நின்றவெற் றுடம்பேன்*
*நீசனேன் பாசமே உடையேன்*

*நடுமைஒன் றறியேன் கெடுமையிற் கிளைத்த*
*நச்சுமா மரம்எனக் கிளைத்தேன்*
*கொடுமையே குறித்தேன் அம்பலக் கூத்தன்*
*குறிப்பினுக் கென்கட கடவேனே (3)*

*செடிமுடிந் தலையும் மனத்தினேன் துன்பச்*
*செல்லினால் அரிப்புண்ட சிறியேன்*
*அடிமுடி அறியும் ஆசைசற் றறியேன்*
*அறிந்தவர் தங்களை அடையேன்*
*படிமுடி வழித்துக் கடிகொளும் கடையர்*
*பணத்திலும் கொடியனேன் வஞ்சக்*
*கொடிமுடிந் திடுவேன் அம்பலக் கூத்தன்*
*குறிப்பினுக் கென்கட வேனே (5)*

*கடியரில் கடியேன் கடையரில் கடையேன்*
*கள்வரில் கள்வனேன் காமப்*
*பொடியரில் பொடியேன் புலையரில் புலையேன்*
*பொய்யரில் பொய்யனேன் பொல்லாச்*
*செடியரில் செடியேன் சினத்தரில் சினத்தேன்*
*தீயரில் தீயனேன் பாபக்*
*கொடியரில் கொடியேன் அம்பலக் கூத்தன்*
*குறிப்பினிற் கென்கட வேனே (10)*

இப்பதிகப் பாடல்கள் அனைத்தும் 'அம்பலக் கூத்தன் குறிப்பினுக் கென்கட வேனே' என்ற தொடரால் இறுகின்றன. இத்தொடர் உணர்ச்சியின் பிழம்பாக ஒளிர்வதைக் கண்டு இறும்பூதடைகின்றோம்.

5. **மாயை வலிக் கழுங்கல்:** மாயை என்பது ஒரு தத்துவம். மயக்கும் தன்மையுள்ள அனைத்தும் மாயையுள் அடங்கும். மாயையில் தவறாக அழுந்திக் கிடக்கும் தம் நிலைமைக்கு வருந்தி, தம் குறைகளைப் பொறுத்துத் தம்மை ஆட்கொள்ளுமாறு பரமனை வேண்டுவதாக அமைந்தவை இப்பதிகப் பாசுரங்கள் பத்தும். இவை யாவும் எண்சீர்க் கழிநெடிலாசிரிய விருத்த யாப்பில் அமைந்தவை. சில பாடல்களில் ஆழங்கால் படுவோம்.

தாவு மான்எனக் குதித்துக்கொண் டோடித்
 தைய லார்முலைத் தடம்படுங் கடையேன்
கூவு காக்கைக்குச் சோற்றில்ஓர் பொருக்கும்
 கொடுக்க நேர்ந்திடாக் கொடியரில் கொடியேன்
ஓவு றாதுழல் ஈஎனப் பலகால்
 ஓடி ஓடியே தேடுறும் தொழிலேன்
சாவு றாவகைக் கென்செயக் கடவேன்
 தந்தை யேஎனைத் தாங்கிக்கொண் டருளே (1)

மதத்தி லேஅபி மானங்கொண் டுழல்வேன்
 வாட்ட மேசெயும் கூட்டத்தில் பயில்வேன்
இதத்தி லேஒரு வார்த்தையும் புகலேன்
 ஈயும் மொய்த்திடற் கிசைவுறா துண்பேன்
குதத்தி லேஇழு மலத்தினுங் கடையேன்
 கோடை வெய்யலின் கொடுமையிற் கொடியேன்
சிதத்தி லேஉறற் கென்செயக் கடவேன்
 தெய்வ மேஎனைச் சேர்த்துக் கொண் டருளே (4)

கொடிய வெம்புலிக் குணத்தினேன் உதவாக்
 கூவம் நேர்ந்துளேன் பாவமே பயின்றேன்
கடிய நெஞ்சினேன் குங்குமம் சுமந்த
 கழுதை யேன்அவப் பொழுதையே கழிப்பேன
விடியு முன்னரே எழுந்திடா துறங்கும்
 வேட னேன்முழு மூடரில் பெரியேன்
அடிய னாவதற் கென்செயக் கடவேன்
 அப்ப னேஎனை ஆண்டுகொண் டருளே (5)

வருத்த நேர்பெரும் பாரமே சுமந்து
 வாடும் ஓர்பொதி மாடென உழன்றேன்
பருத்த ஊனொடு மலம்உணத் திரியும்
 பன்றி போன்றுளேன் நன்றியொன் றறியேன்
கருத்தி லாதயல் குரைத்தலுப் படைத்த
 கடைய நாயினிற் கடையனேன் அருட்குப்
பொருத்தன் ஆவதற் கென்செயக் கடவேன்
 புண்ணி யாஎனைப் புரிந்துகொண் டருளே (7)

*இருளை யேஒளி எனமதித் திருந்தேன்*
*இச்சை யேபெரு விச்சைஎன் றலந்தேன்*
*மருளை யேதரு மனக்குரங் கோடும்*
*வனமெ லாம்சுழன் றினம்எனத் திரிந்தேன்*
*பொருளை நாடுதற் புந்திசெய் தறியேன்*
*பொதுவி லேநடம் புரிகின்றோய் உன்தன்*
*அருளை மேவுதற் கென்செய்க் கடவேன்*
*அப்ப னேஎனை ஆண்டுகொண் டருளே (10)*

வள்ளல் பெருமான் தியானத்திலிருந்து எழுந்தவுடன் இந்தப் பதிகத்தையும், இதுபோன்ற பிற பதிகங்களையும் பாடியிருத்தல் வேண்டும். அவர்தம் வாழ்க்கையை அறிந்த நாம் அவர் யாதொரு குற்றமும் புரியவில்லை என்பதை அறிவோம். நமக்காக அவர் பாடியுள்ளார் என்று கருதி நாம் இறைவனை வேண்டுவோம் நம் குறைகளைப் பொருத்தருளுமாறு.

6. முறையீடு: இஃது இறைவன்முன் சமர்ப்பிக்கப் பெறும் விண்ணப்பம். தமது அறியாமைக்கு என்ன செய்வதென்று புரியாத நிலைக்கு வருந்துவதாக அமைந்த பத்து பாடல்களைக் கொண்டது இப்பதிகம். பாடல்கள எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பில் அமைந்தவை. ஒவ்வொரு பாடலும் 'யார்க்குரைப்பேன்? என்ன செய்வேன்? ஏதும் அறிந்திலனே' என்ற தொடர்களால் இறுகின்றது. சில பாடல்களில் ஆழங்கால் படுவோம்.

*மருந்தறியேன் மணிஅறியேன் மந்திரம்ஒன் றறியேன்*
*மதிஅறியேன் விதிஅறியேன் வாழ்க்கைநிலை அறியேன்*
*திருந்தறியேன் திருவருளின் செயலறியேன் அறந்தான்*
*செய்தறியேன் மனமடங்கும் திறத்தினில்ஓர் இடத்தே*
*இருந்தறியேன் அறிந்தோரை ஏத்திடவும் அறியேன்*
*எந்தைபிரான் மணிமன்றம் எய்தஅறி வேனோ*

*இருந்ததிசை சொலஅறியேன் எங்ஙனம்நான் புகுவேன்*
*யார்க்குரைப்பேன் என்னசெய்வேன் ஏதும்அறிந் திலனே (1)*

*கற்குமுறை கற்றறியேன் கற்பனைகற் றறிந்த*
*கருத்தர்திருக் கூட்டத்தில் களித்திருக்க அறியேன்*
*நிற்குநிலை நின்றறியேன் நின்றாரின் நடித்தேன்*
*நெடுங்காமப் பெருங்கடலை நீந்தும்வகை அறியேன்*
*சிற்குணமா மணிமன்றில் திருநடனம் புரியும்*
*திருவடிஎன் சென்னிமிசைச் சேர்க்கஅறி வேனே*
*இற்குணஞ்செய் துழல்கின்றேன் எங்ஙனம்நான் புகுவேன்*
*யார்க்குரைப்பேன் என்னசெய்வேன் ஏதும்அறிந் திலனே (3)*

*சாதிமதம் சமயம்எனும் சங்கடம்விட் டறியேன்*
*சாத்திரச்சே றாடுகின்ற சஞ்சலம்விட் டறியேன்*
*ஆதிஅந்த நிலையறியேன் அலைஅறியாக் கடல்போல்*
*ஆனந்தப் பெரும்போகத் தமர்ந்திடவும் அறியேன்*
*நீதிநெறி நடந்தறியேன் சோதிமணிப் பொதுவில்*
*நிருத்தமிடும் ஒருத்தர்திருக் கருத்தைஅறி வேனோ*
*ஏதிலர்சார் உலகினிடை எங்ஙனம்நான் புகுவேன்*
*யார்க்குரைப்பேன் என்னசெய்வேன் ஏதும்அறிந் திலனே (8)*

*வரைஅபர மார்க்கமொடு பரமார்க்கம் அறியேன்*
*மரணபயம் தவிர்த்திடுஞ்சன் மார்க்கமதை அறியேன்*
*திரையறுதண் கடலறியேன் அக்கடலைக் கடைந்தே*
*தெள்ளமுதம் உணவறியேன் சினமடக்க அறியேன்*
*உரைஉணர்வு கடந்ததிரு மணிமன்றத் தனிலே*
*ஒருமைநடம் புரிகின்றார் பெருமைஅறி வேனோ*
*இசையுறுபொய் உலகினிடை எங்ஙனம்நான் புகுவேன்*
*யார்க்குரைப்பேன் என்னசெய்வேன் ஏதும்அறிந் திலனே (10)*

பாடல்களைப் பன்முறை உணர்ந்து படித்தால் நம் ஏக்கத்தை இறைவனும் உணர்ந்து நமக்கு வழிகாட்டு வான் என நம்புவோமாக.

8. ஆன்ம விசாரத் தழுங்கல்: பொதுவாக ஆன்மா பற்றிய ஆய்வில் அழுங்கலாகும் இப்பதிகம் எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பில் அமைந்த பத்துப் பாடல்களைத் தன்னகத்தே கொண்டது. தம் குறைகளையெடுத்துக் கொள்ளாமல், தம்மீது சினமும் கொள்ளாது காக்க வேண்டும் என்று விண்ணப்பிக்கும் போக்கில் பாடல்கள் அமைந்துள்ளன. சில பாடல்களில் ஆழங்கால் படுவோம்.

*போகமே விழைந்தேன் புலைமனச் சிறியேன்*
*பூப்பினும் புணர்ந்தவெம் பொறியேன்*
*ஏகமே பொருள்என் றறிந்திலேன் பொருளின்*
*இச்சையால் எருதுநோ வறியாக்*
*காகமே எனப்போய்ப் பிறர்தமை வருத்திக்*
*களித்தபா தகத்தொழிற் கடையேன்*
*மோகமே உடையேன் என்னினும் எந்தாய்*
*முனிந்திடேல் காத்தருள் எனையே (1)*

*பூப்பினும் பலகால் மடந்தையர் தமைப்போய்ப்*
*புணர்ந்தவெம் புலையனேன் விடஞ்சார்*
*பாப்பினும் கொடியர் உறவையே விழைந்த*
*பள்ளனேன் கள்ளனேன் நெருக்கும்*
*ஆப்பினும் வலியேன் அறத்தொழில் புரியேன்*
*அன்பினால் அடுத்தவர் கரங்கள்*
*கூப்பினும் கூப்பாக் கொடுங்கையேன் எனினும்*
*கோபியேல் காத்தருள் எனையே (2)*

*கொட்டிலை அடையாப் பட்டிமா டனையேன்*
*கொட்டைகள் பரப்பிமேல் வனைந்த*
*கட்டிலை விரும்பி அடிக்கடி படுத்த*
*கடையனேன் கங்குலும் பகலும்*
*அட்டிலை அடுத்த பூஞையேன் உணவை*
*அறவுண்டு குப்பைமேல் போட்ட*

*நெட்டிலை அனையேன் என்னினும் வேறு*
*நினைத்திடேல் காத்தருள் எனையே (5)*

*தொழுதெலாம் வல்ல கடவுளே நின்னைத்*
*துதித்திலேன் தூய்மைஒன் றறியேன்*
*கழுதெலாம் அனையேன் இழுதெலாம் உணவில்*
*கலந்துணக் கருதியே கருத்தேன்*
*பழுதெலாம் புரிந்து பொழுதெலாம் கழித்த*
*பாவியேன் தீமைகள் சிறிதும்*
*எழுதலாம் படித்தன் றெனமிக உடையேன்*
*என்னினும் காத்தருள் எனையே (8)*

*வட்டியே பெருக்கிக் கொட்டியே ஏழை*
*மனைகவர் கருத்தினேன் ஓட்டைச்*
*சட்டியே எனினும் பிறர்கொளத் தரியேன்*
*தயவிலேன் சூதெலாம் அடைத்த*
*பெட்டியே நிகர்த்த மனத்தினேன் உலகில்*
*பெரியவர் மனம்வெறுக் கச்செய்*
*எட்டியே மண்ணாங் கட்டியே அனையேன்*
*என்னினும் காத்தருள் எனையே (9)*

பாடல்கள் யாவும் சரணாகதி தத்துவம்போல் அமைந் துள்ளன. இவை நம்மால் மனம் கரைந்து ஓதப் பெற் றால் நாமும் நற்கதிக்குத் தள்ளப் பெறுவோம்.

9. அவா அறுத்தல்: தாம் உண்டு கொழுத்த நண்டு போல் இருந்து உலகியல் நிக்ழ்ச்சிகளில் மண்டிக்கிடப்ப தாகவும், ஆயினும் இறைவனையே முக்காலும் அண் டியே இருப்பதாகவும், ஆதலால் தம்மைக் கைவிடாது காக்க வேண்டும் என்று மன்றாடுவதாகவும் அமைந்த பதின்மூன்று பாடல்களைக் கொண்டது இப்பதிகம். பாடல்கள் யாவும் எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பில் அமைந்தவை. சில பாடல்களில் ஆழங்கால் படுவோம்.

*தாலவாழ்க் கையிலே சார்ந்தவர் எல்லாம்*
*தக்கமுப் போதினும் தனித்தே*
*சீலமார் பூசைக் கடன்முடிக் கின்றார்*
*சிறியனேன் தவம்செய்வான் போலே*
*ஞாலமே லவர்க்குக் காட்டிநான் தனித்தே*
*நவிலும்இந் நாய்வயிற் றினுக்கே*
*காலையா தியமுப் போதினும் சோற்றுக்*
*கடன்முடித் திருந்தனன் எந்தாய் (1)*

*சோற்றிலே விருப்பஞ் சூழ்ந்திடில் ஒருவன்*
*துன்னுதல் தவம்எலாம் சுருங்கி*
*ஆற்றிலே கரைத்த புளிஎனப் போம்என்று*
*அறிஞர்கள் உரைத்திடல் சிறிதும்*
*போற்றிலேன் உன்னைப் போற்றிலேன் சுவையில்*
*பொருந்திய காரசா ரஞ்சேர்*
*சாற்றிலே கலந்த சோற்றிலே ஆசை*
*தங்கினேன் என்செய்வேன் எந்தாய் (2)*

இரண்டாம் பாடலில் அடிகளாரின் வாழ்க்கைக் குறிப்பு நிழலிடுகின்றது. சோற்றிலே ஒருவனுக்கு விருப்பம் உண்டானால் அவனுடைய தவம் எல்லாம் ஆற்றிலே கரைத்த புளியைப் போலாகும் என்பது அடிகளாரின் குறிப்பு. அடிகள் சோற்றாசையற்றவர். மரக்கறி உணவையே கொள்பவர். ஒருவேளை உண்ட காலத்து உச்சிப் போதிலும் இருபோது உண்ட காலத்து உச்சிப் போதும் இரவு முன்னேரமும் ஆகும். வெந்நீரையே அருந்துவர்; தண்ணீர் அருந்தார்.

*உறியிலே தயிரைத் திருடிஉண் டனன்என்*
*றொருவனை உரைப்பதோர் வியப்போ*
*குறியிலே அமைத்த உணவெலாம் திருடிக்*
*கொண்டுபோய் உண்டனன் பருப்புக்*
*கறியிலே பொரித்த கறியிலே கூட்டுக்*
*கறியிலே கலந்தபே ராசை*

*வெறியிலே உனையும் மறந்தனன் வயிறு*
*வீங்கிட உண்டனன் எந்தாய் (4)*

*பாலிலே கலந்த சோறெனில் விரைந்தே*
*பத்தியால் ஒருபெரு வயிற்றுச்*
*சாலிலே அடைக்கத் தடைபடேன் வாழை*
*தகுபலா மாமுதற் பழத்தின்*
*தோலிலே எனினும் கிள்ளிஓர் சிறிதும்*
*சூழ்ந்தவர்க் கீந்திடத் துணியேன்*
*வாலிலேன் இருக்கில் வனத்திலே இருக்க*
*வாய்ப்புளேன் என்செய்வேன் எந்தாய் (6)*

*தண்டுகாய் கிழங்கு பூமுதல் ஒன்றும்*
*தவறவிட் டிடுவதற் கமையேன்*
*கொண்டுபோய் வயிற்றுக் குழிஎலாம் நிரம்பக்*
*கொட்டினேன் குணமிலாக் கொடியேன்*
*வண்டுபோல் விரைந்து வயல்எலாம் நிரம்ப*
*மலங்கொட்ட ஓடிய புலையே*
*பண்டுபோல் பசித்தூண் வருவழி பார்த்த*
*பாவியேன் என்செய்வேன் எந்தாய் (9)*

*உண்டியே விழைந்தேன் எனினும்என் தன்னை*
*உடையவர் அடியனேன் உனையே*
*அண்டியே இருந்தேன் இருக்கின்றேன் இருப்பேன்*
*அப்பநின் ஆணைநின் தனக்கே*
*தொண்டுறா தவர்கைச் சோற்றினை விரும்பேன்*
*தூயனே துணைநினை அல்லால்*
*கண்டிலேன் என்னைக் காப்பதுன் கடன்காண்*
*கைவிடேல் கைவிடேல் எந்தாய் (13)*

பாடல்களைப் பக்தியுடன் மனங்கரைந்து பாடி வள்ளல் பெருமானைப்போல் உய்யும் வகையை நாடுவோம்.

12. பிள்ளைச் சிறுவிண்ணப்பம்: இப்பதிகத்தில் 24 பாடல்கள் அடக்கம். அனைத்தும் எழுசீர்க் கழிநெடிலடி

ஆசிரிய விருத்த யாப்பில் அமைந்தவை. தம்மை ஒரு சிறுபிள்ளையாகவும் இறைவனைத் தந்தையாகவும் கருதிப் பலவற்றை நல்குமாறு பரசிவனை வேண்டுகின்றார். நாம் உட்பட இவை எல்லோர்க்கும் இன்றியமையாதவையாதலால் 12 பாடல்களில் ஈடுபட்டு உளங்கரைவோம்.[1]

*தடித்தஓர் மகனைத் தந்தைஈண் டடித்தால்*
*தாய்உடன் அணைப்பள் தாயடித்தால்*
*பிடித்தொரு தந்தை அணைப்பன் இங்கெனக்குப்*
*பேசிய தந்தையும் தாயும்*
*பொடித்திரு மேனி அம்பலத் தாடும்*
*புனிதநீ ஆதலால் என்னை*
*அடித்தது போதும் அணைத்திடல் வேண்டும்*
*அம்மைஅப் பாஇனி ஆற்றேன் (1)*

*பெற்றதம் பிள்ளைக் குணங்களை எல்லாம்*
*பெற்றவர் அறிவரோ அல்லால்*
*மற்றவர் அறியார் என்றனை ஈன்ற*
*வள்ளலே மன்றிலே நடிக்கும்*
*கொற்றவ ஓர்எண் குணத்தவ நீதான்*
*குறிக்கொண்ட கொடியனேன் குணங்கள்*
*முற்றுநன் கறிவாய் அனைத்தும் என்றனைநீ*
*முனிவதேன் முனிவுதீர்ந் தருளே (2)*

*இன்னு மிங்கெனைநீ மடந்தையர் முயக்கில்*
*எய்துவித் திடுதியேல் அதுவுன்*
*தன்னுளப் புணர்ப்பங் கெனக்கொரு சிறிதும்*
*சம்மதம் அன்றுநான் இதனைப்*
*பன்னுவ தென்னே இதில்அரு வருப்புப்*
*பால்உணும் காலையே உள்தால்*

1. பின்னர்த் தொடங்கும் பகுதி 133 பாடல்களைக் கொண்டுள்ளமையால் இது 'சிறு விண்ணப்பம்' ஆயிற்று. அது 'பெரு விண்ணப்பம்' என்று திருநாமம் பெற்றது.

*மன்னும்அம் பலத்தே நடம்புரி வோய்என்*
*மதிப்பெலாம் திருவடி மலர்க்கே (7)*[2]

*அறிவிலாச் சிறிய பருவத்திற் றானே*
*அருந்தலில் எனக்குள வெறுப்பைப்*
*பிறிவிலா தென்னுட் கலந்தநீ அறிதி*
*இன்றுநான் பேசுவ தென்னே*
*செறிவிலாக் கடையேன் என்னினும் அடியேன்*
*திருவருள் அமுதமே விழைந்தேன்*
*எறிவிலாச் சுவைவே றெவற்றிலும் விழைவோர்*
*எட்டுணை யேனும்இன் றெந்தாய் (8)*[3]

*பணத்திலே சிறிதும் ஆசைஒன் றிலைநான்*
*படைத்தஅப் பணங்களைப் பலகால்*
*கிணற்றிலே எறிந்தேன் குளத்திலும் எறிந்தேன்*
*கேணியில் எறிந்தனன் எந்தாய்*
*குணத்திலே நீதான் கொடுக்கின்ற பொருளை*
*எறிகலேன் கொடுக்கின்றேன் பிறர்க்கே*
*கணத்திலே எல்லாம் காட்டும்நின் அருளைக்*
*கண்டனன் இனிச்சொல்வ தென்னே (11)*

*சரியைஓர் நான்கும் கிரியைஓர் நான்கும்*
*சாற்றிடும் யோகமோர் நான்கும்*
*புரியவும் பதங்கள் பொருந்தவும் எனது*
*புந்தியில் ஆசைசற் றறியேன்*
*பெரியதோர் ஞானம் நான்கினும் ஆசை*
*பெற்றிலேன் முத்திபெற் றிடவும்*
*உரியதோர் இச்சை எனக்கில்லை என்றன்*
*உள்ளம்நீ அறிந்ததே எந்தாய் (14)*

2. பெருமானுக்குத் திருமணம் ஆயிற்று. துணைவியாருடன் தொடர்பு இல்லை. மாதரை வெறுத்த தாயுமான அடிகட்கும் திருமணமாயிற்று. ஒரு மகனையும் பெற்றார். பின்னர் மனைவியைத் துறந்தார்.

3. அருந்தலில் தமக்குள்ள வெறுப்பைப் பிள்ளைப் பெரு விண்ணப்பத்தில் (29,30,31) விவரமாகக் குறிப்பிட்டுள்ளார்.

இறக்கவும் ஆசை இல்லைஇப் படிநான்
இருக்கவும் ஆசைஇன் றினிநான்
பிறக்கவும் ஆசை இலைஉல கெல்லாம்
பெரியவர் பெரியவர் எனவே
சிறக்கவும் ஆசை இலைவிசித் திரங்கள்
செய்யவும் ஆசைஒன் றில்லை
துறக்கவும் ஆசை இலைதுயர் அடைந்து
தூங்கவும் ஆசைஒன் றிலையே (15)

எவ்வுயிர்த் திரளும் என்னுயிர் எனவே
எண்ணிநல் இன்புறச் செய்யும்
அவ்வுயிர் களுக்கு வரும்இடை யூற்றை
அகற்றியே அச்சநீக் கிடவும்
செவ்வையுற் றுனது திருப்பதம் பாடிச்
சிவசிவ என்றுகூத் தாடி
ஒவ்வுறு களிப்பால் அழிவுறா திங்கே
ஓங்கவும் இச்சைகாண் எந்தாய் (18)

திருவளர் திருச்சிற் றம்பலம் ஓங்கும்
சிதம்பரம் எனும்பெருங் கோயில்
உருவளர் மறையும் ஆகமக் கலையும்
உரைத்தவா றியல்பெறப் புதுக்கி
மருவளர் மலரின் விளக்கிநின் மேனி
வண்ணங்கண் டுளங்களித் திடவும்
கருவளர் உலகில் திருவிழாக் காட்சி
காணவும் இச்சைகாண் எந்தாய் (20)

தங்கமே அனையார் கூடிய ஞான
சமரச சுத்தசன் மார்க்கச்
சங்கமே கண்டு களிக்கவும் சங்கம்
சார்திருக் கோயில்கண் டிடவும்[4]
துங்கமே பெறுஞ்சற் சங்கம்நீ டூழி
துலங்கவும் சங்கத்தில் அடியேன்

4. சங்கம் சார்திருக்கோயில் - வடலூர் ஞானசபை

*அங்கமே குளிர நின்றனைப் பாடி*
*ஆடவும் இச்சைகாண் எந்தாய் (21)*

*கருணையே வடிவாய்ப் பிறர்களுக் கடுத்த*
*கடுந்துயர் அச்சமா திகளைத்*
*தருணநின் அருளால் தவிர்த்தவர்க் கின்பம்*
*தரவும்வன் புலைகொலை இரண்டும்*
*ஒருவிய நெறியில் உலகெலாம் நடக்க*
*உஞற்றவும் அம்பலந் தனிலே*
*மருவிய புகழை வழுத்தவும் நின்னை*
*வாழ்த்தவும் இச்சைகாண் எந்தாய் (22)*

*மண்ணுல கதிலே உயிர்கள்தாம் வருந்தும்*
*வருத்தத்தை ஒருசிறி தெனினும்*
*கண்ணுறப் பார்த்தும் செவியுறக் கேட்டும்*
*கணமும்நான் சகித்திட மாட்டேன்.*
*எண்ணுறும் எனக்கே நின்னருள் வலத்தால்*
*இசைத்தபோ திசைத்தபோ தெல்லாம்*
*நண்ணும்அவ் வருத்தம் தவிர்க்கும்நல் வரந்தான்*
*நல்குதல் எனக்கிச்சை எந்தாய் (23)*

*இவையலால் பிறிதோர் விடயத்தில் இச்சை*
*எனக்கிலை இவையெலாம் என்னுள்*
*சிவையொடும் அமர்ந்த பெருந்தயா நிதிநின்*
*திருவுளத் தறிந்தது தானே*
*தவம்இலேன் எனினும் இச்சையின் படிநீ*
*தருதலே வேண்டும்இவ் விச்சை*
*நவைஇலா இச்சை எனஅறி விக்க*
*அறிந்தனன் நவின்றனன். எந்தாய் (24)*

பாடல்களை பக்தியுடன் இசையூட்டி ஓதிஓதி வள்ளல் பெருமான் பெற்ற அநுபவத்தை நாமும் பெற முயல்வோம்.

13. பிள்ளைப் பெருவிண்ணப்பம்: இப்பதிகத்தில் 133 பாடல்கள் அடக்கம். அனைத்தும் எழுசீர்க் கழி நெடிலடி ஆசிரிய விருத்தத்தால் அமைந்தவை. முற்பகுதியைப் போலவே இப்பகுதிப் பாடல்களும் அதே போக்கில் அமைந்துள்ளன. இப்பகுதிப் பாடல்களிலும் வள்ளல் பெருமான் வாழ்க்கை பற்றிய குறிப்புகள் உள்ளன. இவ்விண்ணப்பத்தில் 25 பாடல்களில் ஆழங் கால் படுவோம்.

*தனிப்பெருஞ் சோதித் தலைவனே எனது*
*தந்தையே திருச்சிற்றம் பலத்தே*
*களிப்பெறுங் கருணைக் கடவுளே அடியேன்*
*கருதநின் றுரைக்கும்விண் ணப்பம்;*
*இனிப்புறும் நினது திருவுளத் தடைந்தே*
*எனக்கருள் புரிகநீ, விரைந்தே!*
*இனிச்சிறு பொழுதும் தரித்திடேன் உன்றன்*
*இணைமலர்ப் பொன்னடி ஆணை (1)*

*திரிபிலாப் பொருளே திருச்சிற்றம் பலத்தே*
*திகழ்கின்ற செல்வமே அன்பர்*
*பரிவுறுந் தோறும் விரைந்துவந் தருளும்*
*பண்பனே பரையிடப் பாகா*
*பெரியபொற் சபையில் நடம்புரி கின்ற*
*பேரருட் சோதியே எனக்கே*
*உரியநல் தந்தை வள்ளலே அடியேன்*
*உரைக்கின்றேன் கேட்டருள் இதுவே (2)*

*என்னைஆண் டருளி என்பிழை பொறுத்த*
*இறைவனே திருச்சிற் றம்பலத்தே*
*என்னைஆண் 'டஞ்சேல் உனக்குநல் அருளிங்*
*கீகுதும்' என்றஎன் குருவே*
*என்னைவே றெண்ணா துள்ளதே உணர்த்தி*
*எனக்குளே விளங்குபேர் ஒளியே*
*என்னைஈன் றளித்த தந்தையே விரைந்திங்*
*கேற்றருள் திருச்செவிக் கிதுவே (6)*

*கற்றவர் உளத்தே கரும்பினில் இனிக்கும்*
*கண்ணுதல் கடவுளே என்னைப்*
*பெற்றதாய் நேயர் உறவினர் துணைவர்*
*பெருக்கிய பழக்கமிக் குடையோர்*
*மற்றவர் இங்கே தனித்தனி பிரிந்து*
*மறைந்திட்ட தோறும்அப் பிரிவை*
*உற்றுநான் நினைக்கும் தோறும்உள் நடுங்கி*
*உடைந்தனன் உடைக்கின்றேன் எந்தாய் (16)*

*தாய்மொழி குறித்தே கணக்கிலே மற்றோர்*
*தாய்க்குநால் என்பதை இரண்டாய்*
*வாய்மொழி வஞ்சம் புகன்றனன் வளர்ந்தேன்*
*நடுங்கினேன் நினைத்ததை மனத்தே*
*தூய்மொழி நேயர் நம்பினோர் இல்லில்*
*சூழ்ந்தனன் நினைத்தது துயர்ந்தேன்*
*காய்மொழி புகன்றேன் பொய்மொழி புகன்றேன்*
*கலங்கினேன் அதுநினைந் தெந்தாய் (21)*

*பல்லிகள் பலவா யிடத்தும்உச் சியினும்*
*பகரும்நேர் முதற்பல வயினும்*
*சொல்லிய தோறும் பிறர்துயர் கேட்கச்*
*சொல்லுகின் றனவோஎனச் சூழ்ந்தே*
*மெல்லிய மனம்நொந் திளைத்தனன் கூகை*
*வெங்குழல் செயுந்தொறும் எந்தாய்*
*வல்லியக் குரல்கேட் டயர்பசுப் போல*
*வருந்தினேன் எந்தைநீ அறிவாய் (23)*

*காக்கைகள் கூவக் கலங்கினேன் பருந்தின்*
*கடுங்குரல் கேட்டுளங் குலைந்தேன்*
*தாக்கிய ஆந்தை குரல்செயப் பயந்தேன்*
*சாக்குரல் பறவையால் தளர்ந்தேன்*
*வீக்கிய வேறு கொடுஞ்சகு னஞ்செய்*
*வீக்கலால் மயங்கினேன் விடத்தில்*
*ஊக்கிய பாம்பைக் கண்டபோ துள்ளம்*
*ஒடுங்கினேன் நடுங்கினேன் எந்தாய் (24)*

*களிப்புறு சுகமாம் உணவினைக் கண்டகா*
*லத்தும் உண்டகா லத்தும்*
*நெளிப்புறு மனத்தோ டஞ்சினேன் எனைத்தான்*
*நேர்ந்தபல் சுபங்களில் நேயர்*
*அளிப்புறு விருந்துண் டமர்களன் றழைக்க*
*அவர்களுக் கண்பினோ டாங்கே*
*ஒளிப்புறு வார்த்தை உரைத்தயல் ஒளித்தே*
*பயத்தொடும் உற்றனன் எந்தாய் (29)*

*தொகுப்புறு சிறுவர் பயிலுங்கால் பயிற்றும்*
*தொழிலிலே வந்தகோ பத்தில்*
*சகிப்பிலா மையினால் அடித்தனன் அடித்த*
*தருணம்நான் கலங்கிய கலக்கம்*
*வகுப்புற நினது திருவுளம் அறியும்*
*மற்றுஞ்சில் உயிர்களில் கோபம்*
*மிகப்புகுந் தடித்துப் பட்டபா டெல்லாம்*
*மெய்யநீ அறிந்ததே அன்றோ (36)*[5]

*கோபமே வருமோ காமமே வருமோ*
*கொடியமோ கங்களே வருமோ*
*சாபமே அனைய தடைமதம் வருமோ*
*தாமதப் பாவிவந் திடுமோ*
*பாபமே புரியும் லோபமே வருமோ*
*பயனில்மாற் சரியவந் திடுமோ*
*தாபஆங் கார மேஉறு மோஎன்*
*றையநான் தளர்ந்ததும் அறிவாய் (8)*

*கருத்துவே றாகிக் கோயிலில் புகுந்துன்*
*காட்சியைக் கண்டபோ தெல்லாம்*
*வருத்தமே அடைந்தேன் பயத்தொடும் திரும்பி*
*வந்துநொந் திளைத்தனன் எந்தாய்*

5. சிறுவர்கட்குக் கல்விக் கற்பித்தபோது - அவர்தம் சிறு குறும்புகளைச் சகியாது அடித்துவிட்ட அநுபவம்.

*நிருத்தனே நின்னைத் துறந்தபோ தெல்லாம்*
*நெகிழ்ச்சிஇல் லாமையால் நடுங்கிப்*
*பருத்தஎன் உடம்பைப் பார்த்திடா தஞ்சிப்*
*படுத்ததும் ஐயநீ அறிவாய் (40)*

*பொருளிலே உலகம் இருப்பதா தலினால்*
*புரிந்துநாம் ஒருவர்பால் பலகால்*
*மருவினால் பொருளின் இச்சையால் பலகால்*
*மருவுகின் றான்எனக் கருதி*
*வெருவுவர் எனநான் அஞ்சிஎவ் விடத்தும்*
*மேவிலேன் எந்தைநீ அறிவாய்*
*ஒருவும்அப் பொருளை நினைத்தபோ தெல்லாம்*
*உவட்டினேன் இதுவும்நீ அறிவாய் (46)*

*கையுற வீசி நடப்பதை, நாணிக்*
*கைகளைக் கட்டியே நடந்தேன்*
*மெய்யுறக் காட்ட வெருவிவெண் துகிலால்*
*மெய்யெலாம் ஐயகோ மறைத்தேன்*[6]
*வையமேல் பிறர்தங் கோலமும் நடையும்*
*வண்ணமும் அண்ணலே சிறிதும்*
*பையநான் ஊன்றிப் பார்த்ததே இல்லை*
*பார்ப்பனேல் பயமிகப் படைப்பேன் (52)*

*எளியரை வலியார் அடித்தபோது ஐயோ*
*என்மனம் கலங்கிய கலக்கம்*
*தெளியநான் உரைக்க வல்லவன் அல்லேன்*
*திருவுளம் அறியுமே எந்தாய்*
*களியரைக் கண்டு பயந்தஎன் பயந்தான்*
*கடலினும் பெரியது கண்டாய்*
*அளியர்பால் கொடியர் செய்தவெங் கொடுமை*
*அறிந்தஎன் நடுக்கம்ஆர் அறிவார் (54)*

*தேட்டிலே மிகுந்த சென்னையில் இருந்தால்*
*சிலுகுறும் என்றுளம் பயந்தே*

6. இந்நிலையில் உள்ள வள்ளலின் திருவுருவப் படத்தைக் காணலாம்.

*நாட்டிலே சிறிய ஊர்ப்புறங் களிலே*
*நண்ணினேன் ஊர்ப்புறம் அடுத்த*
*காட்டிலே பருக்கைக் கல்லிலே புன்செய்*
*களத்திலே திரிந்துற்ற இளைப்பை*
*ஏட்டிலே எழுத முடியுமோ இவைகள்*[7]
*எந்தைநீ அறிந்தது தானே (58)*

*காணுறு பசுக்கள் கன்றுகள் ஆதி*
*கதறிய போதெலாம் பயந்தேன்*
*ஏணுறு மாடு முதல்பல மிருகம்*
*இளைத்தவை கண்டுளம் இளைத்தேன்*
*கோணுறு கோழி முதல்பல பறவை*
*கூவுதல் கேட்டுளம் குலைந்தேன்*
*வீணுறு கொடியர் கையிலே வாளை*
*விதிர்த்தல்கண் டென்என வெருண்டேன் (60)*

*வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம்*
*வாடினேன் பசியினால் இளைத்தே*
*வீடுதோ றிரந்தும் பசியறா தயர்ந்த*
*வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்*
*நீடிய பிணியால் வருந்துகின் றோர்என்*
*நேர்உறக் கண்டுளந் துடித்தேன்*
*ஈடின்மா னிகளாய் ஏழைக ளாய்நெஞ்*
*சிளைத்தவர் தமைக்கண்டே இளைத்தேன் (62)*

*ஐயநான் ஆடும் பருவத்திற் றானே*
*அடுத்தநன் னேயனோ டப்பா*
*பொய்யுல காசை எனக்கிலை உனக்கென்*
*புகல்என அவனும்அங் கிசைந்தே*
*மெய்யுறத் துறப்போம் என்றுபோய் நினது*
*மெய்யருள் மீட்டிட மீண்டேம்*
*துய்யநின் உள்ளம் அறிந்ததே எந்தாய்*
*இன்றுநான் சொல்லுவ தென்னே (76)*

7. சென்னை வாழ்வை நீத்து கருங்குழியை அடைந்த வரலாறு இதில் காட்டப் பெறுகின்றது.

*தேர்விலாச் சிறிய பருவத்திற் றானே*
*தெய்வமே தெய்வமே எனநின்*
*சார்வுகொண் டெல்லாச் சார்வையும் விடுத்தேன்*
*தந்தையும் குருவும்நீ என்றேன்*
*பேர்விலா துளத்தே வந்தவா பாடிப்*
*பிதற்றினேன் பிறர்மதிப் பறியேன்*
*ஓர்விலாப் பிழைகள் ஒன்றையும் அறியேன்*
*இன்றுநான் உரைப்பதிங் கென்னே (77)*

*சித்திகள் எல்லாம் வல்லதோர் ஞானத்*
*திருச்சபை தன்னிலே திகழும்*
*சத்திகள் எல்லாம் சத்தர்கள் எல்லாம்*
*தழைத்திடத் தனிஅருட் செங்கோல்*
*சத்திய ஞானம் விளக்கியே நடத்தும்*
*தனிமுதல் தந்தையே தலைவா*
*பித்தியல் உடையேன் எனினும்நின் தனக்கே*
*பின்னைநான் வாடுதல் அழகோ (84)*

*சிறந்ததத் துவங்கள் அனைத்துமாய் அலவாய்த்*
*திகழ்ஒளி யாய்ஒளி எல்லாம்*
*பிறங்கிய வெளியாய் வெளியெலாம் விளங்கும்*
*பெருவெளி யாய்அதற் கப்பால்*
*நிறைந்தசிற் சபையில் அருளர சியற்றும்*
*நீதிநெல் தந்தையே இனிமேல்*
*பிறந்திடேன் இறவேன் நின்னைவிட் டகலேன்*
*பிள்ளைநான் வாடுதல் அழகோ (86)*

*உற்றதோர் திருச்சிற் றம்பலத் தோங்கும்*
*ஒருதனித் தந்தையே நின்பால்*
*குற்றம்நான் புரிந்திங் கறிந்திலேன் குற்றம்*
*குயிற்றினேன் என்னில்அக் குற்றம்*
*இற்றென அறிவித் தறிவுதந் தென்னை*
*இன்புறப் பயிற்றுதல் வேண்டும்*
*மற்றய லார்போன் றிருத்தலோ தந்தை*
*வழக்கிது நீஅறி வாயோ (91)*

*மாயையால் வினையால் அரிபிர மாதி*
*வானவர் மனமதி மயங்கித்*
*தீயகா ரியங்கள் செய்திடில் அந்தோ*
*சிறியனேன் செய்வது புதிதோ*
*ஆயினும் தீய இவைஎன அறியேன்*
*அறிவித்துத் திருத்துதல் அன்றி*
*நீயிவண் பிறர்போன் றிருப்பது தந்தை*
*நெறிக்கழ கல்லவே எந்தாய் (93)*

*கற்றவர் கல்லார் பிறர்பிறர் குரல்என்*
*காதிலே கிடைத்தபோ தெல்லாம்*
*மற்றவர் தமக்கென் உற்றதோ அவர்தம்*
*மரபினர் உறவினர் தமக்குள்*
*உற்றதிங் கெதுவோ என்றுளம் நடுங்கி*
*ஓடிப்பார்த் தோடிப்பார்த் திரவும்*
*எற்றிரு பகலும் ஏங்கிநான் அடைந்த*
*ஏக்கமுந் திருவுளம் அறியும் (122)*

*பன்னிரண் டாண்டு தொடங்கிநான் இற்றைப்*
*பகல்வரை அடைந்தவை எல்லாம்*[8]
*உன்னிநின் றுரைத்தால் உலப்புறா ததனால்*
*ஒருசில உரைத்தனன் எனினும்*
*என்னுளத் தகத்தும் புறத்தும்உட் புறத்தும்*
*இயல்புறப் புறத்தினும் விளங்கி*
*மன்னிய சோதி யாவும்நீ அறிந்த*
*வண்ணமே வகுப்பதென் நினக்கே (126)*

*என்னுயிர் காத்தல் கடன்உனக் கடியேன்*
*இசைத்தவிண் ணப்பம்ஏற் றருளி*
*உன்னுமென் உள்ளத் துறும்பயம் இடர்கள்*
*உறுகண்மற் றிவைஎலாம் ஒழித்தே*

8. அடிகளின் 12ஆம் அகவையில் ஞான வாழ்க்கை தொடங்கிய செய்தி இதில் குறிப்பிடப் பெறுகின்றது.

*நின்னருள் அமுதம் அளித்தென தெண்ணம்*
*நிரப்பியாட் கொள்ளுதல் வேண்டும்*
*மன்னுபொற் சபையில் வயங்கிய மணியே*
*வள்ளலே சிற்சபை வாழ்வே (132)*

அனைத்தும் உள்ளத்தை உருக்கி அடிகளின் வாழ்க்கைக் குறிப்புகளைக் கோடிட்டுக் காட்டுவன.

23. **சற்குருமணி மாலை:** இப்பகுதியில் 25 பாடல்கள் அடக்கம். நடராசப் பெருமானைத் தம் குருவாகக் கருதி அருளியவை. அனைத்தும் எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தாலாகியவை. பாடல்கள் யாவும் 'தனி நடராசஎன் சற்குரு மணியே' என்று இறுகின்றன.

*மாற்றறியாதசெ ழும்பசும் பொன்னே*
*மாணிக்க மேசுடர் வண்ணக் கொழுந்தே*
*கூற்றறி யாதபெ ருந்தவர் உள்ளக்*
*கோயில் இருந்த குணப்பெருங் குன்றே*
*வேற்றறி யாதசிற் றம்பலக் கனியே*
*விச்சையில் வல்லவர் மெச்சுவி ருந்தே*
*சாற்றறி யாதஎன் சாற்றுங் களித்தாய்*
*தனிநட ராசஎன் சற்குரு மணியே (1)*

*காய்மனக் கடையனைக் காத்தமெய்ப் பொருளே*
*கலைகளுங் கருதரும் ஒருபெரும் பதியே*
*தேய்மதிச் சமயருக் கரியஒண் சுடரே*
*சித்தெலாம் வல்லதோர் சத்திய முதலே*
*ஆய்மதிப் பெரியருள் அமர்ந்தசிற் பரமே*
*அம்பலத் தாடல்செய் செம்பதத் தரசே*
*தாய்மதிப் பரியதோர் தயவுடைச் சிவமே*
*தனிநட ராசஎன் சற்குரு மணியே (4)*

*தத்துவ மசிநிலை இதுஇது தானே*
*சத்தியம் காண்எனத் தனித்துரைத் தென்க்கே*
*எத்துவந் தனைகளும் நீக்கிமெய்ந் நிலைக்கே*
*ஏற்றிநான் இறவாத இயல்அளித் தருளால்*

*சித்துவந் துலகங்கள் எவற்றிலும் ஆடச்*
*செய்வித்த பேரருட் சிவபரஞ் சுடரே*
*சத்துவ நெறிதரு வடல்அருட் கடலே*
*தனிநட ராசஎன் சற்குரு மணியே (8)*

*அடிஇது முடிஇது நடுநிலை இதுமேல்*
*அடிநடு முடியிலா ததுஇது மகனே*
*படிமிசை அடிநடு முடிஅறிந் தனையே*
*பதிஅடி முடியிலாப் பரிசையும் அறிவாய்*
*செடியற உலகினில் அருள்நெறி இதுவே*
*செயலுற முயலுக என்றசிற் பரமே*
*தடிமுகில் எனஅருள் பொழிவடல் அரசே*
*தனிநட ராசஎன் சற்குரு மணியே (13)*

*அஞ்சலை நீஒரு சிறிதும்என் மகனே*
*அருட்பெருஞ் சோதியை அளித்தனம் உனக்கே*
*துஞ்சிய மாந்தரை எழுப்புக நலமே*
*சூழ்ந்தசன் மார்க்கத்தில் செலுத்துக சுகமே*
*விஞ்சுற மெய்ப்பொருள் மேனிலை தனிலே*
*விஞ்சைகள் பலவுள விளக்குக என்றாய்*
*தஞ்சம்என் றவர்க்கருள் சத்திய முதலே*
*தனிநட ராசஎன் சற்குரு மணியே (15)*

*வேதத்தின் முடிமிசை விளங்கும்ஓர் விளக்கே*
*மெய்ப்பொருள் ஆகம வியன்முடிச் சுடரே*
*நாதத்தின் முடிநடு நடமிடும் ஒளியே*
*நவைஅறும் உளத்திடை நண்ணிய நலமே*
*ஏதத்தின் நின்றெனை எடுத்தருள் நிலைக்கே*
*ஏற்றிய கருணைஎன் இன்உயிர்த் துணையே*
*தாதுற்ற உடல்பழி யாவகை புரிந்தாய்*
*தனிநட ராசஎன் சற்குரு மணியே (16)*

*அமரரும் முனிவரும் அதிசயத் திடவே*
*அருட்பெருஞ் சோதியை அன்புடன் அளித்தே*
*கமமுறு சிவநெறிக் கேற்றிஎன் றனையே*
*காத்தென துளத்தினில் கலந்தமெய்ப் பதியே*

*எமன்எனும் அவன்இனி இலைஇலை மகனே*
*எய்ப்பற வாழ்கஎன் றியம்பிய அரசே*
*சமரச சன்மார்க்க சங்கத்தின் முதலே*
*தனிநட ராசஎன் சற்குரு மணியே (18)*

*ஆதியும் அந்தமும் இன்றிஒன் றாகி*
*அகம்புறம் அகப்புறம் புறப்புறம் நிறைந்தே*
*ஓதியும் உணர்ந்தும்இங் கறிவரும் பொருளே*
*உளங்கொள்சிற் சபைநடு விளங்குமெய்ப் பதியே*
*சோதியும் சோதியின் முதலுந்தான் ஆகிச்*
*சூழ்ந்தெனை வளர்க்கின்ற சுதந்தர அமுதே*
*சாதியும் சமயமும் தவிர்த்தவர் உறவே*
*தனிநட ராசஎன் சற்குரு மணியே (20)*

*கற்பனை முழுதும் கடந்தவர் உளத்தே*
*கலந்துகொண் டினிக்கின்ற கற்பகக் கனியே*
*அற்பனை யாண்டுகொண் டறிவளித் தழியா*
*அருள்நிலை தனில்உற அருளிய அமுதே*
*பற்பல உலகமும் வியப்பஎன் தனக்கே*
*பதமலர் முடிமிசைப் பதித்தமெய்ப் பதியே*
*தற்பர பரம்பர சிதம்பர நிதியே*
*தனிநட ராசஎன் சற்குரு மணியே (22)*

*அறியாமல் ஆகின்ற அறிவினுள் அறிவே*
*அடையாமல் அடைகின்ற அடைவினுள் அடைவே*
*செறியாமல் செறிகின்ற செறிவினுட் செறிவே*
*திளையாமல் திளைக்கின்ற திளைப்புறு திளைப்பே*
*பிரியாமல் என்னுளம் கலந்தமெய்க் கலப்பே*
*பிறவாமல் இறவாமல் எனைவைத்த பெருக்கே*
*தறியாகி உணர்வாரும் உணர்வரும் பொருளே*
*தனிநட ராசஎன் சற்குரு மணியே (23)*

*கருதாமல் கருதும்ஓர் கருத்தினுட் கருத்தே*
*காணாமல் காணும்ஓர் காட்சியின் விளைவே*
*எருதாகத் திரிந்தேனுக் கிகபரம் அளித்தே*
*இறவாத வரமுந்தந் தருளிய ஒளியே*

*வருதாகந் தவிர்த்திட வந்ததென் அமுதே*
*மாணிக்க மலைநடு மருவிய பரமே*
*தருதான முணவெனச் சாற்றிய பதியே*
*தனிநட ராசஎன் சற்குரு மணியே (24)*

பாடல்கள் அனைத்தையும் உளங்கரைந்து பாடினால் வள்ளல் பெருமானின் அநுபவத்தைப் பெறலாம்.

25. திருமுன் விண்ணப்பம்: தில்லைச் சிற்றம்பலவன் திருவடிகளைப் பணிந்து இப்பிறப்பில் ஏற்பட்ட உடல் அழிவுறா வண்ணம் காக்குமாறு வேண்டுவது இப்பதிகம். அறுசீர்க் கழிநெடில் ஆசிரிய விருத்தத்தாலான பத்துப் பாடல்களைக் கொண்டது.

*பொன்னின் மாமணிப் பொதுநடம்*
*புரிகின்ற புண்ணியா கனிந்தோங்கி*
*மன்னு வாழையின் பழச்சுவை*
*எனப்பத்தர் மனத்துளே தித்திப்போய்*
*சின்ன நாயினேன் விண்ணப்பம்*
*திருச்செவி சேர்த்தருள் செயல்வேண்டும்*
*இன்ன என்னுடைத் தேகம்நல்*
*ஒளிபெறும் இயல்உருக் கொளும்ஆறே (2)*

*இலங்கு பொன்னனிப் பொதுநடம்*
*புரிகின்ற இறைவஇவ் வுலகெல்லாம்*
*துலங்கும் வண்ணநின் றருளுநின்*
*திருவடித் துணைதுணை என்னாமல்*
*கலங்கு நாயினேன் விண்ணப்பம்*
*திருச்செவி கலந்தருள் செயல்வேண்டும்*
*அலங்கும் இவ்வுடல் இம்மையே*
*அழிவுறா அருள்உடல் உறும்ஆறே (5)*

*மாற்றி லாதபொன் அம்பலத்*
*தருள்நடம் வயங்கநின் றொளிர்கின்ற*
*பேற்றில் ஆருயிர்க் கின்பருள்*
*இறைவநின் பெய்கழற் கணிமாலை*

*சாற்றி டாதஎன் விண்ணப்பம்*
*திருச்செவி தரித்தருள் செயல்வேண்டும்*
*காற்றில் ஆகிய இவ்வுடல்*
*இம்மையே கதியுடல் உறும்ஆறே (9)*

என்பவை இப்பதிகத்தின் மூன்று திருப்பாடல்கள்.

26. **இனித்த வாழ்வருள் எனல்:** இப்பிறப்பில் இனிமையான - வளமான - ஞானவாழ்வு அருளுமாறு இறைவனை வேண்டுதலைக் கூறுவது இப்பதிகம். எழுசீர்க் கழிநெடில்அடி ஆசிரிய விருத்தங்கள் பத்தைக் கொண்டது.

*உரத்தவான் அகத்தே உரத்தவா ஞான*
*ஒளியினால் ஓங்கும்ஓர் சித்தி*
*புரத்தவர் பெரியோர் புரந்தவா குற்றம்*
*பொருத்தடி யேன்தனக் களித்த*
*வரத்தவா உண்மை வரத்தவா ஆக*
*மங்களும் மறைகளும் காணா*
*தரத்தவா அறிவா தரத்தவா பொதுவில்*
*தனித்தவா இனித்தவாழ் வருளே (1)*

*தத்துவம் கடந்த தத்துவா ஞான*
*சமரச சுத்தசன் மார்க்கச்*
*சத்துவ நெறியில் நடத்திஎன் தலைமேல்*
*தனிநிலை நிறுத்திய தலைவா*
*சித்துவந் தாடும் சித்திமா புரத்தில்*
*திகழ்ந்தவா திகழ்ந்தென துளத்தே*
*ஒத்துநின் றோங்கும் உடையவா கருணை*
*உளத்தவா வளத்தவாழ் வருளே (6)*

*பங்கமோர் அணுவும் பற்றிடா அறிவால்*
*பற்றிய பெற்றியார் உளத்தே*
*தங்குஓர் சோதித் தனிப்பெருங் கருணைத்*
*தரந்திகழ் சத்தியத் தலைவா*

*துங்கம்உற் றழியா நிலைதரும் இயற்கைத்*
*தொன்மையாம் சுத்தசன் மார்க்கச்*
*சங்கநின் றேத்தும் சத்திய ஞான*
*சபையவா அபயவாழ் வருளே (9)*

என்பன இவற்றின் மூன்று பாடல்கள்.

27. திருஅருள் விழைதல்: இருபது எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தங்களைக் கொண்ட இப்பகுதி, அடிகள் இறைவனது திருஅருளை விழைதலை விளக்குவது.

*உன்கடன் அடியேற் கருளல்என் றுணர்ந்தேன்*
*உடல்பொருள் ஆவியும் உனக்கே*
*பின்கடன் இன்றிக் கொடுத்தனன் கொடுத்த*
*பின்னும்நான் தளருதல் அழகோ*
*என்கடன் புரிவேன் யார்க்கெடுத் துரைப்பேன்*
*என்செய்வேன் யார்துணை என்பேன்*
*முன்கடன் பட்டார் போல்மனம் கலங்கி*
*முறிதல்ஓர் கணம்தரி யேனே (3)*

*தான்எனைப் புணரும் தருணம்ஈ தெனவே*
*சத்தியம் உணர்ந்தனன் தனித்தே*
*தேன்உறக் கருதி இருக்கின்றேன் இதுநின்*
*திருவுளம் தெரிந்ததெந் தாயே*
*ஆன்எனக் கூவி அணைந்திடல் வேண்டும்*
*அரைக்கணம் ஆயினும் தாழ்க்கில்*
*நான்இருப் பறியேன் திருச்சிற்றம் பலத்தே*
*நடம்புரி ஞானநா யகனே (5)*

*தந்தையும் தாயும் குருவும்யான் போற்றும்*
*சாமியும் பூமியும் பொருளும்*
*சொந்தநல் வாழ்வும் நேயமும் துணையும்*
*சுற்றமும் முற்றும்நீ என்றே*
*சிந்தையுற் றிங்கே இருக்கின்றேன் இதுநின்*
*திருவுளம் தெரிந்ததே எந்தாய்*

*நிந்தைசெய் உலகில் யான்உளம் கலங்கல்*
*நீதியோ நின்அருட் கழகோ (8)*

*பழம்பிழி மதுரப் பாட்டல எனினும்*
*பத்தரும் பித்தரும் பிதற்றும்*
*கிழம்பெரும் பாட்டும் கேட்பதுன் உள்ளக்*
*கிளர்ச்சிஎன் றறிந்தநாள் முதலாய்*
*வழங்குநின் புகழே பாடுறு கின்றேன்*
*மற்றொரு பற்றும்இங் கறியேன்*
*சழக்குடை உலகில் தளருதல் அழகோ*
*தந்தையும் தாயும்நீ அலையோ (10)*

*போதெலாம் வீணில் போக்கிஏ மாந்த*
*புழுத்தலைப் புலையர்கள் புணர்க்கும்*
*சூதெலாம் கேட்குந் தொறும்உனைப் பரவும்*
*தூயர்கள் மனம்அது துளங்கித்*
*தாதெலாம் கலங்கத் தளருதல் அழகோ*
*தனிஅருட் சோதியால் அந்த*
*வாதெலாம் தவிர்த்துச் சுத்தசன் மார்க்கம்*
*வழங்குவித் தருளுக விரைந்தே (15)*

*சிவந்திகழ் கருணைத் திருநெறிச் சார்பும்*
*தெய்வம்என் றேஎனும் திறமும்*
*நவந்தரு நிலைகள் சுதந்தரத் தியலும்*
*நன்மையும் நரைதிரை முதலாம்*
*துவந்துவம் தவிர்த்துச் சுத்தமா தியமுச்*
*சுகவடி வம்பெறும் பேறும்*
*தவந்திகழ் எல்லாம் வல்லசித் தியும்நீ*
*தந்தருள் தருணம்ஈ தெனக்கே (17)*

*தருணம்இஞ் ஞான்றே சுத்தசன் மார்க்கத்*
*தனிநெறி உலகெலாம் தழைப்பக்*
*கருணையும் சிவமே பொருள்எனக் கருதும்*
*கருத்தும்உற் றெம்மனோர் களிப்பப்*

*பொருள்நிறை ஓங்கத் தெருள்நிலை விளங்கப்*
*புண்ணியம் பொற்புறு வயங்க*
*அருள்நயந் தருள்வாய் திருச்சிற்றம் பலத்தே*
*அருட்பெருஞ் சோதிஎன் அரசே (18)*

இந்த ஏழு பாடல்களையும் உளம்கரைந்து ஓதினால் வள்ளல் பெருமான் அநுபவம் நமக்கும் கிட்டும்.

29. சிற்சபை விளக்கம்: தில்லைச் சிற்றம்பலவன் திருச்சபையைக் காட்டுவது. எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பில் அமைந்த பத்துப் பாடல்களைக் கொண்டது.

*சோறு வேண்டினும் துகில்அணி முதலாம்*
*சுகங்கள் வேண்டினும் சுகமலால் சுகமாம்*
*வேறு வேண்டினும் நினைஅடைந் தன்றி*
*மேவொ ணாதெனும் மேலவர் உரைக்கே*
*மாறு வேண்டிலேன் வந்துநிற் கின்றேன்*
*வள்ள லேஉன்றன் மனக்குறிப் பறியேன்*
*சாறு வேண்டிய பொழில்வடல் அரசே*
*சத்தி யச்சபைத் தனிப்பெரும் பதியே (1)*

*சூழ்வி லாதுழல் மனத்தினால் சுழலும்*
*துட்ட னேன்அருட் சுகப்பெரும் பதிநின்*
*வாழ்வு வேண்டினேன் வந்துநிற் கின்றேன்*
*வள்ள லேஉன்றன் மனக்குறிப் பறியேன்*
*ஊழ்வி டாமையில் அரைக்கணம் எனினும்*
*உன்னை விட்டயல் ஒன்றும்உற் றறியேன்*
*தாழ்வி லாதசீர் தருவடல் அரசே*
*சத்தி யச்சபைத் தனிப்பெரும் பதியே (3)*

*தூய நெஞ்சினேன் அன்றுநின் கருணைச்*
*சுகம்வி ழைந்திலேன் எனினும்பொய் உலக*
*மாயம் வேண்டிலேன் வந்துநிற் கின்றேன்*
*வள்ள லேஉன்றன் மனக்குறிப் பறியேன்*

*ஈய வாய்த்தநல் தருணம்ஈ தருள்க*
*எந்தை நின்மலர் இணைஅடி அல்லால்*
*தாயம் ஒன்றிலேன் தனிவடல் அரசே*
*சத்தி யச்சபைத் தனிப்பெரும் பதியே (7)*

*பத்தி யஞ்சிறி துற்றிலேன் உன்பால்*
*பத்தி ஒன்றிலேன் பரமநின் கருணை*
*மத்தி யம்பெற வந்துநிற் கின்றேன்*
*வள்ள லேஉன்றன் மனக்குறிப் பறியேன்*
*எத்தி அஞ்சலை எனஅரு ளாயேல்*
*ஏழை யேன்உயிர் இழப்பன்உன் ஆணை*
*சத்தி யம்புகன் றேன்வடல் அரசே*
*சத்தி யச்சபைத் தனிப்பெரும் பதியே (9)*

இந்த நான்கு பாடல்களையும் மனங்கரைந்து பாடி அநுபவித்தால் சிற்சபை நம் மனத்திரையில் படியும்.

30. திருவருட்பேறு: எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பில் அமைந்த பத்துப் பாடல்கள் அமைந்த இப்பதிகம் அடிகளார் தில்லை அம்பலத்தில் அருநடம் புரியும் ஆனந்தக் கூத்தனை திருவருள் புரியுமாறு விண்ணப்பத்தலை விளக்குவது.

*படிகள்எலாம் ஏற்றுவித்தீர் பரமநடம் புரியும்*
*பதியைஅடை வித்திர்அப் பதிநடுவே விளங்கும்*
*கொடிகள்நிறை மணிமாடக் கோயிலையும் காட்டிக்*
*கொடுத்தீர்அக் கோயிலிலே கோபுரவா யிலிலே*
*செடிகள்இலாத் திருக்கடிவம் திறப்பித்துக் காட்டித்*
*திரும்பவும்நீர் மூடுவித்தீர் திறந்திடுதல் வேண்டும்*
*அடிகள்இது தருணம்இனி அரைக்கணமும் தரியேன்*
*அம்பலத்தே நடம்புரிவீர் அளித்தருள்வீர் விரைந்தே (1)*

*பரிக்கலத்தே திருவமுதம் படைத்துணவே பணித்தீர்*
*பணித்தபின்னோ என்னுடைய பக்குவம்பார்க் கின்றீர்*
*இருநிலத்தே பசித்தவர்க்குப் பசிநீக்க வல்லார்*
*இவர்பெரியர் இவர்சிறியர் என்னல்வழக் கலவே*

*உரிமையுற்றேன் உமக்கேஎன் உள்ளம்அன்றே அறிந்தீர்*
*உடல்பொருள்ஆ விகளைஎலாம் உம்மதென்னக் கொண்டீர்*
*திரிவகத்தே நான்வருந்தப் பார்த்திருத்தல் அழகோ*
*சிவகாம வல்லிமகிழ் திருநடநா யகரே (4)*

*எதுதருணம் அதுதெரியேன் என்னினும்எம் மானே*
*எல்லாம்செய் வல்லவனே என்தனிநா யகனே*
*இதுதருணம் தவறும்எனில் என்உயிர்போய் விடும்இவ்*
*வெளியேன்மேல் கருணைபுரிந் தெழுந்தருளல் வேண்டும்*
*மதுதருண வாரிசமும் மலர்ந்ததருள் உதயம்*
*வாய்த்ததுசிற் சபைவிளக்கம் வயங்குகின்ற துலகில்*
*விதுதருண அமுதளித்தென் எண்ணம்எலாம் முடிக்கும்*
*வேலைஇது காலைஎன விளம்பவும்வேண் டுவதோ (7)*

*அன்றெனக்கு நீஉரைத்த தருணம்இது எனவே*
*அறிந்திருக்கின் றேன்அடியேன் ஆயினும்என் மனந்தான்*
*கன்றெனச்சென் றடிக்கடிஉட் கலங்குகின்ற தரசே*
*கண்ணுடைய கரும்பேஎன் கவலைமனக் கலக்கம்*
*பொன்றிடப்பேர் இன்பவெள்ளம் பொங்கிடஇவ் வுலகில்*
*புண்ணியர்கள் உளங்களிப்புப் பொருந்திவிளங் கிடநீ*
*இன்றெனக்கு வெளிப்படஎன் இதயமலர் மிசைநின்று*
*எழுந்தருளி அருள்வதெலாம் இனிதருள்க விரைந்தே (9)*

இந்த நான்கு பாடல்களையும் படித்து வள்ளல் பெருமான் அடைந்த அநுபவத்தை நாமும் பெறுவோமாக.

31. உண்மை கூறல்: பத்துப் பாடல்களைக் கொண்டது இப்பதிகம்; அனைத்தும் எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பில் அமைந்தவை. தாம் எம்பெருமானுக்கு ஆட்பட்டிருக்கும் உண்மையைக் கூறுதல் இப் பதிகப் பொருள். ஞான சம்பந்தப் பெருமானைப் போல் நம் அடிகளும் தாம் கூறுவனவற்றை இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுதலை இப்பதிகத்தில் கண்டு மகிழலாம். பாடல்கள் யாவும் ‘அருட்பெருங்சோதியீர் ஆணைநும் மீதே’ என்று இறுவதையும் காணலாம்.

பெறுவது நுமையன்றிப் பிறிதொன்றும் விரும்பேன்
பேசல்நும் பேச்சன்றிப் பிறிதொன்றும் பேசேன்
உறுவதுநும் அருள்அன்றிப் பிறிதொன்றும் உவவேன்
உன்னல்உம் திறன்அன்றிப் பிறிதொன்றும் உன்னேன்
மறுநெறி தீர்த்தெனை வாழ்வித்துக் கொண்டீர்
வள்ளலே நும்திரு வரவுகண் டல்லால்
அறுசுவை உண்டிகொண் டருந்தவும் மாட்டேன்
அருட்பெருஞ் சோதியீர் ஆணைநும் மீதே (2)

தடுத்தெனை ஆட்கொண்ட தந்தைய ரேஎன்
தனிப்பெருந் தலைவரே சபைநடத் தவரே
தொடுத்தொன்று சொல்கிறேன் சொப்பனத் தேனும்
தூயநும் திருவருள் நேயம்விட் டறியேன்
விடுத்திடில் என்னைநீர் விருப்பன்என் உயிரை
வெருவுளக் கருத்தெல்லாம் திருவுளத் தறிவீர்
அடுத்தினிப் பாயலில் படுக்கவும் மாட்டேன்
அருட்பெருஞ் சோதியீர் ஆணைநும் மீதே (4)

என்பொருள் என்னுடல் என்உயிர் எல்லாம்
ஈந்தனன் உம்மிடத் தெம்பெரு மானீர்
இன்பொடு வாங்கிக்கொண் டென்னையாட் கொண்டீர்
என்செயல் ஒன்றிலை யாவும்நும் செயலே
வன்பொடு நிற்கிலீர் என்பொடு கலந்தீர்
வள்ளலே நும்திரு வரவுகண் டல்லால்
அன்பொடு காண்பாரை முன்பிட மாட்டேன்
அருட்பெருஞ் சோதியீர் ஆணைநும் மீதே (6)

மடுக்கநும் பேரருள் தண்அமு தெனக்கே
மாலையும் காலையும் மத்தியா னத்தும்
கடுக்கும் இரவினும் யாமத்தும் விடியற்
காலையி னுந்தந்தென் கடும்பசி தீர்த்து
எடுக்குநற் றாயொடும் இணைந்துநிற் கின்றீர்
இறையவ ரேஉம்மை இங்குகண் டல்லால்

*அடுக்கவீழ் கலைஎடுத் துடுக்கவும் மாட்டேன்*
*அருட்பெருஞ் சோதியீர் ஆணைநும் மீதே (9)*

இந்த நான்கு பாடல்களையும் உளங்கரைந்து ஓதினால் அடிகளாரின் 'உண்மைக் கூறல்' நம்முடையதாக மாறு வதையும் உணரலாம்.

34. அனுபோக நிலையம்: பத்துப் பாடல்களைக் கொண்ட இப்பதிகம் எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பில் அமைந்தது. அடிகள் இறைவனுடன் கலந்த அநுபவ நிலையை இயம்புவது. பாடல்கள் முதல் ஐந்தும் 'கலந்தருள் கலந்தருள் எனையே' என் றும் இறுதி ஐந்தும் 'புணர்ந்தருள் புணர்ந்தருள் ஏனை யே' என்றும் இறுவன.

*இனிப்பிரிந் திறையும் இருக்கலேன் பிரிவை*
*எண்ணினும் ஐயகோ மயங்கிப்*
*பனிப்பில்என் உடம்பும் உயிரும்உள் உணவும்*
*பரதவிப் பதைஅறிந் திலையோ*
*தனிப்படு ஞான வெளியிலே இன்பத்*
*தனிநடம் புரிதனித் தலைவா*
*கனிப்பயன் தருதற் கிதுதகு தருணம்*
*கலந்தருள் கலந்தருள் எனையே (1)*

*மேலைஏ காந்த வெளியிலே நடஞ்செய்*
*மெய்யனே ஐயனே எனக்கு*
*மாலையே அணிந்த மகிழ்நனே எல்லாம்*
*வல்லனே நல்லனே அருட்செங்*
*கோலையே நடத்தும் இறைவனே ஓர்எண்*
*குணத்தனே இனிச்சகிப் பறியேன்*
*காலையே தருதற் கிதுதகு தருணம்*
*கலந்தருள் கலந்தருள் எனையே (3)*

*துன்பெலாம் தவிர்க்கும் திருச்சிற்றம் பலத்தே*
*சோதியுட் சோதியே அழியா*

*இன்பெலாம் அளிக்கும் இறைவனே என்னை*
*ஈன்றநல் தந்தையே தாயே*
*அன்பெலாம் ஆகி நிறைந்தோர் நிறைவே*
*அண்ணலே இனிப்பிரி வாற்றேன்*
*பொன்பதந் தருதற் கிதுதகு தருணம்*
*புணர்ந்தருள் புணர்ந்தருள் எனையே (6)*

*ஏதும்ஒன் றறியாப் பேதையாம் பருவத்*
*தென்னையாட் கொண்டெனை உவந்தே*
*ஓதும்இன் மொழியால் பாடவே பணித்த*
*ஒருவனே என்னுயிர்த் துணைவா*
*வேதமும் பயனும் ஆகிய பொதுவில்*
*விளங்கிய விமலனே ஞான*
*போதகம் தருதற் கிதுதகு தருணம்*
*புணர்ந்தருள் புணர்ந்தருள் எனையே (7)*

இந்த நான்கு பாடல்களையும் என்புருகப் பாடி அநுபவித்தால் வள்ளல் பெருமான் இறைவனுடன் கலந்த கலப்பு நமக்கும் கிட்டும் என்பது உறுதி.

35. சிவயோக நிலை: பத்து நேரிசை வெண்பாக்கள் அடங்கிய இப்பதிகம் வள்ளல் பெருமானின் சிவாநு பவத்தைக் காட்டுவது. பாடல்கள் யாவும் 'கதவைத் திற' என்று இறுவன.

*மதிமண்ட லத்தமுதம் வாயார உண்டே*
*பதிமண் லத்தரசு பண்ண - நிதிய*
*நவநேய மாக்கும் நடராச னேயெஞ்*
*சிவனே கதவைத் திற. (1)*

*சாகா அருளமுதம் தான்அருந்தி நான்களிக்க*
*நாகா திபர்சூழ் நடராசா - ஏகா*
*பவனே பரனே பராபரனே எங்கள்*
*சிவனே கதவைத் திற. (3)*

*எல்லாமும் வல்லசித்தென் றெல்லா மறைகளும்சொல்*
*நல்லார் அமுதமது நான்அருந்த - நல்லார்க்கு*
*நல்வாழ் வளிக்கும் நடராயா மன்றோங்கு*
*செல்வா கதவைத் திற. (6)*

*ஈன உலகத் திடர்நீங்கி இன்புறவே*
*ஞான அமுதமது நான்அருந்த - ஞான*
*உருவே உணர்வே ஒளியே வெளியே*
*திருவே கதவைத் திற. (8)*

*சோதிமலை மேல்வீட்டில் தூய திருஅமுதம்*
*மேதினிமேல் நான்உண்ண வேண்டினேன் - ஓதரிய*
*ஏகா அனேகா எழிற்பொதவில் வாழ்ஞான*
*தேகா கதவைத் திற. (10)*

எல்லா உருவங்களினும் அடிகள் அதிகமாக ஈடு பட்டது நடராச வடிவத்தில். எல்லாத் திருவுருவங்களி லும் நடராசத் திருஉருவம் சிறப்பு வாய்ந்தது. இதன் கலைச் சிறப்பில் மேலை நாட்டவரும் சிந்தையைப் பறிகொடுத்துள்ளனர். நடராசத் திருவுருவம் கலைச் சிறப்பாலன்றித் தத்துவச் சிறப்பாலும் உயர்ந்தது. பேரா இயற்கையின் ஓயா இயக்கமே ஆண்டவனின் திருக் கூத்து. இத்திருக் கூத்தின் தத்துவங்களைக் காட்டுவதே நடராச வடிவம்.

நடராசத் திருவுருவத்தில் திருவாசி ஓங்காரத்தைக் குறிப்பது. இத்திருவாசியிலுள்ள சுடர்கள் (தீக்கொழுந் துகள்) எழுத்துகளாம்.

*ஓங்கார மேநல் திருவாசி உற்றதனில்*
*நீங்கா எழுத்தே நிறைசுடராம் - ஆங்காரம்*
*அற்றார் அறிவர்அணி அம்பலத்தான் ஆடலிது*
*பெற்றார் பிறப்பற்றார் பின்.*

— உண்மை விளக்கம் - 34.

மற்ற திருவுருவங்களில் திருவாசி தனியாக இருக்கும்.

கூத்தப் பெருமான் திருவுருவில் அமைந்த திருவாசி திருவுருவோடு சேர்ந்தே இருக்கும். இவ்வாறு தத்துவத் தாலும் கலைச் சிறப்பாலும் சிறந்த இந்நடராசத் திருவுரு வம் தமிழ்நாட்டிற்கே உரியது. நடராச வடிவத்தைக் கண்டவர்கள் தமிழர்களே. வடநாட்டுத் திருக்கோயில் களில் நடராசர் திருவுருவம் இல்லை. சபைகள் ஐந்தும் தென்தமிழ் நாட்டில் இருப்பதும் கருதத்தக்கது.

இந்தத் தத்துவத்தை நினைவுகூரும் வகையில் இந்த ஐந்து பாடல்களையும் உளங்கொண்டு ஓதிப் பயன் பெறுதல் நம்மனோர் கடன்.

36. பெற்ற பேற்றினை வியத்தல்: பத்துப் பாடல்கள் அடங்கிய இப்பதிகம் எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தங்களால் ஆனது. அடிகள் தாம் இறைவ னிடம் - தில்லைக் கூத்தனிடம் - பெற்ற பேற்றினை நினைந்து உள்குழைந்து ஓதி உவக்கின்றார் இப்பாடல் களில். அவற்றுள் இவை ஐந்து பாடல்கள்:

*சீரிடம் பெறும்ஓர் திருச்சிற்றம் பலத்தே*
*திகழ்தனித் தந்தையே நின்பால்*
*சேரிடம் அறிந்தே சேர்ந்தனன் கருணை*
*செய்தருள் செய்திடத் தாழ்க்கில்*
*யாரிடம் புகுவேன் யார்துணை என்பேன்*
*யார்க்கெடுத் தென்குறை இசைப்பேன்*
*போரிட முடியா தினித்துய ரொடுநான்*
*பொறுக்கலேன் அருள்கஇப் போதே (2)*

*தந்தைநீ அலையோ தனயன்நான் அலனோ*
*தமியனேன் தளர்ந்துளம் கலங்கி*
*எந்தையே குருவே இறைவனே முறையோ*
*என்றுநின் றோலிடு கின்றேன்*
*சிந்தையே அறியார் போன்றிருந் தனையேன்*
*சிறியனேன் என்செய்வேன் ஐயோ*
*சந்தையே புகுந்த நாயினில் கடையேன்*
*தளர்ச்சியைத் தவிர்ப்பவர் யாரே (3)*

*அடாதகா ரியங்கள் செய்தனன் எனினும்*
*அப்பநீ அடியனேன் தன்னை*
*விடாதவா றறிந்தே களித்திருக் கின்றேன்*
*விடுதியோ விட்டிடு வாயேல்*
*உடாதவெற் றரைநேர்ந் துயங்குவேன் ஐயோ*
*உன்னருள் அடையநான் இங்கே*
*படாதபா டெல்லாம் பட்டனன் அந்தப்*
*பாடெலாம் நீஅறி வாயோ (5)*

*என்நிகர் இல்லா இழிவினேன் தனைமேல்*
*ஏற்றினை யாவரும் வியப்பப்*
*பொன்இயல் வடிவும் புரைபடா உளமும்*
*பூரண ஞானமும் பொருளும்*
*உன்னிய எல்லாம் வல்லசித் தியும்பேர்*
*உவகையும் உதவினை எனக்கே*
*தன்னிகர் இல்லாத் தலைவனே நினது*
*தயவைஎன் என்றுசாற் றுவனே (8)*

*சுதந்தரம் உனக்கே கொடுத்தனம் உனது*
*தூயநல் உடம்பினில் புகுந்தேம்*
*இதந்தரும் உளத்தில் இருந்தனம் உனையே*
*இன்புறக் கலந்தனம் அழியாப்*
*பதந்தனில் வாழ்க அருட்பெருஞ் சோதிப்*
*பரிசுபெற் றிடுகபொற் சபையும்*
*சிதந்தரு சபையும் போற்றுக என்றாய்*
*தெய்வமே வாழ்கநின் சீரே (10)*

இந்த ஐந்து பாடல்களையும் ஐயமின்றி அசை போட்டுப் பாடினால் அடிகளார் பெற்றபேறு நம்முடையதாய் ஆகும் நிலை ஏற்படும்.

39. **பொதுநடம் புரிகின்ற பொருள்:** இருபது பாடல்களைக் கொண்ட இப்பகுதி எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பில் அமைந்தது. தில்லைவாழ் நடராசப் பெருமான் தமக்குச் செய்தருளியவற்றையெல்லாம்

நினைந்து போற்றும் வண்ணம் அடிகளார் நினைவு கூர்ந்து மகிழ்வது. பாடல்கள் யாவும் 'பொதுநடம் புரிகின்ற பொருளே' என இறுவன.

*அருட்பெருஞ் சோதி அமுதமே அமுதம்*
*அளித்தெனை வளர்த்திட அருளாம்*
*தெருட்பெருந் தாய்தன் கையிலே கொடுத்த*
*தெய்வமே சத்தியச் சிவமே*
*இருட்பெரு நிலத்தைக் கடத்திஎன் றலைமேல்*
*ஏற்றிய இன்பமே எல்லாப்*
*பொருட்பெரு நெறியும் காட்டிய குருவே*
*பொதுநடம் புரிகின்ற பொருளே (1)*

*தத்துவ பதியே தத்துவம் கடந்த*
*தனித்ததோர் சத்திய பதியே*
*சத்துவ நெறியில் சார்ந்தசன் மார்க்கர்*
*தமக்குளே சார்ந்தநற் சார்பே*
*பித்துறு சமயப் பிணக்குறும் அவர்க்குப்*
*பெறல்அரி தாகிய பேறே*
*புத்தமு தளித்தென் உளத்திலே கலந்து*
*பொதுநடம் புரிகின்ற பொருளே (6)*

*தன்மைகாண் பரிய தலைவனே எல்லாம்*
*தரவல்ல சம்புவே சமயப்*
*புன்மைநீத் தகமும் புறமும் தமைந்த*
*புண்ணியர் தண்ணிய புகலே*
*வன்மைசேர் மனத்தை தன்மைசேர் மனமா*
*வயங்குவித் தமர்ந்தமெய் வாழ்வே*
*பொன்மைசார் கனகப் பொதுவொடு ஞானப்*
*பொதுநடம் புரிகின்ற பொருளே (11)*

*சத்திய பதியே சத்திய நிதியே*
*சத்திய ஞானமே வேத*
*நித்திய நிலையே நித்திய நிறைவே*
*நித்திய வாழ்வருள் நெறியே*

*சித்திஇன் புருவே சித்தியின் கருவே*
*சித்தியிற் சித்தியே எனது*
*புத்தியின் தெளிவே புத்தமு தளித்துப்*
*பொதுநடம் புரிகின்ற பொருளே (16)*

*கலைவளர் கலையே கலையினுட் கலையே*
*கலையெலாம் தரும்ஒரு கருவே*
*நிலைவளர் கருவுட் கருஎன வயங்கும்*
*நித்திய வானமே ஞான*
*மலைவளர் மருந்தே மருந்துறு பலனே*
*மாபலம் தருகின்ற வாழ்வே*
*புலைதவிர்த் தெனையும் பொருளெனைக் கொண்டு*
*பொதுநடம் புரிகின்ற பொருளே (18)*

இந்த அருமையான ஐந்து பாடல்களையும் அன்புடன் ஓதி ஆனந்த நிலை எய்துவோமாக.

41. பரசிவநிலை: பத்துப் பாடல்களைக் கொண்ட இப்பதிகம் எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தங்களால் அமைந்தவை. இந்தப் பரசிவ நிலையை வள்ளல் பெருமான் அகமிக மகிழ்ந்து அநுபவிக்கின்றார். பாடல்களின் கம்பீரத்தைப் பாடி அநுபவிப்போம்.

*அருட்சோதித் தெய்வம்எனை ஆண்டுகொண்ட தெய்வம்*
*அம்பலத்தே ஆடுகின்ற ஆனந்தத் தெய்வம்*
*பொருட்சாரும் மறைகள்எலாம் போற்றுகின்ற தெய்வம்*
*போதாந்தத் தெய்வம்உயர் நாதாந்தத் தெய்வம்*
*இருட்பாடு நீக்கிஒளி ஈந்தருளும் தெய்வம்*
*எண்ணியநான் எண்ணியவா றெனக்கருளும் தெய்வம்*
*தெருட்பாடல் உவந்தெனையும் சிவமாக்கும் தெய்வம்*
*சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம் (1)*

*இச்சைஎலாம் எனக்களித்தே எனைக்கலந்த தெய்வம்*
*இறந்தவர்கள் அனைவரையும் எழுப்புகின்ற தெய்வம்*
*எச்சமயத் தெய்வமுந்தான் எனநிறைந்த தெய்வம்*
*எல்லாஞ்செய் வல்லதெய்வம் எனதுகுல தெய்வம்*

*பிச்சகற்றும் பெருந்தெய்வம் சிவகாமி எனும்ஓர்*
*பெண்கொண்ட தெய்வம்எங்கும் கண்கண்ட தெய்வம்*
*செச்சைமலர் எனவிளங்கும் திருமேனித் தெய்வம்*
*சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம் (6)*

*சத்தியமாத் தனித்தெய்வம் தடையறியாத் தெய்வம்*
*சக்திகள்எல் லாம்விளங்கத் தானோங்கும் செய்வம்*
*நித்தியதன் மயமாகி நின்றதெய்வம் எல்லா*
*நிலைகளுந்தன் அருள்வெளியில் நிலைக்கவைத்த தெய்வம்*
*பக்திவலைப் படுகின்ற தெய்வம்எனக் கெல்லாம்*
*பரிசுமளித் தழியாத பதத்தில்வைத்த தெய்வம்*
*சித்திஎலாம் தருதெய்வம் சித்தாந்தத் தெய்வம்*
*சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம் (10)*

இந்த மூன்று பாடல்களையும் மும்மூர்த்திகள் எனக் கருதிப் பாடி அநுபவித்தால் வள்ளல் பெருமான் குறிப் பிடும் அத்தெய்வம் நம் மனத்திரையில் மறையாது காட்சி தந்து கொண்டிருக்கும்.

42. பேரானந்தப் பெருநிலை: பத்துப் பாடல்களைக் கொண்ட இப்பதிகம் எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தங்களால் அமைந்து வள்ளல் பெருமான் எய்திய பேரானந்தப் பெருநிலையை விளக்குவதாக அமைந் தது. பாடல்கள் யாவும் "எனக்கே, பழுத்தபேராந்தப் பழமே" என்று இறுவன.

*அணிவளர் திருச்சிற் றம்பலத் தாடும்*
*ஆனந்த போகமே அமுதே*
*மணிவளர் ஒளியே ஒளியினுள் ஒளியே*
*மன்னும்என் ஆருயிர்த் துணையே*
*துணிவுறு சித்தாந் தப்பெரும் பொருளே*
*தூயவே தாந்தத்தின் பயனே*
*பணிவுறும் உளத்தே இனித்திட எனக்கே*
*பழுத்தபே ரானந்தப் பழமே (1)*

*சீர்வளர் திருச்சிற் றம்பலத் தோங்குஞ்*
*செல்வமே என்பெருஞ் சிறப்பே*
*நீர்வளர் நெருப்பே நெருப்பினுள் ஒளியே*
*நிறைஒளி வழங்கும்ஓர் ஒளியே*
*ஏர்தரு கலாந்த மாதிஆ றந்தத்*
*திருந்தர சளிக்கின்ற பதியே*
*பாருறும் உளத்தே இனித்திட எனக்கே*
*பழுத்தபே ரானந்தப் பழமே (4)*

*மேல்வளர் திருச்சிற் றம்பலத் தோங்கும்*
*மெய்யறி வானந்த விளக்கே*
*கால்வளர் கனலே கனல்வளர் கதிரே*
*கதிர்நடு வளர்கின்ற கலையே*
*ஆலுறும் உபசாந் தப்பர வெளிக்கப்*
*பால்அர சாள்கின்ற அரசே*
*பாலுறும் உளத்தே இனித்திட எனக்கே*
*பழுத்தபே ரானந்தப் பழமே (6)*

*வான்வளர் திருச்சிற் றம்பலத் தோங்கும்*
*மாபெருங் கருணைஎம் பதியே*
*ஊன்வளர் உயிர்கட் குயிரதாய் எல்லா*
*உலகமும் நிறைந்தபேர் ஒளியே*
*மான்முதன் மூர்த்தி மானிலைக் கப்பால்*
*வயங்கும்ஓர் வெளிநடு மணியே*
*பான்மையிற் றுளத்தே இனித்திட எனக்கே*
*பழுத்தபே ரானந்தப் பழமே (9)*

இந்த நான்குப் பாடல்களையும் நயம்பெற ஓதி நற்பயன் பெற முயல்வோமாக.

43. திருவடி நிலை: இந்த நிலை பத்துப் பாடல் களில் பகரப் பெறுகின்றது. பாடல்கள் யாவும் எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பில் அமைந்தவை. திருவடியை திருவடி நிழல் என்று சொல்லப் பெறும். வெயிலில் நடந்து வரும் மனிதன் மரத்தின் நிழலில்

ஒதுங்கி நின்று ஆறுதல் அடைதல்போல இவ்வுலகில் சம்சார வெப்பத்தில் உழலும் சேதநர்கள் இறைவன் திருவடி நிழலில் ஒதுங்கி அவ்வெப்பத்தைத் தணிவித்துக் கொள்வதாகக் கூறுவது சமய சாத்திரங்களின் மரபு.

*உலகுபல் கோடி கோடிகள் இடங்கொள்*
*உவப்பிலா அண்டத்தின் பகுதி*
*அலகுகாண் பரிய பெரியகூட் டத்த*
*அவையெலாம் புறத்திறைச் சார்பில்*
*விலகுறா அணுவில் கோடியுள் ஒருகூற்*
*றிருந்தென விருந்தன மிடைந்தே*
*இலகுபொற் பொதுவில் நடம்புரி தருணத்*
*தென்பர்வான் திருவடி நிலையே (1)*

*நடையுறாப் பிரமன் விண்டுருத் திரன்மா*
*யேச்சுரன் சதாசிவன் விந்து*
*நடையுறாப் பிரமம் உயர்பரா சக்தி*
*நவில்பர சிவம்எனும் இவர்கள்*
*இடையுறாத் திருச்சிற் றம்பலத் தாடும்*
*இடதுகாற் கடைவிரல் நகத்தின்*
*கடையுறு துகள்என் றறிந்தனன் அதன்மேற்*
*கண்டனன் திருவடி நிலையே (2)*

*இகந்துழல் பகுதித் தேவர்இந் திரன்மால்*
*பிரமன்ஈ சானனே முதலாம்*
*மகத்துழல் சமய வானவர் மன்றின்*
*மலரடிப் பாதுகைப் புறத்தும்*
*புகத்தரம் பொருந்தா மலத்துறு சிறிய*
*புழுக்கள்என் றறிந்தனன் அதன்மேல்*
*செகத்தொடர் பிகந்தார் உளத்தமர் ஒளியில்*
*தெரிந்தனன் திருவடி நிலையே (4)*

*பேசும்ஓங் காரம் ஈறதாப் பேசாப்*
*பெரியஓங் காரமே முதலா*
*ஏசறும் அங்கம் உபாங்கம்வே றங்கம்*
*என்றவற் றவண்அவண் இசைந்த*

*மாசறு சத்தி சத்தர்ஆண் டமைத்து*
*மன்அதி காரம்ஐந் தியற்றத்*
*தேசுசெய் தணிபொன் அம்பலத் தாடும்*
*என்பரால் திருவடி நிலையே (9)*

அற்புத விளக்கம் அமைந்த பாடல்கள் நான்கையும் பழுதர ஓதிப் பரமனின் திருவடி நிலையை அறிந்து மகிழ்வோம்.

44. **காட்சிக் களிப்பு:** அருட்பெருஞ் சோதி எம் பெருமானின் திருக்காட்சியை நேரில கண்டு இன்புற்ற அடிகள் அக்களிப்பினைப் பத்துப் பாடல்களில் கூறி மகிழ்கின்றார். பாடல்கள் யாவும் எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தால் அமைந்தவை; அனைத்தும் 'எம் மானைக் கண்டுகளித் திருக்கின்றேனே' என்று இறுகின் றன.

*அறிந்தானை அறிவறிவுக் கறிவா னானை*
*அருட்பெருஞ்சோ தியினானை அடியேன் அன்பில்*
*செறிந்தானை எல்லாம்செய் வல்ல சித்தாய்ச்*
*சிறந்தானைச் சிறுநெறியில் சென்றார் தம்மைப்*
*பிறிந்தானை என்னுளத்தல் கலந்து கொண்ட*
*பிரியமுள பெருமானைப் பிறவி தன்னை*
*எறிந்தானை எனைஎறியா தெடுத்தாண் டானை*
*எம்மானைக் கண்டுகளித் திருக்கின் றேனே (1)*

*உள்ளானைக் கதவுதிறந் துள்ளே காண*
*உளவெனக்கே உரைத்தானை உணரார் பாட்டைக்*
*கொள்ளானை என்பாட்டைக் குறிக்கொண் டானைக்*
*கொல்லாமை விரதம்எனக் கொண்டார் தம்மைத்*
*தள்ளானைக் கொலைபுலையைத் தள்ளா தாரைத்*
*தழுவானை யான்புரிந்த தவறு நோக்கி*
*எள்ளானை இடர்தவிர்த் திங்கென்னை ஆண்ட*
*எம்மானைக் கண்டுகளித் திருக்கின் றேனே (3)*

*செய்யானைக் கரியானைப் பசுமை யானைத்*
*திகழ்ந்திடுபொன் மையினானை வெண்மை யானை*
*மெய்யானைப் பொய்யானை மெய்பொய் இல்லா*
*வெளியானை ஒளியானை விளம்பு வார்க்குக்*
*கையானை என்னையெடுத் தணைத்துக் கொண்ட*
*கையானை என்னைஎன்றும் கையா தானை*
*எய்யானை எவ்வுலகும் ஏத்த என்னை*
*ஈன்றானைக் கண்டுகளித் திருக்கின் றேனே (6)*

*ஆன்றானை அறிவனை அழிவி லானை*
*அருட்பெருஞ்சோ தியினானை அலர்ந்த சோதி*
*மூன்றானை இரண்டானை ஒன்றா னானை*
*முன்னானைப் பின்னானை மூட நெஞ்சில்*
*தோன்றானைத் தூயருளே தோன்றி னானைச்*
*சுத்தசிவ சன்மார்க்கந் துலங்க என்னை*
*ஈன்றானை எல்லாமாய் அல்லா தானை*
*எம்மானைக் கண்டுகளித் திருக்கின் றேனே (8)*

*நன்றானை மன்றகத்தே நடிக்கின் றானை*
*நாடாமை நாடலிவை நடுவே ஓங்கி*
*நின்றானைப் பொன்றாத நிலையி னானை*
*நிலையறிந்து நில்லாதார் நெஞ்சி லேசம்*
*ஒன்றானை எவ்வுயிர்க்கும் ஒன்றா னானை*
*ஒருசிறியேன் தனைநோக்கி உளம்நீ அஞ்சேல்*
*என்றானை என்றும்உள இயற்கை யானை*
*எம்மானைக் கண்டுகளித் திருக்கின் றேனே (10)*

பாடல்களின் ஓசைநயம் உள்ளத்தைக் கவர்கின்றது. பொருள் நயமும் சிந்தையைக் களிப்பிக்கின்றது.

45. **கண்கொள்ளாக் காட்சி:** இப்பதிகமும் காட்சியைக் கூறுவது. பத்துப் பாடல்களைக் கொண்ட இப் பதிகமும் எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பில் அமைந்து எல்லாப் பாடல்களும் 'எம்மானக் கண்டு களித்திருக்கின் றேனே' என்று இறுவனவாகும்.

அடுத்தானை அடியேனை அஞ்சேல் என்றிங்
காண்டானைச் சிறுநெறிகள் அடையா தென்னைத்
தடுத்தானைப் பெருநெறிக்குத் தடைதீர்த் தானைத்
தன்னருளும் தன்பொருளும் தானே என்பால்
கொடுத்தானைக் குற்றம்எலாம் குணமாக் கொள்ளும்
குணத்தானைச் சமயமதக் குழிநின் றென்னை
எடுத்தானை எல்லாஞ்செய் வல்ல சித்தே
ஈந்தானைக் கண்டுகளித் திருக்கின் றேனே (1)

சோற்றானைச் சோற்றில்உறும் சுகத்தி னானைத்
துளக்கம்இலாப் பாரானை நீரா னானை
காற்றானை வெளியானைக் கனலா னானைக்
கருணைநெடுங் கடலானைக் களங்கா காணத்
தோற்றானை நான்காணத் தோற்றி னானைச்
சொல்லறியேன் சொல்லியபுன் சொல்லை யெல்லாம்
ஏற்றானை என்னுள்ளத்தில் எய்தி னானை
எம்மானைக் கண்டுகளித் திருக்கின் றேனே (14)
(சோறு - முத்தி)

முளையானைச் சுத்தசிவ வெளியில் தானே
முளைத்தானை மூவாத முதலா னானைக்
களையானைக் களங்கம்எலாம் களைவித் தென்னைக்
காத்தானை என்பிழையைக் கருதிக் கோபம்
விளையானைச் சிவபோகம் விளைவித் தானை
வேண்டாமை வேண்டல்இவை மேவி என்றும்
இளையானை மூத்தானை மூப்பி லானை
எம்மானைக் கண்டுகளித் திருக்கின் றேனே (6)

தாயானைத் தந்தைஎனக் காயி னானைச்
சற்குருவு மானானைத் தமியேன் உள்ளே
மேயானைக் கண்காண விளங்கி னானை
மெய்ம்மைஎனக் களித்தானை வேதஞ் சொன்ன
வாயானை வஞ்சம்இலா மனத்தி னானை
வரங்கொடுக்க வல்லானை மணிமன் றன்றி

*ஏயானைத் துரியநடு விருக்கின் றானை*
*எம்மானைக் கண்டுகளித் திருக்கின் றேனே (8)*

*உடையானை அருட்சோதி உருவி னானை*
*ஓவானை மூவானை உலவா இன்பக்*
*கொடையானை என்குறைதீர்த் தென்னை ஆண்டு*
*கொண்டானைக் கொல்லாமை குறித்திட் டாரை*
*அடையானைத் திருச்சிற்றம் பலத்தி னானை*
*அடியேனுக் கருளமுதம் அளிக்க வேபின்*
*இடையானை என்னாசை எல்லாம் தந்த*
*எம்மானைக் கண்டுகளித் திருக்கின் றேனே (10)*

இந்த ஐந்து பாடல்களையும் அகத்தில் இருத்தி உளங்கரைந்து ஓதினால் திருச்சிற்றம்பலத்தான் கண் கொள்ளாக் காட்சி தருவான் என்பது உறுதி.

46. இறை திருக்காட்சி: முப்பது திருப்பாடல் களைக் கொண்ட இப்பகுதியும் இறைக் காட்சியை இயம்புவது. பாடல்களனைத்தும் எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பில் அமைந்தவை. பாடல்கள் யாவும் 'கண்டு கொண்டேனே' என்று முடிபவை. இதுவும் மேற்குறிப்பிட்ட இரண்டு பதிகங்களும் ஒரே கருத்தை வேறுபடக் கூறுவனவாகும்.

*அருளெலாம் அளித்த அம்பத் தமுதை*
*அருட்பெருஞ் சோதியை அரசை*
*மருளெலாம் தவிர்த்து வாழ்வித்த மருந்தை*
*வள்ளலை மாணிக்க மணியைப்*
*பொருளெலாம் கொடுத்தென் புந்தியில் கலந்த*
*புண்ணிய நிதியைமெய்ப் பொருளைத்*
*தெருளெலாம் வல்ல சித்தைமெய்ஞ் ஞான*
*தீபத்தைக் கண்டுகொண் டேனே (1)*

*சிதத்திலே ஊறித் தெளிந்ததெள் அமுதைச்*
*சித்தெலாம் வல்லமெய்ச் சிவத்தைப்*

*பதத்திலே பழுத்த தனிப்பெரும் பழத்தைப்*
*பரம்பர வாழ்வைஎம் பதியை*
*மதத்திலே மயங்கா மதியிலே விளைந்த*
*மருந்தைமா மந்திரந் தன்னை*
*இதத்திலே என்னை இருத்திஆட் கொண்ட*
*இறைவனைக் கண்டுகொண் டேனே (3)*

*(சிதம் - ஞானம்)*

*பண்ணிய தவமும் பலமும்மெய்ப் பலஞ்செய்*
*பதியுமாம் ஒருபசு பதியை*
*நண்ணிஎன் உளத்தைத் தன்னுளம் ஆக்கி*
*நல்கிய கருணைநா யகனை*
*எண்ணிய படியே எனக்கருள் புரிந்த*
*இறைவனை மறைமுடி இலங்கும்*
*தண்ணிய விளக்கைத் தன்னிகர் இல்லாத்*
*தந்தையைக் கண்டுகொண் டேனே (6)*

*ஆதியை ஆதி அந்தமீ தெனஉள்*
*அறிவித்த அறிவைஎன் அன்பைச்*
*சோதியை எனது துணையைஎன் சுகத்தைச்*
*சுத்தசன் மார்க்கத்தின் துணிபை*
*நீதியை எல்லா நிலைகளும் கடந்த*
*நிலையிலே நிறைந்தமா நிதியை*
*ஓதியை ஓதா துணர்த்திய வெளியை*
*ஒளிதனைக் கண்டுகொண் டேனே (8)*

*கரும்பிலின் சாற்றைக் கனிந்தமுக் கனியைக்*
*கருதுகோற் றேன்நறுஞ் சுவையை*
*அரும்பெறல் அமுதை அறிவைஎன் அன்பை*
*ஆவியை ஆவியுட் கலந்த*
*பெருந்தனிப் பதியைப் பெருஞ்சுகக் களிப்பைப்*
*பேசுதற் கரும்பெரும் பேற்றை*
*விரும்பிஎன் உளத்தை இடங்கொண்டு விளங்கும்*
*விளக்கினைக் கண்டுகொண் டேனே (14)*

சமயமும் மதமும் கடந்ததோர் ஞான
சபைநடம் புரிகின்ற தனியைத்
தமைஅறிந் தவருட் சார்ந்தமெய்ச் சார்வைச்
சத்துவ நித்தசற் குருவை
அமையஎன் மனத்தைத் திருத்திநல் அருளார்
அமுதளித் தமர்ந்தஅற் புதத்தை
நிமலநிற் குணத்தைச் சிற்குணா கார
நீதியைக் கண்டுகொண் டேனே (19)

அடிநடு முடியோர் அணுத்துணை யேனும்
அறிந்திடப் படாதமெய் அறிவைப்
படிமுதல் அண்டப் பரப்பெலாம் கடந்த
பதிவிலே விளங்குமெய்ப் பதியைக்
கடியஎன் மனனாங் கல்லையும் கனியிற்
கடைக்கணித் தருளிய கருணைக்
கொடிவளர் இடத்துப் பெருந்தயா நிதியைக்
கோயிலில் கண்டுகொண் டேனே (22)

கருத்தனை எனது கண்அனை யவனைக்
கருணையார் அமுதெனக் களித்த
ஒருத்தனை என்னை உடையநா யகனை
உண்மையே தாகம முடியின்
அருத்தனை வரனை அபயனைத் திருச்சிற்
றம்பலத் தருள்நடம் புரியும்
நிருத்தனை எனது நேயனை ஞான
நிலையனைக் கண்டுகொண் டேனே (26)

உத்தர ஞான சித்திமா புரத்தின்
ஓங்கிய ஒருபெரும் பதியை
உத்தர ஞான சிதம்பர ஒளியை
உண்மையை ஒருதனி உணர்வை
உத்தர ஞான நடம்புரி கின்ற
ஒருவனை உலகெலாம் வழுத்தும்
உத்தர ஞான சுத்தசன் மார்க்கம்
ஓதியைக் கண்டுகொண் டேனே (28)

*புலைகொலை தவிர்த்த நெறியிலே என்னைப்*
*புணர்த்திய புனிதனை எல்லா*
*நிலைகளும் காட்டி அருட்பெரும் நிலையில்*
*நிறுத்திய நிமலனை எனக்கு*
*மலைவறத் தெளிந்த அமுதளித் தழியா*
*வாழ்க்கையில் வாழவைத் தவனைத்*
*தலைவனை ஈன்ற தாயைஎன் உரிமைத்*
*தந்தையைக் கண்டுகொண் டேனே (29)*

இந்தப் பத்துப் பாடல்களையும் பத்தியுடன் ஓதி உளங்கொண்டால் திருச்சிற்றம்பலவன் நம் மனத்திரையில் காட்சி தந்து கொண்டே இருப்பான்.

47. உளம் புகுந்த திறம் வியத்தல்: இதில் எம்பெருமானின் **'அந்தர் யாமித்துவம்'** இயம்பப் பெறுகின்றது. பத்துப் பாடல்களைக் கொண்ட இப்பதிகம் எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தங்களால் அமைந்தது.

*வானிருக்கும் பிரமர்களும் நாரணரும் பிறரும்*
*மாதவம்பன் னாட்புரிந்து மணிமாட நடுவே*
*தேனிருக்கும் மலரணைமேல் பளிக்கறையி னூடே*
*திருவடிசேர்த் தருள்கஎனச் செப்பிவருந் திடவும்*
*நானிருக்கும் குடிசையிலே விருந்திநுழைந் தெனக்கே*
*நல்லதிரு அருளமுதம் நல்கியதன் றியும்என்*
*ஊனிருக்கும் குடிசையிலும் உவந்து நுழைந் தடியேன்*
*உள்ளமெனும் சிறுகுடிசை உள்ளும்நுழைந் தனையே (1)*

*உள்ளபடி உள்ளதுவாய் உலகமெலாம் புகினும்*
*ஒருசிறிதும் தடையிலதாய்த் ஒளியதுவே மயமாய்*
*வெள்ளவெளி நடுவுளதாய் இயற்கையிலே விளங்கும்*
*வேதமுடி இலக்கியமா மேடையிலே அமர்ந்த*
*வள்ளன்மலர் அடிசிவப்ப வந்தெனது கருத்தின்*
*வண்ணமெலாம் உவந்தளித்து வயங்கியபேர் இன்பம்*
*கொள்ளைகொளக் கொடுத்ததுதான் போதாதோ அரசே*
*கொடும்புலையேன் குடிசையிலும் குலவிநுழைந் தனையே (3)*

*இறைஅளவும் தூசிலதாய்த் தூய்மையதாய் நிறைவாய்*
*இயற்கையதாய் அநுபவங்கள் எவைக்கும்முதல் இடமாய்*
*மறைமுடியோ டாகமத்தின் மணிமுடிமேல் முடியாய்*
*மன்னுகின்ற மெய்ஞ்ஞான மணிமேடை அமர்ந்த*
*நிறையருட்சீர் அடிமலர்கள் சிவந்திடவந் தடியேன்*
*நினைத்தஎலாம் கொடுத்தருளி நிலைபெறச்செய் தனையே*
*குறைவிலதிப் பெருவரந்தான் போதாதோ அரசே*
*கொடும்புலையேன் குடிசையிலும் குலவிநுழைந் தனையே (5)*

*பற்றியபற் றனைத்தினையும் பற்றறவிட் டறிவாம்*
*பான்மைஒன்றே வடிவாகிப் பழுத்தபெரி யவரும்*
*உற்றறிதற் கரியஒரு பெருவெளிமேல் வெளியில்*
*ஓங்குமணி மேடைஅமர்ந் தோங்கியசே வடிகள்*
*பெற்றறியப் பெயர்த்துவந்தென் கருத்தனைத்தும் கொடுத்தே*
*பிறவாமல் இறவாமல் பிறங்கவைத்தாய் அரசே*
*கொற்றமுளேன் தனக்கிதுதான் போதாதோ கொடியேன்*
*குடிசையிலும் கோணாதே குலவிநுழைந் தனையே (9)*

இந்த நான்கு பாடல்களையும் நன்கு படித்து உளங் கரைந்தால் நமது மனக்குடிசையிலும் இறைவன் வந்து புகுந்தருள்வான் என்பது உறுதி.

50. ஆண்டருளிய அருமையை வியத்தல்: பத்துப் பாடல்களைக் கொண்ட இப்பதிகம் எழுசீர்க் கழிநெடி லடி ஆசிரிய விருத்த யாப்பில் அமைந்தது. தம்மை இறைவன் ஆண்டு கொண்டருளிய அருமைப் பாட்டை வியந்து போற்றும்படியாய்த் திகழ்வது.

*அம்பலத் தாடும் அமுதமே என்கோ*
*அடியனேன் ஆருயிர் என்கோ*
*எம்பலத் தெல்லாம் வல்லசித் தென்கோ*
*என்னிரு கண்மணி என்கோ*
*நம்பிடில் அணைக்கும் நற்றுணை என்கோ*
*நான்பெற்ற பெருஞ்செல்வம் என்கோ*
*இம்பர்இப் பிறப்பே மெய்ப்பிறப் பாக்கி*
*என்னைஆண் டருளிய நினையே (1)*

*எய்ப்பிலே கிடைத்த வைப்பது என்கோ*
*என்னுயிர்க் கின்பமே என்கோ*
*துய்ப்பிலே நிறைந்த பெருங்களிப் பென்கோ*
*சோதியுட் சோதியே என்கோ*
*தப்பெலாம் பொறுத்த தயாநிதி என்கோ*
*தனிப்பெரும் தலைவனே என்கோ*
*இப்பிறப் பதிலே மெய்ப்பயன் அளித்திங்கு*
*என்னைஆண் டருளிய நினையே (3)*

*அன்பிலே பழுத்த தனிப்பழம் என்கோ*
*அறிவிலே அறிவறி வென்கோ*
*இன்பிலே நிறைந்த சிவபதம் என்கோ*
*என்னுயிர்த் துணைப்பதி என்கோ*
*வன்பிலா மனத்தே வயங்கொளி என்கோ*
*மன்னும்அம் பலத்தர சென்கோ*
*என்புரி அழியாப் பொன்புரி ஆக்கி*
*என்னைஆண் டருளிய நினையே (7)*

*மறைமுடி விளங்கு பெரும்பொருள் என்கோ*
*மன்னும்ஆ கமப்பொருள் என்கோ*
*குறைமுடித் தருள்செய் தெய்வமே என்கோ*
*குணப்பெருங் குன்றமே என்கோ*
*பிறைமுடிக் கணிந்த பெருந்தகை என்கோ*
*பெரியஅம் பலத்தர சென்கோ*
*இறைமுடிப் பொருள்என் உளம்பெற அளித்திங்*
*கென்னைஆண் டருளிய நினையே (9)*

அருமையான பாடல்கள். ஆழ்வார் பெருமக்கள் பாசுரப் பாணியில் அமைந்து படிப்போரின் உள்ளத்தைக் கொள்ளை கொள்கின்றன.

51. **இறைவனை ஏத்தும் இன்பம்:** இறைவனைப் போற்றுதலால் தனி இன்பம் அடையலாம். இதில் மூவர் தேவாரமும் மணிவாசகப் பெருமானின் திருவாசகமும் சிறந்த சான்றுகளாகும். இறைவனை ஏத்தும் இப்பதிகம்

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தங்களாலான பத்துப் பாடல்களைக் கொண்டது. வள்ளல் பெருமான் இவற்றைப் பாடிப் பேரின்பம் அடைகின்றார். இவற்றுள் ஐந்து:

*கருணைமா நிதியே என்னிரு கண்ணே*
*கடவுளே கடவுளே என்கோ*
*தருணவான் அமுதே என்பெருந் தாயே*
*தந்தையே தந்தையே என்கோ*
*தெருள்நிறை மதியே என்குரு பதியே*
*தெய்வமே தெய்வமே என்கோ*
*அருள்நிறை தரும்என் அருட்பெருஞ் சோதி*
*ஆண்டவ நின்றனை அறிந்தே (1)*

*துன்பெலாம் தவிர்த்த துணைவனே என்கோ*
*சோதியுட் சோதியே என்கோ*
*அன்பெலாம் அளித்த அன்பனே என்கோ*
*அம்மையே அப்பனே என்கோ*
*இன்பெலாம் புரிந்த இறைவனே என்கோ*
*என்உயிர்க் கின்அமு தென்கோ*
*என்பொலா மணியே என்கணே என்கோ*
*என்னுயிர் நாதநின்ற னையே (3)*

*தாயனே எனது தாதையே ஒருமைத்*
*தலைவனே தலைவனே என்கோ*
*பேயனேன் பிழையைப் பொறுத்தருள் புரிந்த*
*பெருந்தகைப் பெரும்பதி என்கோ*
*சேயனேன் பெற்ற சிவபதம் என்கோ*
*சித்தெலாம் வல்லசித் தென்கோ*
*தூயனே எனது நேயனே என்கோ*
*சோதியுட் சோதிநின் றனையே (5)*

*தாகமுள் எடுத்த போதெதிர் கிடைத்த*
*சர்க்கரை அமுதமே என்கோ*

*மோகம்வந் தடுத்த போதுகைப் பிடித்த*
*முகநகைக் கணவனே என்கோ*
*போகமுள் விரும்பும் போதிலே வலிந்து*
*புணர்ந்தஓர் பூவையே என்கோ*
*ஆகமுட் புகுந்தென் உயிரினுட் கலந்த*
*அம்பலத் தாடிநின் றனையே (7)*

*இரவிலா தியம்பும் பகலிலா திருந்த*
*இயற்கையும் இயற்கையே என்கோ*
*வரவிலா வுரைக்கும் போக்கிலா நிலையில்*
*வயங்கிய வான்பொருள் என்கோ*
*திரையிலா தெல்லாம் வல்லசித் தெனக்கே*
*செய்ததோர் சித்தனே என்கோ*
*கரவிலா தெனக்குப் பேரருட் சோதி*
*களித்தளித் தருளிய நினையே (10)*

இவற்றைப் பாடி மகிழ்ந்து வள்ளல் பெருமான் பெற்ற அநுபவத்தை நாமும் பெற முயல்வோம்.

53. **உத்தர ஞான சிதம்பர மாலை:** வள்ளல் பெருமான் வாழ்வில் அதிகமாகக் கவர்ந்தது தில்லை என வழங்கும் சிதம்பரம்; அவர் உள்ளங் கவர்ந்தவன் சிற்றம்பலவன். அடிகள் சிதம்பரத்தை பூர்வஞான சிதம்பரம் என்றே குறுப்பிடுவர். வடலூர் பகுதியில் அமைந்த சிற்றம்பலத்தை உத்தர ஞான சிதம்பரம் என்று குறிப்பிடுவர். இத்திருத்தலம்பற்றிப் பதினொரு பாடல்கள்; இவை கட்டளைக் கலித்துறை யாப்பில் அமைந்தவை. இவற்றில் ஐந்து பாடல்கள்:

*அருளோங்கு நின்ற தருட்பெருஞ்*
*சோதி யடைந்ததென்றன்*
*மருளோங் குறாமல் தவிர்ந்தது*
*நல்ல வரமளித்தே*
*பொருளோங்கி நான்அருட் பூமியில்*
*வாழப் புரிந்ததென்றும்*

*தெருளோங்க ஓங்குவ துத்தர*
*ஞான சிதம்பரமே (1)*

*உலகம் எலாந்தொழ உற்ற*
*தெனக்குண்மை ஒண்மைதந்தே*
*இலகஎ லாம்படைத் தாருயிர்*
*காத்தருள் என்றதென்றும்*
*கலகம்இ லாச்சுத்த சன்மார்க்க*
*சங்கம் கலந்ததுபார்த்*
*திலகம் எனாநின்ற துத்தர*
*ஞான சிதம்பரமே (3)*

*எத்தாலும் மிக்க தெனக்கருள்*
*ஈந்ததெல் லாமும்வல்ல*
*சித்தாடல் செய்கின்ற தெல்லா*
*உலகும் செழிக்கவைத்த*
*நித்தா ரணிக்கணி ஆயது*
*வான்தொழற் கேற்றதெங்கும்*
*செத்தால் எழுப்புவ துத்தர*
*ஞான சிதம்பரமே (6)*

*காணாத காட்சிகள் காட்டுவிக்*
*கின்றது காலம்எல்லாம்*
*வீணாள் கழிப்பவர்க் கெய்தரி*
*தானது வெஞ்சினத்தால்*
*கோணாத நெஞ்சில் குலாவிநிற்*
*கின்றது கூடிநின்று*
*சேணாடர் வாழ்த்துவ துத்தர*
*ஞான சிதம்பரமே (9)*

*ஏகாந்த மாகி வெளியாய்*
*இருந்ததிங் கென்னைமுன்னே*
*மோகாந்த காரத்தின் மீட்டதென்*
*நெஞ்ச முயங்கிரும்பின்*

*மாகாந்த மானது வல்வினை*
*தீர்த்தெனை வாழ்வித்தென்றன்*
*தேகாந்த நீக்கிய துத்தர*
*ஞான சிதம்பரமே (11)*

தலத்தின் பெருமையைப் பேசும் இவ்வைந்து பாடல்களில் ஆழங்கால் பட்டு அநுபவிப்போம்.

55. **ஆன்ம தரிசனம்:** பத்துப் பாடல்கள் அடங்கியது இப்பதிகம். பாடல்கள் யாவும் எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பில் அமைந்தவை. முன் பதிகத்தில் தலத்தைப் பற்றிப் பேசிய அடிகள், தலத்தில் ஆடல் புரியும் அம்பலவன் தரிசனம்பற்றிப் பேசுகின்றார் இப் பதிகத்தில். பாடல்கள் யாவும் 'அடிக்கடி உரைப்பதென் நினக்கே' என இறுகின்றன. இவற்றில் ஐந்து பாடல்கள்:

*திருஎலாம் தரும்ஓர் தெய்வமாம் ஒருவன்*
*திருச்சிற்றம் பலந்திகழ் நின்றான்*
*உருஎலாம் உணர்ச்சி உடல்பொருள் ஆவி*
*உளஎலாம் ஆங்கவன் தனக்கே*
*தெருஎலாம் அறியக் கொடுத்தனன் வேறு*
*செயலிலேன் எனநினைந் திருந்தேன்*
*அருஎலாம் உடையாய் நீஅறிந் ததுவே*
*அடிக்கடி உரைப்பதென் நினக்கே (1)*

*நினைத்தபோ தெல்லாம் நின்னையே நினைத்தேன்*
*நினைப்புற நின்றபோ தெல்லாம்*
*எனைத்தனி ஆக்கி நின்கணே நின்றேன்*
*என்செயல் என்னஓர் செயலும்*
*தினைத்தனை எனினும் புரிந்திலேன் எல்லாம்*
*சிவன்செய லாம்எனப் புரிந்தேன்*
*அனைத்தும்என் அரசே நீஅறிந் ததுவே*
*அடிக்கடி உரைப்பதென் நினக்கே (2)*

*களித்தபோ தெல்லாம நின்இயல் உணர்ந்தே*
*களித்தனன் கண்கள்நீர் ததும்பித்*
*துளித்தபோ தெல்லாம் நின்அருள் நினைந்தே*
*துளித்தனன் சூழ்ந்தவர் உளத்தைத்*
*தெளித்தபோ தெல்லாம் நின்திறம் புகன்றே*
*தெளித்தனன் செய்கைவே றறியேன்*
*ஒளித்திரு உளமே அறிந்ததிவ் வனைத்தும்*
*உரைப்பதென் அடிக்கடி உனக்கே (3)*

*களவிலே களித்த காலத்தும் நீயே*
*களித்தனை நான்களித் தறியேன்*
*உளவிலே உவந்த போதும்நீ தானே*
*உவந்தனை நான்உவந் தறியேன்*
*கொளஇலே சமும்ஓர் குறிப்பிலேன் அனைத்தும்*
*குறித்தனை கொண்டனை நீயே*
*அளவிலே எல்லாம் அறிந்தனை அரசே*
*அடிக்கடி உரைப்பதென் நினக்கே (5)*

*பித்தெலாம் உடைய உலகர்தம் கலகப்*
*பிதற்றெலாம் என்றொழிந் திடுமோ*
*சத்தெலாம் ஒன்றென் றுணர்ந்தசன் மார்க்க*
*சங்கம்என் றோங்குமோ தலைமைச்*
*சித்தெலாம் வல்ல சித்தன்என் றுறுமோ*
*தெரிந்திலேன் எனத்துயர்ந் திருந்தேன்*
*ஒத்தெலாம் உனது திருவுளம் அறிந்த*
*துரைப்பதென் அடிக்கடி உனக்கே (8)*

இந்த ஐந்து பாடல்களையும் உளங்கரைந்து ஓதி அடிகளாரின் அநுபவத்தை ஓரளவு பெற முயல்வோம்.

56. **சுத்தசன்மார்க்க வேண்டுகோள்:** சுத்த சன்மார்க்கத்தைக் கண்டு நிறுவியவர் அடிகள். அதனை நடைமுறைப் படுத்தத் துணைபுரியுமாறு அருட்பெருஞ் சோதியை வேண்டுகின்றார். பதினொரு பாடல்களை யுடைய இப்பதிகம் எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய

விருத்த யாப்பில் அமைந்தவை. இவற்றில் நான்கு பாடல்கள்:

*அப்பாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்;*
*ஆருயிர்க்கட் கெல்லாம்நான் அன்புசெயல் வேண்டும்;*
*எப்பாரும் எப்பதமும் எங்கணும்நான் சென்றே*
*எந்தைநின தருட்புகழை இயம்பியிடல் வேண்டும்;*
*செப்பாத மேனிலைமேல் சுத்தசிவ மார்க்கம்*
*திகழ்ந்தோங்க அருட்சோதி செலுத்தியிடல் வேண்டும்;*
*தப்பேதும் நான்செயினும் நீபொறுத்தல் வேண்டும்;*
*தலைவ!நினைப் பிரியாத நிலைமையும்வேண் டுவனே (1)*

*அண்ணாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்;*
*அழியாத தனிவடிவம் யானடைதல் வேண்டும்;*
*கண்ணார நினையெங்கும் கண்டுவத்தல் வேண்டும்;*
*காணாத காட்சிஎலாம் கண்டுகொளல் வேண்டும்;*
*பண்ணார நின்றனையே பாடியுறல் வேண்டும்;*
*பரமானந் தப்பெருங்கூத் தாடியிடல் வேண்டும்;*
*உண்ணாடி உயிர்கள்உறும் துயர்தவிர்த்தல் வேண்டும்;*
*உனைப்பிரியா துறுகின்ற உறவதுவேண் டுவனே (3)*

*அம்மாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்*
*ஆணவம்ஆ தியமுழுதும் அறுத்துநிற்றல் வேண்டும்*
*இம்மாலைத் தத்துவங்கள் எல்லாம்என் வசத்தே*
*இயங்கிஒரு தீமையும்இல் லாதிருத்தல் வேண்டும்;*
*எம்மாநான் வேண்டுதல்வேண் டாமையறல் வேண்டும்;*
*ஏகசிவ போகஅனு போகம்உறல் வேண்டும்*
*தம்மானத் திருவடியில் எந்தாயும் நானும்*
*சார்ந்துகலந் தோங்குகின்ற தனிமையும்வேண் டுவனே. (7)*

*அருளாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்;*
*அணுத்துணையும் சினங்காமல் அடையாமை வேண்டும்;*
*மருளாய உலகம்எலாம் மருள்நீங்கி ஞான*
*மன்றிடத்தே வள்ளல்உனை வாழ்த்தியிடல் வேண்டும்;*

*இருளாமை உறல்வேண்டும் எனைஅடுத்தார் சுகம்வாய்ந்*
*திடல்வேண்டும்; எவ்வுயிரும் இன்படைதல் வேண்டும்;*
*பொருளாம்ஓர் திருவடியில் உடையாயும் நானும்*
*புணர்ந்துகலந் தொன்றாகிப் பொருந்துதல்வேண் டுவனே (10)*

இப்பகுதி மிகவும் முக்கியமானது. வள்ளலாரின் தத்துவமே இதில் அடங்கியுள்ளது; அவர் நன்னோக்கம் தெளிவாகக் காட்டப் பெற்றுள்ளது.

57. **அருள்விளக்க மாலை:** எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பில் அமைந்த 100 பாடல்களைக் கொண்ட இப்பகுதி, மிகமிக முக்கியமானது. தனி நூலாக விளக்கவுரையுடன் வெளிப்பட்டுப் பெறவேண்டிய தகுதியையுடையது. வள்ளலாரின் உயிர்நாடியான தத்துவ விளக்கம் கொண்டது. அனைத்துப் பாடல்களையும் ஆழ்ந்து கற்க வேண்டியவையாக இருப்பினும் சில பல பாடல்களை மட்டிலும் ஈண்டுக் காட்டுவேன்.

*அருள்விளக்கே அருட்சுடரே அருட்சோதிச் சிவமே*
*அருள்அமுதே அருள்நிறைவே அருள்வடிவப் பொருளே*
*இருள்கடிந்தென் உளமுழுதும் இடங்கொண்ட பதியே*
*என்அறிவே என்உயிரே எனக்கினிய உறவே*
*மருள்கடிந்த மாமணியே மாற்றறியாப் பொன்னே*
*மன்றில்நடம் புரிகின்ற மணவாளா எனக்கே*
*தெருள்அளித்த திருவாளா ஞானஉரு வாளா*
*தெய்வநடத் தரசேநான் செய்மொழிஏற் றருளே (1)*

*கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும்வகை கிடைத்த*
*குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே*
*ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைதண் ணீரே*
*உகந்ததண்ணீர் இடைமலர்ந்த சுகந்தமண மலரே*
*மேடையிலே வீசுகின்ற மெல்லியபூங் காற்றே*
*மென்காற்றில் விளைசுகமே சுகத்தில்உறும் பயனே*

*ஆடையிலே எனைமணந்த மணவாளா பொதுவில்*
*ஆடுகின்ற அரசேஎன் அலங்கள்அணிந் தருளே (2)*[9]

*அண்டவள வெவ்வளவோ அவ்வளவும் அவற்றில்*
*அமைந்தசரா சரஅளவெவ் வளவோஅவ் வளவும்*
*கண்டதுவாய் ஆங்கவைகள் தனித்தனியே அகத்தும்*
*காண்புறத்தும் அகப்புறத்தும் புறப்புறத்தும் விளங்க*
*விண்டகுபேர் அருட்சோதிப் பெருவெளிக்கு நடுவே*
*விளங்குஒரு பெருங்கருணை கொடிநாட்டி அருளாம்*
*தண்டகும்ஓர் தனிச்செங்கோல் நடத்திமன்றில் நடிக்கும்*
*தனிஅரசே என்மாலை தாளில்அணிந் தருளே (9)*

*உண்ணஉண்ணத் தெவிட்டாத தித்தித்தென் உடம்போ*
*டுயிர்உணர்வும் கலந்துகலந் துள்ளகத்தும் புறத்தும்*
*தண்ணியவண் ணம்பரவப் பொங்கிநிறைந் தாங்கே*
*ததும்பிஎன்றன் மயம்எல்லாம் தன்மயமே ஆக்கி*
*எண்ணியஎன் எண்ணம்எலாம் எய்தஒளி வழங்கி*
*இலங்குகின்ற பேர்அருளாம் இன்னமுதத் திரளே*
*புண்ணியமே என்பெரிய பொருளேஎன் அரசே*
*புன்மொழிஎன் றிகழாதே புனைந்துமகிழ்ந் தருளே (13)*

*தனித்தனிமுக் கனிபிழிந்து வடித்தொன்றாக் கூட்டிச்*
*சர்க்கரையும் கற்கண்டின் பொடியுமிகக் கலந்தே*
*தனித்தறுந் தேன்பெய்து பசும்பாலும்ந் தேங்கின்*
*தனிப்பாலும் சேர்ந்த்தொருதீம் பருப்பிடியும் விரவி*
*இனித்தநறு நெய்அளைந்தே இளஞ்சூட்டின் இறக்கி*
*எடுத்தசுவைக் கட்டியினும் இனித்திடுதெள் அமுதே*
*அனித்தமறத் திருப்பொதுவில் விளங்குநடத் தரசே*
*அடிமலர்க்கென் சொல்லணியாம் அலங்கல்அணிந் தருளே (17)*[10]

9. இப்பாடல் அடங்கிய கொடுமுடி சுந்தராம்பாள் பாடிய இசைத்தட்டு மிகு புகழ் வாய்ந்தது. சிறு வயதில் இதனைக் கேட்டு உள்ளம் பறிகொடுத்த நிலை நினைவிற்கு வருகின்றது.

10. காரைக்குடியில் பணியாற்றியபோது (1950-60) ஓர் அன்பர் இப்படி ஒரு பொருள் செய்யப்படுமானால், அது வாயில் வைக்க முடியாதே என்று கிண்டல் செய்தார். 'இது சமையல் குறிப்பில்லையே' என்று மறுமொழி சொன்னேன். அடிகள் கற்பனையில் ஒரு சுவையை உண்டாக்கி அச்சுவை இறைவனாகிய அமுதின் சுவைக்கு ஈடாகாது என்று குறிப்பிட்டார். வள்ளல் பெருமானுடன் அநுபவிக்க முடியாதவர்க்கு இது சுவைக் கேடாகத்தான் தோன்றும். காமாலை நோயாளர்க்கு பாதாம் அல்வா எப்படி இனிக்க முடியும்?

*நான்என்றும் தான்என்றும் நாடாத நிலையில்*
*ஞானவடி வாய்விளங்கும் வானநடு நிலையே*
*ஊன்என்றும் உயிர்என்றும் குறியாமே முழுதும்*
*ஒருவடிவாம் திருவடிவம் உவந்தளித்த பதியே*
*தேன்என்றும் கரும்பென்றும் செப்பரிதாய் மனமும்*
*தேகமும்உள் உயிர்உணர்வும் தித்திக்கும சுவையே*
*வான்என்றும் ஒளிஎன்றும் வகுப்பரிதாம் பொதுவில்*
*வயங்குநடத் தரசேஎன் மாலையும்ஏற் றருளே (21)*

*எட்டிரண்டும் என்என்றால் மயங்கியஎன் றனக்கே*
*எட்டாத நிலைஎல்லாம் எட்டுவித்த குருவே*
*சுட்டிரண்டும் காட்டாதே துரியநிலை நடுவே*
*சுகமயமாய் விளங்குகின்ற சுத்தபரம் பொருளே*
*மட்டிதுஎன் றறிவதற்கு மாட்டாதே மறைகள்*
*மவுனம்உறப் பரம்பரத்தே வயங்குகின்ற ஒளியே*
*தட்டறியாத் திருப்பொதுவில் தனிநடஞ்செய் அரசே*
*தாழ்மொழிஎன் றிகழாதே தரித்துமகிழ் தருளே (22)*

*சாதிகுலம் சமயம்எலாம் தவிர்த்தெனைமேல் ஏற்றித்*
*தனித்ததிரு அமுதளித்த தனித்தலைமைப் பொருளே*
*ஆதிநடுக் கடைகாட்டா தண்டபகிர் அண்டம்*
*ஆருயிர்கள் அகம்புறமற் றனைத்தும்நிறை ஒளியே*
*ஓதிஉணர்ந் தவர்எல்லாம் எனைக்கேட்க எனைத்தான்*
*ஓதாமல் உணர்ந்துணர்வாம் உருவுறச்செய் உறவே*
*சோதிமய மாய்விளங்கித் தனிப்பொதுவில் நடிக்கும்*
*தூயநடத் தரசேஎன் சொல்லும்அணிந் தருளே (23)*

*பார்த்தாலும் நினைத்தாலும் படித்தாலும் படிக்கப்*
*பக்கம்நின்று கேட்டாலும் பரிந்துள்உணர்ந் தாலும்*
*ஈர்த்தாலும் பிடித்தாலும் கட்டிஅணைத் தாலும்*
*இத்தனைக்கும் தித்திக்கும் இனித்தசுவைக் கரும்பே*
*வேர்த்தாவி மயங்காது கனிந்தநறுங் கனியே*
*மெய்ம்மைஅறி வானந்தம் விளங்கும்அருள் அமுதே*
*தீர்த்தாஎன் றன்பர்எலாம் தொழப்பொதுவில் நடிக்கும்*
*தெய்வநடத் தரசேஎன் சிறுமொழிஏற் றருளே (26)*

*கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பே*
*காணார்க்கும் கண்டவர்க்கும் கண்ணளிக்கும் கண்ணே*
*வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரம்அளிக்கும் வரமே*
*மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதிகொடுக்கும் மதியே*
*நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநின்ற நடுவே*
*நரர்களுக்கும் சுரர்களுக்கும் நலங்கொடுக்கும் நலமே*
*எல்லார்க்கும் பொதுவில்நடம் இடுகின்ற சிவமே*
*என்அரசே யான்புகலும் இசையும்அணிந் தருளே (39)*

*தாய்முதலோ ரொடுஞ்சிறிய பருவமதில் தில்லைத்*
*தலத்திடையே திரைதூக்கத் தரிசித்த போது*
*வேய்வகைமேல் காட்டாதே என்றனக்கே எல்லாம்*
*வெளியாகக் காட்டியஎன் மெய்உறவாம் பொருளே*
*காய்வகைஇல் லாதுளத்தே கனிந்தநறுங் கனியே*
*கனவிடத்தும் நனவிடத்தும் எனைப்பிரியாக் களிப்பே*
*தூய்வகையோர் போற்றமணி மன்றில்நடம் புரியும்*
*சோதிநடத் தரசேஎன் சொல்லும் அணிந்தருளே (44)*[11]

*நான்பசித்த போதெல்லாம் தான்பசித்த தாகி*
*நல்உணவு கொடுத்தென்னை செல்வம்உற வளர்த்தே*
*ஊன்பசித்த இளைப்பென்றும் தோற்றாத வகையே*
*ஒள்ளியதெள் அமுதெனக்கிங் குவந்தளித்த ஒளியே*
*வான்பதிக்கும் நெடுமாற்கும் நான்முகற்கும் அரிதாம்*
*வாழ்வெனக்கே ஆகியுற வரம்அளித்த பதியே*
*தேன்பரித்த மலர்மணமே திருப்பொதுவில் ஞானத்*
*திருநடஞ்செய் அரசேஎன் சிறுமொழிஏற் றருளே (49)*

*மதம்என்றும் சமயம்என்றும் சாத்திரங்கள் என்றும்*
*மன்னுகின்ற தேவர்என்றும் மற்றவர்கள் வாழும்*
*பதம்என்றும் பதம்அடைந்த பத்தர்அநு பவிக்கப்*
*பட்டஅநு பவங்கள்என்றும் பற்பலவா விரிந்த*

11. ஐந்து மாதக் குழந்தைக்கு 'சிதம்பர ரகசியம்' வெளிப்படையாகக் காட்டப் பெற்றது. இந்நூல் பக்.2. காண்க.

*விதம்ஒன்றும் தெரியாதே மயங்கியஎன் தனக்கே*
*வெட்டவெளி யாஅறிவித் திட்டஅருள் இறையே*
*சதம்ஒன்றும் சுத்தசிவ சன்மார்க்கப் பொதுவில்*
*தனிநடஞ்செய் அரசேஎன் சாற்றும்அணிந் தருளே (65)*

*உயிர்க்கொலையும் புலைப்பொசிப்பும் உடையவர்கள் எல்லாம்*
*உறவினத்தார் அல்லர்அவர் புறஇனத்தார் அவர்க்குப்*
*பயிர்ப்புறும்ஓர் பசிதவிர்த்தல மாத்திரமே புரிக*
*பரிந்துமற்றைப் புண்புரையேல் நண்புதவேல் இங்கே*
*நயப்புறுசன் மார்க்கம்அவர் அடையளவும் இதுதான்*
*நம்ஆணை என்றெனக்கு நவின்றஅருள் இறையே*
*மயர்ப்பறுமெய்த் தவர்போற்றிப் பொதுவில்நடம் புரியும்*
*மாநடத்தென் அரசேஎன் மாலைஅணிந் தருளே (71)*

*வெம்மாலைச் சிறுவரொடும் விளையாடித் திரியும்*
*மிகச்சிறிய பருவத்தே வியந்துநினை நமது*
*பெம்மான்என் றடிகுறித்துப் பாடும்வகை புரிந்த*
*பெருமானே நான்செய்த பெருந்தவமெய்ப் பயனே*
*செம்மாந்த சிறியேனைச் சிறுநெறியில் சிறிதும்*
*செலுத்தாமல் பெருநெறியில் செலுத்தியநற் றுணையே*
*அம்மானே என்ஆவிக் கானபெரும் பொருளே*
*அம்பலத்தென் அரசேஎன் அலங்கல்அணிந் தருளே (76)*

*அண்டவகை எவ்வளவோ அவ்வளவும் அவற்றில்*
*அமைந்தஉயிர் எவ்வளவோ அவ்வளவும் அவைகள்*
*கண்டபொருள் எவ்வளவோ அவ்வளவும் அவற்றில்*
*கலந்தகலப் பெவ்வளவோ அவ்வளவும் நிறைந்தே*
*விண்தகுமோர் நாதவெளி சுத்தவெளி மோன*
*வெளிஞான வெளிமுதலாம் வெளிகள்எல்லாம் நிரம்பிக்*
*கொண்டதுவாய் விளங்குகின்ற சுத்தசிவ மயமே*
*குலவுநடத் தரசேஎன் குற்றமும்கொண் டருளே (80)*

*நால்வருணம் ஆசிரமம் ஆசாரம் முதலா*
*நவின்றகலைச் சரிதம்எலாம் பிள்ளைவிளை யாட்டே*
*மேல்வருணம் தோல்வருணம் கண்டறிவார் இலைநீ*
*விழித்திதுபார் என்றெனக்கு விளம்பியசற் குருவே*

*கால்வருணம் கலையாதே வீணில்அலை யாதே*
*காண்பனஎல் லாம்எனக்குக் காட்டியமெய்ப் பொருளே.*
*மால்வருணம் கடந்தவரை மேல்வருணத் தேற்ற*
*வயங்குநடத் தரசேஎன் மாலைஅணிந் தருளே (85)*

*எவ்விடத்தும் எவ்வுயிர்க்கும் இலங்குசிவம் ஒன்றே*
*என்ஆணை என்மகனே இரண்டில்லை ஆங்கே*
*செவ்விடத்தே அருளொடுசேர்த் திரண்டெனக்கண் டறிநீ*
*திகைப்படையேல் என்றெனக்குச் செப்பியசற் குருவே*
*அவ்விடத்தே உவ்விடத்தே அமர்ந்ததுபோல் காட்டி*
*அங்குமிங்கும் அப்புறமும் எங்கும்நிறை பொருளே*
*ஒவ்விடச்சிற் சபைஇடத்தும் பொற்சபையின் இடத்தும்*
*ஓங்குநடத் தரசேஎன் உரையும்அணிந் தருளே (86)*

*இருந்தஇடம் தெரியாதே இருந்தசிறி யேனை*
*எவ்வுலகில் உள்ளவரும் ஏத்திடமேல் ஏற்றி*
*அருந்தவரும் அயன்முதலாம் தலைவர்களும் உளத்தே*
*அதிசயிக்கத் திருஅமுதும் அளித்தபெரும் பதியே*
*திருந்துமறை முடிப்பொருளே பொருள்முடிபில் உணர்ந்தோர்*
*திகழமுடிந் துட்கொண்ட சிவபோகப் பொருளே*
*பெருந்தவர்கள் போற்றமணி மன்றில்நடம் புரியும்*
*பெருநடந்தென் அரசேஎன் பிதற்றும்அணிந் தருளே (98)*

*தலைகால்இங் கறியாதே திரிந்தசிறி யேனை*
*தான்வலிந்தாட் கொண்டருளித் தடைமுழுதும் தவிர்த்தே*
*மலைவறுமெய் அறிவளித்தே அருளமுதம் அருத்தி*
*வல்லபசத் திகளெல்லாம் மருவியிடப் புரிந்து*
*நிலையுறவே தானும்அடி யேனும்ஒரு வடிவாய்*
*நிறையநிறை வித்துயர்ந்த நிலைஅதன்மேல் அமர்த்தி*
*அலர்தலைப்பேர் அருட்சோதி அரசுகொடுத் தருளி*
*ஆடுகின்ற அரசேஎன் அலங்கல்அணிந் தருளே (100)*

இவண் குறிப்பிட்ட 20 பாடல்களையும் உளங் கரைந்து படித்து அநுபவித்தால் இறைவனது அருள் விளக்கம் நம் மனத்திரையில் தெளிவாகப் பதிவு பெறும்.

82. அருட்பெருஞ்சோதி அட்டகம்: 'அருட்பெருஞ் சோதி' என்பதை விளக்கும் பாங்கில் எட்டுப் பாடல்கள். இவை எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தங்களால் இயன்றவை.

*அருட்பெரு வெளியில் அருட்பெரு உலகத்*
*தருட்பெருந் தலத்துமேல் நிலையில்*
*அருட்பெரும் பீடத் தருட்பெரு வடிவில்*
*அருட்பெருந் திருவிலே அமர்ந்த*
*அருட்பெரும் பதியே அருட்பெரு நிதியே*
*அருட்பெருஞ் சித்திஎன் அமுதே*
*அருட்பெருங் களிப்பே அருட்பெருஞ் சுகமே*
*அருட்பெருஞ் சோதிஎன் அரசே (1)*

*கண்முதல் பொறியால் மனமுதல் கரணக்*
*கருவினால் பகுதியின் கருவால்*
*எண்முதல் புருட தரத்தினால் பரத்தால்*
*இசைக்கும்ஓர் பரம்பர உணர்வால்*
*விண்முதல் பரையால் பராபர அறிவால்*
*விளங்குவ தரிதென உணர்ந்தோர்*
*அண்முதல் தடித்துப் படித்திட ஓங்கும்*
*அருட்பெருஞ் சோதிஎன் அரசே (3)*

*ஏகமோ அன்றி அநேகமோ என்றும்*
*இயற்கையோ செயற்கையோ சித்தோ*
*தேகமோ பொதுவோ சிறப்பதோ பெண்ணோ*
*திகழ்ந்திடும் ஆணதோ அதுவோ*
*யோகமோ பிரிவோ ஒளியதோ வெளியோ*
*உரைப்பதெற் றோஎன உணர்ந்தோர்*
*ஆகமோ டுரைத்து வழுத்திநின் றோங்கும்*
*அருட்பெருஞ் சோதிஎன் அரசே (6)*

*எங்குமாய் விளங்கும் சிற்சபை இடத்தே*
*இதுஅது எனஉரைப் பரிதாய்த்*
*தங்கும்ஓர் இயற்கைத் தனிஅநு பவத்தைத்*
*தந்தெனைத் தன்மயம் ஆக்கிப்*

*பொங்கும்ஆ னந்த போகபோக் கியனாய்ப்*
*புத்தமு தருத்திஎன் உளத்தே*
*அங்கையில் கனிபோன் றமர்ந்தருள் புரிந்த*
*அருட்பெருஞ் சோதிஎன் அரசே (8)*

இந்த நான்கு பாடல்களும் 'அருட்பெருஞ்சோதி' இன்னதென்பதைச் சுட்டி விளக்குவன.

85. சிவானந்தத் தழுந்தல்: இப்பதிகம் பத்துப் பாடல்கள் கொண்டது. அனைத்தும் எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பில் அமைந்தவை. அடிகள் தாம் சிவானந்தத்தில் அழுந்திய நிலையை அற்புதமாய் விளக்குவன. பாடல்கள் யாவும் 'அருட்பெருஞ் சோதி என் ஆண்டவா நீரே' என்று இறுவன.

*காரண காரியக் கல்விகள் எல்லாம்*
*கற்பித்தென் னுள்ளே கலந்துகொண் டென்னை*
*நாரணர் நான்முகர் போற்றமேல் ஏற்றி*
*நாதாந்த நாட்டுக்கோர் நாயகன் ஆக்கிப்*
*பூரணமாம் இன்பம் பொங்கித் ததும்பப்*
*புத்தமு தாம்அருட் போனகம் தந்தே*
*ஆரண வீதியில் ஆடல்செய் தீரே*
*அருட்பெருஞ் சோதிஎன் ஆண்டவர் நீரே (1)*

*சிற்சபை இன்பத் திருநடங் காட்டித்*
*தெள்ளமு தூட்டிஎன் சிந்தையைத் தேற்றிப்*
*பொற்சபை தன்னில் பொருந்திஎல் லாம்செய்*
*பூரண சித்திமெய்ப் போகமும் தந்தே*
*தற்பர மாம்ஓர் சதானந்த நாட்டில்*
*சத்தியன் ஆக்கிஓர் சுத்தசித் தாந்த*
*அற்புத வீதியில் ஆடல்செய் தீரே*
*அருட்பெருஞ் சோதிஎன் ஆண்டவர் நீரே (4)*

*மருந்திது மணிஇது மந்திரம் இதுசெய்*
*வகைஇது துறைஇது வழிஇது எனவே*
*இருந்தெனுள் அறிவித்துத் தெள்ளமு தளித்தே*
*என்னையும் தன்னையும் ஏகம்*
*பொருந்திள லாஞ்செய வல்லஓர் சித்திப்*
*புண்ணிய வாழ்க்கையில் நண்ணியே காந்த*
*அருந்தவ வீதியில் ஆடல்செய் தீரே*
*அருட்பெருஞ் சோதிஎன் ஆண்டவர் நீரே (7)*

*இருட்சாதித் தத்துவச் சாத்திரக் குப்பை*
*இருவாய்ப்புப் புன்செயில் எருவாக்கிப் போட்டு*
*மருட்சாதி சமயங்கள் மதங்களாச் சிரம*
*வழக்கெலாம் குழிக்கொட்டி மண்மூடிப் போட்டுத்*
*தெருட்சாரும் சுத்தசன் மார்க்கநன் னீதி*
*சிறந்து விளங்கஓர் சிற்சபை காட்டும்*
*அருட்சோதி வீதியில் ஆடல்செய் தீரே*
*அருட்பெருஞ் சோதிஎன் ஆண்டவர் நீரே (10)*

இந்த நான்கு பாடல்களையும் மனம் கரைந்து பாடினால் அவை நம்மையும் சிவானந்தத்தில் அழுந்துவிக்கச் செய்யும்.

87. அச்சோ பத்து: இத்தகைய 'பத்துகள்' மணிவாசகர் பாடல்களிலும், பெரியாழ்வார் பாசுரங்களிலும் காணலாம். 'அச்சோ' என்ற சொல் அதிசயத்தைக் குறிக்கும் இடைச்சொல். திருவருளில் சேர்த்துக் கொண்டதை வாய்விட்டுச் சொல்ல முடியாத அநுபவத்ததிசயம் என்பதைச் சுட்டுவது. இப்பதிகம் பத்துப் பாடல்களைக் கொண்டது. அனைத்தும் அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பில் அமைந்தவை.

*கருத்தனைஎன் கண்மணியைக் கண்ணுதலைப்*
*பெருங்கருணைக் கடலை வேதத்*
*திருத்தனைஎன் சிவபதியைத் தீங்கனியை*
*தெள்ளமுதத் தெளிவை வானில்*

*ஒருத்தனைஎன் உயிர்த்துணையை உயிர்க்குயிரை*
*உயிர்க்குணர்வை உணர்த்த னாதி*
*அருந்தனைச்சிற் றம்பலத்தென் அருட்பெருஞ்சோ*
*தியைப்பெற்றேன் அச்சோ அச்சோ (1)*

*பிறிவெனைத்தும் தோற்றாதென் உளங்கலந்த*
*பெருந்தகைஎம் பெருமான் தன்னைச்*
*செறிவனைத்தும் என்மனத்துக் களித்தெனக்குப்*
*பெருங்களிப்புச் செய்தான் தன்னை*
*முறிவெனைத்தும் இன்றிஅருள் அமுதுணவு*
*கொடுத்தெனக்கு முன்னின் றானை*
*அறிவனைச்சிற் றம்பலத்தென் அருட்பெருஞ்சோ*
*தியைப்பெற்றேன் அச்சோ அச்சோ (4)*

*எம்மையும்என் தலைப்பிரியா தென்னுளமே*
*இடங்கொண்ட இறைவன் தன்னை*
*இம்மையில்என் தனக்கழியாத் திருவடிவம்*
*தந்தானை எல்லாம் வல்ல*
*செம்மைதரு சித்தனைஎன் சிவபதியைத்*
*தெள்ளமுதத் திரளை என்றன்*
*அம்மையைச்சிற் றம்பலத்தென் அருட்பெருஞ்சோ*
*தியைப்பெற்றேன் அச்சோ அச்சோ (7)*

*சாதியைநீள் சமயத்தை மதத்தையெல்லாம்*
*விடுவெத்தென் தன்னை ஞான*
*நீதியிலே சுத்தசிவ சன்மார்க்க*
*நிலைதனிலே நிறுத்தி னானைப்*
*பாதியைஒன் றானவனைப் பரம்பரனைப்*
*பராபரனைப் பதிஅ னாதி*
*ஆதியைச்சிற் றம்பலத்தென் அருட்பெருஞ்சோ*
*தியைப்பெற்றேன் அச்சோ அச்சோ (10)*

பாடல்கள் யாவும் 'அருட்பெருஞ்சோதியைப் பெற்றேன் அச்சோ அச்சோ' என்று இறுகின்றன. திருச்சிற்றம்பலப் பெருமானைத் தான் பெற்ற பேற்றை

நினைந்து களிக்கின்றார் அடிகள் 'அச்சோ அச்சோ' என்று சொல்லிச் சொல்லி.

89. அருட்பெருஞ்சோதி அடைவு: அருட்பெருஞ் சோதி தம் உள்ளத்தில் கலந்ததை எண்ணி எண்ணிக் களிக்கின்றார்; மனநிறைவு பெறுகின்றார் அடிகள் என் பதை இப்பதிகம் விளக்குகின்றது. இதில் கட்டளைக் கலித்துறை யாப்பில் ஆன 13 பாடல்கள் அடக்கம்.

*அருட்பெருஞ் சோதிஎன் ஆருயி*
*ரில்கலந் தாடுகின்ற*
*அருட்பெருஞ் சோதிஎன் அன்பிற்*
*கலந்தறி வாய்விளங்கும்*
*அருட்பெருஞ் சோதித்தெள் ளார்அமு*
*தாகிஉள் அண்ணிக்கின்ற*
*அருட்பெருஞ் சோதிநின் ஆசைஒன்*
*றேஎன்னுள் ஆர்கின்றதே (1)*

*கண்டேன் அருட்பெருஞ் சோதியைக்*
*கண்களில் கண்டுகளி*
*கொண்டென் சிவானந்தக் கூத்தாடிக்*
*கொண்டிக் குவலயத்தே*
*தொண்டே திருஅம் பலந்தனக்*
*காக்கிச் சுகஅமுதம்*
*உண்டேன் உயிர்தழைத் தோங்குகின்*
*றேன்உள் உவப்புறவே (5)*

*நிலத்தே புழுத்த புழுவும்*
*அலேன்புன் நிலத்திழிந்த*
*மலத்தே புழுத்த புழுஅனை*
*யேனைஅவ் வான்துதிக்கும்*
*குலத்தே தலைமை கொடுத்தென்*
*உளத்தில் குலவுகின்றாய்*
*தலத்தே அருட்பெருஞ் சோதிஅப்*
*பாஎன் தயாநிதியே (10)*

*வாழிஎன் றேஎனை மால்அயன்*
*ஆதியர் வந்தருட்பேர்*
*ஆழிஎன் றேதுதித் தேத்தப்*
*புரிந்தனை அற்புதம்நீ*
*டூழிஅன் றேஎன்றும் சாகா*
*வரமும் உவந்தளித்தாய்*
*வாழிமற் றோங்கும் அருட்பெருஞ்*
*சோதிநின் மன்னருளே (12)*

இப்பாடல்களை உளம் உருகிப் பாடி அநுபவித்தால் அடிகள் பெற்ற அநுபவத்தை நாமும் பெற முயலலாம்.

93. சிவபுண்ணியப் பேறு: தமக்குச் சிவபுண்ணியப் பேறு வாய்த்ததை எண்ணி எண்ணி மனநிறைவு கொள்ளுகின்றார் அடிகள் இப்பதிகத்தில். இதில் பத்துப் பாடல்கள் அடக்கம். அவை அனைத்தும் எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பில் அமைந்தவை. இவற்றில் ஐந்து பாடல்களில் ஆழங்கால் படுவோம்.

*மாலிலே மயங்கி மண்ணிலே அநித்த*
*வாழ்விலே வரவிலே மலஞ்சார்*
*தோலிலே ஆசை வைத்துவீண் பொழுது*
*தொலைக்கின்றார் தொலைக்கநான் உனது*
*காலிலே ஆசை வைத்தனன் நீயும்*
*கனவிலும் நனவினும் எனைநின்*
*பாலிலே வைத்தாய் எனக்கிது போதும்*
*பண்ணிய தவம்பலித் ததுவே (1)*

*கூடவும் பின்னே பிரியவும் சார்ந்த*
*கொழுநரும் மகளிரும் நாண*
*நீடஎன் உளத்தே கலந்துகொண் டென்றும்*
*நீங்கிடா திருந்துநீ என்னோடு*
*ஆடவும் எல்லாம் வல்லசித் தியைப்பெற்*
*றறிவுரு வாகிநான் உனையே*

*பாடவும் பெற்றேன் எனக்கிது போதும்*
*பண்ணிய தவம்பலித் ததுவே (4)*

*நாடல்செய் கின்றேன் அருட்பெருஞ் சோதி*
*நாதனை என்உளே கண்டு*
*கூடல்செய் கின்றேன் எண்ணிய எல்லாம்*
*கூடிடக் குலவிஇன் புருவாய்*
*ஆடல்செய் கின்றேன் சித்தெலாம் வல்லான்*
*அம்பலம் தன்னையே குறித்துப்*
*பாடல்செய் கின்றேன் எனக்கிது போதும்*
*பண்ணிய தவம்பலித் ததுவே (6)*

*புரிசைவான் உலகில் பூவுல கெல்லாம்*
*புண்ணிய உலகமாய்ப் பொலிந்தே*
*கரிசெலாம் தவிர்ந்து களிப்பெலாம் அடைந்து*
*கருத்தொடு வாழவும் கருத்தில்*
*துரிசெலாம் தவிர்க்கும் சுத்தசன் மார்க்கம்*
*துலங்கவும் திருவருட் சோதிப்*
*பரிசெலாம் பெற்றேன் எனக்கிது போதும்*
*பண்ணிய தவம்பலித் ததுவே (8)*

*கட்டமும் கழன்றேன் கவலைவிட் டொழித்தேன்*
*கலக்கமும் தீர்ந்தனன் பிறவிச்*
*சட்டமும் கிழித்தேன் தூக்கமும் துறந்தேன்*
*சாவையும் நோவையும் தவிர்ந்தேன்*
*சிட்டமும் அடைந்தேன் சிற்சபை உடையான்*
*செல்வமெய்ப் பிள்ளைஎன் றொருபேர்ப்*
*பட்டமும் தரித்தேன் எனக்கிது போதும்*
*பண்ணிய தவம்பலித் ததுவே (10)*

பாடல்களைப் பரிவுடனும் பாசத்துடனும் பாடி அநுபவித்தால் வள்ளல் பெருமான் பெற்ற மனநிறைவு நமக்கும் கிட்டும் என்பது உறுதி. பாடல்கள் யாவும் 'பண்ணிய தவம் பலித்ததுவே' என்று முடியும் பாங்கும் இதனை மேலும் உறுதிப்படுத்துகின்றது.

95. இறை எளிமையை வியத்தல்: இறைவன் எல்லார் மாட்டும் அன்புடையவன்; தந்தை, தாய் அனைய பாசமுடையவன். எளிமையுடன் வந்து ஆட்கொள் ளும் அருட்பெருஞ்சோதி அவன். அத்தகைய எளிமை யைப் பாராட்டி அடிகள் வியத்தலை இப்பதிகம் பகர் கின்றது. இதில் உள்ள பத்துப் பாடல்களும் எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பில் அமைந்தவை.

*வேதாந்த நிலையும்அதன் அந்தத்தே விளங்கும்*
*மெய்ந்நிலையும் காட்டுவித்தீர் விளங்கியசித் தாந்தப்*
*போதாந்த நிலையும்அப்பால் புகல்அரிதாம் பெரிய*
*பொருள்நிலையும் தெரிவித்தீர் புண்ணியரே நுமது*
*பாதாந்தம் அறிவித்தீர் சுத்தவடி வுடனே*
*பகர்பிரண வாகாரப் பரிசுஎனக் களித்தீர்*
*நாதாந்தத் தனிசெங்கோல் நான்செலுத்தக் கொடுத்தீர்*
*நடராச ரேநுமக்கு நான்எதுசெய் வேனே (3)*

*ஆர்நீஎன் றெதிர்வினவில் விடைகொடுக்கத் தெரியா*
*அறிவிலியேன் பொருட்டாக அன்றுவந்தென் தனக்கே*
*ஏர்நீடும் பெரும்பொருள்ஒன் றீந்துமகிழ்ந் தாண்டீர்*
*இன்றுவந் தெளியேன்பால் எய்திஒளி ஓங்கப்*
*பார்நீடத் திருவருளாம் பெருஞ்சோதி அளித்தீர்*
*பகரும்எலாம் வல்லசித்திப் பண்புறவும் செய்தீர்*
*நார்நீட நான்தானாய் நடம்புரிகின் றீரே*
*நடராச ரேநுமக்கு நான்எதுசெய் வேனே (4)*

*கண்ணுடையீர் பெருங்கருணைக் கடலுடையீர் எனது*
*கணக்கறிந்தீர் வழக்கறிந்தீர் கனிந்துவந்தன் றுரைத்தீர்*
*எண்ணுடையார் எழுத்துடையார் எல்லாரும் போற்ற*
*என்னிதய மலர்மிசைநின் றெழுந்தருளி வாமப்*
*பெண்ணுடைய மனக்களிக்கப் பேருலகம் களிக்கப்*
*பெத்தருமுத் தருமகிழப் பத்தரெலாம் பரவ*
*விண்ணுடைய அருட்சோதி விளையாடல் புரிய*
*வேண்டும்என்றேன் என்பதன்முன் விரைந்திசைந்தீர் அதற்கே (7)*

*கரும்பின்மிக இனிக்கின்ற கருணைஅமு தளித்தீர்*
*கண்ணனையீர் கனகசபை கருதியசிற் சபைமுன்*
*துரும்பின்மிகச் சிறியேன்நான் அன்றுநின்று துயர்ந்தேன்*
*துயரேல்என் றெல்லையிட்டீர் துரையேஅவ் வெல்லை*
*விரும்புறஆ யிற்றிதுநான் தருணம்இந்தத் தருணம்*
*விரைந்தருள வேண்டுமென விளம்பிநின்றேன் அடியேன்*
*பெரும்பிழைகள் அனைத்தினையும் பொறுத்தருளி இந்நாள்*
*பெரிதளித்தீர் அருட்பெருமை பெற்றவனில் பெரிதே (9)*

*அந்நாளில் அடிச்சிறியேன் அம்பலவா யிலிலே*
*அருளைநினைந் தொருபுறத்தே அயர்ந்தழுது நின்றேன்*
*முந்நாளில் யாம்புரிந்த பெருந்தவத்தால் எனக்கு*
*முகமலர்ந்து மொழிந்தஅருண் மொழியைநினைந் தந்தச்*
*செந்நாளை எதிர்பார்த்தே பன்னாளும் களித்தேன்*
*சிந்தைமலர்ந் திருந்தேன்அச் செல்வமிகு திருநாள்*
*இந்நாளே ஆதலினால் எனக்கருள்வீர் என்றேன்*
*என்பதன்முன் அளித்தீர்நும் அன்புலகில் பெரிதே (10)*

இந்த ஐந்து திருப்பாடல்களையும் ஐயமற அன்புடன் ஓதி உளங்கரைந்தால் வள்ளல் பெருமானின் அநுபவம் நமக்கும் கிட்டும் என உறுதியுடன் நம்பலாம்.

97. திருவருட்பேறு: எம்பெருமானின் திருவருள் பேறு பெற்றதை நெஞ்சு நெகிழ்ந்து பேசுகின்றார் அடிகள். பத்து நேரிசை வெண்பாக்களாலான பதிகம் இது.

*சீர்விளங்கு சுத்தத் திருமேனி தான்தரித்துப்*
*பார்விளங்க நான்படுத்த பாயலிலே - தார்விளங்க*
*வந்தாய் எனைத்தூக்கி மற்றொருசார் வைத்தனையே*
*எந்தாய்நின் உள்ளமறி யேன் (4)*

*உன்னுகின்ற தோறுமென துள்ளம் உருகுகின்ற*
*தென்றுரைப்பேன் என்னுரைப்பேன் எந்தாயே - துள்ளிநின்று*
*தூக்கம் தவிர்த்தென்னைத் தூக்கிஎடுத் தன்பொடுமேல்*
*ஆக்கமுற வைத்தாய் அது (5)*

*அஞ்சிஅஞ்சி ஊணும் அருந்தாமல் அங்கொருசார்*
*பஞ்சின் உழந்தே படுத்தயர்ந்தேன் - விஞ்சிஅங்கு*
*வந்தாய் எனைத்தூக்கி மற்றொருசார் வைத்தமுது*
*தந்தாய்என் நான்செய் தவம் (8)*

*நானே தவம்புரிந்தேன் நானே களிப்படைந்தேன்*
*தேனே எனும்அமுதம் தேக்கஉண்டேன் - ஊனே*
*ஒளிவிளங்கப் பெற்றேன் உடையான் எனைத்தான்*
*அளிவிளங்கத் தூக்கிஅணைத் தான் (9)*

இந்த நான்கு பாடல்கள் போதும் எம்பெருமான் திருவருட் பேற்றை அறிந்துகொள்ள.

102. தத்துவ வெற்றி: இப்பகுதி இருபது எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தாலானது. மனத்தை அடக்கியாண்ட பெருமையைப் பேசுவன. நான்கு பாடல்களில் ஆழங்கால் படுவோம்.

*மனம்எனும்ஓர் பேய்க்குரங்கு மடைப்பயலே நீதான்*
*மற்றவர்போல் எனைநினைத்து மருட்டாதே கண்டாய்*
*இனமுறஎன் சொல்வழியே இருத்தியெனில் சுகமாய்*
*இருந்திடுநீ என்சொல்வழி ஏற்றினல்ஆ ணாலோ*
*தினையளவுன் அதிகாரம் செல்லவொட்டேன் உலகம்*
*சிரிக்கஉனை அடக்கிடுவேன் திருவருளால் கணத்தே*
*நனவில்எனை அறியாயோ யார்எனஇங் கிருந்தாய்*
*ஞானசபைத் தலைவனுக்கு நல்லபிள்ளை நானே (2)*

*விரிந்தமனம் எனும்சிறிய விளையாட்டுப் பயலே*
*விரிந்துவிரிந் தலையாதே மெலியாதே விடயம்*
*புரிந்தநெறி புரிந்தவமே போகாதே பொறிவாய்ப்*
*புரையாதே விரையாதே புகுந்துமயங் காதே*
*தெரிந்துதெளிந் தொருநிலையில் சித்திரம்போல் இருநீ*
*சிறிதசைந்தால் அக்கணமே சிதைந்திடுவேன் கண்டாய்*
*பரிந்தெனைநீ யார்என்று பார்த்தாய்சிற் சபைவாழ்*
*பதிதனக்கே அருட்பட்டம் பலித்தபிள்ளை நானே (4)*

*அகங்காரம் எனும்பொல்லா அடவாதிப் பயலே*
*அடுக்கடுக்காய் எடுக்கின்றாய் அடுத்துமுடுக் கின்றாய்*
*செகங்காணத் தலைகாலும் தெரியாமல் அலைந்து*
*திரிகின்றாய் நின்செபந்தான் சிறிதும்நட வாது*
*இகங்காண அடங்குகநீ அடங்காயேல் கணத்தே*
*இருந்தஇடம் தெரியாதே எரிந்திடசெய் திடுவேன்*
*சுகங்காண என்றனைநீ அறியாயோ நான்தான்*
*சுத்தசிவ சன்மார்க்கம் பெற்றபிள்ளை காணே (8)*

*எத்துணையும் காட்டாத ஆணவம்என் றிடும்ஓர்*
*இருட்டறைக்கோர் அதிகாரக் குருட்டுமுடப் பயலே*
*இத்தனைநாள் பிடித்ததுனைக் கண்டுதுரத் திடவே*
*இன்னும்அரைக் கணந்தரியேன் இக்கணத்தே நினது*
*பொத்தியசுற் றத்துடனே போய்விடுதி இலையேல்*
*பூரணமெய் அருள்ஒளியால் பொன்றுவிப்பேன் நினையே*
*சத்தியஞ்சொன் னேன்எனைநீ அறியாயோ ஞான*
*சபைத்தலைவன் திருதலைமைத் தனிப்பிள்ளை நானே (13)*

*பயம்எனும்ஓர் கொடும்பாவிப் பயலேநீ இதுகேள்*
*பற்றறஎன் தனைவிடுத்துப் பனிக்கடல்வீழ்ந் தொளிப்பாய்*
*தயவின்உரைத் தேன்இன்னும் இருத்திஎனில் உனது*
*தன்றலைக்குத் தீம்புவரும் தலைமட்டோ நினது*
*செயலுறும்உள் உடம்பழியும் சுற்றமெலாம் இறக்கும்*
*தீர்ந்ததினி இல்லையென்றே திருவார்த்தை பிறக்கும்*
*அயலிடைநேர்ந் தோடுகநீ என்னைஅறி வாயோ*
*அம்பலத்தென் அப்பன்அருள் நம்புபிள்ளை நானே (17)*

இறைவன் அருள்பெற்ற தம்மை மனம் முதலிய உணர்வுகள் ஒன்றும் செய்ய முடியாது என இறைத் தத்துவ வெற்றியை உறுதிப்படுத்துகின்றார்.

104. அடைக்கலம் புகுதல்: அடைக்கலம் புகுதல் என்பது சரணாகதித் தத்துவம். அடைக்கலத்தைப் பற்றி எல்லாச் சமயப் பெரியார்கள் பேசி வந்தாலும் அதனை முதன் முதலாக ஒரு தத்துவம்போல் நிறுவிய பெருமை

நம்மாழ்வாரைச் சாரும். பக்தி நெறியை இன்னார்தாம் மேற்கொள்ளலாம் என்ற வரையறை இருந்தமையால் பெண்கள் உட்பட எல்லா நிலை மக்களும் கடைப்பிடிப் பதற்கேற்ற நெறி 'பிரபத்தி நெறி'யைக் கண்டவர் சட கோபன். இதுபற்றிய முழுவிவரம் அறிய வேண்டு வோர் ஸ்ரீவசன பூஷணம், முமுட்சுப் படி போன்ற வைணவ நூல்களைப் படித்துத் தெளியலாம். இத்த கைய நெறியை நம் அடிகளும் பதினொரு அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பினால் சுட்டியுரைக் கின்றார். இவற்றுள் நான்கு பாடல்களில் ஆழங்கால் படுவோம்.

*எண்ணா நின்றேன் எண்ணம்எலாம்*
*எய்த அருள்செய் கின்றதனித்*
*தண்ணார் அமுதே சிற்சபையில்*
*தனித்த தலைமைப் பெருவாழ்வே*
*கண்ணார் ஒளியே ஒளிஎல்லாம்*
*கலந்த வெளியே கருதுறும்என்*
*அண்ணா ஐயா அம்மாஎன்*
*அப்பா யான்உன் அடைக்கலமே (1)*

*தேனே அமுதே சிற்சபையில்*
*சிவமே தவமே செய்கின்றோர்*
*ஊனே புகுந்த ஒளியேமெய்*
*உணர்வே என்றன் உயிர்க்குயிராம்*
*வானே என்னைத் தாணாக்கு*
*வானே கோனே எல்லாம்வல்*
*லானே ஐயா அம்மாஎன்*
*அப்பா யான்உன் அடைக்கலமே (3)*

*நீண்ட மறைகள் ஆகமங்கள்*
*நெடுநாள் முயன்று வருந்திநின்று*
*வேண்ட அவைகட் கொருசிறிதும்*
*விளங்கக் காட்டா தென்மொழியைப்*

*பூண்ட அடியை என்தலைமேல்*
*பொருந்தப் பொருத்தி என்தன்னை*
*ஆண்ட கருணைப் பெருங்கடலே*
*அடியேன் உன்றன் அடைக்கலமே (6)*

*இருளைக் கெடுத்தென் எண்ணமெலாம்*
*இனிது முடிய நிரம்புவித்து*
*மருளைத் தொலைத்து மெய்ஞ்ஞான*
*வாழ்வை அடையும் வகைபுரிந்து*
*தெருளைத் தெளிவித் தெல்லாஞ்செய்*
*சித்தி நிலையைச் சேர்வித்தே*
*அருளைக் கொடுத்தென் தனைஆண்டோய்*
*அடியேன் உன்றன் அடைக்கலமே (11)*

பாடல்களைப் பக்தியுடன் பாடி அநுபவித்தால் அடைக்கலத் தத்துவத்தின் உண்மை உள்ளத்தில் படியும்.

105. இறைவரவு இயம்பல்: வள்ளல் பெருமான் தம்மை இறைவன் ஆட்கொண்ட தன்மையை இப்பதிகத்தில் விளக்குகின்றார். பத்துப் பாடல்களைக் கொண்டது இப்பதிகம். பாடல்கள் யாவும் எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பில் அமைந்தவை. நான்கு பாடல்களில் ஆழங்கால் படுவோம்.

*இறைவன்வரு தருணம்இதே இரண்டிலைஅஞ் சலைநீ*
*எள்ளளவும் ஐயமுறேல் எவ்வுலகும் களிப்ப*
*நிறைமொழிகொண் டறைகஇது பழுதுவரா நிறையும்*
*நீவேறு நினைத்தயரேல் நெஞ்சேநான் புகன்ற*
*முறைமொழிஎன் னுடையவன்தான் மொழிந்தமொழி எனக்கோர்*
*மொழிஇலைஎன் உடலாவி முதல்அனைத்தும் தானே*
*பொறையுறக்கொண் டருட்சோதி தன்வடிவும் உயிரும்*
*பொருளும்அளித் தெனைதானாப் புணர்த்தியது காணே (2)*

*உள்ளபடி உரைக்கின்றேன் சத்தியமாம் உரைநீ*
*துணர்ந்திடுக மனனேநீ உலகமெலாம் அறிய*

*வள்ளல்வரு தருணம்இது தருணம்இதே என்று*
*வகுத்துரைத்துத் தெரிந்திடுக மயக்கம்அணுத் துணையும்*
*கொள்ளலைஎன் குருநாதன் அருட்சோதிப் பெருமான்*
*குறிப்பிதுஎன் குறிப்பெனவும் குறியாதே கண்டாய்*
*நள்ளுலகில் இனிநாளைக் குரைத்தும்எனத் தாழ்க்கேல்*
*நாளைதொட்டு நமக்கொழியா ஞானநடக் களிப்பே (6)*

*ஏதும்அறி யாச்சிறிய பயல்களினும் சிறியேன்*
*இப்பெரிய வார்த்தைதனக் கியாணார்என் இறைவன்*
*ஓதுகநீ என்னபடி ஓதுகின்றேன் மனனே*
*உள்ளபடி சத்தியம்ஈ துணர்ந்திடுக நமது*
*தீதுமுழு தும்தவிர்த்தே சித்திஎலாம் அளிக்கத்*
*திருவருளாம் பெருஞ்சோதி அப்பன்வரு தருணம்*
*ஈதிதுவே என்றுலகம் அறியவிரைந் துரைப்பாய்*
*எல்லாரும் களிப்படைந்துள் இசைந்தேத்தி யிடவே (9)*

*தனித்தலைவன் எல்லாஞ்செய் வல்லசித்தன் ஞான*
*சபைத்தலைவன் என்உளத்தே தனித்திருந்துள் உணர்த்தக்*
*கனித்தஉளத் தொடும்உணர்ந்தே உணர்த்துகின்றேன் இதைஓர்*
*கதைஎனநீ நினையேல்மெய்க் கருத்துரைஎன் றறிக*
*இனித்தஅருட் பெருஞ்சோதி ஆணைஎல்லாம் உடைய*
*இறைவன்வரு தருணம்இது சத்தியமாம் இதனைப்*
*பனித்தவுல கவர்அறிந்தே உய்யும்வகை இன்னே*
*பகர்ந்திடுக நாளைஅருட் பரமசுகச் சாறே (10)*

இந்த நான்கு பாடல்களையும் உணர்வுடன் உளங் கரைந்து ஓதினால் நாமும் இறைவரவு உணரலாம்.

106. **திருப்பள்ளி எழுச்சி:** இந்தத் தலைப்பை அணுகியவுடன் பல கருத்துகள் படலம் படலமாக நம் சிந்தையில் குமிழியிடுகின்றன. இது இறைவனைப் பள்ளி எழுந்தருள வேண்டிக் கொள்ளுதல். இதனை முதன் முதல் பாடினவர் மணிவாசகப் பெருமான். திருவாசகம் - *திருப்பள்ளி எழுச்சி (20-வது பதிகம்)* காண்க. இவரை அடுத்து தொண்டரடிப் பொடியாழ்வார் இதே தலைப்

பில் (முதலாயிரம் - தொண்டரடிப் பொடிகளின் பாசுரங்கள் காண்க) பாடியுள்ளார். இந்த இரண்டு அருளாளர்களின் - அருளிச் செயல்களில் ஈடுபட்ட பாரதியார் 'பாரத மாதா திருப்பள்ளி எழுச்சி' என்ற தலைப்பில் பத்துப் பாடல்களைப் பாடியுள்ளார். அருளாளர்கள் உணர்வுகள் அனைத்தும் பாரதியின் பாடல்களில் அமைந்து இசைச் சுவையும் இலக்கியச் சுவையும் கொப்புளித்து நிற்கின்றன. அருளாளர்கள் இறைவனை எழுப்புகின்றனர்; பாரதியோ பாரதமாதாவை எழுப்புகின்றார். முன்னைய இருவர் பாடல்களில் பக்தியுணர்வு தலைகாட்ட பாரதியின் பாடல்களில் நாட்டுப் பற்று தலைதூக்கி நிற்கின்றது. தவிர, இவை யாவும் எண்சீர் விருத்தங்களிலே அமைந்திருப்பதுவும் கூர்ந்து நோக்கத்தக்கது.

வள்ளற் பெருமானின் திருப்பள்ளி எழுச்சி 'அருட்பெருஞ்சோதி'யை எழுப்புவதாக அமைந்துள்ளது. இவரது பாடல்களும் எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பிலேயே அமைந்துள்ளன. ஆகவே, உணர்வுகளும் அங்ஙனமே அமைந்துவிட்டன. நான்கு பாடல்களில் ஆழங்கால் படுவோம்.

*பொழுது விடிந்ததுஎன் உள்ளமென் கமலம்*
*பூத்தது பொன்ஒளி பொங்கிய தெங்கும்*
*தொழுதுநிற் கின்றனன் செய்பணி எல்லாந்*
*சொல்லுதல் வேண்டும்என் வல்லசற் குருவே*
*முழுதும்ஆ னான்என ஆகம வேத*
*முறைகள்எ லாம்மொழி கின்றமுன் னவனே*
*எழுதுதல் அரியசீர் அருட்பெருஞ் சோதி*
*என்தந்தை யேபள்ளி எழுந்தருள் வாயே (1)*

*கல்லாய மனங்களும் கரையப்பொன் ஒளிதான்*
*கண்டது கங்குலும் விண்டது தொண்டர்*

பல்லாரும் எய்தினர் பாடிநின் றாடிப்
பரவுகின் றார்அன்பு விரவுகின் றாராய்
நல்லார்மெய்ஞ் ஞானிகள் யோகிகள் பிறரும்
நண்ணினர் சூழ்ந்தனர் புண்ணிய நிதியே
எல்லாஞ்செய் வல்லஎன் அருட்பெருஞ் சோதி
என்தெய்வ மேபள்ளி எழுந்தருள் வாயே (4)

புன்மாலை இரவெலாம் புணர்ந்தது ஞானப்
பொருப்பின்மேல் பொற்கதிர் பொலிந்தது புலவோர்
சொன்மாலை தொடுத்தனர் துதித்துநிற் கின்றார்
சுத்தசன் மார்க்கசங் கத்தவர் எல்லாம்
மன்மாலை மாலையா வந்துசூழ் கின்றார்
வானவர் நெருங்கினர் வாழிஎன் கின்றார்
என்மாலை அணிந்தஎன் அருட்பெருஞ் சோதி
என்பதி யேபள்ளி எழுந்தருள் வாயே (5)

மதம்பிடித் தவர்எல்லாம் வாய்பிடிப் புண்டு
வந்துநிற் கின்றனர் வாய்திறப் பிப்பான்
கதம்பிடித் தவர்எல்லாம் கடும்பிணி யாலே
கலங்கினர் சூழ்ந்தனர் உலம்புறு கின்றார்
பதம்பிடித் தவர்எல்லாம் அம்பலப் பாட்டே
பாடினர் ஆடினர் பரவிநிற் கின்றார்
இதம்பிடித் தெனையாண்ட அருட்பெருஞ் சோதி
என்அய்ய னேபள்ளி எழுந்தருள் வாயே (8)

பாடல்களை பாவனையோடு பரவி நின்றால் நாமே அருட்பெருஞ்சோதியை எழுப்புவது போன்ற மானச காட்சி நம் மனத்தில் ஏற்பட்டு மகிழலாம்.

132. உலகர்க்கு உய்வகை கூறல்: இப்பகுதியில் பத்துப் பாடல்கள் உள்ளன. தம் எதிர்காலத்தை எண்ணாமலும் பிறவிப் பயனைக் கருதாமலும் மனம்போல் திரிகின்ற உலகரை நோக்குகின்றார். அவர்தம் நிலைக்குப் பரிதாபப்படுகின்றார். சில அறவுரைகளைக் கூறி உய்வகைக்கு ஆற்றுப்படுத்துகின்றார் பத்து எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தங்களில்.

கட்டோடே களத்தோடே வாழ்கின்றோம் என்பீர்
கண்ணோடே கருத்தோடே கருத்தனைக் கருதீர்
பட்டோடே பணியோடே திரிகின்றீர் தெருவில்
பசியோடே வந்தாரைப் பார்க்கவும் நேரீர்
கொட்டோடே முழக்கோடே கோலங்காண் கின்றீர்
குணத்தோடே குறிப்போடே குறிப்பதைக் குறியீர்
எட்டோடே இரண்டும்சேர்த் தெண்ணவும் அறியீர்
எத்துணை கொள்கின்றீர் பித்துல கீரே (1)

அச்சையும் உடம்பையும் அறிவகை அறியீர்
அம்மையும் அப்பனும் ஆர்எனத் தெரியீர்
பச்சையும் செம்மையும் கருமையும் கூடிப்
பலித்தநும் வாழ்க்கையில் பண்பொன்றும் இல்லீர்
பிச்சையிட் டுண்ணவும் பின்படு கின்றீர்
பின்படு தீமையின் முன்படு கின்றீர்
இச்சையில் கண்மூடி எச்சுகம் கண்டீர்
எத்துணை கொள்கின்றீர் பித்துல கீரே (5)

வட்டிமேல் வட்டிகொள் மார்க்கத்தில் நின்றீர்
வட்டியை வளர்க்கின்ற மார்க்கத்தை அறியீர்
பெட்டிமேல் பெட்டிவைத் தாள்கின்றீர் வயிற்றுப்
பெட்டியை நிரப்பிக்கொண் டொட்டியுள் இருந்தீர்
பட்டினி கிடப்பாரைப் பார்க்கவும் நேரீர்
பழங்கஞ்சி ஆயினும் வழங்கவும் நினையீர்
எட்டிபோல் வாழ்கின்றீர் கொட்டிபோல் கிளைத்தீர்
எத்துணை கொள்கின்றீர் பித்துல கீரே (6)

பொய்கட்டிக் கொண்டுநீர் வாழ்கின்றீர் இங்கே
புலைகட்டிக் கொண்டஇப் பொய்யுடல் வீழ்ந்தால்
செய்கட்டி வாழ்கின்ற செருக்கற்று நரகில்
சிறுபுழு ஆகித் திகைத்திடல் அறியீர்
கைகட்டி வாய்பொத்தி நிற்பாரைக் கண்டே
கைகொட்டிச் சிரிக்கின்றீர் கருணைஒன் றில்லீர்
எய்கட்டி இடைமொய்க்கும் ஈயினும் சிறியீர்
எத்துணை கொள்கின்றீர் பித்துல கீரே (9)

*பண்ணாத தீமைகள் பண்ணுகின் றீரே*
*பகராத வன்மொழி பகருகின் றீரே*
*நண்ணாத தீயினம் நண்ணுகின் றீரே*
*நடவாத நடத்தைகள் நடக்கவந் தீரே*
*கண்ணாகக் காக்கின்ற கருத்தனை நினைந்தே*
*கண்ணார நீர்விட்டுக் கருதறி யீரே*
*எண்ணாத தெண்ணவும் நேரும்ஓர் காலம்*
*எத்துணை கொள்கின்றீர் பித்துல கீரே (10)*

இந்த ஐந்து பாடல்களையும் ஊன்றிப் படித்து அநுபவித்தால் நம் குறைகள் நமக்குத் தட்டுப்படும்; நாம் அவற்றை நீக்கி உய்வகை செல்ல வழிதோன்றும்.

133. புனிதகுலம் பெறுமாறு புகலல்: வள்ளல் பெருமான் தொடர்ந்து உலகோரைப் புனித குலம் பெறுமாறு தூண்டுகின்றார். இப்பதிகம் எண்சீர்க் கழி நெடிலடி ஆசிரிய விருத்தங்களால் நடைபெறும் பத்துப் பாடல்களைக் கொண்டது.

*சாதியிலே மதங்களிலே சமயநெறி களிலே*
*சாத்திரச்சந் தடிகளிலே கோத்திரச்சண் டையிலே*
*ஆதியிலே அபிமானித் தலைகின்ற உலகீர்*
*அலைந்தலைந்து வீணேநீர் அழிதல்அழ கலவே*
*நீதியிலே சன்மார்க்க நிலைதனிலே நிறுத்த*
*நிருத்தமிடும் தனித்தலைவர் ஒருத்தர்அவர் தாமே*
*வீதியிலே அருட்சோதி விளையாடல் புரிய*
*மேவுகின்ற தருணம்இது கூவுகின்றேன் உமையே (1)*

*ஆற்றுவெள்ளம் வருவதன்முன் அணைபோட அறியீர்*
*அகங்காரப் பேய்பிடித்தீர் ஆடுதற்கே அறிவீர்*
*கூற்றுவருங் கால்அதனுக் கெதுபுரிவீர் ஐயோ*
*கூற்றுதைத்த சேவடியைப் போற்றவிரும் பீரே*
*வேற்றுரைத்து வினைபெருக்கி மெலிகின்ற உலகீர்*
*வீணுலகக் கொடுவழக்கை விட்டுவிட்டு வம்மின்*
*சாற்றுவக்க எனதுதனித் தந்தைவரு கின்ற*
*தருணம்இது சத்தியஞ்சிற் சத்தியைச்சார் வதற்கே (3)*

*எய்வகைசார் மதங்களிலே பொய்வகைசாத் திரங்கள்*
*எடுத்துரைத்தே எமதுதெய்வம் எமதுதெய்வம் என்று*
*கைவகையே கதறுகின்றீர் தெய்வம்ஒன்றென் றறியீர்*
*கரிபிடித்துக் கலகமிட்ட பெரியரினும் பெரியீர்*
*ஐவகைய பூதவுடம் பழிந்திடில்என் புரிவீர்*
*அழிவுடம்பை அழியாமை ஆக்கும்வகை அறியீர்*
*உய்வகைஎன் தனித்தந்தை வருகின்ற தருணம்*
*உற்றதிவண் உற்றிடுவீர் பெற்றிடுவீர் உவப்பே (5)*

*உடம்புவரு வகைஅறியீர் உயிர்வகையை அறியீர்*
*உடல்பருக்க உண்டுநிதம் உறங்குதற்கே அறிவீர்*
*மடம்புகுபேய் மனத்தாலே மயங்குகின்றீர் மனத்தை*
*வசப்படுத்தீர் வசப்படுத்தும் வழிதுறைகற் றறியீர்*
*இடம்பெறுபொய் வாழ்க்கையிலே இன்பதுன்பம் அடுத்தே*
*எண்ணிஎண்ணி இளைக்கின்றீர் ஏழைஉல கீரே*
*நடம்புரிஎன் தனித்தந்தை வருகின்ற தருணம்*
*நண்ணியது நண்ணுமினோ புண்ணியஞ்சார் வீரே (6)*

*வையகத்தீர் வானகத்தீர் மற்றகத்தீர் நுமது*
*வாழ்க்கைஎலாம் வாழ்க்கைஎன மதித்துமயங் காதீர்*
*வையகத்தே உறுமரண வாதனையைத் தவிர்த்த*
*வாழ்க்கையதே வாழ்க்கைஎன மதித்ததனைப் பெறவே*
*மெய்அகத்தே விரும்பிஇங்கே வந்திடுமின் எனது*
*மெய்ப்பொருளாம் தனித்தந்தை இத்தருணம் தனிலே*
*செய்அகத்தே வளர்ஞான சித்திபுரம் தனிலே*
*சித்தாடல் புரிகின்றார் திண்ணம்இது தானே (9)*

இந்த ஐந்து பாடல்களையும் அகத்திருத்தி ஆழங் கால் பட்டால் வள்ளல் பெருமான் கூறும் அறவுரை - அறிவுரை - நம் அகத்தில் படித்து நாம் உய்ய வழிகாட்டும்.

134. மரணமிலாப் பெருவாழ்வு: இதுவே அடிகளா ரின் உயிராய கொள்கை. இதனை **'சாகாக் கலை'** என்றும் **'சாகாக் கல்வி'** என்றும் அடிகள் குறிப்பிடுவர். இப்பகுதி

யிலுள்ள இருபத்தெட்டுப் பாடல்கள் இக்கொள்கையை விளக்கும். பாடல்கள் யாவும் எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பில் அமைந்தவை. முக்கிய சில பாடல்களில் ஆழங்கால் படுவோம்.

*நினைந்துநினைந் துணர்ந்துணர்ந்து*
*நெகிழ்ந்துநெகிழ்ந் தன்பே*
*நிறைந்துநிறைந் தூற்றெழுங்கண்*
*ணீர்தனால் உடம்பு*
*நனைந்துநனைந் தருளமுதே*
*நன்னிதியே ஞான*
*நடத்தரசே என்னுரிமை*
*நாயகனே என்று*
*வனைந்துவனைந் தேத்துதும்நாம்*
*வம்மின்உல கியலீர்*
*மரணமிலாப் பெருவாழ்வில்*
*வாழ்ந்திடலாம் கண்டீர்*
*புனைந்துரையேன் பொய்புகலேன்*
*சத்தியஞ்சொல் கின்றேன்*
*பொற்சபையில் சிற்சபையில்*
*புகுந்தருணம் இதுவே (1)*

*பணிந்துபணிந் தணிந்தணிந்து*
*பாடுமினோ உலகீர்*
*பரம்பரமே சிதம்பரமே*
*பராபரமே வரமே*
*துணிந்துவந்த வேதாந்த*
*சுத்தஅநு பவமே*
*துரியமுடி அநுபவமே*
*சுத்தசித்தாந் தமதாய்*
*தணிந்தநிலைப் பெருஞ்சுகமே*
*சமரசசன் மார்க்க*
*சத்தியமே இயற்கையுண்மை*
*தனிப்பதியே என்று*

கணிந்துளத்தே கனிந்துநினைந்
துரைத்திடில்அப் பொழுதே
காணாத காட்சிஎலாம்
கண்டுகொள்ளல் ஆமே (3)

கண்டதெலாம் அநித்தியமே
கேட்டதெலாம் பழுதே
கற்றதெலாம் பொய்யேநீர்
களித்ததெலாம் வீணே
உண்டதெலாம் மலமேஉட்
கொண்டதெலாம் குறையே
உலகியலீர் இதுவரையும்
உண்மையறிந் திலிரே
விண்டதனால் என்இனிநீர்
சமரசசன் மார்க்க
மெய்ந்நெறியைக் கடைப்பிடித்து
மெய்ப்பொருள்நன் குணர்ந்தே
எண்டகுசிற் றம்பலத்தே
எந்தைஅருள் அடைமின்
இறவாத வரம்பெறலாம்
இன்பமுற லாமே. (4)

தீமையெலாம் நன்மைஎன்றே
திருவுளங்கொண் டருளிச்
சிறியேனுக் கருளமுதம்
தெளிவளித்த திறத்தை
ஆமயந்தீர்த் தியற்கைஇன்ப
அநுபவமே மயமாய்
அம்பலத்தே விளங்குகின்ற
அருட்பெருஞ்சோ தியைஓர்
ஓமயவான் வடிவுடையார்
உள்ளகத்தே நிறைந்த
ஒருபொருளைப் பெருங்கருணை
உடையபெரும் பதியை

நாமருவி இறவாத
நலம்பெறலாம் உலகீர்
நல்லஒரு தருணம்இது
வல்லைவம்மின் நீரே (6)

விரைந்துவிரைந் தடைந்திடுமின்
மேதினியீர் இங்கே
மெய்மைஉரைக் கின்றேன்நீர்
வேறுநினை யாதீர்
திரைந்துதிரைந் துளுத்தவரும்
இளமைஅடைந் திடவும்
செத்தவர்கள் எழுந்திடவும்
சித்தாடல் புரிய
வரைந்துவரைந் தெல்லாஞ்செய்
வல்லசித்தன் தானே
வருகின்ற தருணம்இது
வரம்பெறலாம் நீவிர்
கரைந்துகரைந் துளம்உருகிக்
கண்களின்நீர் பெருகிக்
கருணைநடக் கடவுளைஉட்
கருதுமினோ களித்தே (8)

ஆசைஉண்டேல் வம்மின்இங்கே
அருட்சோதிப் பெருமான்
அம்மையுமாய் அப்பனுமாய்
அருளும்அரு ளாளன்
ஏசறநீத் தெனைஆட்கொண்
டெண்ணியவா றளித்தான்
எல்லாஞ்செய் வல்லசித்தன்
என்உயிரில் கலந்தான்
தேசுடைய பொதுவில்அருள்
சித்திநடம் புரியத்
திருவுளங்கொண் டெழுந்தருளும்
திருநாள்இங் கிதுவே

மோசஉரை எனநினைத்து
மயங்காதீர் உலகீர்
முக்காலத் தினும்அழியா
மூர்த்தம்அடைந் திடவே (10)

திருநெறிஒன் றேஅதுதான்
சமரசசன் மார்க்கச்
சிவநெறிஎன் றுணர்ந்துலகீர்
சேர்ந்திடுமின் ஈண்டு
வருநெறியில் எனையாட்கொண்
டருளமுதம் அளித்து
வல்லபசத் திகளெல்லாம்
வழங்கியஓர் வள்ளல்
பெருநெறியில் சித்தாடத்
திருவுளங்கொண் டருளிப்
பெருங்கருணை வடிவினொடு
வருதருணம் இதுவே
கருநெறிவீழ்ந் துழலாதீர்
கலக்கமடை யாதீர்
கண்மையினால் கருத்தொருமித்
துண்மைஉரைத் தேனே (12)

நான்உரைக்கும் வார்த்தையெலாம்
நாயகன்றன் வார்த்தை
நம்புமினோ நமரங்காள்
நற்றருணம் இதுவே
வான்உரைத்த மணிமன்றில்
நடம்புரிஎம் பெருமான்
வரவெதிர்கொண் டவன்அருளால்
வரங்கள்எலாம் பெறவே
தேன்உரைக்கும் உளம்இனிக்க
எழுகின்றேன் நீவீர்
தெரிந்தடைந்தென் உடன்எழுமின்
சித்திபெறல் ஆகும்

*ஏனுரைத்தேன் இரக்கத்தால்*
*எடுத்துரைத்தேன் கண்டீர்*
*யானடையும் சுகத்தினைநீர்*
*தான்அடைதல் குறித்தே (19)*

*சேர்ந்திடவே ஒருப்படுமின்*
*சமரசன் மார்க்கத்*
*திருநெறியே பெருநெறியாம்*
*சித்திஎலாம் பெறலாம்*
*ஓர்ந்திடுமின் உண்ணுதற்கும்*
*உறங்குதற்கும் உணர்ந்தீர்*
*உலகம்எலாம் கண்டிடும்ஓர்*
*உளவைஅறிந் திலிரே*
*வார்ந்தகடல் உலகறிய*
*மரணம்உண்டே அந்தோ*
*மரணம்என்றால் சடம்எனும்ஓர்*
*திரணமும்சம் மதியா*
*சார்ந்திடும்அம் மரணமதைத்*
*தடுத்திடலாம் கண்டீர்*
*தனித்திடுசிற் சபைநடத்தைத்*
*தரிசனம்செய் வீரே (21)*

*மற்றறிவோம் எனச்சிறிது*
*தாழ்ந்திருப்பீர் ஆனால்*
*மரணம்எனும் பெரும்பாவி*
*வந்திடுமே அந்தோ*
*சற்றும்அதை நும்மாலே*
*தடுக்கமுடி யாதே*
*சமரசசன் மார்க்கசங்கத்*
*தவர்கள்அல்லால் அதனை*
*எற்றிநின்று தடுக்கவல்லார்*
*எவ்வுலகில் எவரும்*
*இல்லைகண்டீர் சத்தியமீ*
*தென்மொழிகொண் டுலகீர்*

*பற்றியபற் றனைத்தினையும்*
*பற்றறவிட் டருளம்*
*பலப்பற்றே பற்றுமினோ*
*எற்றும்இற வீரே (24)*

இந்த ஒன்பது பாடல்களையும் கவனத்துடன் படித்து அவற்றிலுள்ள கருத்துகளைக் கடைப்பிடித்தால் மரணமிலாப் பெருவாழ்வை அடையலாம்.

137. **திருவடிப் பெருமை:** இது நாற்பத்தைந்து பாடல்களில் பேசப் பெறுகின்றது. எல்லா சமயநெறிக ளிலும் இறைவனது திருவடிப் பெருமை இயம்பப் பெறுகின்றது. திருவடியை 'திருவடிநீழல்' என்று செப்பு வது சமய மரபு. வெயிலில் அலைந்து திரியும் ஒருவர் அதன் வெப்பத்தைத் தாங்க முடியாமல் ஒரு மரநிழலில் ஒதுங்கி ஆறுதல் பெறுகின்றார். உலகாயதச் சிக்கலால் தாக்குண்டு அச்சம்சார வெப்பத்தைப் போக்கிக் கொள் வதற்கு இறைவன் திருவடி நீழலை அடைவர் அடியார் கள். வைணவ சமய நூலாகிய முமுட்சுப் படி இதனை,

*சேஷிபக்கல் சேஷபூதன் இழியும்*
*துறை பிரஜை முலையிலே வாய்*
*வைக்குமாப்போலே (முமுட்சு - 147)*

என்று விளக்கும். பாலுண்ணும் பச்சைக் குழவி (பிரஜை) எங்ஙனம் தாயினுடைய மற்றை உறுப்புகள் யாவையும் தவிர்த்து தான் உயிர் வாழ்வதற்கிடனா யுள்ள அவள் கொங்கையிலே வாய் வைக்கின்றதோ, அங்ஙனமே அடியாரும் (சேஷபூதன்) எம்பெருமானு டைய (சேஷி) பல உறுப்புகளையும் தவிர்த்து, தான் உய்வதற்கு இடனாய் உள்ள அவன் திருவடிகளையே பற்றுகின்றான். முந்திய செயல் குழந்தைக்கு இயல்பு ஆனாற்போல பிந்திய செயல் சேதநனுக்கு இயல்பாக அமைகின்றது.

இப்பகுதியில் பாடல்கள் யாவும் எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பில் அமைந்தவை. இவற்றுள் சில பாடல்களில் ஆழங்கால் படுவோம். இறைவன் பெருமையை பேசுவது அவனது திருவடிப் பெருமையைப் பேசுவதற்கொப்பாகும். சில பாடல்கள் இரண்டையும் தனித்தனியாகப் பேசுகின்றன. பாடல்கள் யாவும் தோழியை நோக்கிப் பேசுவதாக அமைந்துள்ளன.

*திருவாளர் கனகசபைத்*
*திருநடஞ்செய தருள்வார்*
*தேவர்சிகா மணிஎனக்குத்*
*திருமாலை கொடுத்தார்*
*உருவாளர் அருவாகி*
*ஒளியாகி வெளியாய்*
*ஓங்குகின்றார் என்னுடைய*
*உயிர்த்துணைவர் அவர்தம்*
*பெருவாய்மைத் திறம்சிறிதும்*
*பேசமுடி யாதே*
*பேசுவதார் மறைகள்எலாம்*
*கூசுகின்ற என்றால்*
*துருவாமல் இங்கெனக்குக்*
*கிடைத்ததை என்சொல்வேன்*
*சொல்அளவல் லாதசுகம்*
*தோன்றுவதென் தோழி (1)*

இப்பாடல் இறைவனின் பெருமையைப் பொதுவில் பேசுவது. இப்படிப் பல பாடல்கள்.

*திருச்சிற்றம் பலத்தின்பத்*
*திருஉருக்கொண் டருளாம்*
*திருநடஞ்செய் தருளுகின்ற*
*திருவடிகள் இரண்டும்*

அருச்சிக்கும் பேரன்பர்
அறிவின்கண் அறிவாய்
அவ்வறிவில் விளைந்தசிவா
னந்தஅமு தாகி
உருச்சிக்கும் பரநாதத்
தலங்கடந்தப் பாற்சித்
துருவுகடந் திருக்கும்என
உணர்ந்தோர்சொல் வாரேல்
பெருஞ்சித்தெல் லாம்வல்ல
நடராசப் பெருமான்
பெருமையையாம் பேசுவதென்
பேசாய்என் தோழி (7)

வண்கலப்பில் சந்திசெயும்
சத்தியமே ஒருமை
வாய்கொளிமா சத்திஅத
னுள்ஒருகா ரணமாம்
விண்கர்ண சத்திஅத
னுள்தலைமை யாக
விளங்குகுருச் சத்திஅதில்
மெய்ம்மைவடி வான
எண்குணமா சத்திஇந்தச்
சத்திதனக் குள்ளே
இறையாகி அதுஅதுவாய்
இலங்கிநடம் புரியும்
தண்கருணைத் திருவடியின்
பெருமைஅறி வரிதேல்
சாமிதிரு மேனியின்சீர்
சாற்றுவதென் தோழி (25)

பொற்புடைய ஐங்கருவுக்
காதார கரணம்
புகன்றஅறு கோடிஅவைக்
காறிலக்கம் அவற்றுக்

*கற்புறும்ஓர் அறுபதினா*
*யிரம்அவற்றுக் கடையா*
*றாயிரமாங் கவற்றுக்கோர்*
*அறுநூறிங் கிவைக்கே*
*விற்பொலியும் அறுபதுமற்*
*றிவைக்காறிங் கிந்த*
*வியன்கரண சத்திகளை*
*விரிந்துவளக் குவதாய்ச்*
*சிற்பரமாய் மணிமன்றில்*
*திருநடனம் புரியும்*
*திருவடியின் பெருமைஎவர்*
*செப்புவர்காண் தோழி (28)*

*ஏற்றமுறும் ஐங்கருவுக்*
*கியல்பகுதிக் கரணம்*
*எழுகோடி ஈங்கிவற்றுக்*
*கேழ்இலக்கம் இவைக்கே*
*தோற்றமுறும் எழுபதினா*
*யிரம்வெற்றுக் கெழுமை*
*துன்னியநூ றிவற்றினுக்குச்*
*சொல்லும்எழு பதுதான்*
*ஆற்றலுறும் இவைதமக்கோர்*
*ஏழாம்இக் கரணம்*
*அனைத்தினையும் தனித்தனியே*
*தோற்றநிலை பொருத்திச்*
*சாற்றரிய வடிவுவண்ணம்*
*சுவைப்பயன்உண் டாக்கும்*
*சாமிதிரு வடிப்பெருமை*
*சாற்றுவதார் தோழி (29)*

*விளங்கியஐங் கருச்சத்தி*
*ஓர்ஆனந்தங் கருவில்*
*விளைகின்ற சத்திகள்ஓர்*
*அனந்தம்விளை வெல்லாம்*

*வளம்பெறவே தருகின்ற*
*சத்திகள்ஓர் அனந்தம்*
*மாண்படையத் தருவிக்கும்*
*சத்திகள்ஓர் அனந்தம்*
*உளங்கொளநின் றதிட்டிக்கும்*
*சத்திகள்ஓர் அனந்தம்*
*ஓங்கியஇச் சத்திகளைத்*
*தனித்தனியே இயக்கித்*
*தளங்கொளஈண் டவ்வவற்றிற்*
*குட்புறம்நின் றொளிரும்*
*சாமிதிரு வடிப்பெருமை*
*சாற்றுவதார் தோழி (30)*

இந்த ஐந்து பாடல்களும் இறைவன் திருவடிப் பெருமையை இயம்பித் திகழ்வன. எல்லாப் பாடல்களுமே படிப்போரை அநுபூதி நிலைக்கு இட்டுச் செல்வனவாகத் திகழ்கின்றன.

142. அநுபவமாலை: இது நூறு பாடல்களால் அடிகளின் இறையநுபவத்தை இயம்புவனவாகும். பாடல்கள் யாவும் எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பில் அமைந்தவை. இவற்றுள் சில தோழிக்குக் கூறுவனவாகவும் அமைந்துள்ளன. அனைத்தும் அற்புதமான பாடல்கள்.

*அம்பலத்தே திருநடஞ்செய்*
*அடிமலர்என் முடிமேல்*
*அணிந்துகொண்டேன் அன்பொடும்என்*
*ஆருயிர்க்கும் அணிந்தேன்*
*எம்பரத்தே மணக்கும்அந்த*
*மலர்மணத்தைத் தோழி*
*என்உரைப்பேன் உரைக்கஎன்றால்*
*என்னளவன் றதுவே*

*வம்பிசைத்தேன் அன்றடிநீ*
*என்அருகே இருந்துன்*
*மணிநாசி அடைப்பதனைத்*
*திறந்துமுகந் தறிகாண்*
*நம்புறுபார் முதல்நாத*
*வரையுளநாட் டவரும்*
*நன்குமுகந் தனர்வியந்தார்*
*நன்மனம்ஈ தெனவே (1)*

*கண்உறங்கேன் உறங்கினும்என்*
*கணவரொடு கலக்கும்*
*கனவேகண் டுளமகிழ்வேன்*
*கனவொன்றோ நனவும்*
*எண்அடங்காப் பெருஞ்சோதி*
*என்இறைவர் எனையே*
*இணைந்திரவு பகல்காணா*
*தின்புறச்செய் கின்றார்*
*மண்உறங்கும் மலைஉறங்கும்*
*வளைகடலும் உறங்கும்*
*மற்றுளஎல் லாம்உறங்கும்*
*மாநிலத்தே நமது*
*பெண்உறங்காள் எனத்தாயர்*
*பேசிமகிழ் கின்றார்*
*பெண்கள்எலாம் கூசுகின்றார்*
*பெருந்தவம்செய் கிலரே (2)*

இஃது அகத்துறையில் அமைந்த பாடல். அடிகள் - தலைவி; தலைவர் - அருட்பெருஞ்சோதி; தாயர் - பக்தர்கள்; வேறு பெண்கள் - நம் போலியர். இவ்வாறு கருதி பாட்டைப் படித்து இறையநுபவம் பெற வேண்டும்.

*அன்னம்உண அழைக்கின்றாய்*
*தோழிஇங்கே நான்தான்*

*அம்பலத்தே ஆடுகின்ற*
*அண்ணல்அடி மலர்த்தேன்*
*உன்னைநினைந் துண்டேன்என்*
*உள்ளகத்தே வாழும்*
*ஒருதலைமைப் பெருந்தலைவர்*
*உடையஅருட் புகழாம்*
*இன்னமுதில் என்னுடைஅன்*
*பென்னும்நறுங் கனியின்*
*இரதமும்என் தனிக்கணவர்*
*உருக்காட்சி எனும்ஓர்*
*கன்னல்உளே தனித்தெடுத்த*
*தேம்பாகும் கலந்தே*
*களித்துண்டேன் பசிசிறிதும்*
*கண்டிலன்உள் ளகத்தே (6)*

இதுவும் அகத்துறைப் பாடலே. இங்கும் அடிகள் - தலைவி; தோழி - தலைவி; கருத்தொத்த பக்தை; அடிமலர்த்தேன் - இறையநுபவம்; இவ்வாறு கருதி பாட்டை அநுபவித்தால் நாமும் அடிகளாரின் அநுபவத்தைப் பெறலாம்.

*கற்பூரம் மணக்கின்ற தென்னுடம்பு முழுதும்*
*கணவர்திரு மேனியிலே கலந்தமனம் அதுதான்*
*இற்பூத மணம்போலே மறைவதன்று கண்டாய்*
*இயற்கைமணம் துரியநிறை இறைவடிவத் துளதே*
*பொற்பூவும் நறுமணமும் கண்டறியார் உலகர்*
*புண்ணியனார் திருவடிவில் நண்ணியவா றதுவே*
*நற்பூதி அணிந்ததிரு வடிவுமுற்றும் தோழி*
*நான்கண்டேன் நான்புணர்ந்தேன் நான்அதுஆ னேனே (10)*

இதில் தலைவி (அடிகள்) தன் அநுபவத்தை (கற்பூர மணம்) தோழிக்கு, பக்தை ஒருத்திக்கு, தன்புணர்ச்சியை (இறைவனுடன் கலப்பை) எடுத்தோதி மகிழ்கின்றாள்.

*தனித்தலைவர் வருகின்ற தருணம்இது தோழி*
*தனிக்களனை விடுநீயும் இனித்தொருபால் இருத்தி*
*இனித்தசுவைத் திரள்கலந்த திருவார்த்தை நீயும்*
*இன்புறக்கேட் டுளங்களிப்பாய் இதுசாலும் நினக்கே*
*மனித்தர்களே வானவரோ மலரயனோ மாலோ*
*மற்றையரோ என்புகல்வேன் மகேசுரர்ஆ தியரும்*
*தனித்தஒரு திருவார்த்தை கேட்பதற்கே கோடித்*
*தவஞ்செய்து நிற்கின்றார் தவஞ்செய்த நிலத்தே (18)*

தலைவி தோழிக்குச் சொல்வதுபோல் அமைந்துள்ளது. தனக்கும் தலைவருக்கும் இடையே நடைபெறும் 'திருவார்த்தையை' அவள் கேட்டாலும் போதும்; ஆனால், வானவர் முதலியோர் இந்தத் திருவார்த்தையைச் செவிமடுக்க கோடித்தவம் செய்து நிற்கின்றனர் என்றும் கோடிட்டுக் காட்டுகின்றார். இங்கு தலைவி நிலையில் இருப்பது அடிகளே.

*திருவாளர் பொற்சபையில்*
*திருநடஞ்செய் தருள்வார்*
*சிற்சபையார் என்தனக்குத்*
*திருமாலை கொடுத்தார்*
*உருவாளர் அருவாகி*
*ஒளியாகி வெளியாய்*
*ஓங்குகின்றார் என்னுடைய*
*உயிர்த்துணைவர் அவர்தம்*
*பெருவாய்மைத் திருவருளே*
*பெருவாழ்வென் றுணர்ந்தோர்*
*பேசியமெய் வாசகத்தின்*
*பெருமையைஇன் றுணர்ந்தேன்*
*துருவாத எனக்கிங்கே*
*அருள்நினைக்கும் தோறும்*
*சொல்லளவல் லாதசுகம்*
*தோன்றுவதேன் தோழி (34)*

கூசுகின்ற தென்னடிநான்
அம்பலத்தே நடிக்கும்
கூத்தாடிக் கணவருக்கே
மாலையிட்டாய் எனவே
ஏசுகின்றார் ஆரடியோ
அண்டபகிர் அண்டத்
திருக்கின்ற சத்தர்களும்
சத்திகளும் பிறரும்
பேசுகின்ற வார்த்தை…
…அருட் கூத்தின்
பெருமையலால் வேறொன்றும்
பேசுகின்ற திலையே
வீசுகின்ற பெருஞ்சோதித்
திருக்கூத்தின் திறமே
வேதமுடன் ஆகமங்கள்
விளம்புகின்ற தன்றே (45)

மாதேகேள் அம்பலத்தே
திருநடஞ்செய் பாத
மலர்அணிந்த பாதுகையின்
புறத்தெழுந்த அணுக்கள்
மாதேவர் உருத்திரர்கள்
ஒருகோடி கோடி
வளைபிடித்த நாரணர்கள்
ஒருகோடி கோடி
போதேயும் நான்முகர்கள்
ஒருகோடி கோடி
புரந்தரர்கள் பலகோடி
ஆகஉருப் புனைந்தே
ஆதேயர் ஆகிஇங்கே
தொழில்புரிவார் என்றால்
ஐயர்திரு வடிப்பெருமை
யார்உரைப்பார் தோழி (62)

*விடிந்ததுபேர் ஆணவமாம்*
*கார்இருள்நீங் கியது*
*வெய்யவினைத் திரள்எல்லாம்*
*வெந்ததுகாண் மாயை*
*ஒடிந்ததுமா மாயைஒழிந்*
*ததுநிரைநீர்த் ததுபேர்*
*தனிஉதயம் செய்ததினித்*
*தலைவர்வரு தருணம்*
*திடம்பெற்றநா[illegible]க்கிருக்க*
*வேண்டுவதா தலினா[illegible]*
*தேமொழிநீ புறத்திருமா*
*தேவர்வந்த உடனே*
*உடம்புறவே நான்அவரைக்*
*கலந்தவரும் நானும்*
*ஒன்றான பின்னர்உனை*
*அழைக்கின்றேன் உவந்தே (71)*

*மதம்எனும்பேய் பிடித்தாட்ட*
*ஆடுகின்றோர் எல்லாம்*
*மன்றிடத்தே வள்ளல்செயும்*
*மாநடங்காண் குவரோ*
*சதம்எனவே இருக்கின்றார்*
*படுவதறிந் திலரே*
*சாகாத கல்விகற்கும்*
*தரம்இவர்க்கும் உளதோ*
*பதம்அறியா இந்தமத*
*வாதிகளோ சிற்றம்*
*பலநடங்கண் டுய்ந்தேனைச்*
*சிலபுகன்றார் என்றாய்*
*சுதைமொழிநீ அன்றுசொன்ன*
*வார்த்தைஅன்றோ இன்று*
*கோக்கிரஞ்செய் தாங்காங்கே*
*தொழுகின்றார் காணே (86)*

நான்பசித்த போதெல்லாம்
தான்பசித்தார் ஆகி
நல்லதிரு அமுதளித்தே
அல்லல்பசி தவிர்த்தே
ஊன்பதித்த என்னுடைய
உளத்தேதம் முடைய
உபயபதம் பதித்தருளி
அபயம்எனக் களித்தார்
வான்பதிக்கும் கிடைப்பரியார்
சிற்சபையில் நடிக்கும்
மணவாளர் எனைப்புணர்ந்த
புறப்புணர்ச்சித் தருணம்
தான்பதித்த பொன்வடிவம்
தனைஅடைந்து களித்தேன்
சாற்றும்அகப் புணர்ச்சியின்ஆம்
ஏற்றம்உரைப் பதுவே (94)

புறப்புணர்ச்சி என்கணவர்
புரிந்தரு ணந்தான்
புத்தமுதம் நான்உண்டு
பூரித்த தருணம்
சிறப்புணர்ச்சி மயமாகி
அகப்புணர்ச்சி அவர்தாம்
செய்ததரு ணம்சுகத்தைச்
செப்புவதெப் படியோ
பிறப்புணர்ச்சி விடயமிலை
சுத்தசிவா னந்தப்
பெரும்போகப் பெருஞ்சுகந்தான்
பெருகிஎங்கும் நிறைந்தே
மறப்புணர்ச்சி இ[illegible]ந்த
நான்அதுவாய் அதுஎன்
மயமாய்ச்சின் மயமாய்த்தன்
மயமான நிலையே (98)

இத்துடன் அநுபவ மாலை நிறைவு பெறச் செய்கி றோம். இதனைக் கடைப்பிடிப்பு முறை அகப்பொருள் முறை. சங்கப் புலவர்களும் வள்ளுவர் பெருமானும் கண்ட முறை. தம் அநுபவம் முழுவதும் ஆடலரசன் அநுபவமே என்பதை அச்சுறுத்தி நிறுவுகின்றார் அடி கள் என்பதைப் பாடல்களில் நம் மனத்தைப் பறிகொ டுத்த நாம் அறிய முடிகின்றது.

144. சத்திய அறிவிப்பு: அருட்பாவின் நவநீதம் போன்ற இதனை நான்கு பாடல்களில் நிறைவு செய்கின் றார் அடிகள். பாடல்கள் யாவும் எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பில் இயன்றவை. நான்கையும் ஈண்டு தருவோம்.

*ஐயன்அருள் வருகின்ற*
*தருணம்இது கண்டீர்*
*ஐயம்இலை ஐயம்இலை*
*ஐயன்அடி ஆணை*
*மெய்யன்எனை ஆட்கொண்ட*
*வித்தகன்சிற் சபையில்*
*விளங்குகின்ற சித்தன்எலாம்*
*வல்லஒரு விமலன்*
*துய்யன்அருட் பெருஞ்சோதி*
*துரியநட நாதன்*
*சுகஅமுதன் என்னுடைய*
*துரைஅமர்ந்திருக்க*
*வையமிசைத் திருக்கோயில்*
*அலங்கரிமின் விரைந்தே*
*மணியாலும் பொன்னாலும்*
*மலராலும் வியந்தே (1)*

*தனித்தலைமைப் பெரும்பதிஎன்*
*தந்தைவரு கின்ற*
*தருணம்இது சத்தியம்காண்*
*சகதலத்தீர் கேண்மின்*
*இனித்தநறும் கனிபோன்றே*
*என்னுளம்தித் திக்க*
*இன்னமுதம் அளித்தென்னை*
*ஏழுலகும் போற்ற*
*மனித்தஉடம் பிதைஅழியா*
*வாய்மைஉடம் பாக்கி*
*மன்னியசித் தெல்லாம்செய்*
*வல்லபமும் கொடுத்தே*
*கனித்தசிவா னந்தம்எனும்*
*பெரும்போகம் தனிலே*
*களித்திடவைத் திடுகின்ற*
*காலையும்இங் கிதுவே (2)*

*சத்தியவான் வார்த்தைஇது*
*தான்உரைத்தேன் கண்டாய்*
*சந்தேகம் இலைஇதனில்*
*சந்தோடம் உறுவாய்*
*இத்தினமே அருட்சோதி*
*எய்துகின்ற தினமாம்*
*இனிவரும்அத் தினங்கள்எலாம்*
*இன்பம்உறு தினங்கள்*
*சுத்தசிவ சன்மார்க்கம்*
*துலங்கும்எலா உலகும்*
*தூய்மைஉறும் நீஉரைத்த*
*சொல்அனைத்தும் பலிக்கும்*
*செத்தவர்கள் எழுந்துலகில்*
*திரிந்துமகிழ்ந் திருப்பார்*
*திருவருட்செங் கோல்எங்கும்*
*செல்லுகின்ற தாமே (3)*

*என்சாமி எனதுதுரை*
*என்உயிர்நா யகனார்*
*இன்றுவந்து நான்இருக்கும்*
*இடத்தில்அமர் கின்றார்*
*பின்சாரும் இரண்டரைநா*
*ழிகைக்குள்ளே எனது*
*பேர்உடம்பில் கலந்துளத்தே*
*பிரியாமல் இருப்பார்*
*தன்சாதி உடையபெருந்*
*தவத்தாலே நான்தான்*
*சாற்றுகின்றேன் அறிந்திதுதான்*
*சத்தியசத் தியமே*
*பின்சாரும் இடைமிடவாய்*
*என்மொழிநின் தனக்கே*
*வெளியாகும் இரண்டரைநா*
*ழிகைக்கடந்த போதே (4)*

இவை யாவும் தன்நிலையில் இருந்து அடிகள் அநுபவித்தவை (1-144 வரை)

## 2. அகப்பொருட் பதிகங்கள்

ஆறாம் திருமுறையில் அகப்பொருட் பதிகங்களாகப் பதினாறு உள்ளன. இவற்றுள் 'அநுபவமாலை' என்ற பகுதியை முன்னர் விளக்கியுள்ளோம். ஏனையவற்றுள் ஒரு சிலவற்றை ஈண்டுக் காண்போம்.

58. நற்றாய் கூறல்: நற்றாய் - தலைவியைப் பெற்ற தாய். தலைவி - அடிகள். இப்பதிகத்தில் எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பில் அமைந்த பத்துப் பாடல்கள் உள்ளன. பாடல்கள் யாவும் 'வரத்தினால் நான்பெற்ற மகளே' என்று இறுகின்றன.

*காதல்கைம் மிகுந்த தென்செய்வேன் எனைநீ*
*கண்டுகொள்ள கணவனே என்றாள்*
*ஓதலுன் புகழே அன்றிநான் ஒன்றும்*
*உவந்திலேன் உண்மையீ தென்றாள்*
*பேதைநான் பிறிதோர் புகலிலேன் செய்த*
*பிழையெலாம் பொறுத்தருள் என்றாள்*
*மாதய வுடைய வள்ளலே என்றாள்*
*வரத்தினால் நான்பெற்ற மகளே (1)*

*பூமியோ பொருளோ விரும்பிலேன் உன்னைப்*
*புணர்ந்திட விரும்பினேன் என்றாள*
*காமிஎன் றெனைநீ கைவிடேல் காமக்*
*கருத்தெனக் கில்லைகாண் என்றாள்*
*சாமிநீ வரவு தாழ்த்திடில் ஐயோ*
*சற்றுநான் தரித்திடேன் என்றாள்*
*மாமிகு கருணை வள்ளலே என்றாள்*
*வரத்தினாள் நான்பெற்ற மகளே (4)*

*மெலிந்தஎன் உளத்தை அறிந்தனை தயவு*
*மேவிலை என்னையோ என்றாள்*
*நலிந்தபோ தின்னும் பார்த்தும்என் றிருத்தல்*
*நல்லவர்க் கடுப்பதோ என்றாள்*
*மலிந்த இவ்வுலகம் வாய்ப்பதர் தூற்ற*
*வைத்தல்உன் மரபல என்றாள்*
*வலிந்தெனைக் கலந்த வள்ளலே என்றாள்*
*வரத்தினால் நான்பெற்ற மகளே (5)*

இப்பாடல்களில் அடிகள் 'நற்றாய் கூற்றாக' தன் பக்திக் காதலைத் தெரிவிக்கின்றார் 'வலிந்தெனைக் கலந்த வள்ளலே' என்பதனால் 'இயற்கைப் புணர்ச்சி' நடைபெற்று விட்டதை உறுதிப் படுத்துகின்றாள்.

59. **பாங்கி தலைவி பெற்றி உரைத்தல்:** இதில் தோழி கூற்றாக தலைவியின் (அடிகளின்) பக்திநிலை தெரிவிக் கப் பெறுகின்றது. இதில் எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பில் பத்துப் பாடல்கள் உள்ளன.

*அம்மதவேள் கணைஒன்றோ
ஐங்கணையும் விடுத்தான்
அருள்அடையும் ஆசையினால்
ஆருயுர்தான் பொறுத்தாள்
இம்மதமோ சிறிதும்இலாள்
கலவியிலே எழுந்த
ஏகசிவ போகவெள்ளத்
திரண்டுபடாள் எனினும்
எம்மதமோ எக்குலமோ
என்றுநினைப் புளதேல்
இவள்மதமும் இவள்குலமும்
எல்லாமும் சிவமே
சம்மதமோ தேவதிரு
வாய்மலர வேண்டும்
சபையில்நடம் புரிகின்ற
தனிப்பெரிய துரையே (1)*

*தத்துவருந் தத்துவம்செய்
தலைவர்களும் பிறரும்
தனித்தனியே வலிந்துவந்து
தன்எதிர்நிற் கின்றார்
எத்துணையும் மற்றவரை
ஏறெடுத்துப் பாராள்
இருவிழிகள் நீர்சொரிவாள்
என்னுயிர்நா யகனே
ஒத்துயிரில் கலந்துகொண்ட
உடையாய்என் றுமையே
ஓதுகின்றாள் இவள்அளவில்
உத்தமரே உமது
சித்தம்எது தேவர்திரு
வாய்மலர வேண்டும்
சிற்சபையில் பொற்சபையில்
திகழ்பெரிய துரையே (5)*

*என்னுயிரில் கலந்துகொண்டார்*
*வரில்அவர்தாம் இருக்க*
*இடம்புனைக என்கின்றாள்*
*இச்சைமய மாகித்*
*தன்னுயிர்தன் உடல்மறந்தாள்*
*இருந்தறியாள் படுத்தும்*
*தரித்தறியாள் எழுந்தெழுந்து*
*தனித்தொருசார் திரிவாள்*
*அன்னமுண அழைத்தாலும்*
*கேட்பதிலாள் உலகில்*
*அணங்கனையார் அதிசயிக்கும்*
*குணங்கள்பல பெற்றாள்*
*மின்னில்வளை விழைவதுண்டேல்*
*வாய்மலர வேண்டும்*
*மெய்ப்பொதுவில் நடம்புரியும்*
*மிகப்பெரிய துரையே (9)*

தோழி தன் தலைவியின் (அடிகளின்) பக்திக் காதலை இறைவனுக்கு எடுத்துக் கூறுவதாக பாடல்கள் நடைபெறுகின்றன. இங்குத் தோழி கூற்றாக தலைவியின் (அடிகளின்) பக்திக் காதலை அறிய முடிகின்றது.

141. தலைவி கூறல்: இதில் தலைவி கூற்றாக தன் (அடிகளின்) காதலை எடுத்துரைப்பதாகப் பாடல்கள் அமைந்துள்ளன. இதில் எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பில் பத்துப் பாடல்கள் உள்ளன. பாடல்களின் இறுதியடிகள் 'சத்தியம்சத் தியம்மாதே சத்தியம் சத் தியமே' என்று அமைகின்றன.

*தந்தேகம் எனக்களித்தார்*
*தன்அருளும் பொருளும்*
*தம்மையும்இங் கெனக்களித்தார்*
*எம்மையினும் பிரியார்*

எந்தேகம் அதிற்புகுந்தார்
என்உளத்தே இருந்தார்
என்உயிரில் கலந்தநடத்
திறையவர்கா லையிலே
வந்தேஇங் கமர்ந்தருள்வர்
ஆதலினால் விரைந்தே
மாளிகையை அலங்கரித்து
வைத்திடுதி இதற்குச்
சந்தேகம் இல்லைஎன்றன்
தனித்தலைவர் வார்த்தை
சத்தியம்சத் தியம்மாதே
சத்தியம்சத் தியமே (1)

கிளைஅளந்த மறையாலும்
நிச்சயிக்கக் கூடாக்
கிளர்ஒளியார் என்அளவில்
கிடைத்ததனித் தலைவர்
அளையஎனக் குணர்த்தியதை
யான்அறிவேன் உலகர்
அறிவாரோ அவர்உரைகொண்
டையம்உறேல் இங்கே
இளைவடையேன் மாளிகையை
மங்கலங்கள் நிரம்ப
இனிதுபுனைந் தலங்கரிப்பாய்
காலைஇது கண்டாய்
தளர்வறச்சிற் றம்பலத்தே
நடம்புரிவார் ஆணை
சத்தியம்சத் தியம்மாதே
சத்தியம்சத் தியமே (7)

ஐயர்எனக் குள்ளிருந்திங்
கறிவித்த வரத்தை
யார்அறிவார் நான்அறிவேன்
அவர்அறிவார் அல்லால்

*பொய்உலகர் அறிவாரோ*
*புல்லறிவால் பலவே*
*புகல்கின்றார் அதுகேட்டுப்*
*புத்திமயக் கடையேல்*
*மெய்யர்எனை ஆளுடையார்*
*வருகின்ற தருணம்*
*மேவியது மாளிகையை*
*அலங்கிரப்பாய் விரைந்தே*
*தையல்ஒரு பாலுடைய*
*நடத்திறைவர் ஆணை*
*சத்தியம்சத் தியம்மாதே*
*சத்தியம்சத் தியமே (9)*

இவற்றில் தலைவியே (அடிகளே) தன் கூற்றாக இறைவன் தம் மேல் வைத்துள்ள நேசத்தை அம்பலப் படுத்தி மகிழ்வதை அறியலாம். ஏனையவை யாவும் இம்மூன்று வழியாகவே நடைபெறுவதால் அவை விடப்பெற்றன.

இவ்விடத்தில் வைணவ உரையாசிரியர்கள் அகப் பொருள் பாசுரங்களை **'தோழி பாசுரம்'**, **'தாய் பாசுரம்'**, 'மகள் பாசுரம்' என வகைப்படுத்தி அவற்றிற்கு அற்புத மான தத்துவங்கள் உரைத்துள்ளமையை நினைவு கூர்ந்து மகிழ வேண்டும்.

## 3. இசைப் பாடல்கள்

இவ்வகையில் இத்திருமுறையில் முப்பத்தேழு பதி கங்கள் உள்ளன. இவை பல்வேறு வடிவங்களிலும் அமைந்து இசைக் கடலைக் கடக்க உதவுகின்றன. அவை சிவபதி விளக்கம் (62) தொடங்கி முரசறைதல் (124) ஈறாக அமைந்துள்ளன. இவற்றுள் பல சிந்து வகைப் பாடல்களே அதிகமாக உள்ளன. இவற்றை யெல்லாம் இசைஞானமுள்ளவர்கள் படித்து, பாடி, அநுபவிக்க வேண்டியவை. எடுத்துக்காட்டாக 'ஞான மருந்து' (78) என்ற தலைப்பில் உள்ளது

*ஞான மருந்திம் மருந்து - சுகம்*
*நல்கிய சிற்சபா நாத மருந்து*

என்று 'பல்லவி'யாகத் தொடங்கி 33 கண்ணிகளில் முடிகின்றன. அவற்றுள் சில கண்ணிகள்:

*எல்லாம்செய் வல்ல மருந்து - என்னுள்*
*என்றும் விடாமல் இனிக்கு மருந்து*
*சொல்லால் அளவா மருந்து - சுயஞ்*
*சோதி அருட்பெருஞ் சோதி மருந்து* *ஞான (2)*

*அன்பர்க் கெளிய மருந்து - மற்றை*
*ஐவர்க்கும் காண்டற் கரிய மருந்து*
*என்பற்றில் ஓங்கு மருந்து - என்னை*
*இன்ப நிலையில் இருத்து மருந்து* *ஞான (5)*

*என்னைத்தா னாக்கு மருந்து - இங்கே*
*இறந்தாரை எல்லாம் எழுப்பு மருந்து*
*துன்னுமெய்ச் சோதி மருந்து - அருட்*
*சோதியால் என்னைத் துலக்கு மருந்து* *ஞான (19)*

*உன்னற் கரிதா மருந்து - எனக்*
*குள்ளும் புறத்தும் உலாவு மருந்து*
*தன்னந் தனித்த மருந்து - சுத்தச்*
*சாக்கிரா தீதச் சபேச மருந்து* *ஞான (28)*

*ஆரணத் தோங்கு மருந்து - அருள்*
*ஆகம மாகிஅண் ணிக்கு மருந்து*
*காணம் காட்டு மருந்து - எல்லாம்*
*கண்ட மருந்தென்னுள் கொண்ட மருந்து ஞான (32)*

என்பவை காண்க.

108. அருள் அற்புதம்: இதுவும் சிந்துப் பாடல் களில் அமைந்தது.

*அற்புதம் அற்புத மே - அருள்*
*அற்புதம் அற்புத மே*

என்று 'பல்லவி'யில் தொடங்கி எட்டுக் கண்ணிகளில் முடிகின்றன. அவற்றுள்,

*செத்தார் எழுகின்ற திருநாள் அடுத்தது*
*சிவநெறி ஒன்றே எங்கும்தலை எடுத்தது*
*இத்தா ரணிமுதல் வானும் உடுத்த*
*இறவா வரந்தான் எனக்குக் கொடுத்தது அற்புதம் (2)*

*சாதி சமயம் சழக்கெலாம் அற்றது*
*சன்மார்க்க ஞான சபைநிலை பெற்றது*
*மேதியிற் சாகாத வித்தையைக் கற்றது*
*மெய்யருட் சோதிஎன் உள்ளத்தில் உற்றது அற்புதம் (8)*

இவை இரண்டு கண்ணிகள்.

110. அருட்காட்சி: இதுவும் 'சிந்து'ப் பாடலில் இயன்றது. நாலு பாடல்களால் முடிவது.

*வானத்தின் மீது மயிலாடக் கண்டேன்*
*மயில்குயில் ஆச்சுத டி - அக்கச்சி*
*மயில்குயில் ஆச்சுத டி அற்புதம் (1)*
*(மயில் - விந்து; குயில் - நாதம்)*

*துள்ளலை விட்டுத் தொடங்கினேன் மன்றாடும்*
*வள்ளலைக் கண்டேன டி - அக்கச்சி*
*வள்ளலைக் கண்டேன டி அற்புதம் (2)*

*சாதி சமயச் சழக்கைவிட் டேன்அருட்*
*சோதியைக் கண்டேன டி - அக்கச்சி*
*சோதியைக் கண்டேன டி அற்புதம் (3)*

*பொய்யை ஒழித்துப் புறப்பட்டேன் மன்றாடும்*
*ஐயரைக் கண்டேன டி - அக்கச்சி*
*ஐயரைக் கண்டேன டி அற்புதம் (4)*

119. விரைசேர் சடையாய்: இதுவும் 'சிந்து'வில் அமைந்த நாலு பாடல்களைக் கொண்டது.

*உரைசேர் சடையாய் விடையாய் உடையாய்*
*விகிர்தா விபவா விமலா அமலா*
*வெஞ்சேர் பஞசார் நஞ்சார் கண்டா விம்பசி*
*தம்பர னே (1)*

*அரைசே குருவே அமுதே சிவமே*
*அணியே மணியே அருளே பொருளே*
*அந்தோ வந்தாள் எந்தாய் எந்தாய் அம்பல*
*நம்பதி யே (2)*

*உருவே உயிரே உணர்வே உறவே*
*உரையே பொருளே ஒளியே வெளியே*
*ஒன்றே என்றே நன்றே தந்தாய் அம்பர*
*நம்பர னே (3)*

*அருவே திருவே அறிவே செறிவே*
*அதுவே இதுவே அடியே முடியே*
*அந்தோ வந்தாள் எந்தாய் எந்தாய் அம்பல*
*நம்பதி யே (4)*

இத்துடன் இசைப் பாடல்பற்றிய குறிப்புகளை நிறைவு செய்வோம்.

## 9. நிறைவுரை

வள்ளல் பெருமான் இளமைக்கால வாழ்க்கையை உற்று நோக்கினால் அவர் விட்ட குறையைத் தொட்டு நிறைவேற்றற்கென்றே பிறந்தவர் என்பதும், இறைவன் வருவிக்க இப்புவியில் தோன்றினவர் என்பதும் தெளிவாகின்றன. தமையனார் சபாபதிப் பிள்ளையவர்களிடமும் காஞ்சி சபாபதி முதலியாரிடமும் கற்றது குறைவு; முருக உபாசனைமூலம் கற்றது அதிகம். அவன் தமிழ்க் கடவுள் அல்லவா? ஓதாது உணர்ந்த பெருமான் முருகப் பெருமானிடம் 'கற்றதும் கேட்டதும்' அவனருளாலேயே என்பது பெறப்படுகின்றது. ஒரு வயது நிரம்புவதற்கு முன்னே 'சிதம்பர இரகசியம்' கண்டவரல்லவா?

இளவயதிலேயே பாடல் இயற்றும் பாங்கும் கைவரப் பெற்றவராதலாலும் பன்னிரண்டு அகவையிலேயே ஞானவாழ்க்கையைத் தொடங்கியவராதலாலும் பாடல்கள் சம்பந்தப் பெருமான் வாக்கில் வந்ததுபோல் இவர் வாக்கிலும் இயல்பாகவே வந்தன.

திருக்குறள் பயிற்சியும் தேவார திருவாசக ஈடுபாடும் வள்ளல் பெருமானைச் சிறந்த பக்திமானாக மாற்றிவிட்டதை இவர்தம் பாடல்களால் அறிய முடிகின்றது. யாப்பு வகைகள் அனைத்தும் கும்மி கொட்டிக் குதூலிப்பதைக் கண்டு மகிழலாம். பல்வேறு வகை இசைப் பாடல்கள் இவர் நாக்கில் தாண்டவமாடி வாக்கில் வெளிவருவதைக் காணும் நம்மை வியப்புக் கடலில் ஆழ்த்துகின்றது. தில்லைச் சிற்றம்பலவன் திருவருள்

இவருக்கு நிறைய இருந்தமையால் ஆடலரசனைப் பற்றிய பாடல்கள் இவர்தம் அருளிச் செயல்களில் அதிகமாகவே தலைக் காட்டுகின்றன. திருமந்திரப் பயிற்சி இவர் தம் உள்ளொளியைப் பெருக்கி இருக்க வேண்டும்.

இறையருள்தான் இவரைச் சமரச சுத்த சன்மார்க்கத்தைக் காணவைத்தது.

*அன்றே என்னை அடிய னாக்கி*
*யாண்ட சோதியே*
*அதன்பின் பிள்ளையாக்கி யருளில்*
*களித்த சோதியே*
*நன்றே மீட்டு நேய னாக்கி*
*நயந்த சோதியே*
*நானும் நீயும் ஒன்றென் றுரைத்து*
*நல்கு சோதியே*

— கீர்த்தனைப் பகுதி;
மெய்யருள் வியப்பு, 96

என்ற அடிகளின் திருவாக்காலேயே இதனை அறியலாம். 'நானும் நீயும் ஒன்று' என்பது சன்மார்க்கம். 'சோதியே' என்பது இவர்கண்ட 'அருட்பெருஞ்சோதி' என்ற இறைவன். இறைவனை ஒளியாக - அருட்பெருஞ் சோதியாக - கண்ட அடிகள் அந்தச் சோதியிலேயே இரண்டறக் கலந்தார் என்பது வரலாறு. அவர் தம் அருளிச் செயல்கள் யாவும் - ஒன்று சேர்ந்து ஒரே குரலாக - ஒரு பெரிய குரலாக - நம்மையும் அதில் வந்து கலக்குமாறு அழைக்கின்றன.

*அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி*
*தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்சோதி*

என்று வள்ளலார் கழலை வாழ்த்தி நம் வாழ்வைப் புனிதவள வாழ்வாக்கிக் கொள்வோமாக.

# பின்னிணைப்பு
## பயன்பட்ட நூல்கள்

ஆழ்வார்கள்: *நாலாயிர திவ்வியப் பிரபந்தம்* (திரு. கி. வேங்கசாடமி ரெட்டியார் பதிப்பு (மூன்றாம் பதிப்பு - 1987)

நாலாயிர திவ்வியப் பிரபந்தம் (மர்ரே ராஜம் பதிப்பு)

ஊரன் அடிகள்: *இராமலிங்க அடிகள் வரலாறு* (சமரச சன்மார்க்க ஆராய்ச்சி நிலையம், வடலூர், தென் ஆர்க்காடு மாவட்டம்)

கிருஷ்ணவேணி அம்மையார் (பண்டிதை) **செம்பொருள்** (முமுட்சுப்படி) - திருமலை திருப்பதி தேவஸ்தானம் - திருப்பதி - 517 501.)

சுப்புரெட்டியார் .ந: **தொண்டை நாட்டுத் திருப்பதிகள்** (சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், டி.டி.கே. சாலை, ஆழ்வார்பேட்டை, சென்னை - 600 018.)

திருஅருட் பிரகாச வள்ளலார்: *திருஅருட்பா முதல் ஐந்து திருமுறைகள்* (இராமலிங்கர் பணி மன்றம், சென்னை).

திருஅருட்பிரகாச வள்ளலார்: *திருஅருட்பா - ஆறாம் திருமுறை* (இராமலிங்கர் பணிமன்றம், சென்னை)

திருவள்ளுவர்: *திருக்குறள் - பரிமேலழர் உரை* (சை.சி.நூ. கழகம், சென்னை - 18)

திருவள்ளுவர்: **திருக்குறள் தெளிவு** (சுரா வெளியீடு, 1629, ஜே பிளாக், 16வது முதன்மை சாலை, அண்ணாநகர், சென்னை - 600 040.)

பிள்ளை உலக ஆசிரியர் : *ஸ்ரீவசன பூஷணம்* (பு.ரா. புருடோத்தம நாயுடு, தமிழாக்கம், வெளியீடு தி.கி. நாராணசாமி நாயுடு, கடலூர்)

மாணிக்கவாசகர்: *திருவாசகம்* (தருமை ஆதீன வெளியீடு))

மூவர் (சம்பந்தர், அப்பர், சுந்தரர்): *தேவாரம் அடங்கன்முறை* (மயிலைக் கிழார் - இளவழகனார் 1953, திருவருளகம், கோவிந்தப்ப நாயக்கன் தெரு, சென்னை.)

பேராசிரியர் டாக்டர்

# ந.சுப்பு ரெட்டியாரின் நூல்கள்

## ஆசிரியம் (5)

1. தமிழ் பயிற்றும் முறை
2. அறிவியல் பயிற்றும் முறை
3. கவிதை பயிற்றும் முறை
4. கல்வி உளவியல் கோட்பாடுகள்
5. யுனெஸ்கோ: அறிவியல் பயிற்றும் மூல முதல் நூல்

## இலக்கியம் (15)

6. கவிஞன் உள்ளம்
7. காலமும் கவிஞர்களும்
8. காதல் ஓவியங்கள்
9. அறிவுக்கு விருந்து
10. அறிவியல் தமிழ்
11. திருக்குறள் கருத்தரங்கு மலர் - 1974 பதிப்பு
12. கம்பனில் மக்கள் குரல்
13. முத்தொள்ளாயிர விளக்கம் (பதிப்பு)
14. காந்தியடிகள் நெஞ்சுவிடு தூது (பதிப்பு)
15. திருவேங்கடமும் தமிழ் இலக்கியமும்

16. தமிழ் இலக்கியங்கள் - அறம், நீதி, முறைமை
17. புதுவை(மை)க் கவிஞர் - சுப்பிரமணிய பாரதியார் - ஒரு கண்ணோட்டம்
18. பாவேந்தர் பாரதிதாசன் - ஒரு கண்ணோட்டம்
19. திருக்குறள் தெளிவு
20. வாய்மொழியும் வாசகமும்
21. மாபெருங் கவிஞர் பாரதியார் கவிதைகள் (பதிப்பு)

## சமயம், தத்துவம்

## (அ) விளக்க நூல்கள் (20)

22. முத்திநெறி (தமிழக அரசு பரிசு பெற்றது)
23. சைவ சமய விளக்கு
24. சைவ சித்தாந்தம் - ஓர் அறிமுகம்
25. சைவமும் தமிழும்
26. வைணவமும் தமிழும்
27. ஆன்மிகமும் அறிவியலும்
28. வைணவ உரைவளம் (ஐதிகம், இதிகாசம், சம்வாதம்)
29. கலியன் குரல் (அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடு)
30. கீதைக் குறள் (பதிப்பு)
31. கண்ணன் எழில்காட்டும் கவிதைப் பொழில் (பதிப்பு)

32. ஆண்டாள் பாவையும் அழகு தமிழும் (பதிப்பு)
33. கண்ணன் துதி (பதிப்பு)
34. இராமர் தோத்திரம் (பதிப்பு)
35. முருகன் துதியமுது (பதிப்பு)
36. திருப்பாவை விளக்கம் (திருமலை - திருப்பதி தேவஸ்தான வெளியீடு)
37. நவவிதசம்பந்தம்
38. அர்த்த பஞ்சகம்
39. அர்ச்சிராதி
40. ஐந்து இரகசியங்கள்
41. வைணவப் புராணங்கள்

## (ஆ) திருத்தலப் பயண நூல்கள் (12)

42. மலைநாட்டுத் திருப்பதிகள்
43. தொண்டைநாட்டுத் திருப்பதிகள்
44. பாண்டிநாட்டுத் திருப்பதிகள்
45. வடநாட்டுத் திருப்பதிகள்
46. சோழநாட்டுத் திருப்பதிகள் - முதற் பகுதி (தமிழ் நாடு அரசு பரிசு பெற்றது)
47. சோழநாட்டுத் திருப்பதிகள் - இரண்டாம் பகுதி (தமிழ்நாடு அரசு பரிசு பெற்றது)
48. தம்பிரான் தோழர்
49. நாவுக்கரசர்

50. ஞானசம்பந்தர்
51. மாணிக்கவாசகர்
52. என் அமெரிக்கப் பயணம்
53. என் இலங்கைப் பயணம்

## திறனாய்வு (28)

54. பாட்டுத்திறன்
55. தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை
56. கம்பன் படைத்த சிறு பாத்திரங்கள்
57. அகத்திணைக் கொள்கைகள்
58. கவிதையநுபவம்
59. அண்ணல் அநுமன்
60. புதுக்கவிதை - போக்கும் நோக்கும்
61. கண்ணன் பாட்டுத் திறன்
62. பாஞ்சாலி சபதம் - ஒரு நோக்கு
63. பாரதீயம் (தமிழ்நாடு அரசு பரிசு பெற்றது)
64. குயில் பாட்டு - ஒரு மதிப்பீடு
65. உயிர்தந்த உத்தமன் (பதிப்பு)
66. ஆழ்வார்கள் ஆரா அமுது
67. விட்டுசித்தன் விரித்த தமிழ்
68. சடகோபன் செந்தமிழ்
69. பரகாலன் பைந்தமிழ்

70. பாவேந்தர் பாட்டுத் திறன்
71. பாண்டியன் பரிசு - ஒரு மதிப்பீடு
72. கவிஞர் வாலியின் அவதார புருஷன் - ஒரு மதிப்பீடு
73. கவிஞர் வாலியின் பாண்டவர் பூமி - ஒரு மதிப்பீடு
74. வாழும் கவிஞர்கள்
75. அறிவியல் நோக்கில் - இலக்கியம், சமயம், தத்துவம்
76. தந்தை பெரியார் சிந்தனைகள்
77. பண்பாட்டு நோக்கில் கம்பன் காவியம்
78. இலக்கிய வகையின் வளர்ச்சியும் இக்கால இலக்கியங்களும்
79. கவிமணியின் தமிழ்ப்பணி - ஒரு மதிப்பீடு
80. பல்சுவை விருந்து
81. பண்பாட்டு நோக்கில் கம்பன் காவியம்

## வரலாறு, தன் வரலாறு (15)

82. நினைவுக் குமிழிகள் - முதற்பகுதி
83. நினைவுக் குமிழிகள் - இரண்டாம் பகுதி
84. நினைவுக் குமிழிகள் - மூன்றாம் பகுதி
85. நினைவுக் குமிழிகள் - நான்காம் பகுதி
86. நினைவுக் குமிழிகள் - ஐந்தாம் பகுதி
87. மலரும் நினைவுகள்

88. நீங்காத நினைவுகள்
89. வேமனர்
90. குர்ஜாட
91. சி.ஆர்.ரெட்டி
92. தாயுமானவர்
93. பட்டினத்தடிகள்
94. இராமலிங்க அடிகள்
95. பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரிய சுவாமிகள்
96. தமிழ்க்கடல் ராய.சொ.
97. முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம்

## அறிவியல் (16)

98. மானிட உடல்
99. அணுவின் ஆக்கம்
100. இளைஞர் வானொலி
101. இளைஞர் தொலைக்காட்சி
102. அதிசய மின்னணு
103. நமது உடல் (தமிழக அரசு பரிசு பெற்றது)
104. அம்புலிப்பயணம்
105. தொலை உலகச் செலவு
106. அணுக்கரு பௌதிகம் (செ.ப.க. பரிசு பெற்றது)
107. இல்லற நெறி

108. வாழையடி வாழை

109. அறிவியல் விருந்து (தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசு பெற்றது)

110. தமிழில் அறிவியல் - அன்றும் இன்றும்

111. விண்வெளிப் பயணம் (தமிழக அரசு பரிசு பெற்றது)

112. இராக்கெட்டுகள் (தமிழக அரசு பரிசு பெற்றது)

113. தமிழில் அறிவியல் செல்வம்

## ஆராய்ச்சி (7)

114. கலிங்கத்துப்பரணி ஆராய்ச்சி

115. வைணவச் செல்வம் - முதற் பகுதி (தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீடு)

116. வைணவச் செல்வம் - இரண்டாம் பகுதி (தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீடு)

117. வட வேங்கடமும் திருவேங்கடமும்

118. Religion and Philosophy of Nalayiram with Special Reference to Nammalvar

119. Studies in Arts and Science (61st Birth day commnemoration volume)

120. Collected papers

# இந்நூலாசிரியர் பற்றி



86 அகவையைக் கடந்தவர்

பணிகள் :

1. 9 ஆண்டு உயர் நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் (1941–50)
2. 10 ஆண்டுகள் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி – தமிழ்ப் பேராசிரியர் துறைத் தலைவர் (1950 – 60)
3. திருவேங்கடப் பல்கலைக் கழகத் தமிழ்த் தலைவர் (1960–70)

ஓய்வுக்குப் பின்னர் பணிகள்:

1. 15 திங்கள் தமிழ்க் கலைக் களஞ்சிய முதன்மைப் பதிப்பாசிரியர்
2. 18 திங்கள் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் – காஞ்சித் தத்துவ மையம் பதிப்பியல் பேராசிரியர்.
3. சென்னைப் பல்கலைக் கழகம் – தமிழ் இலக்கியத் துறை வாழ்நாள் மதிப்பியல் பேராசிரியர்.
4. மதிப்பியல் இயக்குநர் மரபியல் பண்பாட்டு நிறுவனம் (சென்னைப் பல்கலைக் கழகம்)

பிற பணிகள்:

திருப்பதி, மதுரை, பெங்களூர், மைசூர், திருவனந்தபுரம், சென்னைப் பல்கலைக்கழகங்களில் பல்வேறு பணிகள் – பொறுப்புகள்

பெற்ற பரிசுகள் : 14 நூல்கள் பரிசு பெற்றவை

பெற்ற விருதுகள்: பத்துக்கு மேல் – புல்வேறு நிறுவனங்களின் மூலம்.